வெளியீடு: 25-09-2008 Issued: 25-09-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 24, 2008—தொகுதி 49—எண் 3**

**Thursday, the 24th April, 2008—Volume 49—No. 3**


மன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...ative Assembly Secretariat, Chennai-600 009



D
V211,31'N08
N08·49.3
228381


[Price Rs. 3.00

**24-04-2008**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*


**தகவல் கோரல்—**

(அ) விவேகானந்தர் நினைவில்லத்தை இடித்துவிட்டு அங்கு தமிழ்ச் செம்மொழி மையம் அமைப்பதாக வந்துள்ள செய்தி 575-589

திரு. கே.ஏ. செங்கோட்டையன் 576-577

திரு. சி. ஞானசேகரன் 577-580

திரு. கி. ஆறுமுகம் 580-581

திரு. நா. இராமகிருஷ்ணன் 582-583

திரு. கு. செல்வம் 583

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 584-589

(ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் தட்டம்மை தடுப்பூசி போட்டதில் 4 குழந்தைகள் இறந்தது 589-611

திரு. கோ. அரி 590-594

*திரு. டி. சுதர்சனம் 594-596,610

திரு. தி. வேல்முருகன் 596-600,610

திரு. இ.ஏ.பி. சிவாஜி 600-601,611

*திரு. கே. மகேந்திரன் 601-603,610

*திருமதி பி. பத்மாவதி 603-605,610

திரு. கு. செல்வம் 605-606,611

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 606-609

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 609

| | பக்கங்கள் |
|---|---|
| 2. **மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 19 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 611-643 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 623-640 |
| *டாக்டர் க. நெடுஞ்செழியன் | 611-615 |
| திரு. எம். அன்பழகன் | 616-619 |
| திரு. ஆர்.கே. பாரதி மோகன் | 620-623 |
| (ஆ) கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வி துறை | 643-751 |
| மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 643,673, 677-678, 690,720-750 |
| *திரு. மு. பரஞ்ஜோதி | 652,673-678 |
| திரு. த. தியோடர் ரெஜினால்டு | 678-684 |
| *திரு. கே. கோபிநாத் | 684-690,746 |
| திரு. ஜி.கே. மணி | 647,688,689, 690-699 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 699-703 |
| *திரு. தி. இராமசாமி | 664,703-705 |
| *திரு. ஆர். ஞானதாஸ் | 705-708 |
| *திரு. து. ரவிக்குமார் | 708-711 |
| திரு. து. செல்வராஜ் | 711-715 |
| திரு. இரா. துரைக்கண்ணு | 657,715-720 |
| 3. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 751 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 12

## 2008 ஏப்ரல் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

### (அ) விவேகானந்தர் நினைவில்லத்தை இடித்துவிட்டு அங்கு தமிழ்ச் செம்மொழி மையம் அமைப்பதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், உட்காருங்கள். இன்று இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை அவை எடுத்துக்கொள்ளவிருக்கிறது. விவேகானந்தர் நினைவு இல்லத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் தமிழ்ச் செம்மொழி மையம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது குறித்தும், திருவள்ளூர் மாவட்டத்தில் தடுப்பூசி போடப்பட்டதில் 4 குழந்தைகள் இறந்தது மற்றும் 7 குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது குறித்தும் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.

முதலில், விவேகானந்தர் நினைவு இல்லத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் தமிழ்ச் செம்மொழி மையம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார்,

திரு. வி.பி. கலைராஜன், திரு. எஸ்.வி. சேகர், திரு. ஞா. செந்தமிழன், திருமதி பதர் சயீத், திரு. கு. சீனிவாசன், திரு. கோ. அரி, திரு. பி. பலராமன், திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. பி. தங்கமணி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. ஆ. அருண்மொழிதேவன் ஆகியோர் அ.இ.அ.தி.மு.க. சார்பிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. ராம. சுப்புராம் ஆகியோரும் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. ஆறுமுகம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. வீர. இளவரசன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே திரு. கு. செல்வம் அவர்களும் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் பெருமையை உலக அரங்கிலே உயர்த்திக் காட்டிய பெருமை, இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரும், இராமகிருஷ்ண மடத்தினுடைய நிறுவனருமான சுவாமி விவேகானந்தரையே சாரும். அவர் சிகாகோ நகரில் ஆற்றிய உரை, உலகமே வியக்கத்தக்க அளவுக்கு, உலக நாட்டினர் அனைவரும் பாராட்டுகின்ற அளவுக்கு பெருமை பெற்றதாகும். உலக பிரசித்திப்பெற்ற சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், 1897-லே இந்தியாவிற்கு வருகை தந்து சென்னை மெரினா கடற்கரையிலே அவரது நினைவில்லம் இருக்கின்ற இடத்திலே 9 நாட்கள் தங்கிச் சென்றுள்ளார். அவ்வளவு பெருமைக்குரிய இடமாக அந்த இடம் அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர் ஆற்றிய உரைகள், அவருடைய வழிகாட்டுதல்கள், அவர் எடுத்துச்சொன்ன கருத்துகள் அடங்கிய பல்வேறு சிறந்த புத்தகங்கள் இன்றும் இந்தியாவில் வாழ்கின்ற இந்துக்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கின்றன. அவ்வளவு சிறப்புமிக்க இடமாக அந்த இடம் அமைந்திருக்கிறது. இந்தியாவில் வாழ்பவர் மட்டுமல்ல, அண்டை

228381





நாடுகளில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள்கூட அந்த இடத்திற்கு வருகை தந்து அவரது நினைவு இல்லத்தைக் காணுகின்றபோதும், அதிலே இருக்கின்ற அருங்காட்சியகத்தைக் காணுகின்றபோதும் வியந்து பாராட்டுகின்ற அளவுக்கு அந்த இடம் அமைந்திருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. பல நூற்றாண்டுகளாக இருக்கின்ற அந்த இடத்தை தமிழ்ச் செம்மொழி மையம் அமைப்பதற்காக எடுக்க வேண்டுமென்று அரசு கடிதங்கள் எழுதியதாகவும், மாற்று இடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டுக் காட்டியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த இடம் 2010 ஆம் ஆண்டு வரையிலே அவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வற்புறுத்தி அந்த இடத்தை எடுக்க வேண்டுமென்ற நிலை இந்த அரசுக்குத் தேவைதானா? தமிழ் செம்மொழிக்காக ஆய்வு மையத்தை அமைப்பதற்கு வேறு இடமே இல்லையா என்பதை அறிய விரும்புவதோடு, அந்த இடம் தொடர்ந்து விவேகானந்தர் நினைவு இல்லமாகவே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமர்கிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமி விவேகானந்தருடைய பெருமைகளையெல்லாம் இங்கே எடுத்துச்சொல்லி, அந்த இடம் விவேகானந்தர் இல்லமாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார்கள். இதிலே நான் கொஞ்சம் மாறுபடுகிறேன். காரணம், 1963 ஆம் ஆண்டு மாண்புமிகு பக்தவச்சலம் ஐயா அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தபோதுதான் அந்த இடம் விவேகானந்தர் இல்லமாக செயல்படுவதற்கு அனுமதித்தார்கள். பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான், 1997 ஆம் ஆண்டு அந்த இடத்தில் விவேகானந்தர் இல்லம் செயல்படுவதற்கு 2010 ஆம் ஆண்டு வரை, ஒரு வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அப்போது allot செய்து குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

நாம் நெடுங்காலமாக போராடி, போராடி தமிழுக்கு ஒரு பெருமை கிடைக்கவேண்டும் என்று தமிழர்களுடைய உணர்வுகளையெல்லாம்

D V211,31 ... 49.3

எடுத்துச்சொல்லி, நம்முடைய மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், அருமை அன்னை சோனியாகாந்தி அவர்களின் ஆதரவோடு 40-ம் நமதே என்று இந்தக் கூட்டணி 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கி நாடாளுமன்றத்திற்கு அனுப்பியதனுடைய விளைவுதான், இன்று தமிழகத்தில் நாமெல்லாம் போற்றி புகழ்ந்துகொண்டிருக்கின்ற நம்முடைய தமிழ் மொழியை செம்மொழி என்று மத்திய அரசு அறிவித்து, அதிலே நாம் ஒரு சாதனையைக் கண்டிருக்கிறோம். அதேபோல், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் அதற்காக ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி, நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகராம் சென்னையிலே, அந்தத் தமிழ்ச் செம்மொழி மையம் அமைய வேண்டும் என்றும் அறிவித்து, அதற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள்தான் தலைவராக இருந்து செயல்படவேண்டும் என்ற ஒரு நல்ல அறிவிப்பையும் தந்து நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார்கள். நிறைய தமிழ் இலங்கியங்கள் அத்தனையும் ஆன்மீகத்தை அடிப்படையாகக்கொண்டுதான் நம்முடைய தமிழகத்தில் உருவாகியிருக்கின்றன. இப்போது, தமிழ்ச் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டு, அந்த இடத்தை மையத்திற்காக எடுத்துக்கொள்ளலாம். அது விவேகானந்தர் தியானம் செய்த இடம் என்பதை நாம் மறுக்கவில்லை. ஏற்கெனவே, கன்னியாகுமரியிலே இருக்கக்கூடிய விவேகானந்தர் பாறை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக்கூடிய மிகச் சிறந்ததொரு இடமாக விளங்கி வருகிறது. மேலும் அங்கு இராமகிருஷ்ணர் மடம், அடுத்துப் பார்த்தோம் என்று சொன்னால், விவேகானந்தர் கல்லூரி ஒன்று இருக்கிறது. இப்படியெல்லாம் இருக்கின்றபோது, நாம் தமிழை நம்முடைய மொழியாகக் கொண்டு அதற்கு ஒரு வளத்தை சேர்க்க வேண்டும் என்று பெரும் பாடுபட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் சென்னையின் ஒரு மையப் பகுதியில் அமைவதுதான் சாலப்பொருத்தமான ஒன்றாக இருக்கும். அதுவும், மெரினா கடற்கரை உள்ள, காமராஜர் சாலையிலே அது அமைவது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ஒரு அறிவிப்பினைக் கொடுத்து, பெருங்குடியிலே 27 ஏக்கர் நிலத்தை அதற்காக ஒதுக்கீடு செய்து அங்கே நிரந்தரமாகக் கட்டப்போகிறார்கள்; அதுவரை இது ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்றுகூட நான் பத்திரிகையில் பார்க்கிறபோது நம்முடைய சட்டமன்ற வளாகத்தைக் கட்டுவதற்கு இங்கே நாம்



அறிவிப்பைக் கொடுக்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில் கட்டுவதா என்று, அங்கிருக்கக்கூடிய ஒரு பள்ளியை அகற்றக்கூடாது என்று. அதற்கு ஒரு writ-ஐ file செய்து இருக்கிறார்கள். எந்தவொரு நல்ல காரியத்தை நாம் எடுக்கிறபோதும் சிலபேர் Public Interest Litigation என்று ஒரு வழக்கைப் போட்டு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய சொத்து. அரசாங்கம்தான் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறது. அரசு குத்தகைக்குக் கொடுத்தது 2010-ஆம் ஆண்டு வரை தான். 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த lease renewal ஆகவில்லை என்று சொன்னால், again it will be restored to the Government. அப்படி வருகிறபோது, அரசுக்கு உரிமையிருந்தும்கூட, அதை அராஜகமாகவோ அல்லது வேண்டுமென்றே கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசு செய்யாத ஒரு சூழலில், ஒரு தற்காலிக ஏற்பாடாக இருக்கும் என்று சொன்னால், இப்போதைக்கு அந்த விவேகானந்தர் இல்லம் செயல்படுவதற்கு மாற்று இடத்தைக் கொடுத்தாலும் கொடுக்கலாம். இல்லையென்றால், அங்கேயேகூட ஒரு பகுதியில் அதை வைத்துவிட்டு, தமிழ் மையத்திற்கு பெருங்குடியிலே நிரந்தரமாகக் கட்டடம் கட்டுகின்றவரை இங்கே காமராஜர் சாலையிலே இந்த தமிழ் செம்மொழியினுடைய மையம் இயங்கலாம்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்”

என்று பாடினானே பாரதி, அந்தத் தேமதுரத் தமிழோசையை நாம் பரப்பவேண்டும் என்று சொன்னால், மையப் பகுதியில் அமைவதுதான் சாலப்பொருத்தமாக இருக்கும்.

ஆகவே, அரசு அதற்கான முயற்சியை நிச்சயமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நல்ல திட்டங்கள் வருவதை சில பேர் தடுக்கக் கூடிய சூழல் இல்லாமல் பார்த்துக்கொள்வதும் நமக்கு நல்லது. ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பார்த்தால் நம்முடைய சட்டமன்றத்தினுடைய புதிய

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஏப்ரல் 24

வளாகம் கட்டுவதற்காக தீடீரென்று ஒரு writ போடப்பட்டிருக்கிறது. துணை நகரம் வந்தால் அதற்கொரு எதிர்ப்பு. இப்படி எல்லாவற்றிற்கும் ஒரு எதிர்ப்புத் தெரிவித்தால். . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) புதிய சட்டமன்ற வளாகம் கட்டப்படுகின்ற இடத்தில் நீண்ட நாட்களாக ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது, அது சிறியப் பிள்ளைகளுக்காக இருக்கிறது. அங்கே பேண்டுமேன் Quarters பகுதியிலே இருக்கிற பிள்ளைகள், சிந்தாதரிப்பேட்டையிலுள்ள ஏழை பிள்ளைகள் அங்கே வந்து படிக்கின்றார்கள். இப்போது நாம் பெரிய வளாகம் கட்டுகிற காரணத்தினால், அந்தப் பள்ளியை நேப்பியர் பூங்கா பக்கத்தில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசின்மூலமாக அவர்களுக்குப் புதிய பள்ளியைக் கட்டிக் கொடுக்கவிருக்கிறோம். இரண்டாவது, அவர்கள் சிந்தாதரிப்பேட்டையிலிருந்து அதிகமான Traffic-ஐ கடந்து வருவது கஷ்டம். இவ்வளவு சொல்லிய பிறகும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, சிலபேர் கெடுப்பதற்கென்றே இருக்கிறார்கள். இந்த அரசு அந்தத் தடைகளைத் தகர்த்தெறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன் முடித்துவிடட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் முடித்து விட்டார். (குறுக்கீடு) அவர் முடித்துவிட்டார். தேனினும் இனியது தமிழ்மொழி என்ற இந்தத் தமிழ்மொழிக்கு நம்முடைய தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான செம்மொழி மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டு, அதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், எங்களுடைய நிறுவனத் தலைவர் அய்யா அவர்களும், பல்வேறு தமிழ் அறிஞர்களும், மிகப் பெரிய முயற்சி எடுத்து, இப்போது உலக செம்மொழியாக தமிழ் மொழி வந்திருக்கிறது. இந்தச் செம்மொழி மையத்திற்கு நம்முடைய மெரினா



2008 ஏப்ரல் 24] [திரு. கி. ஆறுமுகம்]

கடற்கரை ஓரம் அமைந்து இருக்கின்ற விவேகானந்தர் இல்லம் அருகிலே கட்டடம் கட்டுவதற்கான முயற்சியை எடுப்பதாகவும், அதற்காக அந்த இடத்தில் இருக்கிற விவேகானந்தர் இல்லத்தை இடித்துவிட்டு கட்டப் போவதாகவும் செய்தி பத்திரிகையில் வந்துள்ளது. நம்முடைய மிகப் பெரிய சித்தாந்தத்தை இந்த உலகத்திற்கு அறிவித்த விவேகானந்தர், 'எழுமின், விழுமின், கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்' என்று மனித சமுதாயத்தை உயர்த்த வழிகாட்டியவர் "வீரம் மிக்க, எழுச்சி மிக்க இளைஞர்கள் இந்தியாவில் உருவாக்கப்பட வேண்டும், நாடு இளைஞர்களை எதிர்நோக்கி உள்ளது என்ற உயர்ந்த தத்துவத்தை எடுத்துக் காட்டியவர்." எல்லா மதத்தினரும், எல்லா நாட்டவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மனித மாமேதை;" நம்முடைய தமிழகத்திலே, கடந்த 1897 ஆம் ஆண்டு மெரினா கடற்கரையில் அமைந்திருக்கின்ற விவேகானந்தர் இல்லத்திலே ஒரு சில நாட்கள் தங்கி இருந்ததாகத் தகவல் சொல்லப்படுகிறது. அப்படி அவர் தங்கி இருந்த இடத்தை, இன்றைய நம்முடைய அரசாங்கம் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. அந்த இல்லத்தை இப்போது இடித்து விட்டு, அந்த இடம் நம்முடைய தமிழ் செம்மொழி மையத்திற்காக ஒதுக்கப்படும் என்கிற அறிவிப்பை நம்முடைய பொதுப் பணித் துறைமூலம். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டு விரைந்து அதை அப்புறப்படுத்துங்கள் என்ற த்கவல் அறிவுறுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தொடர்ந்து நினைவில்லமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிற அந்த இடத்தை மட்டும் விட்டுவிட்டு, மெரினா கடற்கரை ஓரமாக மிகப் பெரிய இடம் அந்த வளாகத்திலேயே காலியாக இருக்கிறது. அதிலேகூட தமிழ்ச் செம்மொழி ஆய்வு மையம் கட்டலாம். ஏனென்று சொன்னால், அந்த இடம் புனிதமாகக் கருதப்படுகிறது. அது ஒரு சுற்றுலாத் தலமாக கருதப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்து பார்த்துச் செல்லும் இடமாகவும் இருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய அரசும் இதைக் கருத்தில் கொண்டு, அந்த இடத்தை மட்டும் விட்டுவிட்டு எஞ்சி இருக்கிற காலியாக உள்ள பகுதியிலே நம்முடைய தமிழ்ச் செம்மொழி ஆய்வு மையத்தை அமைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேகானந்தர் இல்லம் சென்னை காமராஜர் சாலையில் மெரினா கடற்கரை அருகே உள்ளது. அந்த விவேகானந்தர் இல்லத்திற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க முக்கியத்துவம் உண்டு. அமெரிக்காவில் சிகாகோ நகரில் சர்வதேச சமய மாநாட்டில் துறவி விவேகானந்தர் நீண்டதொரு சொற்பொழிவினை ஆற்றிவிட்டு, திரும்பி வருகின்ற வழியில் 1897 ஆம் ஆண்டு, பிப்ரவரி 5 ஆம் நாளிலிருந்து 15 ஆம் தேதி வரை 9 நாட்கள் அங்கே தங்கியிருந்துள்ளார்கள். அந்த நேரத்தில் அந்தக் கட்டடம் தனியார்வசம் இருந்தது. பின்பு அது அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, 1963 ஆம் ஆண்டு மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் அதை விவேகானந்தர் நினைவாலயமாக, நினைவக இல்லமாக உருவாக்கித் தந்தார்கள். பின்பு, அந்த இல்லம் முறையாகப் பராமரிக்கப்படவில்லை. அந்தச் சூழ்நிலையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் சார்பாக, அப்போது முதல்வராக இருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் அணுகி, துறவி விவேகானந்தரின் கருத்துகளைப் பரப்புவதற்கு இந்த இல்லத்தை குத்தகையின் அடிப்படையில் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், வருடத்திற்கு 2,000 ரூபாய் வாடகையில், கலாச்சார பேருண்மைகளை வெளிப்படுத்தவும், இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், அரசியல் நிகழ்ச்சிகள் அங்கே இருக்கக்கூடாது என்று ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழக அரசின் உயர் கல்வித் துறையும் மற்றும் இராமகிருஷ்ண மடமும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, 2010 வரை அந்த விவேகானந்தர் இல்லத்தை இராமகிருஷ்ண மடம் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருந்தும், மேலும் 30 ஆண்டு குத்தகைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, அங்கே விவேகானந்தருடைய அரிய புகைப்படங்களை வைத்து கண்காட்சி நடத்திவருகின்ற இந்த வேளையில், பழைய இடம், பழக்கப்பட்ட இடம், விவேகானந்தர் உரையாற்றிய இடம், தியானம், பக்திச் சொற்பொழிவு, ஆன்மீக நெறிமுறைகளைப் பக்தர்களுக்கு, அந்த மடத்தைச் சார்ந்தவர்களுக்கு உணர்த்திய இடம். ஆகவே, ஒரு பழைய இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது என்ற நிலையை அரசு மாற்றிக் கொண்டு, ஏற்கெனவே உள்ளதுபோல இராமகிருஷ்ண மடம் அங்கே செயலாற்றி





வருவதற்கு அனுமதி வழங்கவேண்டும். கொல்கத்தாவிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆன்மீகத்திலே நம்பிக்கை இல்லாவிட்டாலும்கூட, 21 கோடி ரூபாயில் புதுப்பிப்பதற்கு. இராமகிருஷ்ண மடத்தைப் புதுப்பிப்பதற்கு அவர்கள் செலவிட்டுள்ளார்கள் என்பதையும் இந்தநேரத்திலே நினைவூட்டுவதோடு. தொடர்ந்து விவேகானந்தர் இல்லம்மூலம் இராமகிருஷ்ண மடம் அங்கே நடைபெறுவதற்கு நீங்கள் வழிவகை செய்யவேண்டும் என்று அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செம்மொழியைத் தமிழகத்திற்குக் கொடுத்தவர் நம்முடைய தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இப்பொழுது செம்மொழி மையம் அமைப்பதற்கு ஒரு சரியான இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். விவேகானந்தரைப் பற்றிப் படிக்காத இளைஞர்கள் இல்லை, அவரைப் பற்றி தெரியாத மக்கள் இருக்கமுடியாது. இருந்தபோதிலும், ஆன்மீகத்தை வைத்து நான் அரசியல் செய்ய விரும்பவில்லை. ஆன்மீகம் வேறு, அரசியல் வேறு. ஆனால், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் செம்மொழி மையத்தை நாம் அமைப்பதில் உறுதுணையாக இருக்க வேண்டும். ஒருவேளை அங்கு இருக்கின்ற விவேகானந்தர் இல்லத்தை மாற்றி வேறு இடத்தில், இராமகிருஷ்ண மடத்திற்கு சென்னையில் ஏராளமான இடங்கள் இருக்கின்றன. தியாகராய நகரிலே, மைலாப்பூரிலே, முக்கியமான இடங்களில் எல்லாம் அவர்கள் நிறைய சொத்துக்களை வைத்திருக்கிறார்கள். அவர் பயன்படுத்திய பொருட்களை, அங்கு இருக்கின்ற நினைவுப் பொருட்களை எல்லாம் அந்த இடங்களுக்குக்கூட எடுத்துச் செல்லலாம். ஏற்கெனவே, விவேகானந்தருடைய பெருமையை பறைசாற்றக்கூடிய, விவேகானந்தர் கல்லூரி, விவேகானந்தர் பாறை போன்று தமிழகத்திலே உள்ள முக்கியத் தலங்களை எல்லாம் தமிழக மக்கள் இன்றும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ஆன்மீகத்தை அரசியல் ஆக்காமல், அந்த இடத்திலே செம்மொழி மையம் கொண்டு வரவேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 24

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. ஆறுமுகம் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் திரு. கு. செல்வம் அவர்களும் விவேகானந்தர் இல்லம் குறித்த சில கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், இல்லாத ஒன்றைப்பற்றி, நடக்கப் போகாத ஒன்றைப்பற்றி அவர்களெல்லாம் பேசினார்கள் என்பதுதான் ஆச்சரியப்படக்கூடியது. (மேசையைத் தட்டும் ஒலி)

*(முற்பகல் 9-50*

தம்பி இராமகிருஷ்ணன் அவர்கள் விவேகானந்தர் மடம் பழைய இடத்திலேயே இருக்கட்டும், "பழைய இடத்திலே இருப்பதுதான் நல்லது" என்று சொன்னார்கள். "ஆமாம், பழைய இடத்திலே இருப்பதுதான் நல்லது" என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தம்பி இராமகிருஷ்ணனுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன், அண்ணன் என்ற முறையில்.

விவேகானந்தருக்கு அல்லது அவருடைய நினைவுச் சின்னத்திற்கு உரிமை கொண்டாட, அதன் காரணமாக பெருமை பெற இங்கே உள்ள அனைவருக்கும், தமிழகத்திலே இருக்கின்ற ஆறு கோடி மக்களுக்கும் சொந்தம் உண்டு என்றாலுங்கூட, இன்றைக்கு தென்கோடி முனையிலே இருக்கின்ற கடற்கரையில், குமரி முனையில் இருக்கின்ற விவேகானந்தர் ஆலயத்தை வி.வி. கிரி அவர்கள் 1970 ஆம் ஆண்டு என்னுடைய தலைமையிலேதான் திறந்துவைத்தார்கள் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2-9-1970, அன்று திறந்துவைக்கப்பட்ட அந்த மண்டபம், அப்போது அந்த மாவட்டத்து மக்களால் சில பிரச்சினைகளுக்கு எல்லாம் உள்ளாகி, இராமகிருஷ்ணா மடத்தைச் சேர்ந்தவர்கள், விவேகானந்தருடைய போதனைகளைப் பரப்புகின்றவர்கள், அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை என்னிடத்திலே எடுத்துச் சொல்லி, அவைகளையெல்லாம் அன்றைக்கு ஆட்சியின் சார்பிலே தீர்த்து வைத்தவன் நான்தான்.



2008 ஏப்ரல் 24] [கலைஞர் மு. கருணாநிதி]

அதன்பிறகு இந்தப் பிரச்சினை இப்போது. சென்னை மாநகரத்தில் 1897 ஆம் ஆண்டில் 9 நாட்கள் தங்கியிருந்து விரிவுரைகள் செய்த காரணத்தினால், அதன் நினைவாக விவேகானந்தர் இல்லத்தை சென்னை இராமகிருஷ்ணா மடத்திடம் ஒப்படைக்கும்படி அந்த மடத்தின் தலைவர் இந்த அரசிடம் கோரியிருந்தார். சென்னை காமராசர் சாலையிலே உள்ள 27,546 சதுர அடி பரப்பளவுகொண்ட விவேகானந்தர் இல்லத்தில் அவருடைய நினைவாக அந்த மடத்தை அரசு ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டபோது, 24-2-1997 நாளிட்ட உயர் கல்வித் துறையின் அரசாணை எண் 89-ன்படி சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த இல்லம் முதன்முதலாக இராமகிருஷ்ணா மடத்திடம் குத்தகை அடிப்படையில் மூன்று ஆண்டு காலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை ஆயிரம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் விவேகானந்தர் இல்லத்திற்கு நுழைவழியே இல்லையென்று கூறி, அந்த இல்லத்தின் முன்னுள்ள எட்டு கிரவுண்டு, 1928 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தையும் குத்தகைக்கு அளிக்கும்படி இராமகிருஷ்ணா மடம் கோரியதையடுத்து, அதனையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு பரிசீலனை செய்து 90 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட நிலத்தையும் மூன்று ஆண்டுகாலக் குத்தகைக்கு, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் குத்தகைத் தொகை என 10-6-1998 அன்று நாளிடப்பட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 487-ன்படி வழங்கப்பட்டுள்ளது. இதுதான் அந்தக் கட்டடத்திற்கான பழைய வரலாறு.

*முற்பகல் 9-55*

இந்த மடத்தினுடைய மற்றொரு கோரிக்கையாக, 'இதை 30 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குத் தரவேண்டும்' என்று அவர்கள் கேட்டபோது, நான் 'அதுபற்றி அமைச்சரவைக் கூட்டத்திலேதான் விரிவாக விவாதித்து முடிவெடுக்க வேண்டும்' என்று கூறி, விவேகானந்தர் இல்லத்தின் சந்தை மதிப்பு 2 கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதால், சலுகைக் குத்தகையாக மாதம் ஒன்றுக்கு ஒரு சதுர அடிக்கு 1 ரூபாய் வீதம் குத்தகைத் தொகையாகவும், குத்தகைக் காலத்தை 10 ஆண்டுகள் என்றும் நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப்பட்டு, அந்த முடிவையொட்டி, 28-1-2000 நாளிடப்பட்ட உயர் கல்வித் துறை அரசாணை எண் 20 வெளியிடப்பட்டது. இதெல்லாம் ஆதாரப்பூர்வமான, தேதிவாரியான விவரங்கள்.

விவேகானந்தருடைய இல்லத்திலே உள்ளவர்களுக்கும், தி.மு. கழக அரசுக்கும் ஏதோ தகராறு என்பதைப்போல பத்திரிகைகளிலே எழுதி, நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையில், 'விவேகானந்தர் இல்லத்தை அபகரிக்க தி.மு.க. ஆட்சி முயற்சி' என்று பெரும் தலைப்பே இட்டிருக்கிறார்கள். அதை ஏன் அபகரிக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. விவேகானந்தரிடத்திலே எங்களுக்கு ஏதாவது பகையா, என்றால் இல்லை. இன்னும் சொல்லப்போனால், பகுத்தறிவு இயக்கத்தினுடைய கருத்துகளை, பெரியாருடைய கருத்துகளை, அண்ணாவினுடைய கருத்துகளைப் பெரும் பகுதி ஏற்றுக்கொண்டவர், விவேகானந்தர் என்கிறபோது, எங்களுக்கென்ன விவேகானந்தரிடத்திலே விரோதம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*20-12-1999* அன்று, அப்போது நான் முதலமைச்சராக இருந்தபோது, சென்னையிலே உள்ள விவேகானந்தர் இல்லத்திற்கு நான், நம்முடைய இன்றைய நிதி அமைச்சர் பேராசிரியர், அமைச்சர்களாக இருந்த திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு. துரைமுருகன் ஆகியோருடன் சென்று, அந்த இல்லத்திலே இந்தியக் கலாச்சாரக் கண்காட்சியைத் திறந்து வைத்தேன். அந்த இல்லத்திற்குப் பெயர் Ice House. அதற்கு முன்பு அந்த நிகழ்ச்சியிலே, ஸ்ரீமத் சுவாமி ஸமரணானந்தஜி மகராஜ் எங்களை வரவேற்றுப் பேசினார். வரவேற்றுப் பேசும்போது, அந்த இடத்தை முழுமையாகத் தங்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்பதைப் போலவும், 90 வருடங்கள், 30 வருடங்கள் lease என்பார்களே, அப்படிக் கொடுத்துவிட வேண்டுமென்பதைப் போலவும் பேசினார்கள். அங்கே நன்றி கூறியவரும், அதே கருத்தை எடுத்துச் சொன்னார். ஆனால், நான் சட்டப்படி எதுவும் செய்யவேண்டும் என்பதிலே நம்பிக்கை உள்ளவன் என்ற காரணத்தால், அங்கே பேசும்போது சொன்னேன்; 'அறிக்கை படித்தவர்கள், வரவேற்புரை ஆற்றியவர்கள், நன்றியுரை ஆற்றிய நண்பர்கள் உள்ளிட்ட அனைவரும், இந்த இல்லத்தை, விவேகானந்தர் இந்தியக் கலாச்சாரக் கண்காட்சிக்கு நான் ஒப்படைத்துவிட்டதாகவே சொல்லி, அதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், நான் ஒரு முக்கியமானப் பொறுப்பிலே இருப்பவன், உள்ளத்திலே நல்ல நினைவுகள் இருந்தாலும்கூட, அதை ஒழுங்காக, முறையாக, சட்டரீதியாகச் செயல்படுத்த வேண்டுமென்பதிலே அக்கறை உள்ளவன்; எனவே, இப்போது இந்தக் கட்டடத்தை ஒப்படைத்துவிட்டதாக நீங்கள் கூறுவதை, நான் உடனடியாக ஏற்க



இயலாது; ஒப்படைப்பதைப்பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஒருவரே இதில் யோசிப்பது என்பது இயலாது. எனவே, எங்களுடைய அமைச்சரவை அதைப்பற்றி யோசித்து, ஒரு நல்ல முடிவை எடுக்கும்' என்று குறிப்பிட்டேன்.

இன்னும் சொன்னேன்; 'எல்லோரும் என்னை இங்கே மிகவும் புகழ்ந்து புகழ்ந்து பேசினார்கள். ஆரம்பத்திலேயே கட்டடம் வழங்குவதற்காக வழிவகுத்தவர் நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் என்பதையும் கோடிட்டுக் காட்டினார்கள். ஒரு பேராசிரியர் கலந்து கொள்ளும்போது, 'பரிசீலிக்கப்படும்' விழாவிலே பேராசிரியர் கலந்து கொள்ளும்போது, 'பரிசீலிக்கப்படும்' என்று சொல்லியிருக்கிறார். அதையும் கோடிட்டுக் காட்டினார்கள். இவர்களெல்லாம் எங்களைப் புகழ்ந்து பேசும்போது, எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. இந்தக் கட்டடத்திற்குப் பெயரே 'Ice House'; அவ்வளவுதான் என்னால் சொல்லமுடியும்' என்று குறிப்பிட்டேன். *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-00*

இங்கே நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், விவேகானந்தருடைய கொள்கைகளை, கருத்துகளை, விவேகானந்தரைப்போல் அவருக்கு முன்பு இருந்தவர்கள், பின்பு வந்தவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துகளையெல்லாம், இப்போது செயல்படுத்துகிற அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கின்ற காரணத்தால்தான், *(மேசையைத் தட்டும் ஒலி)* விவேகானந்தரின் நினைவைப் போற்றும் இல்லமாக இந்த இல்லத்தை அமைக்க மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தமாக எங்களிடம் இந்த இடத்தைத் தாருங்கள் என்று கேட்டபோது, அட்டியின்றி உடனடியாக இது வழங்கப்பட்டது. "விவேகானந்தர் என்ற தனி மனிதர்மீது அல்ல, அவருடைய கருத்துகள் எங்களுடைய தலைவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் தந்த கருத்துகளோடு ஒத்து வருகின்ற காரணத்தால் எங்கள் கருத்துகளுக்கு மேலும் மெருகூட்டுகின்ற வகையில், வலுவூட்டுகின்ற வகையில் இருக்கின்ற காரணத்தினால் எங்கள் கருத்துகளைத் துணையாகக் கொண்டு அவைகளைப் பரப்ப முடியும் என்ற காரணத்தால் நானும் என் அமைச்சரவையிலே உள்ளவர்களும் விவேகானந்தரிடத்திலே பரிவும் பற்றும் கொண்டிருக்கிறோம்" என்றுதான் குறிப்பிட்டேன். இதுவரையிலே இங்கே சொல்லப்பட்டதுபோல, இப்போது செங்கோட்டையன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல,

விவேகானந்தர் இல்லம்பற்றி நோட்டீஸ் எதுவும் விடவில்லை, கடிதமும் எழுதவில்லை. மத்தியிலேயிருந்து எங்களுக்கு வந்த தகவல் செம்மொழியாகத் தமிழை ஆக்கி, அதைப் பரப்பவும், ஏற்ற முறையிலே அதற்கான வழிவகைகளைக் காணவும் அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற ஐம்பெரும் குழு, எண்பேராயம் போன்ற அமைப்புகள் செயல்படவும் 76 கோடி ரூபாய் உங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. அதற்கு நீங்கள் ஒரு கட்டடம், ஓர் அமைப்பு இவைகளையெல்லாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்றபோது, தற்காலிகமாக ஒரு இடத்தைத் தேடலாம் என்று எண்ணி, அதைத் தேடிய நேரத்தில், சோழிங்கநல்லூரிலே நிரந்தரமான ஒரு கட்டடத்தைப் பிறகு கட்டுவது என்று அதற்கான முனைப்பான முயற்சிகளிலே ஈடுபட்டபோது, தற்காலிகமாக ஏதாவது அரசு இடங்கள் கிடைக்குமா என்று எண்ணிய நேரத்திலே, யாரோ ஒரு கதை கட்டி, ஏதேதோ ஒரு கதை கட்டி, அது பலிக்காத காரணத்தால், இவர்களை சாமியார் பக்கம் தள்ளிவிடுவோம் என்று இன்றைக்குச் சாமியார்களிடம் மோத விடுவதற்காக சில காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நீங்கள் சாமியாரிடத்திலே மோத விட்டாலும், மாமியாரிடத்திலே மோத விட்டாலும் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் யாரும் அவைகளையெல்லாம் புரிந்துகொள்ளாமல் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கட்டடத்தைத்தான் எடுக்கப்போவதில்லையே, ஏன் இவ்வளவு நேரம் எல்லோரும் பேசுவதற்கு இடம் கொடுத்துக்கொண்டாய் என்று கேட்பீர்கள். எனக்கு ஒரு ஆசை. விவேகானந்தரைப் பற்றி நம்முடைய தலைவர்களெல்லாம் பேசிக் கேட்க வேண்டும் என்பதற்காகவும் எல்லோரும் பேச (சிரிப்பு) அது இங்கே பரவ வேண்டும், ரொம்ப நாளாயிற்று, விவேகானந்தரைப் பற்றிப் பேசி என்பதற்காகவும், அவர் மூட நம்பிக்கைகளையெல்லாம் சாய்த்தவர், மத வெறிக்கு ஆளாகாதவர், ஜாதி வெறியைச் சாய்த்தவர், அப்படிப்பட்ட புரட்சிக்காரர் விவேகானந்தர் என்ற காரணத்தாலும், அவர் இறைச்சி உணவை உண்ணக்கூடியவர், புகை பிடிக்கக்கூடியவர், மனம் சுத்தமாக இருந்தால் இவையெல்லாம் தன்னை ஒன்றும் செய்யாது என்று எண்ணி சீர்திருத்த நோக்கங்களோடு செயல்பட்டவர். அப்படிப்பட்ட விவேகானந்தருடைய பெயரால் இருக்கின்ற அந்த மண்டபத்தை இடிக்கப் போகிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். யாராவது இடிக்கக்கூடிய மண்டபமா அது? இடிக்கக்கூடிய அளவுக்கு அவ்வளவு வலுவிழந்த மண்டபமா? இல்லை. வலுவான மண்டபம். அதை யாரும் இடிக்க விரும்பவுமில்லை. நினைக்கவும் இல்லை, அதற்காக அந்தப் பக்கம் திரும்பவும் இல்லை.



"அந்த மண்டபத்தைத் தொட்டால், சட்டப்படி நாங்கள் சந்திப்போம்" என்று அந்த மடத்தினுடைய பெரிய சாமியார்கூட சவால் விட்டிருக்கிறார். நான் அந்தச் சவால்களுக்கெல்லாம் பயப்படவில்லை. அது வேறு விஷயம். ஆனால் சாதுக்கள் சவால் விடுகின்ற அளவுக்கு வரக்கூடாது. அது விவேகானந்தருடைய கொள்கைக்கு, அவருடைய குருநாதர் இராமகிருஷ்ண பரமஹம்சருடைய கொள்கைக்கு விரோதமானது. இந்த அரசைப் பார்த்தா சவால் விடுவது? குமரி முனையிலே அவ்வளவு பெரிய கோபுரம் கட்டி, மண்டபம் அமைத்து இங்கே விவேகானந்தருடைய மண்டபத்தைப் போஷித்துப் பாதுகாத்து வருகின்ற இந்த அரசைப் பார்த்து சவால் விடுவது நல்லதல்ல, சாந்தம் பெறுங்கள். இதிலாவது விவேகானந்தருடைய விவேகமான பொன்மொழியைப் பின்பற்றுங்கள் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இதை இடிப்பதாகவோ அல்லது பழைய இடத்திலிருந்து புதிய இடத்திற்குச் செல்வதாகவோ எந்தப் பிரச்சினையும் இல்லை. இருப்பதெல்லாம் அப்படியே இருக்கும் என்ற உண்மையை உங்களுக்குச் சொல்லி, வீணாக நாம் அலட்டிக்கொள்ள வேண்டாம், பிரச்சினையைப் பெரிதுப்படுத்த வேண்டாம், இந்த அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் தேடிய வகையிலே தற்காலிகமாக எங்களுக்குக் கிடைத்திருக்கிற இடம், அதே காமராஜர் சாலையில் உள்ள 'பாலாறு இல்லம்'. அந்தப் பாலாறு இல்லத்தில், சோழிங்கநல்லூரில், எங்களுக்கு அந்தப் பெரிய கட்டடம் அமைகின்றவரையில் தற்காலிகமாக செம்மொழி மையம் அங்கே இடம் பெறும், அந்த இயக்கம் அங்கே இடம்பெறும் என்பதைத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 10-05

## (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் தட்டம்மை தடுப்பூசி போட்டதில் 4 குழந்தைகள் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவள்ளூர் மாவட்டத்தில் தடுப்பு ஊசி போடப்பட்டதில் 4 குழந்தைகள் இறந்தது மற்றும் 7 குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. பி.கே. சேகர்பாபு,

திரு. பி. பலராமன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. கே.எஸ். விஜயகுமார் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. ஆர்.எம். பழனிசாமி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக திரு. சி. கோவிந்தசாமி, திரு. என். நன்மாறன், செல்வி. கே. பாலபாரதி, திரு. கே. மகேந்திரன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருமதி பி. பத்மாவதி அவர்களும் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. இ.ஏ.பி. சிவாஜி தி.மு.க. சார்பாகவும், பா.ம.க. சார்பாக திரு. தி.க. ராஜா, திரு. தி. வேல்முருகன், திரு. கி. ஆறுமுகம், திரு. கே.எல். இளவழகன் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக திரு. கு. செல்வம் அவர்களும் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய மானியக் கோரிக்கை நடந்துகொண்டிருக்கின்ற இந்தச் சமயத்தில் தமிழக மக்களிடத்திலே ஓர் அதிர்ச்சியான, வேதனையான செய்தி நேற்று காட்டுத் தீ போல் பரவி இருக்கிறது. இந்த அரசின் மெத்தனப்போக்கினால் திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூரில் மூன்று குழந்தைகளும், திருத்தணித் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியத்தில் வெங்கடாபுரம் கிராமத்திலே ஒரு குழந்தையும், ஆக மொத்தம் நான்கு குழந்தைகள் இந்த அரசினுடைய அலட்சியப்போக்கால் உயிரிழந்து இருக்கின்றன என்ற செய்தி இன்றைக்கு தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. நேற்றையதினம் திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூரை அடுத்த பூண்டி ஒன்றியம் பென்னாலூர்பேட்டை காலனியில் தட்டம்மை தடுப்பு ஊசி போடப்பட்ட 10 மாதங்கள் ஆன மூன்று பெண் குழந்தைகள், அல்லிமுத்து மகள் பூஜா, ஏழுமலை மகள் நந்தினி, மோகனின் மகள் மோகனப்பிரியா ஆகிய மூவரும், வெங்கடாபுரம் கிராமத்தைச் சார்ந்த லோகேஷ் என்ற பத்து மாத குழந்தையும் தடுப்பூசி



போடப்பட்ட சிறிது நேரத்திலே மயங்கி விழுந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்கின்ற வழியிலேயும், மருத்துவமனைக்குச் கொண்டுச் செல்லப்பட்ட பிறகும் உரிய சிகிச்சை பலனளிக்காமல் நேற்றைக்கு இறந்து போய் இருக்கிறார்கள்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்கள் கழகத்தினுடைய நிர்வாகிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கே அனுப்பி வைத்தார்கள். நாங்கள் எல்லாம் சென்று அங்கே பார்த்தோம். அங்கே அந்த மருத்துவமனையிலே மரண ஓலம், தாய்மார்களின் கண்ணீர் என்ற ஒரு நிலைமை, பார்ப்போரை பதைபதைக்க வைத்தது. ஏனென்று சொன்னால், அற்புதம்-ஏழுமலை என்பவருக்கு நீண்ட நாட்களாக குழந்தையே இல்லாமல் இருந்து பிறந்திருக்கிற அந்தக் குழந்தையும் தடுப்பூசி போடப்பட்டதால் இறந்து போய் இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

*முற்பகல் 10-10*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மருந்துகளை நேரடியாகக் கொள்முதல் செய்தாலும், தனியாரிடத்திலிருந்து வாங்கினாலும்கூட, அரசு அவற்றை உரிய முறையில் ஆய்வகங்களுக்கு அனுப்பி, பரிசோதனை நடத்திய பின்னர்தான், அந்த மருந்துகள் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறி, நேற்றைக்கு ஒரு சோகச் சம்பவம் நடந்தேறியிருக்கிறது. இதுபோன்ற தடுப்பூசிகளைப் போடுவதற்கு முன்னரே, அரசு அதைக் கொள்முதல் செய்ததும், அந்த மருந்துகளின் தரத்தைப் பரிசோதிப்பதோடு மட்டுமல்லாமல், அந்த மருந்தை எவ்வளவு காலத்திற்குப் பயன்படுத்தலாம் என்பது குறித்த அறிவுரைகளையும் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கவேண்டும்.

இன்னொன்றையும் சொல்லவேண்டுமென்றால், அரசால் என்றைக்கு அந்த மருந்து வாங்கப்படுகிறதோ, அன்றைக்கே அந்த மருந்தின் தரம் பரிசோதிக்கப்பட வேண்டும். இந்த நிலையில், இப்படிப்பட்டதொரு சோகமான நிகழ்வு தமிழக மக்களிடத்திலே

அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள சூழ்நிலையில், தமிழகத்தினுடைய சுகாதாரத் துறை அமைச்சர், திருவள்ளூருக்குச் சென்று, பத்திரிகையாளர்களிடத்திலே பேட்டியளிக்கிறார். இந்த சம்பவத்திற்கு நாங்கள் காரணம் அல்ல. மத்திய அரசுதான் மருந்தை சப்ளை செய்கிறது என்று சொல்லியிருக்கிறார். மத்திய அரசுதான் மருந்தை சப்ளை செய்கிறது என்று சொன்னால், ** என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதேநேரத்திலே, அவர் பேட்டியளிக்கின்றபோது சொல்கிறார்; "இந்த மருந்தையெல்லாம் நானா சப்ளை செய்யச் சொன்னேன்" என்கிறார். ** நேற்றைக்குத் திருவள்ளூர் மாவட்ட மக்களிடத்திலே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிறது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால்வரை, Pune, Serum Vaccine தயாரிப்பான தட்டம்மை தடுப்பூசி பயன்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது ஐதராபாத்தைச் சேர்ந்த Human Biological Institute தயாரிப்பான மருந்துகள் வாங்கப்படுகின்றன. இதற்குக் காரணம் யார் என்பதை இந்த அரசு விளக்க வேண்டும். இதுபோன்ற நிகழ்ச்சிகள், இதுபோன்ற மருந்து மாற்றத்தால் நிகழ்ந்திருக்கிறதோ என்று அந்தப் பகுதி மக்களிடத்திலே ஐயப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. மருந்தைப் பாதுகாப்பதிலே ஏதேனும் குளறுபடிகள் இருக்கின்றனவோ என்றும் மக்கள் மத்தியிலே இன்றைக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், விலைமதிக்க முடியாத உயிரைப் பலி வாங்கிய அந்த மருந்தை உடனடியாகத் தடை செய்ய இந்த அரசு முன்வர வேண்டும். மத்திய அரசு மருந்துதான் என்று, ** இந்த சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு, நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். வழக்கம்போல், இரண்டு செவிலியர்களை suspend செய்திருப்பதாக அறிவித்துள்ளீர்கள். ஆனால், மக்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதில் மக்கள் எதிர்பார்ப்பது, அந்த மருந்தை சப்ளை செய்தது யார்? சப்ளை செய்யப்பட்ட மருந்தை பரிசோதனை செய்யாமல், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அனுப்பிய மேல் அதிகாரிகள் யார்? அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பனவற்றை அறிந்துகொள்ள மக்கள் விரும்புகிறார்கள். இதற்கு என்ன உத்தரவாதத்தை இந்த அரசு அளிக்கப்போகிறது என்றுதான் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





ஆகவே, இந்த நிகழ்ச்சியிலே பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு, இந்த அரசால் உரிய முறையிலே நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதேநேரத்தில், பேட்டியின்போது, ** "நான் இதற்கு என்ன செய்ய முடியும்? இதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு" என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த அரசு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. கோ. அரி:** முடிக்கப்போகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று உறுப்பினர் சொல்கிறார்.

**திரு. கோ. அரி:** நான் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** தவறு நடந்திருக்கிறது, நடந்த தவறை விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் அமைச்சர் சொல்லியிருக்கிறார். இதே அவையிலே உங்களுடைய அம்மா, சட்டப் பேரவையிலே, இதே அவையிலே சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, நீங்கள் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். உங்களை எச்சரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** "நடக்கின்ற கொலை, கொள்ளை இவற்றையெல்லாம், நானே சென்று துப்பறிய முடியாது; விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்" என்றுதான் சொன்னார்கள். அதுமாதிரித்தான் எங்கள் அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ** முறையில் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். திரு. கோ. அரி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கைக்குச் செல்லுங்கள். இருக்கை மாறி, ஏன் இங்கே வந்து அமர்ந்திருக்கிறீர்கள்? திரு. கோ. அரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியை செய்தித்தாள்கள்மூலமும், தொலைக்காட்சிகளின்மூலமும் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. கோ. அரி:** நான் பேசிய எல்லாவற்றையும்கூட நீக்கிவிடுங்கள். அது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவைப்பட்டால் அதையும் செய்வோம்.

**திரு. கோ. அரி:** தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் பேட்டியாக வெளிவந்திருக்கிறது. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். பொதுமக்களை பாதுகாக்காத, அந்தக் குழந்தைகளைப் பலிவாங்குவதற்குக் காரணமாக இருந்த இந்த அரசு இதற்குப் பொறுப்பேற்று, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இராஜினாமா செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

*(முற்பகல் 10-15*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்குட்டுவன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தொகுதியில் பல்வேறு இடங்களிலே தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டது. கச்சூர் என்ற ஒரு இடத்திலேயும் போடப்பட்டது. அதேபோல, திருவள்ளூர் மாவட்டத்திலே உள்ள பிளேஸ்பாளையம், அல்லிக்குழி போன்ற பல்வேறு இடங்களிலே தடுப்பூசி போடப்பட்டது. கச்சூர் என்ற கிராமத்திலே போடப்பட்ட தடுப்பூசி, பென்னாலூர்பேட்டை **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



காலனியைச் சேர்ந்த அல்லிமுத்து என்பவரின் 10 மாத பெண் குழந்தை, ஏழுமலை என்பவரின் 10 மாத பெண் குழந்தை, மோகன் என்பவரின் 11 மாத பெண் குழந்தை, அதேபோன்று, வெங்கட்டாபுரத்திலே தடுப்பூசி போடப்பட்ட குப்பையா என்பவருடைய 10 மாத ஆண் குழந்தை லோகேஷ் ஆகியோர் தடுப்பூசி போடப்பட்ட சிறிது நேரத்திலேயே, அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு, வாயிலே நுரை தள்ளி, அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்றபோது இந்த 4 குழந்தைகளும் பரிதாபமாக இறந்திருக்கிறார்கள். ஏழு குழந்தைகள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது நிறைய இடங்களிலே இப்படிப்பட்ட ஊசிகள் போடப்பட்டிருந்தாலும்கூட, இந்த 4 குழந்தைகள் மரணமடைய வேண்டிய அவசியம் என்ன என்பதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும்.

இந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று, அவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறி, ஒரு மருத்துவக் குழுவை அமைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

ஆனால், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னாலே Pune-யிலுள்ள Serum Institute தயாரித்த தட்டம்மை தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டன. தற்பொழுது Hyderabad-ஐச் சேர்ந்த Human Biological Institute தயாரிப்பு ஊசிகள் supply செய்யப்பட்டுள்ளன. இதனால், புதிய கம்பெனி மருந்துகளில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என்ற சந்தேகம் பலருக்கு எழுந்துள்ளது.

ஆனால், பொதுவாக தடுப்பூசி போன்றவற்றின் பராமரிப்பில் கோளாறு இருந்தால் அது பாதிப்பை ஏற்படுத்தும். இம்மாதிரி தடுப்பூசிகள், சேமித்து வைக்கப்படும் மருந்துகள் வீரியம் குறைவது என்பதைவிட, உரிய முறையில் fridge-ல் பாதுகாப்பாக இருந்ததா என்றும் தெரியவில்லை. அதிக வெப்பம் இருக்கும் காலத்தில் அதற்குரிய சீதோஷ்ண நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட stock-தானா என்றும் தெரியவில்லை.

ஆனால், தற்போது மத்திய அரசு கொள்முதல் செய்து மாநில அரசுக்கு வழங்குகின்ற இந்தத் தடுப்பு மருந்து, 5 குழந்தைகளுக்கான மருந்தினை ஒரு பாட்டிலில் அடைத்துத் தருகிறது. அதிலே ஒன்றோ, இரண்டோ எடுத்துவிட்டு, ஒருவருக்கோ, இருவருக்கோ போட்டுவிட்டு மீதி மூன்று பேருக்குப் போடவேண்டிய மருந்தை வெளியிலே வைத்திருந்தால் மறுநாள் அது கெட்டுப்போய்விடும். ஆனால், இதே மருந்து. தனியார் மருத்துவமனைகளுக்கு, ஒரு குழந்தைக்கான மருந்து ஒரு பாட்டிலிலே அடைத்துத் தரப்படுகிறது. 5 குழந்தைகளுக்குள்ள மருந்தை ஒரே பாட்டிலில் அடைத்துக் கொடுப்பதால் அந்த பாட்டிலை பத்திரப்படுத்துவதற்கு சிரமமாக இருக்கிறது. எனவே, இனிமேல் கொள்முதல் செய்யப்படும்போது. ஒரு குழந்தைக்குள்ள மருந்தை ஒரே பாட்டிலிலே pack செய்து வாங்குவது நல்லது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருந்தாலும், இது ஈடுசெய்ய முடியாத பெரிய இழப்பு. பாதிக்கப்பட்ட ** 4 குழந்தைகளின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைத்து, மருத்துவமனையிலே சிகிச்சை பெறுகின்ற 7 குழந்தைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்தகைய நிகழ்வுகளுக்கு யார் காரணமாக இருந்தாலும், அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

*முற்பகல் 10-20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கச்சூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட, அந்தச் சுற்று வட்டார கிராமங்களையும் சேர்ந்த ஒரு வயது குழந்தைகளுக்கு தட்டமை தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டிருக்கின்றது. அப்படி நடத்தப்பட்ட முகாமில் தடுப்பூசி போடப்பட்ட சில நிமிடங்களிலேயே, பூஜா, நந்தினி, மற்றும் மோகனப்பிரியா என்கிற மூன்று குழந்தைகளும், அதேபோல வேறொரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பகுதியைச் சேர்ந்த லோகேஷ் என்ற ஒரு குழந்தையையும் சேர்த்து, நான்கு குழந்தைகள் நேற்றையதினம் உயிர் இழந்திருக்கிறார்கள். இந்த உயிரிழப்புகள் எப்படி ஏற்பட்டிருக்கின்றன, எதற்காக ஏற்பட்டிருக்கின்றன இதில் எங்கு குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன? இந்த மருந்து மத்திய அரசினுடைய நேரடிப் பார்வையில் இருக்கக்கூடிய நிறுவனங்களிலிருந்து, தமிழக அரசுக்கும், அதுபோல இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. அப்படி வழங்கப்பட்டிருக்கின்றபோது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற ஒரு சம்பவம் ஏற்பட்டதாக இன்றுவரை எந்தத் தகவல்களும் இல்லை. ஆனால், நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில் இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இச்சம்பவம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த மருந்துகளை ஒரேமுறை ஊசி போடுவதற்குண்டான பாட்டில்களில் அடக்கி வைக்கப்பட்டு, அவை குளிர்சாதனப் பெட்டிகளிலே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்து அந்த நிமிடத்தில் அதை எடுத்து அக்குழந்தைகளுக்கு போடப்பட்டிருக்கும் என்று சொன்னால், எந்தவிதத்திலும் அதனால் தீங்கு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இம்மருந்தை மூன்று கட்டங்களில் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் குழுக்களைக் கொண்டு மத்திய அரசு பரிசோதனை செய்து, அதற்கென்று இருக்கிற Institute-களில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுத்தான் பிற மாநிலங்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது. அப்படி செய்யப்படுகின்ற இடத்தில், அவை கையாளப்படுகின்ற இடத்திலோ, அவற்றை பாதுகாத்து வைக்க வேண்டிய இடத்திலோ, அல்லது காலவதியாகி அம்மருந்து அக்குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளதா என்கின்ற பல்வேறு வினாக்கள் இதுகுறித்து எழுப்பப்படுகின்றன. இதையெல்லாம் நம்முடைய அரசு விரிவான ஓர் ஆய்வுக்கு உட்படுத்தி, எந்த நிலையில் இப்பாதிப்பு ஏற்பட்டு, வளரவேண்டிய அந்த இளந்தளிர்கள் தங்கள் உயிரைத் துறந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறியவேண்டும்.

இதில் எனக்கு கிடைத்த ஒரு கொடுமையான செய்தி என்னவென்று சொன்னால், நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது, இச்சம்பவம் ஏற்பட்ட சில மணி நேரங்களிலேயே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து, மாவட்ட மருத்துவமனைக்கு இந்தக் குழந்தைகளை எடுத்துச் செல்வதற்கான ஆம்புலன்ஸ் வண்டிக்காக

[திரு. தி. வேல்முருகன்] [2008 ஏப்ரல் 24

அவர்கள் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். ஆம்புலன்ஸ் அரசு மாவட்ட மருத்துவமனையில் இருக்கிறது. ஆனால், நம்முடைய அரசு அதற்கு வழங்கும் டீசல் பற்றாக்குறை காரணமாக அந்த வண்டியை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால், இன்றையதினம் தினத்தந்தியில் செய்தியைப் படிக்கின்றபோது, டாடா சுமோ போன்று பல்வேறு கார்கள், மற்றும் இதர ஊர்திகள் எல்லாம் அந்த மருத்துவமனையிலே வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே என்ன மனிதநேயமற்ற ஒரு தன்மை நடந்தேறியிருக்கிறது என்று சொன்னால், அக்குழந்தைகள் ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றபோது, அங்கே வந்த பொது மக்களோ, அல்லது மருத்துவமனைக்கு வருகின்ற அரசினுடைய உயர் பெருமக்களோ தங்கள் வண்டி, வாகனங்களைக் கொடுத்து, அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதியினை உடனடியாகத் தந்து மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருந்தால் அவ்வுயிர்கள் இன்றைக்கு காப்பாற்றப்பட்டிருக்கும். அந்நிலையையும் நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். நம்முடைய அரசைப் பாராட்டவேண்டிய ஒரு செய்தி என்னவென்றால், இன்றையதினம் இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் பதில் சொல்வதற்காக நெருக்கடியான கட்டத்தில் இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியைக் கேள்விபட்ட சில மணி நேரத்திற்குள் அரசு அதிகாரிகளுடனும், அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடன் அங்கே ஆஜராகி, அங்கு பாதிப்பிற்குள்ளான குழந்தைகளை உடனடியாக எழும்பூர், குழந்தைகள் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து அவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடுமட்டுமல்லாமல், அங்கு ஏற்பட்ட அந்த அசாதாரண சூழ்நிலையில், அங்கு மக்கள் களத்திலே வந்து போராடுகின்றபோது அவர்களிடத்திலே நேரடியாகச் சென்று, ஆறுதல் சொல்லி, இந்த வலியை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகக்கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மீதம் இருக்கின்ற குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாவண்ணம் இந்த அரசு பாதுகாக்கும், இதுகுறித்து முதலமைச்சர் அவர்களோடு பேசி, தேவையான உதவிகள் தரப்படும் என்று நல்ல ஆறுதலான வார்த்தைகளை மக்களிடத்திலே கூறி, மிகப்பெரிய பதற்றத்தை தணித்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எடுத்த நடவடிக்கைகளை



2008 ஏப்ரல் 24] [திரு. தி. வேல்முருகன்]

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பாராட்டுகின்ற அதேவேளையில், இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கும் மத்திய அரசின்மூலமாகப் பெறப்படுகின்ற, பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்ற அதேமருந்துதான், நம்முடைய தமிழகத்திற்கும் வருகிறது, இதில் எங்கு தவறு நடந்திருக்கிறது, எப்படி தவறு நடந்திருக்கிறது என்பதை ஆய்வு செய்து, நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அரி அவர்கள், அந்த மாவட்ட மக்களினுடைய பிரதிநிதியாக பேசியிருக்கிறார். ஆனால், ஒரு சம்பவம் நடக்கின்றபோது, எதற்கெடுத்தாலும் இந்த அரசு கலைக்கப்பட வேண்டும் அல்லது அரசு இராஜினாமா செய்ய வேண்டுமென்ற கருத்தை பிரதான எதிர்க்கட்சி நண்பர்கள் வலியுறுத்துவது ஏற்புடையதாக இல்லை.

மகாமகத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியானபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, திராவிட முன்னேற்றக் கழகமோ இராஜினாமா செய்யச் சொல்லவில்லை. கும்பகோணம் தீ விபத்தில் நூற்றுக்கணக்கான பச்சிளங் குழந்தைகள் கருகி இறந்தபோது, இந்த அரசு பொறுப்பு ஏற்க வேண்டும், துறையின் அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும், என்று அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த நானோ, அல்லது அண்ணன் ஜி.கே. மணி அவர்களோ ஒருபோதும் வலியுறுத்தவில்லை. எத்தனையோ விபத்துகளில் அந்த காலகட்டத்தில் உயிரிழப்பு ஏற்பட்டபோது அந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பேற்க வேண்டுமென்று வலியுறுத்தவில்லை. அமைச்சர் இதற்கு பொறுப்பேற்று இராஜினாமா செய்ய வேண்டுமென்று இந்த அவையில் பதிவு செய்வது என்பது நாகரிகமான அரசியல் இல்லை. அது முன்னுதாரணமாக இருக்கக்கூடாது என்பதையும் பிரதான எதிர்க்கட்சி நண்பர்கள் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்தச் சம்பவம் ஏதோ ஒரு விதத்தில் நடந்திருக்கிறது. ஏற்படக் கூடாத ஒரு விபத்து ஏற்பட்டிருக்கிறது. இது போன்ற சம்பவங்கள் இனி வருங்காலங்களில் நடக்காத வண்ணம் நம்முடைய அரசும், மாண்புமிகு துறையின் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விரிவான ஆய்விற்கு இதை உட்படுத்த வேண்டும். நேற்றையதினம், கவனக் குறைவாக அந்த மருந்தை

செலுத்திய செவிலியர்களும், மருந்தாளர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் விரிவான ஒரு ஆய்விற்கு உட்படுத்தப்படவேண்டும். இனி வருங்காலங்களில், மருத்துவமனைகளிலோ அல்லது வேறு எங்கேயோ போலியோ சொட்டு மருந்து போடுகின்றபோது இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கடந்தகால ஆட்சியில் போலியோ சொட்டு மருந்து போட்டு இறந்ததாக வரலாறுகள் எல்லாம் பத்திரிகை செய்தியாக வந்திருக்கின்றன. அதற்கெல்லாம் ஒரு பாதுகாப்பான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக நம்முடைய அரசின் கவனத்தை ஈர்த்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறந்த அந்த 4 குழந்தைகளுடைய குடும்பங்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் நம்முடைய அரசு நிவாரணமாக வழங்க வேண்டுமென்று கேட்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என் கருத்தை பதிவு செய்து அமர்கிறேன், நன்றி.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருவள்ளூர் மாவட்டம், கச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பென்னாலூர்பேட்டையைச் சேர்ந்த 3 குழந்தைகள் தட்டம்மை தடுப்பூசி முகாம்மூலமாக, தடுப்பூசி போடப்பட்டதால் மயக்கமுற்று இறந்து விட்டார்கள். இது மனதை உருக வைக்கும் நிகழ்ச்சி, நினைத்துப் பார்த்தால்கூட நெஞ்சு பதறும் செய்தி. இந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடனே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் உடனே சம்பவ இடத்திற்குச் சென்று, உடனடி நிவாரண நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார்கள். உடனே நாங்கள் அங்கே சென்று அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். அவர்கள் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்களின் ஒரே செல்வமாக இருப்பது அந்தக் குழந்தைகள்தான். அதையும் இழந்துத் தவிக்கின்ற அந்தக் குடும்பங்களுக்கு மனித நேயத்தின் மறுவார்ப்பாக உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு ஒரு பெரும் தொகையை வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள் பேசும்போது, உள்நோக்கத்தோடு மனித நேயத்தையும் அரசியலாக்குகின்ற வகையிலே பேசினார்கள். அங்கே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், இந்த மருந்துகளையெல்லாம் மத்திய அரசின் மூலமாகத்தான் நாம் கொள்முதல் செய்கிறோம், King Institute-லிருந்து ஆய்வு செய்வதற்காக இப்போது வருகை தந்திருக்கிறார்கள். அதேபோன்று, மத்திய அரசினுடைய மருத்துவக் குழு நாளை இங்கே வருகிறது. அவர்கள் ஆய்வு செய்து முடிவு எடுத்த பிறகு, நாங்கள் இதற்கான நடவடிக்கைகளை, சம்பந்தப்பட்டவர்கள், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது எடுப்போம் என்றுதான் பொறுப்போடு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பதில் சொன்னார்கள். இதற்காக அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டுமென்று பேசுவது, அரசியல் நோக்கத்தோடு பேசுவதாகும். இப்படி விபத்துபோன்று நடக்கின்ற இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்த நேரத்திலே வெள்ள நிவாரணம் வழங்கும்போது, எம்.ஜி.ஆர். நகரிலும், வியாசர்பாடியிலும் எத்தனை பேர் செத்தார்கள், அதற்காக அவர்கள் இராஜினாமா செய்தார்களா என்பதையும் கேட்டுக்கொண்டு, நடக்கக் கூடாத இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது, இதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து ஒரு பெருந்தொகையை அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், கச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட கச்சூர்மேடு கிராமம், பால்வாடி மையத்தில் தட்டம்மை தடுப்பூசி 15 குழந்தைகளுக்குப் போடப்பட்டதில், பென்னாலூர்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த அல்லிமுத்து மகள் பூஜாவும், ஏழுமலை மகள் நந்தினி, மோகனின் மகள் மோகனப் பிரியா, பூனிமாங்காடு, வெங்கடாபுரம் கிராமத்தைச் சேர்ந்த குப்பையாவின் மகன் லோகேஷ் ஆகிய 4 குழந்தைகள் தட்டம்மை தடுப்பூசி போட்ட சில நிமிட நேரங்களில் மரணம் அடைந்திருக்கிறார்கள். கச்சூர்மேடு கிராமம், பால்வாடி மையத்திலே

தடுப்பூசி போடப்பட்ட ஏனைய குழந்தைகள் ஆபத்தான நிலையிலே அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்றைக்கு முறையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக பத்திரிகையிலே செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

*முற்பகல் 10-30*

நேற்றையதினம் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டதில் 4 குழந்தைகள் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்றால், பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்தியின் அடிப்படையில், 6 மாதங்களுக்கு முன்பாக வாங்கப்பட்ட அந்தத் தடுப்பூசி மருந்துகள் முறையாக பராமரிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புவதோடு, இதுபோன்ற தடுப்பூசி மருந்துகளை பச்சிளம் குழந்தைகளுக்கு பயன்படுத்தும்போது அந்த மருந்துகள் காலாவதியாகிவிட்டனவா என்பதை முறையாகக் கணக்கிட்டு ஆய்வு செய்ததற்குப் பின்புதான் குழந்தைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற விதிகள் இருந்தும்கூட, நேற்றையதினம் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டதிலே 4 குழந்தைகள் மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்த மரணத்திற்குப் பொறுப்பாக்கி, இரண்டு கிராமச் சுகாதார செவிலியர்கள், மருந்தாளுநர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட மருந்து கட்டுப்பாட்டுத் துறையின் சார்பாக மருந்து விநியோகிக்கப்பட்டு இருக்கிறது என்றால், அதற்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, ஏற்கெனவே பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, தடுப்பூசி மருந்துகள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றால், அந்த மருந்துகள் கெட்டுப்போவதற்கான வாய்ப்புகள் என்பது கூடுதலாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். எனவே, மாவட்ட தலைமை மருத்துவமனை தவிர, ஏனைய மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களில் இதுபோன்ற தடுப்பூசி மருந்துகளைப் பராமரிப்பதற்குப் போதுமான ஏற்பாடுகளை நம்முடைய மாநில சுகாதாரத் துறை செய்து கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

இதுபோன்ற பாதிப்புகள் எந்தவொரு பகுதியிலும் ஏற்படும்போது, அந்தப் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கு மேல் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான ஆம்புலென்ஸ் வசதிகள் இல்லை என்ற செய்திகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, தாலுகா மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட





பாதிக்கப்படக்கூடிய இடங்களில் இருக்கக்கூடிய குழந்தைகளாக இருந்தாலும் சரி, மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு உடனடியாக மேல் சிகிச்சை கிடைப்பதற்கு ஆம்புலென்ஸ் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** நான்கு குழந்தைகள் மரணம் அடைந்திருக்கக்கூடிய அந்தக் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த அரசுக்குக் கோரிக்கை வைத்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் திருவள்ளூர் மாவட்டம், பென்னலூர்பேட்டை, கச்சூர் பகுதிகளில் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்ட 4 குழந்தைகள் உயிர் இழந்திருக்கிறார்கள் மற்றும் 7 குழந்தைகள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். 10 மாதங்கள் நிறைந்த பூஜா, மோகனப்பிரியா, நந்தினி ஆகிய 3 பெண் குழந்தைகளும், லோகேஷ் என்ற ஆண் குழந்தையும் இறந்துள்ளார்கள்.

தட்டம்மை தடுப்பு மருந்து Human Biological Institute நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. நேற்று பயன்படுத்திய தடுப்பூசி மருந்து, தனியாரிடம் வாங்கப்பட்ட அந்தத் தடுப்பூசி மருந்து, காலம் கடந்த மருந்து என்று கூறப்படுகிறது. இந்த நிறுவனம் தயாரித்துள்ள மருந்தின் தரம் அவ்வப்போது பரிசோதனை செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறோம்.

சில முக்கிய மருந்துகளை குறிப்பிட்ட வெப்ப நிலைக்கு மேல் போகாத அளவில் வைக்க வேண்டும். வெப்பச்சூடு அதிகரித்தால் மருந்து அதனுடைய வீரியத்தை இழந்துவிடுகிறது. இதுபோன்ற நிலைமைதான் பல்வேறு நேரங்களில் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது. குன்னூர், கிண்டி ஆகிய தடுப்பூசி உற்பத்தி செய்யும் பொதுத் துறை மையங்களை மத்திய சுகாதாரத் துறை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** தற்போது அனைத்து வகை தடுப்பூசிகளும் தனியாரிடமிருந்து வாங்கப்படுவதால் தட்டுப்பாடுகளும், தரத்தில் குறைபாடுகளும் ஏற்படுகின்றன. எனவே, பொதுத் துறையில் உற்பத்தி செய்யும் தடுப்பூசி மருந்துகளை அதிக அளவில் உற்பத்திச் செய்யவும், அதையே பயன்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் *10-35*

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் துணைச் சுகாதார நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற தடுப்பூசி மருந்துகள், குறிப்பாக தட்டம்மை தடுப்பூசி, போலியோ சொட்டுமருந்து, நாய்க்கடி மருந்து போன்ற தடுப்பூசி மருந்துகளை வைப்பதற்கான குளிர்சாதனப் பெட்டி அடிப்படை வசதிகளோடு இருக்கவேண்டும். இப்படிப்பட்ட அடிப்படை வசதிகள் இல்லாததுகூட இந்த மாதிரியான பரிதாபமான நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக இருக்கின்றது. எனவே, கிராமப்புறங்களில் இருக்கின்ற சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டி போன்ற அடிப்படை வசதிகளை அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குழந்தைகளை பலி கொடுத்துள்ள அந்தக் குடும்பங்களுக்கு எப்படி நாம் ஆறுதல் சொல்வது, எப்படி ஈடு செய்வது என்றே தெரியவில்லை. செய்தி தெரிந்தவுடனே நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரவர்களும், ஏனைய அதிகாரிகளும் அங்கே சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் வழங்கினார்கள். அதோடுமட்டுமல்லாமல், இருக்கின்ற குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். அதை நாம் இந்த நேரத்தில் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் நிகழாவண்ணம் நம்முடைய அரசு பார்த்துக்கொள்வதற்கும், தனியார் நிறுவனங்களின்மூலம் தயாரிக்கப்படுகின்ற மருந்துகள், அவை நல்ல மருந்துகள்தானா என்பதை நாம் அடிக்கடி பரிசோதிக்கவும் வேண்டும். இன்னும் தடை செய்யப்பட்ட பல்வேறு மருந்துக் கம்பெனிகள்கூட நம் இந்திய நாட்டிலே இருக்கின்றன என்பதை நாம் செய்தித்தாள்கள்மூலமாக அவ்வப்போது பார்த்துத் தெரிந்துகொள்கின்றோம். எனவே,



ஆவண காப்பகம் சென்னை-600

2008 ஏப்ரல் 24] [திருமதி பி. பத்மாவதி]

இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட மோசமான துயரச் சம்பவத்திற்கு (*மணியடிக்கப்பெற்றது*) ஆளான அந்தப் பெற்றோர்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையில், அந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலே, பென்னாலூர்பேட்டை அங்கன்வாடி மையத்தில், கச்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி போடும் முகாம் நடந்திருக்கின்றது. அதேபோன்று, பிளேஸ்பாளையம், சிறுவானூர், கண்டிகை, வெங்கட்டாபுரம் மற்றும் அல்லிக்குழி ஆகிய இடங்களிலும் தடுப்பூசி முகாம் நடந்திருக்கின்றது. ஏராளமான பெண்கள் தங்களது 10 மாதம் முதல் ஒரு வயது வரையிலான குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட தூக்கிக்கொண்டு வந்திருக்கின்றனர். பென்னாலூர்பேட்டையில் முதலில் அல்லிமுத்து என்பவரின் 10 மாதக் குழந்தை பூஜாவுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அடுத்ததாக, ஏழுமலை என்பவரின் 10 மாதக் குழந்தை நந்தினிக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஊசி மருந்து செலுத்தப்பட்ட சில விநாடிகளில் அந்தக் குழந்தைகள் திடீரென்று மயக்கமடைந்து கண்ணை மூடியிருக்கின்றன. அதேபோன்று, மூன்றாவதாக மோகன் என்பவரின் 10 மாதக் குழந்தை மோகனப்ரியாவுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அந்தக் குழந்தையும் சில மணித் துளிகளில் கண்ணை மூடியது. அதேபோன்று, குப்பையா என்பவரின் மகன் லோகேஷ் என்ற குழந்தையும் இப்படி கண்ணை மூடியிருக்கின்றது. இது ஒரு அதிர்ச்சிகரமான துயரமான செய்தியாகும். இதை அறிந்தவுடனே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களும் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்று அந்தக் குழந்தைகளை இழந்த பெற்றோர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, உரிய நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்கள்.

நம்முடைய தமிழக அரசின் முன்னோடித் திட்டமான வருமுன் காப்போம் திட்டத்தின்மூலம் இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்களை நடத்தி, 55 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழக மக்களுக்கு

மருத்துவம் அளித்து அரசு பாதுகாத்து வந்திருக்கின்றது. பல மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட இந்த வருமுன் காப்போம் முகாம்களுக்கு நாங்களெல்லாம் சென்று பார்த்தபோது, எவ்வளவு சிறப்பாக நம்முடைய அரசு அந்த முகாம்களை நடத்தியது என்பதை அறிந்தோம். ஆனால், இப்போது எதிர்பாரர்தவிதமாக, துரதிருஷ்டவசமாக நேற்று நடந்த சம்பவம் அனைவரையும் வேதனைக்குள்ளாக்கி இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க, இவற்றைத் தடுத்து நிறுத்த என்னென்ன திட்டங்களைத் தீட்டவேண்டுமோ, அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தப் பெற்றோர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் நம்மால் ஆறுதல் சொல்ல முடியாது. இருந்தாலும், அவர்களுக்கு ஒரு நிவாரணத் தொகையை அளித்து, அந்தக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும். இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் இந்த விவாதத்திலே பேசும்போது, ** காலனி என்று சொல்லியிருக்கின்றார். தயவுகூர்ந்து அந்த ** என்ற சொல்லை இனிவரும் காலங்களில் அவர் பயன்படுத்தக்கூடாது. அது அந்தக் காலத்தில் பேசப்பட்ட செய்திகள், பேச்சுக்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டாரம், கச்சூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பென்னாலூர்பேட்டை கிராமத்தில் மூன்று குழந்தைகளும், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு ஆரம்பச் சுகாதார நிலையம், வெங்கடாபுரம் கிராமத்தில் ஒரு குழந்தையும், தட்டம்மை தடுப்பூசி போடப்பட்ட பின் இறந்துள்ளனர். திருவள்ளூர் மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப் பணிகளிடமிருந்து மேற்கண்ட தகவல் கிடைத்ததும், மாநிலத் தலைமை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





நிலையத்திலிருந்து விரைந்து செயலாற்றும் குழு, மேற்கண்ட இடங்களுக்குச் சென்று, ஆய்வினை மேற்கொண்டது. ஆய்வுக் குழுவில் இடம்பெற்றோர், மருத்துவர் பத்மநாபன், இயக்குநர், டி.பி.எச்., மருத்துவர் சாரதா சுரேஷ், இயக்குநர், ஐ.சி.எச்., மருத்துவர் இளங்கோ, கூடுதல் இயக்குநர், மருத்துவர் செந்தமிழன், இணை இயக்குநர், மருத்துவர் குணசேகரன், துணை இயக்குநர், கிங் நிலையம். மருத்துவர் துரைராஜ், இணை இயக்குநர், மருத்துவர் இரவிச்சந்திரன், R.R.T. Member, மருத்துவர் வெங்கட்ராமன், பேராசிரியர், V.P.T., மருத்துவர் முகமது மீரான், பேராசிரியர், Microbiology.

இறந்த குழந்தைகள் விவரம், நந்தினி, வயது 10 மாதம். பூஜா, வயது 10 மாதம், மோகனப் பிரியா, வயது 10 மாதம், லோகேஷ், வயது 10 மாதம். கொடுத்த தடுப்பு மருந்து பற்றிய விவரம். தடுப்பு மருந்து - தட்டம்மை தடுப்பு மருந்து. மருந்து தயாரிப்பாளர், Human Biological Institute, Hyderabad, ஆந்திர மாநிலம். தயாரித்த நாள் பிப்ரவரி 2008. காலாவதி நாள் ஜனவரி 2010. Batch எண் MES 07/8, விற்பனையாளர் பெயர் அபயம். மருந்து பொடியாக வருகிறது. அதைத் திரவமாக மாற்றப் பயன்படுத்தப்பட்ட திரவம் பென்னாலூர்பேட்டை distillary தண்ணீர். தயாரித்த விவரம். நிறுவனம் Pune Serum Institute. வெங்கட்டாபுரம் கிராமத்திற்கும் அதே மருந்துதான்.

தடுப்பூசி போட்ட பணியாளர்கள், பென்னாலூர்பேட்டை திருமதி ஜெயலலிதா, கிராம சுகாதார செவிலியர், வெங்கட்டாபுரம் திருமதி பார்வதி, கிராமச் சுகாதார செவிலியர்.

நிகழ்வு. 23-4-2008 காலை ஏழரை மணியளவில் சம்பந்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து தடுப்பூசி மருந்துகளை மேற்கண்ட கிராமச் சுகாதார செவிலியர்கள் திட்டமிட்ட கிராமங்களுக்குக் கொண்டுவந்துள்ளனர். காலை எட்டரை மணிக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையத்திற்கு சென்று பணியினைத் துவக்கியுள்ளனர். ஒன்பதரை மணியளவில் தடுப்பு மருந்து கூடிய குழந்தைகளுக்கு ஊசி போட்டுள்ளனர். ஊசி போட்ட அரை மணி நேரத்தில் குழந்தைகள் மயக்கமுற்று, சுய நினைவு இழந்துள்ளனர். பென்னாலூர்பேட்டை கிராமத்தில், தடுப்பூசி போட்ட மூன்று பெண் குழந்தைகளை கச்சூர், ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றுள்ளனர். குழந்தைகள் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருந்ததால், முதலுதவி செய்து, பரிந்துரை செய்து திருவள்ளூர் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். திருவள்ளூர் மாவட்ட

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2008 ஏப்ரல் 24

மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள், குழந்தைகள் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. வெங்கட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த லோகேஷ் என்ற குழந்தைக்கு தடுப்பூசி போட்டதும் சுய நினைவிழந்து கவலைக்கிடமாக ஆனதால் திருத்தணி வட்டார மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை செய்யப்பட்டது. குழந்தைக்கு மூச்சுத் திணறல் இருந்ததால் Ambubag மூலம் ஆக்சிஜன் கொடுக்கப்பட்டது. ஆனால், சிகிச்சை பலனளிக்காமல் குழந்தை இறந்துவிட்டது. குழந்தையின் உடல் சென்னை அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனை செய்ய எடுத்துச் செல்லப்பட்டது. மருத்துவக் குழுவினுடைய ஆய்வின்படி இந்தக் குழந்தைகள் நான்குபேரும் கடுமையான ஒவ்வாமையினால் இறந்திருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. மேலும், சரியான காரணத்தை உறுதிசெய்ய, மீதமுள்ள தடுப்பு மருந்து, கலக்கும் திரவம் ஆகியவற்றை, இமாச்சல பிரதேசத்தில் உள்ள மத்திய அரசின் ஆய்வுக் கூடத்திற்கு—Custodian Lab-க்கு அனுப்பப்பட்டுள்ளது.

நான்கு குழந்தைகளுக்கும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 23-4-2008 அன்று தடுப்பூசி போட்ட இந்தக் குழந்தைகளோடு, திருவள்ளூர் மாவட்டத்தில் வேறு 276 குழந்தைகளுக்கும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மொத்தம் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் இதே Batch-ஐ சேர்ந்த தட்டம்மைத் தடுப்பு மருந்துகள் போடப்பட்டுள்ளன. அனைத்துக் குழந்தைகளும் நலமாக உள்ளனர். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். குறிப்பிட்ட, தட்டம்மை தடுப்பூசி போடுவது தமிழகம் முழுவதும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட செவிலியர், மருந்தாளுநர் நான்கு பேரும் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மத்திய அரசுக்கு இதுபற்றி தகவல் தெரிவிக்கப்பட்டு, மத்திய ஆய்வுக் குழுவும் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கேள்விப்பட்டதும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், என்னையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவாஜி அவர்களையும், சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சொன்னதன் அடிப்படையில், நாங்கள் நேராக மருத்துவமனைக்குச் சென்று, இறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் கூறி சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொண்டோம்.



2008 ஏப்ரல் 24] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

முற்பகல் '0-45

இது தவிர பயத்தின் காரணமாக இன்று தடுப்பூசி போடப்பட்ட 5 குழந்தைகள் திருவள்ளூர் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விவரம் வருமாறு: கலையரசி, வயது 11 மாதம்; இரட்சிகா, வயது 12 மாதம்; விக்னேஷ், வயது 10 மாதம், சின்னி, வயது 7 நாட்கள்; தனசேகரன், வயது 5 மாதம். மேற்கண்ட 5 குழந்தைகளும் நலமாக உள்ளார்கள்.

நண்பர், சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. அரி அவர்கள் குறை கூறினார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அதாவது, 6-9-2004-ல் திருச்சி மாவட்டத்தில் யானைக்கால் நோய் தடுப்பூசி D.E.C. மாத்திரைகள் வழங்கப்பட்டபோது 4 பேர் இறந்துள்ளார்கள். (குறுக்கீடு) சரி. கடந்த ஆட்சியில், இறந்தவர்களுக்கு எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறந்த குழந்தைகளுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் எவ்வளவு என்பதை அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சகட்ட சோகம் என்று சொல்லத்தக்க அளவிற்கு, ஏதோ விஷ மருந்துகளை அருந்தி வயது வந்த பெரியவர்கள் அல்ல, ஏதுமறியாத இளம் குழந்தைகள் 4 பேர் மரணத்தைத் தழுவியிருக்கின்றார்கள். அவர்களை இழந்த அந்தக் குடும்பங்களின் பெற்றோர்களுக்கு ஆறுதலாக, அவர்களை நம்பி வாழ்ந்த அந்தக் குடும்பங்களுக்கு உறுதுணையாக, நிதி வழங்க வேண்டும், அதிக அளவிலே வழங்க வேண்டும் என்ற கருத்தை இந்தப் பிரச்சினை குறித்துப் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். வழக்கமாக வழங்குகின்ற நிவாரண நிதி என்பதற்கு மாறாக, இது வழக்கத்திற்கு மாறாக, நாமே கொன்றுவிட்டதைப் போல இந்தக் குழந்தைகளுடைய சாவு அமைந்திருக்கிற காரணத்தால், ஏழுமலையினுடைய குழந்தை நந்தினிக்கும், அல்லிமுத்துவினுடைய குழந்தை பூஜாவிற்கும், மோகனுடைய குழந்தை மோகனப் பிரியாவிற்கும், குப்பையாவினுடைய குழந்தை லோகேஷ¨க்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வீதம் (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் சார்பிலே 12 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இறந்த குழந்தைகளின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்கி இருக்கின்றார்கள். அதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராது நடந்த ஒரு சம்பவத்தினுடைய வலியை உள்வாங்கி 'நாமே கொன்று விட்டதாக' என்கிற வார்த்தையையும் ஆழமாகப் பதிவு செய்து, அந்த வலியை உணர்ந்து அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் தருகின்ற வகையில் 3 இலட்ச ரூபாய் நிதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த குழந்தைகளின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளைப் பறிகொடுத்து தவித்துக் கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலா 3 இலட்ச ரூபாய் நிதி வழங்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி.



2008 ஏப்ரல் 24]

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயினும் சாலப் பரிந்து 3 இலட்ச ரூபாய் அந்தக் குழந்தைகளை இழந்த குடும்பங்களுக்கு கருணை உள்ளத்தோடு செய்திருக்கிற உதவிக்கு திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அந்தக் குடும்பங்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தையே தன்னுடைய குடும்பமாக நினைக்கும் நம்முடைய முதல்வர் அவர்கள், இறந்த குழந்தைகளின் குடும்பங்களுக்கு ரூ.3 இலட்சம் வீதம் நிவாரண நிதி அளித்ததற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். *23-4-2008* ஆம் நாளன்று மொழியப் பெற்ற மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் *19* - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், உங்களுக்கு ஒதுக்கப்படும் நேரம் *7* நிமிடங்கள்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2008-2009* ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த உங்களுக்கும், இந்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு *27* விழுக்காடு இட ஒதுக்கீடு என்பதற்கு உயிர் கொடுத்த, எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், National Rural Health Mission என்ற தேசிய ஊரக நலத் திட்டத்தின் பிதாமகனுமான, அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்ற

தேர்வுகளில் MBBS/BDS போன்ற பட்டப் படிப்புகளிலும், MD, MS, MDS போன்ற பட்ட மேற்படிப்புகளிலும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு முறையே 15 விழுக்காடு மற்றும் 7½ விழுக்காடு இட ஒதுக்கீட்டை அமல்படுத்திய மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சருமான மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், ஓய்வறியா உழைப்பாளியுமான அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில் ஆண்டுக்கு 2 மருத்துவக் கல்லூரிகள், மருத்துவக் கல்வியில் நுழைவுத் தேர்வு இரத்து, வருமுன் காப்போம் திட்டம், மகப்பேறு காலத்தில் ரூ.6,000, மருத்துவமனைகளில் குறைதீர்க்கும் பிரிவு, மருந்து தகவல் மையம், குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை உதவி, AIDS நோயாளிகளின் குழந்தைகளுக்கு சமூகப் பாதுகாப்பு, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் insulin மருந்து, போன்ற பல்வேறுத் திட்டங்களினால் இந்தியத் திருநாட்டிற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து வரும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

வளர்ந்த நாடுகளில் மருத்துவத் துறைக்கு 10 முதல் 15 விழுக்காடு வரை நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். வளர்ந்து வரும் நம் நாட்டில் குறைந்தபட்சம் 7 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று, உலக சுகாதார நிறுவனம் தெரிவித்து இருக்கிறது. அத்தகைய ஒதுக்கீட்டில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 50 விழுக்காடும், மாவட்ட, வட்ட மருத்துவமனைகளுக்கு 30 விழுக்காடும், சிறப்பு மருத்துவப் பிரிவிற்கு 10 விழுக்காடும் செலவு செய்தால்தான் நல்லதொரு மாற்றத்தினை கிராமங்களில் நிகழ்த்திட முடியும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டபடி 'மருத்துவ வசதி' என்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. "இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று சொன்னார் மகாத்மா காந்தி அவர்கள். அத்தகைய கிராம மக்களுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவ வசதி எந்த அளவிற்கு உள்ளது என்பதை எடுத்துப் பார்த்தோமானால் ... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வுத் துறையின் அறிக்கையில், மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் நகரங்களில் உள்ள 44 மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை 4,366, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின்கீழ் சிறு நகரங்களில் உள்ள 264 மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை 2,456. பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின்கீழ் கிராமப்புறங்களில் உள்ள 1,417 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் 2,557 மட்டுமே. ஆக மொத்த மக்கள் தொகையில் 40 விழுக்காடு உள்ள நகர்ப்புற மக்களுக்கு, 70 விழுக்காடு மருத்துவர்களின் சேவை, 60 விழுக்காடு உள்ள கிராமப்புற மக்களுக்கு 30 விழுக்காடு மருத்துவர்களின் சேவை என்ற நிலை உள்ளது. எனவே, இந்த முரண்பாட்டினைக் களைய நமது அரசு முனைப்புடன் செயல்படவேண்டும்.

அதேபோல, கிராமங்களில் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, இருதய நோய் போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்கள் முறையே Radiotherapy, dialysis, by-pass surgery போன்ற சிகிச்சைகளுக்கு சென்னைக்கோ, மதுரைக்கோ, கோவைக்கோ செல்ல வேண்டும் என்பதுதான் இன்றைய யதார்த்த நிலை. இந்த நிலையை மாற்றி அந்தந்த மாவட்டத் தலைநகரங்களிலே அத்தகைய சிறப்புச் சிகிச்சை ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். "இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவருக்குக் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதி கிராமங்களிலே வாழுகின்ற ஏழை குப்பனுக்கும், சுப்பனுக்கும் வழங்கப்பட வேண்டும்" என்று அறைகூவல் விடுத்தார் மருத்துவர் அய்யா அவர்கள்.

முற்பகல் 10-55

கிராமப்புறங்களில் உள்ள துணைச் சுகாதார நிலையங்களில் செவிலியர்களைக் கூடுதலாக நியமனம் செய்து கிராம மக்களுக்கு மேலும் மருத்துவ வசதி கிடைத்திட இருந்த திட்டம் கைவிடப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கும் கிராமச் சுகாதார செவிலியர்கள் பணிக்கு எந்தவித பணி இழப்பும் ஏற்படாமல், கூடுதலாக செவிலியர்களை நியமனம் செய்து கிராமச் சுகாதார

நிலையங்கள், இரவிலும் மூடப்படாமல் இயங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனவே, இன்றைய மக்கள் தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் அதிகரிக்க வேண்டும்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புற நோயாளிகள் மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மருத்துவர்களை நியமிக்க வேண்டும். ஆனால், மகப்பேறு மருத்துவர்களை கண்டிப்பாக ஒவ்வொரு சுகாதார நிலையங்களிலும் நியமிக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மருத்துவ சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அவ்வாறு பணிபுரியும் மருத்துவர்களின் ஊதியத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழகத்தில் மருத்துவர்களின் அடிப்படை ஊதியம் வெறும் 8,000 ரூபாய். ஆனால் அருகில் உள்ள ஆந்திர மாநிலத்தில் 11,715 ரூபாயும், கர்நாடகாவில் 14,050 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதுபோல் மாநிலத்திற்கு இடையே நிலவுகின்ற ஊதிய முரண்பாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் கலைக் கல்லூரிகளில் வாரத்திற்கு 14 மணி நேரத்திற்கும் குறைவாகப் பணிபுரியும் பேராசிரியர்களைவிட உயிர்க்காக்கும் மருத்துவத் துறைப் பேராசிரியர்கள் குறைவான ஊதியத்தினையே பெறுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேலும், இந்திய மருத்துவக் கழகம் வலியுறுத்தும் Time bounded பதவி உயர்வுகளை வழங்க வேண்டும். அதேபோல், கிராம துணைச் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தையும், 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வினையும் வழங்க வேண்டும். ஊதியம் மற்றும் பதவி உயர்வு மட்டுமல்லாது மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக பணிபுரிபவர்களுக்கு உயிர் காத்த உத்தமர் என்ற விருதினை முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் வழங்க வேண்டும். மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்கள் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம் அமைத்திட ஆவன செய்துள்ளார்கள். ஆனால், அந்த மையங்களில் மருத்துவர்கள் போதுமான அளவுக்கு நியமிக்கப்படவில்லை. சமீபத்தில் இந்திய திட்டக்குழு தனது அறிக்கையில் நமது நாட்டில் மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் நிலவுகின்ற பற்றாக்குறை குறித்து சுட்டிகாட்டியுள்ளதை நினைவு கூற விரும்புகிறேன்.



மேலும், மாணவர்களிடையே மருத்துவம் பயில நாட்டம் குறைந்துள்ளது என்பதும் கண்கூடு. எனவே, வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப மருத்துவர்களை உருவாக்க தொலைநோக்குச் சிந்தனையோடு அரசு தானாகவும், மற்ற மாநிலங்களைப்போல் தனியாரையும் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்க ஊக்குவிக்க வேண்டும். அப்படி மருத்துவக் கல்லூரிகள் தொடங்கிடத் தேவையான மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவச் சிகிச்சை சாராத பேராசிரியர்களை அதிகப்படியாக உருவாக்கிட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் பக்கம் 4-ல் 64 விழுக்காடுகள் மகப்பேறு, அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, ஆனால், 6,000 ரூபாய் உதவிபெறும் ஏழைத் தாய்மார்களில் 35 விழுக்காட்டினர் மட்டும் அரசு மருத்துவமனைகளில் பிரசவம் பார்த்துக் கொண்டுள்ளார்கள் என்ற கசப்பான உண்மையை ஒரு சில ஆரம்பச் சுகாதார நிலையங்களின் அறிக்கையின் வாயிலாக அறிகிறேன். அதுகுறித்து ஆய்வு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குழந்தை பிறந்து 7 மாத காலமாகியும் அந்த உதவித் தொகை கிடைக்கப்பெறாத காரணத்தால் நெல்லை மாவட்டத்தில் பாலாமடை என்ற கிராமத்தில் 15 தாய்மார்கள் போராட்டம் நடத்தியதாகச் செய்தித் தாள்களில் வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பண்டைய காலத்து நடைமுறையான மாலை 5 மணிக்குமேல் Post-mortem செய்யக்கூடாது என்ற நிலையை மாற்றிட வேண்டும். அரசு மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவர்களும் உள்ளனர். மருத்துவ உபகரணங்களும் உள்ளன. கடந்த காலங்களில் எப்படி மாண்புமிகு நமது முதல்வர் முதல், அமைச்சர் பெருமக்கள் வரை ஏன், சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பொது மருத்துவமனைகளில் மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தார்களோ அந்த நிலை இன்றும் இருந்தால் அரசு பொது மருத்துவமனைகள் குறித்து மக்கள் மனதிலே நல்ல நம்பிக்கை பிறக்கும். அதேநேரத்தில் மருத்துவமனைகள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வழிகோலும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் நெடுஞ்செழியன் போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க இந்த மாமன்றத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தாற்போல் இன்னும் 2 Demands இருக்கின்றன. இதில் 3 பேர்கள் பேச வேண்டும்; அடுத்ததில் 9 பேர்கள் பேச வேண்டும். Time இல்லை. Please உட்காருங்கள்.

**திரு. எம். அன்பழகன்:** உழைக்கும் மக்களுக்கு உயர்வை ஏற்படுத்தித் தந்த ஒரே தலைவர், 'வீழ்வது நாமாகிலும், வாழ்வது தமிழாகட்டும்', என்று உரைத்து, தமிழும், தமிழர்களுமே தன் மூச்சாக எண்ணி உழைத்துக் கொண்டிருக்கும் உழைப்பிற்கு உதாரணமான மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் தொடர்ந்து பணியாற்றி, 3-வது முறையாக தொடர்ந்து வரியில்லாத..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்.

**திரு. எம். அன்பழகன்:** நிதி நிலை அறிக்கையை 3 மணி நேரம் தந்து, இந்த ஆண்டில் ரூ.88 கோடியை உபரியாகவும் தந்த மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், தமிழகத்தின் நாளைய நம்பிக்கை நட்சத்திரம், இன்றைய இளைஞர்களின் வழிகாட்டி ஓய்வில்லாத உழைப்பாளி, எங்களுக்கு முகவரி தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னைத் தேர்வு செய்த மதிப்புமிக்க பழனி தொகுதி மக்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்வதைச் சொல்கின்றவரும், சொல்வதைச் செய்கின்றவரும், நம்பிக்கைக்குச் சொந்தக்காரராகவும் விளங்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், அவர்தம் வழிகாட்டுதலில் செயல்படும் அமைச்சர் பெருமக்கள் மீதும்



தமிழக மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அதேபோல, எம் தொகுதி மக்களும் நானும் அதே எண்ணத்திலே சில கோரிக்கைகளை இங்கே முன்வைக்கின்றோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-வது முறையாக முதலமைச்சராக இருந்தபோது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டுச் சென்ற பச்சையாற்றுத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனியில் இயங்கிவந்த சித்த மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்றம் செய்துவிட்டார்கள். அதற்காக வாங்கப்பட்ட 40 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. ஆகவே, சித்த மருத்துவக் கல்லூரியை பழனிக்கே மீண்டும் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மறு சீரமைப்பில் பழனியும் கொடைக்கானலும் ஒன்றாக இணைந்துவிட்டதால் ரோப் கார் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திடம் போதிய பணமும் உள்ளது, இடமும் உள்ளது, மனமிருந்தால் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி போன்ற கல்லூரிகளைத் துவக்கலாம். அவற்றைத் துவக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழனி ஒன்றியம், பாப்பம்பட்டி, ஆண்டிப்பட்டி இடையே குதிரையாற்றின் குறுக்கேயும், சின்ன காஞ்சிபுரம் அருகில் பச்சையாற்றின் குறுக்கேயும் பாலங்கள் அமைத்துத்தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழனி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டவும், நவீனப்படுத்தவும் மற்றும் நாரிக்கல்பட்டி, அமரம்பூண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட அரசு சுகாதார நிலையங்களாக மாற்றித்தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழனி திருக்கோயில் ஊழியர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-வது முறையாக முதல்வராக இருந்தபோது அறிவித்த ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கோவில் அலுவலகங்களிலும் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் நாள் ஒன்றுக்கு சராசரியாக் வெளி நோயாளிகளாக 77,000 பேரும், உள் நோயாளிகளாக 22,600 பேரும் அரசு மருத்துவத்தைப் பெற்று வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களேயாகும். தற்போது தமிழகத்தில் 14 மருத்துவக் கல்லூரிகள் ஆண்டுக்கு 1,645 பட்டப் படிப்பு மருத்துவர்களையும், 489 பட்ட மேற்படிப்பு மருத்துவர்களையும் உருவாக்கி வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5-வது முறையாக முதல்வர் பதவியேற்றதும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற குறிக்கோளை அறிவித்து கடந்த இரண்டு ஆண்டுகளில் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி மாவட்டங்களிலும், இந்த ஆண்டு சிவகங்கை, பெரம்பலூர் மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனுடைய முக்கிய நோக்கம் தமிழக மக்களுக்கு மருத்துவம் எளிதாகக் கிடைக்க வேண்டும்: தமிழகத்தில் அதிக மருத்துவர்களை உருவாக்க வேண்டுமென்பதே ஆகும். அறிவித்த மருத்துவக் கல்லூரிகளுக்கு மருத்துவமனைக் கட்டடங்கள் கட்ட விழுப்புரத்திற்கு 41.01 கோடி ரூபாயும், தருமபுரிக்கு 47.5 கோடி ரூபாயும், திருவாரூருக்கு 42.77 கோடி ரூபாயும் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

அதாவது, நோய் என்ன, நோய்க்கான காரணம் என்ன, நோயைத் தீர்க்கும் வழி என்ன, இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிக்சை செய்ய வேண்டும். உடல் நோய்க்கு மட்டுமின்றி சமுதாய நோய்க்கும் இது பொருந்தும் என்று இந்த உரையினுடைய ஆசிரியர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் நோயைச் சரி செய்ய அதிக மருத்துவமனைகளையும், அதிக மருத்துவர்களையும் உருவாக்குகின்றார்கள். சாமானியர் வீட்டுப் பிள்ளைகள் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே அதிகப் பணம் கட்டிப் படிக்க முடியாது என்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டந்தோறும் கல்லூரிகளை உருவாக்கி வருகின்றார்கள்.

மக்கள் நல்வாழ்வுத் துறை நிதிநிலை அறிக்கை 2005-2006-லே முந்தைய அரசு ஒதுக்கியது வெறும் 1,487 கோடி ரூபாய். இந்த அரசு 2008-2009-ல் தற்போது ஒதுக்கியுள்ள தொகை 2,741 கோடி ரூபாய். சுமார் 100 சதவீதம் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறது இந்த அரசு.



மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டமைப்பை மேம்படுத்த 222 கோடி ரூபாயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் 227 அரசு மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த உலக வங்கி உதவியோடு 597 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-05

கடந்த ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்புத் தடைச் சட்டம் இருந்ததால் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தடைச் சட்டத்தைத் தூக்கியெறிந்து மருத்துவத் துறையில் புதிய நியமனங்களைச் செய்தார்கள். மருத்துவர்கள் 3,976 பேர்களும், செவிலியர்கள் 3,825 பேர்களும், இதரப் பணியாளர்கள் 8,956 பேர்களும், இத்தோடு நின்றுவிடாமல் மீதம் உள்ள காலிப் பணியிடங்களும் படிப்படியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதலோடு நிரப்பப்பட்டுவருகின்றன. விரைவில் முழுமையான, சேவையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோதுதான், குறிப்பாக கிராமங்களில் வீடு தேடி மருத்துவம் தர எண்ணி, வருமுன் காப்போம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன்பின் வந்த ஆட்சியாளர்கள் அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபின் வருமுன் காப்போம் திட்டத்தினைக் கொண்டுவந்து, தமிழகத்திலே கடந்த ஆண்டுகளிலே 31-03-2008 முடிய 5,894 முகாம்கள் நடத்தப்பட்டு 61 இலட்சம் பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு மருத்துவரும் தவறு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுவதில்லை. எதிர்பாராத சூழ்நிலையில் அறுவைச் சிகிச்சையின்போது சிலசமயங்களில் தவறுகள் நடந்துவிடுகின்றன. அண்டை மாநிலங்களிலே தவறுகள் உறுதி செய்யப்பட்ட பின்புதான் தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால், தமிழகத்திலே குற்றஞ்சாட்டும்போதே கைது செய்யப்படுகிறார்கள். இது மருத்துவர்கள் மத்தியில் பெரிய அதிருப்தியை உண்டாக்குகிறது. அவர்கள் அறுவைச் சிகிச்சையைத் தவிர்க்கிறார்கள். எனவே, இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே கிராமச் செவிலியர்கள், தங்கி பணிபுரிகின்ற அவர்கள் வீடுகளிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்கள்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தாயன்பு பெட்டகம், தத்துவத்தின் புத்தகம், ஆற்றலின் இருப்பிடம், நாடாளப் பிறந்த நான்காம் தமிழ், நாங்கள் வணங்கும் நடமாடும் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவிடைமருதூர் தொகுதியினுடைய எனது சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன். திருப்பனந்தாள் பேரூராட்சியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். திருவிடைமருதூர்-திருப்பனந்தாள் ஓட்டுக் கட்டடத்தில் இயங்கிவரும் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைத்து ஏழையெளியவர்கள் பயனடையச் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆடுதுறையில் உள்ள மாணவ, மாணவிகளின் நலன் கருதி வேளாண் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டும். எனது தொகுதியில் கடந்த 8-2-2008 அன்று 4.00 மணி அளவில் திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு முன்பாக விபத்து நடைபெற்றது. இதில் ஜெரினாபேகம் என்ற 40 வயது பெண் மற்றும் அவருடைய மகன் பைசல் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடினார்கள். அப்போது தண்டபாணி சிவாச்சாரியார் அவர்களும் படுகாயம் அடைந்தார். ஆம்புலன்சில் படுகாயத்துடன் துடித்துக்கொண்டிருந்த அவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கமுடியவில்லை. காரணம் டாக்டர்கள் அங்கு இல்லை. உயிருக்கு போராடிய அவரை காப்பாற்றமுடியவில்லை. இதனால் அவரும் இறந்துவிட்டார். இரண்டு உயிர்கள் இறப்பதற்கு டாக்டர் பணியில் இல்லாததுதான் காரணம். இந்த மருத்துவக் கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களுடைய திறன், அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களுடைய திறமை, அந்த மருத்துவக் கல்லூரியினுடைய நிர்வாகம், அங்கு வரக்கூடிய நோயாளிகளுடைய தன்மைகளையெல்லாம் கண்டறிந்து, அதனுடைய தரத்திற்காக தரச் சான்றிதழ் பெற்றது அம்மா அவர்கள் ஆட்சியில்தான். சென்னை



மருத்துவக் கல்லூரி, ஒட்டுமொத்தமாக இந்தியாவிலே எந்த மருத்துவக் கல்லூரியிலும் பெறாத ஐ.எஸ்..ஓ. 9001-2000 சான்றிதழை அம்மா அவர்கள் ஆட்சியில்தான் பெற்றது. சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவக் கல்லூரியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியின்போது கல்லீரல் அறுவை சிகிச்சைக்காக, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகம் முன்னோடியாக இருக்கக்கூடிய மாநிலம் என்ற அடிப்படையில் ரூ.5 கோடியை ஒதுக்கி மருத்துவக் கல்லூரியின் தரத்தை உயர்த்தியவர்தான் எங்களுடைய அம்மா. கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் புறநோயாளிகள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 2,000 பேருக்கு மேல் வருகிறார்கள். அதில் தோல் வியாதி சம்பந்தமாக சுமார் 200 பேர் வருகிறார்கள். தோல் வியாதிக்கு தனியாக டாக்டர்கள் இல்லை. மாவட்ட காச நோய் தலைமை மருத்துவமனை இங்குதான் உள்ளது. ஆனால், காச நோய்க்காக தனியாக டாக்டர்கள் யாரும் இல்லை. அறுவை சிகிச்சை செய்யும் தலைமை மருத்துவரும் இல்லை. இங்கு தீவிர சிகிச்சைப் பிரிவு (I.C.U.) மற்றும் ventilator பயன்படுத்த இருதய மருத்துவர்கள் யாரும் இல்லை. C.T. Scan Ultra Scan இருக்கின்றன, இதை பயன்படுத்த Sonologist டாக்டர்கள் யாரும் இல்லை.

முற்பகல் 11-10

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவறை வசதிகள் இல்லை. போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுகாதாரக் கேடாக உள்ளது. அங்கே போதுமான x-ray Blue tin machine இல்லை, இங்குள்ள head Scan வேலை செய்யவேயில்லை, Ultrascopy machine இருந்தும் வேலை செய்யவில்லை. போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் இருதய அறுவை சிகிச்சை நடைபெறுவதில்லை. எலும்பு சிகிச்சைப் பிரிவில் அதிக அளவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கு இரண்டு வார்டுகள் மட்டுமே உள்ளன. இங்கு புதியதாகக் கட்டடம் கட்டப்படவேண்டும்.

தமிழக அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் மருத்துவர்களின் ஊதிய உயர்வு ஆகியவற்றின் முரண்பாடுகளைக் களைய ஒரு சிறப்பு ஊதியக் குழு அமைக்க வேண்டுமென்றும், அதன் பரிந்துரைகளை 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு முன்பே அமல்படுத்தவேண்டும் என்று அம்மா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். மருத்துவர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்கப்படவில்லை.

மகத்தான சேவையாற்றும் மருத்துவர்களுக்கு மற்ற மாநிலங்களுக்கு இணையாக ஊதியம் வழங்கப்படவேண்டும். இந்திய மருத்துவக் கழகம் வலியுறுத்துவதுபோல் காலமுறை பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும். தற்காலிகமாகப் பணியாற்றிவரும் முதுநிலை மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் பணிகளை நிரந்தரம் செய்திடும்வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம்மூலம் சிறப்புத் தேர்வு நடத்தப்படவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு அரசு மருத்துவர் சங்கம் இன்று போராட்டங்களை நடத்திவருகிறது. அரசு மருத்துவர்களின் நிலை பரிதாபமானது. அண்டை மாநிலங்களை எடுத்துக்கொண்டால், ஆந்திரா, கர்நாடகா, அரசு மருத்துவத் துறை மற்றும் பொதுச் சுகாதாரத் துறைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் அதிக ஊதியம் மற்றும் பதவி உயர்வுகளைப் பெற்று வருகிறார்கள். இதேபோன்று, ஆந்திர மாநில அரசு (குறுக்கீடுகள்) மருத்துவக் கல்லூரிகளில், கர்நாடக மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு அகில இந்திய தொழில்நுட்பக் குழுப் பரிந்துரைகளின்படி ஊதியம் வழங்கப்படுகிறது. புதுச்சேரி அரசு மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக சம்பளம் மற்றும் இதரப் படிகள் வழங்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் பணியாற்றும் அரசு மருத்துவர்களின் நிலை மட்டும் பரிதாபமாக உள்ளது.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களால் 2005 ஆம் ஆண்டு உலக வங்கி நிதியுடன் ரூபாய் 597.15 கோடி செலவில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டம்தான் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம். இத்திட்டத்தின் முதல்கட்டமாக 5 மாவட்டத்தில் பணி முடிவுபெற்றது. கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 93, 94-ல் பார்க்கின்றபோது அதில் 2 ஆம் கட்டப்பணி ஜூலை 2006 முதல் டிசம்பர் 2007 வரை என்றுள்ளது. 227 மருத்துவமனைகளுக்கு ரூபாய் 228 கோடியில் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கியும் இன்றுவரை ஒப்பந்தப்புள்ளிகள்கூட கோரப்படவில்லை என்பது வேதனையைத் தருகிறது. தமிழகத்தில் கிராமப்புறங்களில் 8,706 துணை சுகாதார மையங்கள் செயல்படுகின்றன. இம்மையங்களில் கிராமச் சுகாதார செவிலியர்கள் தங்கிப் பணிபுரியும்விதமாக இருப்பிடத்துடன்கூடிய மையங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. கிராமத்திலுள்ள மக்களுக்கு அவர்கள் வீடுதேடிச் சென்று, மருத்துவ உதவிகள் அளிப்பது இவர்களின் முக்கிய வேலையாகும். ஆனால், இவர்கள் அவ்வாறு கிராமங்களிலுள்ள வீடுகளுக்குச் செல்லும்போது



இந்த மையங்கள் மூடப்பட்டு இருக்கும். இதனைக் காணும் பொது மக்கள் கிராமச் சுகாதார மையங்கள் மூடிக் கிடப்பதாகக் குறை கூறுகின்றனர். இந்நிலை மாறி துணைச் சுகாதார மையங்கள் நாள் முழுவதும் திறந்து வைக்கப்பட்டு, மருத்துவ வசதிகள் கிடைக்க வசதி செய்யப்படும்போது மக்கள் பெரிதும் மகிழ்வடைவார்கள். எனவே, செவிலியர் ஒருவரும், அவருக்கு உதவியாக உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டு, துணைச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டால் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். ஏழையெளிய மக்களுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்து, அரசு மருத்துவமனைகளுக்கு இலவசமாக மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், அந்த மருந்துகள் ஏழையெளிய மக்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதில் பணிபுரியும் ஊழியர்கள் முறைகேடு செய்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதோ சட்டமன்ற உறுப்பினர் நிற்கிறார்களே? செல்வி அங்கையற்கண்ணி அவர்கள், உட்கார்ந்து பேசுங்கள். திரு. ஆர்.கே. பாரதி மோகன், உரையை முடித்துவிடுங்கள்.

*முற்பகல் 11-15*

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திடீரென்று ஆய்வு செய்து, முறைகேடு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பால், சிமெண்ட், கட்டுமானப் பொருள்கள், மின்சாரம் இவற்றின் விலை உயர்வுக்கு பக்கத்து மாநிலங்களை ஒப்பிட்டுப் பேசும் நீங்கள், மருத்துவர்களின் சம்பளத்தை மற்ற மாநிலங்களைவிடக் குறைத்து கொடுப்பது ஏன்? ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு முன்பே நடைமுறைப்படுத்த வேண்டும். என்னுடைய தொகுதியில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நேரம் இல்லை. பெரிய இலாகா. அடுத்து, கல்வித் துறைக்கு வேறு போக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மக்கள் நலன் காக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கையைச்

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2008 ஏப்ரல் 24

சமர்ப்பிக்க வாய்ப்பளித்த வரலாற்று நாயகர், வருமுன் காப்போம் திட்டம் தந்த சிற்பி, இளஞ்சிறார் இதயம் காக்கும் தேவன், கருப்பையில் வளரும் சிசுகூட வலிவோடும், நலமோடும் வாழ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் தந்த வள்ளல், எங்கள் திருவாரூர் சோழர், கழகத்தின் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதி அமைச்சரும், கழகத்தினுடைய பொதுச் செயலாளருமாகிய எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், எங்கள் தளபதியும் கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளருமாகிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய பொருளாளர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை மாமன்றத்தில் பேச அனுமதித்த தங்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

எனும் அய்யன் வள்ளுவன் காட்டிய வழியில், மக்களுக்கு நோயற்ற வாழ்வு தருதல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல், விளைச்சலை அதிகப்படுத்துதல், மகிழ்ச்சியுடன் வாழச் செய்தல், உரிய பாதுகாப்பு அளித்தல் ஆகிய இவ்வைந்தையும் நிறைவேற்றி வாழ்ந்துகொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், இத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளார்கள்.

கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1,487 கோடியாக இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது கலைஞர் அவர்கள் ஐந்தாவது தடவையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 2006-2007-இல் ரூ.1,951 கோடியும், 2007-2008-ல் ரூ.2,286 கோடியும், 2008-2009-ல் ரூ.2,741 கோடியும், ஆக மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்காக, ரூ.1,254 கோடியை, ஏழை எளிய மக்கள் வளமோடு வாழ, சுகாதாரத்துடன் வாழ, நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி ஐந்தாண்டு காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டத்தைப் போட்டு, எந்தத் துறையிலும் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையிலும், மருத்துவமனைகளிலும் பாதி இடத்தை... (குறுக்கீடு)



2008 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No point of order. No point of order. Minister can continue his reply. (குறுக்கீடு) அப்புறம் கேட்கலாம். Reply முடிந்தபிறகு பேசலாம். No point of order, no point of order. Please sit down.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ஐந்தாண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பணி நியமனத் தடைச் சட்டத்தை போட்டு, எந்தவிதப் பணி நியமனமும் செய்யாமல், செவிலியர் பணியாளர்களும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் நியமிக்கப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. After the reply of the Minister you can raise.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து எதிர்க்கட்சிக்காரர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அவர் சொல்ல வந்தது, பணி நியமனத் தடைச் சட்டம் இருந்த காரணத்தால் அப்போது நியமிக்க முடியவில்லை என்று சொன்னார். (குறுக்கீடு) அப்படியே ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் அவர் பேசி முடித்ததற்குப் பிறகு விளக்கங்கள் கேளுங்கள். அதற்கான விளக்கத்தை அவர் நிச்சயமாகத் தருவார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் reply அளிக்கும்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சில ஐயப்பாடுகள் எழலாம். அவை நியாயம்தான். ஆனால், அந்த ஐயப்பாடு குறித்து—அனுபவமிக்க செங்கோட்டையனுக்குத் தெரியும்—இறுதியிலே எழுந்து பேசுவார்கள். இறுதியிலே நீங்கள் கேளுங்கள், நாங்கள் பதில் சொல்லச் சொல்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் பதிலுரைக்குப் பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டு காலத்தில், அதாவது அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்

1,487 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இப்போது இரண்டு மடங்காக, கிட்டத்தட்ட ரூ.1,254 கோடி அதிகமாகக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கீடு செய்து ஏழையெளிய மக்கள் சுகாதாரத்துடன் வாழ வழிவகை செய்துள்ளார்கள்.

*முற்பகல் 11-20*

அதேபோல, இந்த ஆட்சிப் பொறுப்பேற்கும்போது, மருத்துவமனைகளில் பல பணியிடங்கள் காலியாக இருந்தன. மருத்துவர்கள் இல்லை; மருத்துவச் செவிலியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் காலியாக இருந்தன. இவற்றிற்குக் காரணம், கடந்த 5 ஆண்டுகால ஆட்சியிலே, பணி நியமனத் தடைச் சட்டம் என்று போட்டதால், அவர்களைப் பணி நியமனம் செய்யாமல் இருந்துவிட்டு, கடைசி காலத்திலே, போகிற போக்கிலே 1,000 மருத்துவர்களை நியமனம் செய்து, அவர்களுக்கு Consolidated pay என்று ரூ.8,000/- கொடுத்தார்கள். அதனால், எந்தவிதமான பணியாளர்களும் இல்லாத காரணத்தினால், மருத்துவமனைகள் சுகாதாரமற்று, அங்கே சுகாதாரக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால்தான், ஸ்டான்லி மருத்துவமனையிலே ஒரு உயிர் இறந்ததற்குக் காரணமாக இருந்தது என்று சொல்கிறேன். அது முந்தைய காலம்தான். கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 2 ஆண்டுக் காலத்தில் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இரண்டு ஆண்டுக் காலத்திலே 3,967 மருத்துவர்களும், 3,825 செவிலியர்களும், 8,956 மருத்துவம் சார்ந்த பணியாளர்களும், ஆக மொத்தம், 16,748 பணியாளர்களைப் பணியமர்த்திச் சாதனை படைத்ததுதான் கலைஞருடைய ஆட்சியின் சாதனை. அதனால்தான், இப்போது மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இருக்கிறார்கள்; போதிய செவிலியர்கள் இருக்கிறார்கள்; போதிய பணியாளர்கள் இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆட்சியிலே, அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில் இறந்து போனால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுத்திருக்கவேண்டும். ஆனால், அந்த வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. அதற்கும்



பணி நியமனத் தடைச் சட்டம் போட்டு, அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப்பிறகு, 616 பணியாளர்களின் வாரிசுதாரர்களை, இந்தப் பணியிடங்களில் பணி நியமனம் செய்து அவர்களுக்கு வாழ்வளித்தார்கள். இதுபோன்ற சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், இப்போது மருத்துவமனைகளுக்கு அதிகமாக நோயாளிகள் வந்து, ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு, தனியாருக்கு நிகராக மருத்துவச் சிகிச்சையை அரசு மருத்துவமனைகளில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மருத்துவச் சேவையை, தலைவர் கலைஞர் அவர்கள் 1999 ஆம் ஆண்டு உருவாக்கினார்கள். இப்போது இந்த ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, கிட்டத்தட்ட 1,000 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 24 மணி நேரமும் பணிபுரிகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதனால் என்ன ஆயிற்று என்றால், நோயாளிகள் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு எந்த நேரம் போனாலும், சிகிச்சைப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 1,000 மருத்துவமனைகளில், தலா 3 செவிலியர்கள்வீதம், மொத்தம் 3,000 செவிலியர்களை நியமனம் செய்து, எந்த நேரத்திலும் மருத்துவமனைக்குப் பிரசவத்திற்காகவோ அல்லது சிகிச்சைக்கோ செல்லக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நிதியுதவித் திட்டம்; வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கருவுற்ற பெண்களின் ஊட்டச் சத்து உணவிற்காகவும், பேறுகாலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், எடைக் குறைவான குழந்தைப் பிறப்பைத் தவிர்க்கவும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில், கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6,97,139 பேர் பயன்பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இது கர்ப்பிணிப் பெண்களுக்கான 6 ஆயிரம் ரூபாய்த் திட்டம்; இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

கலைஞர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருக்கும்போது, கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.1,500/- கொடுத்தார்கள். இந்த அம்மையார் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, இடைப்பட்ட 5 ஆண்டுக் காலத்தில், அதையும் நிறுத்திவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை? ரூ.1,500/- கொடுத்து வந்ததை, எதற்காக நிறுத்திவிட்டார்கள் என்று தெரியவில்லை. கலைஞர் அவர்கள் ரூ.1,500/- கொடுத்தார்; இந்த அம்மையார் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு கூடுதலாகக் கொடுத்திருக்கலாம். ஏனென்றால், பெண்களுடைய அருமை பெண்ணுக்குத்தான் தெரியும். ஆனால், அப்படிக் கொடுக்கவில்லை; அதையும் நிறுத்திவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு ரூ.6,000/- வழங்கப்படுகிறது. 'நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இத்திட்டத்தில் ரூ.6,000/- தருவோம்' என்று தேர்தல் வாக்குறுதி தந்து, அதை அறிவித்தார்கள். அதன்படி, இப்போது ரூ.400 கோடி இதுவரை செலவு செய்து, அதன்மூலம் 6,97,139 கர்ப்பிணிப் பெண்களுக்கு வாழ்வளித்திருக்கிறார்கள்.

அதேபோல, மொத்தமுள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஏற்கெனவே 24 மணி நேரம் செயல்பட்டு வரும் 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தவிர, மீதமுள்ள 421 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்குவதற்கு இப்போது உத்தரவிட்டிருக்கிறார் என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரசவம் பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கடந்த கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், 2005-2006-ல் அரசு மருத்துவமனைகளில் 81,190 பிரசவங்கள்தான் நடந்தன. ஆனால், கலைஞருடைய ஆட்சி வந்ததற்குப்பிறகு, 2007-2008-ல், 1,53,922 பிரசவங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக இப்போது நடந்திருக்கின்றன. காரணம், முறையான வைத்தியம், சுகாதாரமான மருத்துவமனை என்று இருக்கிற அந்த அடிப்படையிலேதான், மக்கள் எல்லாம் அங்கே செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், மத்திய அரசே இதைப் பாராட்டுகின்றது. கிட்டத்தட்ட 86.5 விழுக்காடு அளவிற்கு மருத்துவமனைகளிலே அதிகமாகப் பிரசவம் நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்) இது உங்களுக்கெல்லாம் சிரிப்பாக இருக்கலாம். (குறுக்கீடுகள்) இது உங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம்.



ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மருத்துவமனைகளின் செயல்பாடுகள் எல்லாம் சிரிப்பாய்ச் சிரித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Reply-க்குப்பிறகு உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, Reply-க்குப்பிறகு உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, Reply-க்குப்பிறகு உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுப்பேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, வேலூர் மாவட்டம், பானாவரம், அணைக்கட்டு, லாலாப்பேட்டை ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை (caesarean) செய்யப்படுகின்றது. கிட்டத்தட்ட 39.5 பிரசவங்கள் caesarean அடிப்படையில் குழந்தைகள் பிறந்துள்ளன என்ற செய்தியையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, புதிய கருவிகள். இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டு காலத்தில், புதிய நவீன சிகிச்சை முறைகள், கிட்டத்தட்ட 64 கூறுகள் கொண்ட C.T. Scan. Lithotripsy, M.R.I. Scan, Colour Doppler, Echo Cardio Graphy, செவித் திறன் அறியும் கருவி, ரூபாய் 62 கோடியே 35 இலட்சம் செலவில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், 270 மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் கருவிகள் முதற்கட்டமாக ரூபாய் 84 கோடியே 42 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளுடன்கூடிய ஆம்புலன்சுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2008-2009-இல் 54 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கருவிகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல், ஆரம்பச் சுகாதார நிலையங்களில், ரூபாய் 13 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் 385 Semi-Auto Analyser–ம், 289 Ultra Sonogram கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியிலே 214 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற செய்தியையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், 'வருமுன் காப்போம்' திட்டம். கலைஞருடைய பொன்னான திட்டம். கடந்த 1996 ஆம் ஆண்டு ஆட்சியிலே வருமுன் காப்போம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதனால், ஏழையெளிய மக்கள் பயன் பெற்றார்கள். அது உங்களுடைய ஆட்சியிலே நிறுத்தப்பட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்று, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 30 ஆயிரம் முகாம்கள் நடத்த வேண்டுமென்று அறிவித்து, இதுவரையில் 6 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்டு 61,42,350 ஏழையெளிய மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் தங்களுக்கு என்ன நோய் இருக்கிறது என்று தெரியாமலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். காரணம், இரத்த வாந்தி எடுத்தால், அது Heart attack என்பது அவர்களுக்குத் தெரியாது. ஏதோ காத்து கருப்பு அடித்து, அதனால் செத்துப்போய் விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். எனவே, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டுகின்ற வகையிலே வருமுன் காப்போம் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். இந்தத் திட்டத்தின்மூலமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் மருத்துவக் குழு சென்று, சராசரியாக ஒரு முகாமுக்கு 1,200 மக்கள், ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், நோய்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு என்ன நோய் என்பதைக் கண்டறியக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த முகாம்மூலம் கொடுக்கப்பட்டு, இதனால் கிட்டத்தட்ட 61,42,050 மக்கள் பயன்பெற்றார்கள். இவர்களில், கண்புரை நோய் அறுவை சிகிச்சை 82,275, சர்க்கரை நோய் 1,91,000, உயர் இரத்த அழுத்தம் 1,86,000 என்று நோயாளிகள் கண்டறியப்பட்டு, தொடர் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களுக்கெல்லாம் நல்ல ஒரு வாழ்க்கைத் திறனை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மருத்துவமனைகளுக்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, 5 மாவட்டங்களில் உள்ள கிட்டத்தட்ட 38 மருத்துவமனைகளில், 45 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, மீண்டும் இரண்டாவது கட்டமாக 24 மாவட்டங்களில் 232 மருத்துவமனைகளில் 221 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட டெண்டர் விடப்பட்டு, கட்டுமானப் பணிகள்



நடந்துகொண்டிருக்கின்றன. இவையெல்லாம் ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டு காலத்தில் முடியப்பெற்றால், தனியாருக்கு ஈடாக அரசு மருத்துவமனைகள் விளங்கும் என்பதை மனச்சாட்சியுள்ளவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நடமாடும் மருத்துவக் குழு. நடமாடும் மருத்துவக் குழு (Mobile Medical Unit) என்று ஆரம்பித்து, அனைத்து மருத்துவ வசதிகளும் கிடைக்காத பகுதிகள், குறிப்பாக மலைப் பகுதிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழு, வாரத்திற்கு ஒரு முறை சென்று சிகிச்சை அளிக்கின்ற திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு ஓட்டுநர், ஒரு துப்புரவுப் பணியாளர் ஆகியோர் நடமாடும் குழுவில் இடம்பெறுவார்கள்.

*முற்பகல் 11-30*

இதுபோன்று, 146 ஊராட்சி ஒன்றியங்களில் 146 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வருகின்ற 2008-2009 ஆம் ஆண்டில் மீதமுள்ள 239 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்படும் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மருத்துவமனைகளை நோக்கி மக்கள் செல்வதற்குப் பதிலாக மக்கள் வசிக்கும் இடத்திற்கே மருத்துவக் குழுவினர் சென்று மக்களுக்கு மருத்துவம் செய்கின்றனர் என்பதை இம்மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் கலைஞர் ஆட்சியினுடைய சாதனை. இதற்கு 22 கோடியே 44 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவசர மருத்துவ உதவிக்கு தொலைபேசி வசதி. அவசர காலங்களில் மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் ஒரே தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டு அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை இலவசமாகப் பெறுவதற்கான ஒரு புதிய திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். கணினிமயமாக்கப்பட்ட மத்திய கட்டுப்பாட்டு அறை, இடம் அறியும் கருவிகள் பொருத்தப்பட்ட ஊர்திகளோடு இந்தச் சேவைத் தொடங்கப்படும். காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஒருங்கிணைக்கப்பட்டு அவசர காலங்களில் இச்சேவை மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்படும்.

அதேபோல, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பெரும் விபத்துகளில் மக்கள் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் கொண்ட சிறப்பு மையம் ஒன்று மைய அரசின் நிதியுதவியுடன் சென்னையில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் எய்ட்ஸ் தாக்கம். தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய் 1986 ஆம் ஆண்டில் முதன்முதலாகக் கண்டறியப்பட்டு, அப்போது தாக்கத்தினுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 1.13 விழுக்காடாக இருந்தது. இப்போது எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து எடுத்த முயற்சியினால், இப்போது 0.3 விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் சாதனை. எய்ட்ஸினுடைய தாக்கம் குறைக்கப்பட்டதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இளஞ்சிறார்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை. தலைவர் கலைஞருடைய பொன்னான திட்டம். அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கு ஏழை சிறார்கள் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. இக்காலதாமதத்தைத் தவிர்க்கவும், உடனடியாக இருதய அறுவை சிகிச்சை செய்யவும் 17 தனியார் மருத்துவமனைகளிலும் ஏழைச் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதுவரையில் 200 இளஞ்சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள். நெடுஞ்சாலைகளில் விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக தேவையான சிகிச்சை அளிப்பதற்கு நாமக்கல், தென்காசி, பத்மநாபபுரம், கடலூர், தாம்பரம், வாலாஜாபேட்டை மற்றும் மேலூர் ஆகிய இடங்களில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக ரூபாய் 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளைச் சிறந்தமுறையில் பராமரிப்பதற்காக "மருத்துவ பயனாளிகள் நலச் சங்கம்" அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நலச் சங்கங்களில் அரசு சார்பு அலுவலர்களும், பொது நோக்கம் கொண்ட முக்கியஸ்தர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். மருத்துவமனைகளுக்கு அவ்வப்போது அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்களை வாங்கவும், கட்டடங்களில் சிறுசிறு பழுதுகளைச் சரி செய்துகொள்ளவும் ஆரம்ப சுகாதார, வட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும், அரசுத் தலைமை மருத்துவமனைகளுக்கு ரூபாய் ஐந்து இலட்சமும் வழங்கப்படுகிறது.

குறை தீர்க்கும் பிரிவு. அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறுவதில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைப் போக்குவதற்காகப் பொதுவான குறை தீர்க்கும் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு எல்லா நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்குகிறது. மாவட்டந்தோறும் செயல்பட்டுவரும் அவசர ஊர்திக் கட்டுப்பாட்டு அறையினை கட்டணமில்லா தொலைபேசி எண் 1056-ஐ தொடர்புகொண்டு கட்டுப்பாட்டு அறை பணியாளர்களிடம் மேல் நடவடிக்கைக்காகத் தகவல் கொடுக்கலாம்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பேசினார்கள். அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகுமார், அவர்கள் கரிய பிரதான் என்ற ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவி மறைந்தது குறித்து பேசினார்கள். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயின்ற கரிய பிரதான் என்ற வட மாநிலத்தைச் சேர்ந்த மாணவி விடுமுறையில் சொந்த ஊருக்குச் சென்றிருக்கும்போது சரியாக வேக வைக்கப்படாத மாமிசத்தை உண்டதால் மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதிலும் குறிப்பாக அ.இ.அ.தி.மு.க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள்; டாக்டர்களுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது ரொம்ப ஆச்சர்யமாக இருக்கிறது. ஏனென்றால் ஐந்தாண்டு காலங்களில் நீங்கள் ஒன்றும் சம்பள உயர்வே கொடுக்கவில்லை, ஒன்றும் உயர்த்திக் கொடுக்கவில்லை.

முற்பகல் 11-35

கடந்த ஐந்தாண்டு காலத்திலே, கடைசியாக 1,756 மருத்துவர்களை நியமனம் செய்தீர்கள். அதுவும் அவர்களுக்கு 8,000 ரூபாய்தான் சம்பளம். ஆனால், கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே என்ன செய்தார்களென்றால், அந்த 1,756 மருத்துவர்களையும் நிரந்தரமாக்கி, 15,000 ரூபாய் சம்பளம் நிர்ணயம் செய்து அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதுகுறித்து நீங்கள் பேசுவதுதான் எங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. சம்பளத்தைப்பற்றி, சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு வந்து, அக்கறையோடு நீங்கள் பேசுவதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது. மற்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்ளலாம்.

தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதும் அரசு ஊழியர்கள்மீது . . . (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாச் சட்டங்களையும் போட்டு, ** ஆமாம். ஒரே கையெழுத்துபோட்டு 1½ இலட்சம் அரசு ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கினீர்கள். அதனால் பல ஊழியர்கள் மாண்டார்கள். (குறுக்கீடு) பல ஊழியர்கள் செத்தார்கள். கடந்த உங்கள் ஆட்சியிலே டெஸ்மா கொண்டுவந்தீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் மானியத்தையொட்டித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நடந்தவற்றைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிந்தவுடன் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடிக்கப்போகிறார்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பதிலுரையை முடிக்கட்டும். நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இருங்கள், ஏன் கத்துகிறீர்கள்? எதற்காகக் கத்துகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிந்தவுடன் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு மருத்துவர்களுக்கான ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களுடைய உணர்வை ஏற்றுக்கொண்டு, கலைஞர் அவர்கள், மைய அரசின் ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்பேரில், மத்திய அரசு ஆணைகளை வெளியிட்டபின் மாநில அரசு அலுவலர்களுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அமைக்கப்படும் அலுவலர் குழுவின் பரிந்துரையைப் பெற்று, அப்பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய ஆணைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அடங்கியிருங்கள். எனக்கும் தெரியும். ரொம்ப துள்ளாதே. என்ன பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர், நீங்கள் பதிலுரையை முடியுங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வயிற்றெரிச்சல்தான். ஏனென்றால், நமது மாண்புமிகு முதல்வர் இவ்வளவு சாதனைகளைச் செய்கிறாரே என்ற வயிற்றெரிச்சல்தான் உங்களுக்கு. (குறுக்கீடுகள்) வாயை மூடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகள் @ புத்தக வடிவில் அச்சிடப்பட்டு இங்கே வைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 77 புதிய அறிவிப்புகள் உள்ளன. அவற்றையும் நான் படித்ததாகக் கருதவும். அவற்றில் ஒருசில அறிவிப்புகளை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

@ 753 முதல் 773 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** திரு. ஜெயராமன், அடக்கிவாசியுங்கள். நீங்கள் செய்தது தெரியும். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளில் அனைத்து பள்ளிகளிலும் இளம்சிறார் இருதய பரிசோதனைத் திட்டம். பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் இருதயக் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையளிக்க, ஒரு புதிய திட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான 3-6-2008 முதல் தொடங்கப்படும். இத்திட்டம், மாண்புமிகு முதல்வர் இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஜூன் மாதம் முழுவதும் அனைத்துப் பள்ளிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-40*

அனைத்து பள்ளிகளுக்கும் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட மருத்துவக் குழுக்கள் சென்று, பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதித்து, இருதய நோய் உள்ள குழந்தைகள் கண்டறியப்படுவார்கள். இவர்களுக்குத் தேவையான அறுவை சிகிச்சை, அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் அளிக்கப்படும். இத்திட்டம், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தொடர் திட்டமாக நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிறவிக் குறைபாடுகளினாலும், Rheumatic காய்ச்சலினாலும் இருதய பாதிப்பு குறிப்பிடத்தக்க அளவில் குழந்தைகளிடையே காணப்படுகிறது. இதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அறுவை சிகிச்சை செய்திட அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒத்துழைப்புடன், தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்ட நிதி உதவியுடன் ரூபாய் 5 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட இளஞ்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால், மேலும் அதிக எண்ணிக்கையில் இருதய பாதிப்புள்ள இளஞ்சிறார்கள் பயனடைவார்கள்.

புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள். கடந்த 10, 15 ஆண்டுகளாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்று கோரிய சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை, இப்பொழுது மாண்புமிகு முதல்வர்



அவர்கள் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையிலும், மத்திய அரசை வலியுறுத்தியதன் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கேற்ப கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவை என்பதை உணர்ந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடந்த 2½ ஆண்டுகளாகத் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வந்தார்கள். இதன் விளைவாக, தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில் 116 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நல்வாழ்வு இயக்கத்தின் நிதியுதவியுடன் ரூ.42 கோடியே 59 இலட்சம் செலவில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புதிய மருத்துவக் கல்லூரிகள். பின்தங்கிய மாவட்டங்களான பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நடப்பாண்டில் 2 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேர பிரசவ சேவை விரிவாக்கம். தமிழ்நாட்டில் 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவை 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் இந்த ஆண்டு மீதமுள்ள 421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக 1,263 செவிலியர்களும், 842 துப்புரவுப் பணியாளர்களும் ரூபாய் 6 கோடியே 6 இலட்சம் செலவில்—நியமனம் செய்யப்படுவர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் பணியாற்றுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிகள் மற்றும் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு இலவச உணவு. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரவத்திற்காக சேரும் கர்ப்பிணிகள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்வோருக்கு, சுய உதவிக் குழுக்கள்மூலம் மூன்று தினங்களுக்கு நாளொன்றுக்கு மூன்று வேளை உணவு வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ரூபாய் இரண்டு கோடியே 34 இலட்சம் செலவாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

போக்குவரத்து வசதி குறைவான மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் வாழும் ஏழையெளிய கிராமப்புற கர்ப்பிணிப் பெண்கள், பிரசவ காலத்தில் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வந்துசெல்ல பல மணி நேர கால அவகாசம் தேவைப்படுவதால், அவர்களது உத்தேச பிரசவ தேதிக்கு முன்னர், ஒரு வார காலம் பெண் உறவினருடன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கி பிரசவம் பார்த்துச் செல்ல, அவர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டங்கள் ரூ. 2 கோடியே 84 இலட்சம் செலவில் தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனைக்கு வரும் கர்ப்பிணிகளுக்கு இலவச சத்துணவு வழங்குதல். ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்ப கால பரிசோதனையின்போது Scan, இரத்தப் பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இந்த பரிசோதனை முடிவதற்கு சுமார் மூன்று மணி நேரம் ஆகிறது. இதனால், கர்ப்பிணிகள் பசியுடன் வீடு திரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரம் ஒருமுறை பரிசோதனை செய்துகொள்ள வரும் கர்ப்பிணிகள் அனைவருக்கும் பரிசோதனை முடிந்த பின் இலவச சத்துணவு வழங்கப்படும். இதற்கான தொகை தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள மருத்துவப் பயனாளிகள் நலச் சங்க நிதியிலிருந்து செலவிடப்படும்.

வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் மேம்பாடு. தேசிய ஊரக நல்வாழ்வு இயக்க நிதியுடன், 50 வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கருவிகள் வழங்குவதற்கும், அவசர பேறுகாலம் மற்றும் இளஞ்சிசு கவனிப்பு பணிகளுக்கும், விபத்துக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், மருத்துவ வல்லுநர்களின் சேவைகளுக்காகவும் ரூபாய் 55 கோடியே 70 இலட்சம் செலவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

அதேபோல, தற்போது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் நோய் கண்டறியும் நவீன M.R.I. Scan கருவிகள் வழங்கப்பட்டு



இயங்கி வருகின்றன. இந்தச் சேவை கிராமப்புற மக்களுக்கும் கிடைத்திடும்வகையில் 12 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும் இக்கருவி ரூ.20 கோடி செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

160 மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் தொடங்குதல். பிரசவ நேரத்தில் அதிக இரத்தப் போக்கினால் குழந்தைபெறும் தாய்மார்கள் இறக்க நேரிடுகிறது. இவ்வாறான இறப்புகளைத் தவிர்ப்பதற்காக, அவசர சிகிச்சை அளிக்க இரத்தம் தேவைப்படுகிறது. எனவே, 160 அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு மையங்கள் ரூபாய் 6 கோடியே 40 இலட்சம் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு சிகிச்சை மையங்கள். தமிழகத்தில் 98 மருத்துவமனைகளில் தற்சமயம் 24 மணி நேர ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன. இதனால், கர்ப்பிணித்தாய்மார்கள் இறப்பு மற்றும் சிசு இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. மூன்றாம் கட்டமாக இச்சேவை நடப்பாண்டில் மேலும் 27 மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்படும். இந்த மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக 108 மகப்பேறு மருத்துவர், மயக்க மருத்துவர் மற்றும் குழந்தை நல மருத்துவர்களும், 162 செவிலியர்களும் நியமிக்கப்படுவார்கள். கூடுதலாக மருத்துவக் கருவிகளும் வழங்கப்படும். ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன நலக் காப்பகத்தில் சிகிச்சை பெற்றுவரும், மனநோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவிற்கான தொகை நபருக்கு ரூபாய் 14 ஆக உள்ளது. இது பல வருடங்களுக்கு முன்னர் நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை கணிசமாக உயர்த்தி, அவர்களுக்குத் தரமான உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும். இதற்காக ரூபாய் 72 இலட்சத்து 27 ஆயிரம் செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ மாணவர்களுக்குச் சலுகை. மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால், மருத்துவப் பாடங்களில் ஏதாவது ஒன்றில் தோல்வியடைந்தாலும்,

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2008 ஏப்ரல் 24

மேல்வகுப்பிற்குச் செல்ல தற்போது தடையுள்ளது. இந்தத் தடை மருத்துவத் துறைக்கு மட்டுமின்றி, பல் மருத்துவம், செவிலியர் படிப்பு, இந்திய மருத்துவத் துறைகள், மருந்தியல் மற்றும் இயன்முறை சிகிச்சைத் துறைகளிலும் நடைமுறையில் உள்ளது. இதனால், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த மாணவ, மாணவிகள் மனவருத்தமும் சோர்வும் அடைகிறார்கள். இதனைத் தவிர்க்குமுகமாக, இத்தடைகளை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஒழுங்குமுறை அமைப்பு விதிகளுக்குட்பட்டு, தளர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளீர்கள். அவை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை, திரும்பப்பெற்று இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 19- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. 23-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,586,40,47,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.154,30,92,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"



2008 ஏப்ரல் 24] [பேரவைத் தலைவர்]

என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (குறுக்கீடுகள்) என்ன? சொல்லுங்கள்.

முற்பகல் 11-50

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் சொல்கிறபோது, அமைச்சர் உரையாற்றி முடித்ததற்குப் பிறகு, உங்கள் விளக்கங்களைக் கேட்கலாம் என்று சொன்னார்கள். நீங்கள், அந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கையை இறுதியாக முடித்து, பின்னர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரையும் பேச அழைத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. இரண்டாவதாக, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எழுந்து கேட்கின்றபோது, வாயை மூடி வெளியே செல்லுங்கள் என்று சொன்னார். அதுவும் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மற்றொரு கருத்தைச் சொன்னார்கள். வேலை நியமனத் தடைச் சட்டத்தின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஒருவர்கூட வேலையில் அமர்த்தப்படவில்லை என்று சொன்னார். அன்றைக்கு தடைச் சட்டம் இருந்தாலும், 3 துறைகளிலே அதைத் தளர்த்தி, மக்கள் நல்வாழ்வுத் துறை, கல்வித் துறை, காவல் துறை ஆகிய 3 துறைகளிலும் தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஒன்றைச் சொன்னார், இந்த ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகு எல்லா மருத்துவமனைகளிலும் தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டதாகவும், மக்கள் இப்போது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மகிழ்ச்சியாக இருப்பதாக ஒரு கருத்தைச் சொன்னார். அவருடைய தொகுதியில் இருக்கிற காட்டுமன்னார்கோவிலில், ஸ்ரீமுஷ்ணம் என்ற இடத்தில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டும். ஆனால், 2 பேர் மட்டும்தான் அங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, அவருடைய தாலுகாவிலேயே அங்கே மருத்துவர்களை அமர்த்த முடியாத சூழ்நிலை இருக்கிறபோது, தமிழ்நாடு முழுவதும் எப்படி அமர்த்தி இருப்பார் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோதே சொன்னார்; அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே முதலில் 4 ஆண்டுக் காலம் மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை, கடைசி ஆண்டிலே ஆயிரம் பேரை நியமித்தீர்கள் என்று சொன்னார். அந்த ஆயிரம் பேர் தொகுப்பூதியம் என்ற பெயரிலே, 8 ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று நியமித்தீர்கள். தி.மு.க. ஆட்சியிலே அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கி, 15,000 ரூபாய் சம்பளத்திலே நியமித்திருக்கிறார்கள் என்பதைத்தான் அவர் தெளிவுபடுத்தினார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப, முடிந்துபோன விஷயத்தைப்போய் ஏன் push செய்கிறீர்கள்? (குறுக்கீடு) அடுத்த மானியக் கோரிக்கையை எடுத்தாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த மானியத்தை எடுத்தாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு கொறடா அவர்கள் சொன்ன ஒரு வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து வேண்டுமானால் நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த வார்த்தை?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ** என்று சொன்னார். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்பதுதான்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) One minute. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆனால், அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டபோது சில அரசு ஊழியர்கள் இறந்தார்கள் என்ற செய்தி உண்மையான செய்திதான். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டியதில்லை; நடந்த செய்திதான். **அரசு ஊழியர்களில் சிலர் போராட்டக் காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்திலே இறந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அது இருக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, இது உலகம் அறிந்த விஷயம், உட்காருங்கள்.

## (ஆ) கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 43, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 225. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9332, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13579, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13822, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14495. திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2178, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2778, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10746, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13349, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5319, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.



**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6106, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7656, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9910, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11036, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11350, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11661, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12042, திரு. கே.வி. ராமநாதன்.



**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12273, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14610, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15104, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13847*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15693*, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15742*, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1281*, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, நகராட்சியில் அமைந்துள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் இட நெரிசலைக் கருத்தில் கொண்டு இப்பள்ளியை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1361*, திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் எழுத்தர் பணிகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துவதினால் மாணவர்கள் படிப்புக்கு இடையூறு ஏற்படாமல் தடுக்க இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை ஏற்படுத்தி நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1801*, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீரங்கம் தொகுதி, அந்தநல்லூர் ஒன்றியம், திருச்செந்துறை, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1829, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2291, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஊழல் முறைகேடுகள் குற்றச்சாட்டுக்கு உட்பட்டு நீண்ட நாட்கள் பணியாற்றிவரும் உதவி தொடக்கக் கல்வி அலுவலக ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்குத் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2435, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1:30 என்ற விகிதத்தில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3570, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொம்மிநாயக்கன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கே. மேட்டுப்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3975, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4001, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் பிரச்சினையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4152, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி கிள்ளை பேரூராட்சியில்

அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5038, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5280, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி வட்டம், தொழுதூர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டி, போதிய ஆசிரியர் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5788, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்ட கல்வி அலுவலகங்கள் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6638, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களுக்குப் போதிய ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6734, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம், நெமிலி, சோளிங்கரில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களின் நலன் கருதி கணினிப் பயிற்சி வகுப்புகளைப் பள்ளிக் கல்வித் துறைமூலம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6793, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சித்தலிங்கமடம் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7329, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம், செக்காப்பு ஊராட்சி, செக்காபட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7821, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8892, திரு. இ. மகேந்திரன்.



**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய (பஜார்) நடுநிலைப் பள்ளியை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9101, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை, பாபநாசம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9179, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9251, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஒன்றியம், உதிரமாடன் குடியிருப்பு கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9275, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் கழிவறை கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9981, திரு. வே. செந்தில் பாலாஜி.



**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் விழிப்புணர்வு அடையும்வகையில் மாணவப் பருவத்திலேயே நமது அரசினுடைய சட்ட திட்டங்களை அறிந்துகொள்ளும்வகையில் தனியே ஒரு பாடத் திட்டம் கட்டாயமாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10061, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10256, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி தொகுதி, அதியமான்கோட்டை மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10396, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம், கோட்டை மேட்டுத் தெருவில் சுனாமி குடியிருப்பில் தொடக்கப் பள்ளி தொடங்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10766, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துப் பள்ளிகளிலும் நம் தட்ப வெட்பச் சூழ்நிலையில் சூரிய ஒளி மின் அடுப்பு (Solar Water Heater) வழங்கி சமையல் செய்தால், எரிபொருள் மிச்சமாகி, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவது (Global Warming) குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10854, திரு. பெ. கண்ணன்.



**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச் சுவரைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11140, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட மைவேர்பாளையம் நடுநிலைப் பள்ளி, பாலதுறை குமாரபாளையம் ஆரம்ப துவக்கப் பள்ளி, பத்சாபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி ஆகியவை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால், அவற்றைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11229, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் பெண்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11464, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, மரப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள கட்டடம் பழுதடைந்த நிலையில் அடிப்படை வசதிகள் இன்றி புதர்மண்டிக் கிடப்பதை உடனடியாக சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11501, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் இட நெருக்கடியைச் சமாளிக்க பள்ளியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11781, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அளவில் உள்ள அனைத்து பழுதடைந்துள்ள பள்ளி



சத்துணவுக் கூடங்களை, குழந்தைகளின் உயிர் காப்பு நலன் கருதி புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11843, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, ஆனங்கூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12366, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகராட்சிப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12470, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், பொன்புதுப்பட்டியில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,690,35,54,000*/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,65,02,000*/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12737*, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிப்புத்தூர் தொகுதி, தைலாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியையும், சீவநாயக்கன்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியையும் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,690,35,54,000*/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,65,02,000*/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12746*, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் ஊராட்சியில் ஆசிரியர் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,690,35,54,000*/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,65,02,000*/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12935*, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்பப் பள்ளிகளில் தோட்டக்கலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,690,35,54,000*/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,65,02,000*/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13045*, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை அதிகப்படுத்தி எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர் முதல் +2 படிப்பவர்கள் வரை மிதிவண்டி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,690,35,54,000*/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,65,02,000*/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13094*, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் நிறைய கிராமங்களிலிருந்து குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் தூரம் அதிகமாக உள்ளதால் தூரத்தைக் குறைத்து பள்ளிக்கூடங்கள் அதிகமாகக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13163, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் ஓரியண்டல் இஸ்லாமியர் மாணவிகள் பயிலும் உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், நல்லமநாயக்கன்பட்டி, நரசிங்கபுரம் ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13379, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிக் கல்வித் துறை, அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர் சங்கம்மூலம் பணிபுரியும் ஆசிரியர்கள் நிலை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13648, திரு. கே. உலகநாதன்.



**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், திருக்களார் அரசு நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13707, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழி செம்மொழி என்பதற்கான தகுதி இம்மொழிக்கு உள்ள காரணம் பற்றி தமிழ்வழி மற்றும் ஆங்கில வழி பயிலும் மாணவர்களுக்கு உணர்த்த பாடத் திட்டத்தில் புதிதாக ஒரு பாடம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13736, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்குத் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14282, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி முழுவதும் அனைத்து பள்ளிகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும், தனியார் பள்ளிகளுக்கு இணையாக கல்வித் தரத்தை உயர்த்திடவும், மாணவர்கள் கூடுதல் மதிப்பெண்கள் எடுத்திடவும், அறிஞர் மற்றும் ஆசிரியர் குழுக்களை அமைத்து பெற்றோர்களுடன் அவ்வப்போது ஆலோசனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14352, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலையாள மொழி மாணவர்களுக்கும் ABL அட்டைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14916, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கேரகுளம் ஊராட்சி,



வெட்டிகுளம் ஊரில் அரசு ஆரம்பப் பள்ளியின் அருகில் உள்ள பள்ளத்தில் எப்பொழுதும் தண்ணீர் தேங்கி குளம் போல் இருக்கிறது. பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் இதில் விழுந்து உயிருக்கு ஆபத்து விளையக்கூடும் என்பதால், இந்தப் பள்ளத்தை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14922, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் திங்கள் நகர் பேரூராட்சியில் உள்ள மேகரை அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14959, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, தித்தானிப்பட்டி ஊராட்சி, முருங்கைக்கொல்லை கிராமத்தில் தொடக்கப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15030, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16241, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கொம்மனந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16527, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடற்கல்வி இயக்குநர்களுக்கு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16777, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு சார்பில் தரம் உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்துப் பாடப் பிரிவுகளையும் தொடங்கி மாணவ மாணவியர் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16884, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் மழலையர் பள்ளிக்கூடங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16945, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், இராயபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16959, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் கல்விக் கட்டணம் வசூலிப்பது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17077, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் உள்ள பள்ளிகளை நிலை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17194, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் படவீடு பேரூராட்சி, பச்சாம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம் தொடங்குகின்றது. முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி. உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

நண்பகல் 12-00

***திரு. மு. பரஞ்ஜோதி:** வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில், பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே, உரையாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய, ஏழரை கோடி தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், சமூக நீதி காத்த வீராங்கனை, வீரத்தின் விளைநிலம், தரணிபோற்றும் தங்கத் தாரகை, வருங்கால தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதற்கு முன்பாக, என்னுடைய ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியின் ஒரு முக்கியமான பிரச்சினையை இங்கே குறிப்பிட ஆசைப்படுகின்றேன். திருச்சியிலிருந்து, கரூர் செல்லக்கூடிய சாலையை, நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு, இடங்கள் சர்வே செய்யக்கூடிய அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

---

@ 775 முதல் 824 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அந்தத் திட்டம், இப்போது திட்டமிட்டுள்ளதைப்போல நிறைவேற்றப்படும் என்று சொன்னால், அந்த நல்லூர் ஒன்றியத்திலே இருக்கக்கூடிய திண்டுக்கரை, திருப்பராய்த்துறை, எலமனூர், பெருகமணி, சிறுகமணி, காமநாயக்கன்பாளையம், காவகாரப்பாளையம் மற்றும் பேட்டவாய்த்தலை போன்ற கிராமங்களில் மூவாயிரம் வீடுகளும், கிட்டத்தட்ட 300 கடைகளும், இடிக்கப்படக்கூடிய ஒரு நிலை ஏற்படும். இந்த அரசு, அந்தத் திட்டத்திற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை தயார் செய்து, மத்திய நெடுஞ்சாலைத் துறைக்கு அளிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். திருச்சியிலிருந்து கரூர் செல்லக்கூடிய அந்தச் சாலைக்கு இணையாக அங்கே மங்கம்மாள் சாலை என்ற ஒரு சாலை இருக்கிறது. அந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றினால் அந்த மூவாயிரம் வீடுகள் இடிக்கப்படுவதை தடுக்கமுடியும். எனவே, இந்த அரசு ஒரு மாற்றுத் திட்டத்தை தயார் செய்து மத்திய நெடுஞ்சாலைத் துறையிடம் அதை சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, ஆரம்பக் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தினாலும், அப்படி பள்ளிகளிலே சேரக்கூடிய குழந்தைகள் 2 வருடங்கள், 3 வருடங்களிலே, பள்ளிப் படிப்பை நிறுத்திவிடக்கூடிய நிலையையும் கண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்திற்கு சத்துணவுத் திட்டம் என்கிற ஒரு உன்னதத் திட்டத்தைத் தந்தார்கள்.

அதைப்போல, ஏழையெளிய மாணவ, மாணவிகளுடைய நலனுக்காக, ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவச பாட புத்தகங்களை வழங்கியவர், எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

அதேபோல, இலவச சைக்கிள் திட்டம், தமிழகத்திலே இருக்கக்கூடிய, பிளஸ் 1, பிளஸ் 2, படிக்கக்கூடிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும், இலவசமாக சைக்கிள் திட்டத்தைத் தொடங்கியவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே



நான் நினைவுகூற ஆசைப்படுகின்றேன். தமிழக அரசியல் வரலாற்றில், சத்துணவு என்று சொன்னால், அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைக் குறிக்கும். அதைப்போல, இலவச சைக்கிள் திட்டம் என்று சொன்னால், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெயரைக் குறிக்கும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அனைவருக்கும் கல்வி திட்டம், மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. உலக வங்கிகூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அந்தத் திட்டத்தை பாராட்டிய வரலாறு உண்டு.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் 22,214 வகுப்பறைகள், 348.9 கோடி ரூபாய் செலவிலே கட்டிக்கொடுக்கப்பட்டன. மேலும், பள்ளிகளுக்குத் தேவையான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற அத்தியாவசிய வசதிகள் 93.80 கோடி ரூபாய் செலவில் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. முதல் முறையாக நபார்டு வங்கி உதவியுடன் கிராமப்புறங்களிலே உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 9,260 வகுப்பறைகளும், 999 ஆய்வுக் கூடங்களும், 2,154 கழிப்பிட வசதிகளும், 969 குடிநீர் வசதிகளும், மொத்தம் 414.8 கோடி ரூபாய் செலவிலே செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளைத் தரம் உயர்த்துவதைப் பொறுத்த வரையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2001 முதல் 2006 மார்ச் வரை 1,274 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

பிற்பகல் 12-05

394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினுடைய சாதனைகள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் நியமனத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை, யாருக்கும் அந்தத் துறையிலே வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்கின்ற ** இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியில் 2001-லிருந்து 2006 மார்ச் வரையில் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, அரசுக் கல்லூரி ஆகியவற்றில் மொத்தம் 61,459 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதை இங்கே நான் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்லலாம். ஆனால் ** என்ற வார்த்தை இருக்கக் கூடாது. அதற்காகச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* அம்மா என்பதையே சபைக் குறிப்பிலிருந்து எடுக்கச் சொல்கின்றீர்கள். Un parliamentary. ** என்று இருக்கலாமா? *(குறுக்கீடு)* நான் சொல்கிறேன். அது இருக்கலாமா என்று நீங்கள் சொல்லுங்கள். அது அவருக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறாக என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் சொல்லக்கூடாது.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய 5 ஆண்டு கால ஆட்சியில், மொத்தம் 61,459 ஆசிரியர் காலிப் பணியிடங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரப்பியுள்ளார்கள் என்பதை இங்கே நான் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வில் தோல்வி அடைந்தவர்கள் பற்றிய ஒரு புள்ளிவிவரம். இந்தியா முழுவதும்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தேர்விலே தோல்வி அடைந்தவர்கள் சுமார் 7 ஆயிரம் பேர் ஒவ்வொரு வருடமும் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது நமக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. இதைக் கண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இதுபோன்ற நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக உடனடித் தேர்வுத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, மாணவர்கள் தேர்விலே தோல்வி அடைந்தால் உடனடியாக அதே மாதத்தில் மீண்டும் தேர்வை எழுதி அவர்கள் அதிலே pass செய்து அவர்களுடைய படிப்பைத் தொடர்வதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தியவர் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காகப் பாடுபடக்கூடிய ஆசிரியர் பெருமக்களுடைய இட மாறுதல். அவர்களுக்கு வழங்கக்கூடிய அந்த இட மாறுதலில் அவர்கள் எந்தவிதமான இன்னல்களையும் அனுபவிக்கக் கூடாது என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவுன்சிலிங் முறையைக் கொண்டு வந்தார்கள். அந்த கவுன்சிலிங் முறைமூலம் ஆசிரியர்களுக்கு அவர்கள் விருப்பப்பட்ட இடம் வழங்கப்பட்ட வரலாறு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான். ஆனால், இந்த ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு கவுன்சிலிங் முறையாக நடைபெறவில்லை. விதிமுறைகளுக்கு மாறாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியிலே கவுன்சிலிங் ஒழுங்காக நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். போன ஆட்சியிலே நீங்கள் கவுன்சிலிங் எப்படி நடத்தினீர்கள் என்பதை நாங்களும் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது நடந்த கவுன்சிலிங் ஒளிவுமறைவற்று நடைபெறவில்லை. கவுன்சிலிங் என்று எல்லோரையும் கூட்டி வைத்துக்கொண்டு நீங்கள் யார், யாருக்கு transfer order போட வேண்டுமோ அவர்களுக்குத்தான் போட்டுக் கொண்டு இருந்தீர்கள். ஆனால், இதே சென்னை மாநகரத்திலே ஒரு இடத்தைக்கூட அன்றைக்கு நீங்கள் வெளிப்படையாகக் காட்டவில்லை. இப்போது நடந்திருக்கக்கூடிய கவுன்சிலிங்கில் சென்னை மாநகர் போன்ற பெருநகரங்களில் இருக்கக்கூடிய காலி இடங்கள் அனைத்தையுமே வெளிப்படையாகக்

காட்டியதால் ஆசிரியர்கள் ஆணை பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள். இதுவரை நடந்திருக்கக்கூடிய கவுன்சிலிங்களிலே ஏறத்தாழ 37,350 ஆசிரியர்கள் சிறந்த முறையிலே, ஒளிவுமறைவற்ற வகையிலே மாறுதல் பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள். எனவே, தொடர்ந்து இந்தக் கருத்தைச் சொல்லக்கூடிய தார்மீக உரிமை உங்களுக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரஞ்ஜோதி, 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமச்சீர் கல்வியை அமல்படுத்த வேண்டும் என்பதற்காக முனைவர் முத்துக்குமரன் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழுவினுடைய அறிக்கை 2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டது. இப்போது நீங்கள் வெளியிட்டிருக்கக்கூடிய அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இந்தக் கல்வியாண்டிலேயே சமச்சீர் கல்வி முறை கொண்டு வரப்படும் என்கின்ற வாசகம் இடம்பெற்றிருக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம், இன்னும் 30 நாட்களுக்குள்ளாக, தமிழகம் முழுவதும் அனைத்துப் பள்ளிக்கூடங்களும் திறந்துவிடும். இந்த வருடமே, நீங்கள் சமச்சீர் கல்வியை கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? இந்த இடைப்பட்ட காலத்தில் உங்களாலே அதை நிறைவேற்ற முடியுமா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, (குறுக்கீடு), No, no. நேரம் இல்லை. இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பரஞ்ஜோதி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 11 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மன்றத்தில் 3-வது முறையாக பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய ஒரே தலைவர், எங்கள் குடும்பத்தின் நிரந்தரத்



தலைவர், ஒப்பாறும், மிக்காறும் இல்லாத தலைவர், கலைஞர் அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய எதிர்காலம், இளைஞர்களுடைய எழுச்சி நாயகன், எனக்கு முகவரி தந்த தங்கத் தளபதியின் தாள் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய கொறடா அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை'*

என்று வள்ளுவர் பெருந்தகை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மனிதனாகப் பிறந்தவர்களுடைய பெரும் சொத்தாகத் திகழ்கின்ற கல்வி, சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளாகியும் இன்னும் அனைவருக்கும் கிட்டவில்லை என்ற நிலையில் நாம் இருந்துகொண்டு இருக்கிறோம். ஆண்டுக்கு 10 இலட்சம் மாணவர்கள் புதிதாகப் பள்ளியிலே சேருகின்ற வாய்ப்பைப் பெறுகின்றார்கள். இப்போது நம்முடைய மக்கள் ஓரளவு விழிப்புணர்வு பெற்று, தான் படிக்கவில்லை என்றாலும், தன்னுடைய பிள்ளைகள் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

சமுதாய மறுமலர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், மனித வள மேம்பாட்டிற்கும், சமூக விழிப்புணர்வுக்கும் அடித்தளமாக இருப்பது கல்வியே. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்கண் திறந்தவராக இருந்தார்கள். இன்றைக்கு வாழ்கிற காமராஜராக, நம்முடைய ஒப்பாறும், மிக்காறும் இல்லாத தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் துறை மிகுந்த ஏற்றத்தைப் பெற்று இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

'காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு-என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா'

என்று பாரதி பாடியதற்கேற்ப, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கக்கூடிய பல்வேறு

நல்ல அம்சங்களைப் பார்க்க முடிகிறது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அல்லது ஒரு மனிதன் முழுமையான மனிதனாக மாற வேண்டும் என்றால், அதற்கு மிக இன்றியமையாததாக கல்வி இருக்கிறது.

2005-2006 அ.தி.மு.க. ஆட்சியில் இந்தக் கல்வித் துறைக்கு ஒதுக்கிய பணம் 4,110 கோடி ரூபாய். ஆனால், இந்த 2008-2009 ஆம் ஆண்டு ரூ.7,852 கோடி (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கப்பட்டுள்ளது. 50 விழுக்காடு பணம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிகிறபோது நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழக அரசின் மேலாண்மையில் இயங்கும் அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும், அனைத்து மாணவர்களுக்கும் தலைசிறந்த, தரமான கல்வியை உறுதி செய்திட, பள்ளிக் கல்விக்கான ஒரே மாதிரியான கல்வி முறை, ஒரே மாதிரியான பாடத் திட்டம் (Syllabus), ஒரே மாதிரியான பாடப் புத்தகங்கள், கல்விக் கோட்பாட்டிற்கு உகந்த தேர்வு முறை, சிறந்த ஆசிரியர்கள்மூலம் மாணவர்களை மையமாக வைத்துச் செயல்படும் கற்றல், கற்பித்தல், நிகழ்வுகளை உள்ளடக்கிய வகுப்பறை ஆகியவற்றை ஒரே மாதிரியாக வடிவமைத்து அதன்மூலம் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் சமச்சீர் கல்வி முறையை, இந்த அரசு 2008-2009-ல் செயல்படுத்த உறுதிகொண்டுள்ளதை நான் மனதார வரவேற்று பாராட்டுகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிட்டில் நமது அரசு 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்கவைத்தல்மூலம் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதை ஒரு கொள்கை குறிக்கோளாகக் கொண்டுள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலவச மதிய உணவுத் திட்டம், இலவசப் பாடநூல்கள் வழங்குதல், இலவசச் சீருடை வழங்கல், அரசுப் பேருந்தில் இலவசப் பயணச் சலுகை ஆகிய திட்டங்களைப் பாராட்டுகிறேன். குழந்தைகளுக்கு பாடசாலைகள் மற்றும் சீருடைகளில் இருந்து உணவு வரை அனைத்தும் இலவசமாக வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழகம்தான் என்பதை அறிந்து பாராட்டுகிறேன். அனைவருக்கும் கல்வி இயக்கச் செயல்பாடுகளின்மூலம், தொடக்கப் பள்ளி நிலையில் கல்வி இடைநிற்றல் விகிதம் 2006-2007-ல் 1.91-ல் இருந்து இந்த ஆண்டு 1.40 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, நடுநிலைப் பள்ளிகளில் 4.8 என்ற விகிதம் 2.4 ஆக குறைக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.



பிற்பகல் 12-15

இப்போது கணினி உதவியுடன், மொழி ஆய்வகங்கள், கணிதவியல் ஆய்வகங்கள், இயற்பியல் ஆய்வகங்கள், நூலக வசதிகள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக இந்த அரசு செய்துள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோன்று மாணவர்கள் துயர் துடைப்பு நிதி என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோன்று யோகா பயிற்சிக்கென தனிப் பாட வேளைகளை இவ்வாண்டிலிருந்து தொடங்குவதை நான் பாராட்டுகிறேன். அதேபோன்று ஆசிரியர்களுக்கு In-service Training என்ற பணியிடைக் காலப் பயிற்சியை இந்த அரசு கட்டாயமாக ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நவநாகரிக உலகத்தில் இருக்கின்ற முன்னேற்றங்களை நம்முடைய ஆசிரியர் பெருமக்களும் தெரிந்துகொள்ள வேண்டும். மாணவர்களுக்குத் தெரிவதற்கு முன்பாக ஆசிரியர்களுக்குத் தெரிய வேண்டும். எனவே, குறிப்பிட்ட காலகட்டங்களிலே இந்த முன்னேற்றங்களை, கம்ப்யூட்டர் போன்று பல்வேறு வளர்ச்சிகளில் வருகின்ற நவீன முன்னேற்றங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக In-service Training என்று சொல்லப்படுகின்ற பயிற்சி கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்று நான் மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசு உயர்நிலைப் பள்ளிகளில் Spoken English என்ற ஒரு மொழி ஆய்வகத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆங்கில மொழி பேசுகின்ற திறமையை வளர்ப்பதற்கான ஒரு திட்டம் தீட்டியிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சொல்வதைச் செய்கின்ற தலைவர் கலைஞருடைய அரசு சொல்லாததையும்கூட இந்த கல்விக்காக, கல்வி மானியக் கோரிக்கையிலே வாரி வழங்கியிருப்பதை நாட்டிலுள்ள மக்களெல்லாம் சிறப்பாக வரவேற்கின்றனர். தொடக்கப் பள்ளியினுடைய பாடத் திட்டங்களில் குடிமைப் பயிற்சிகளைப் பெறுகின்ற அளவில், வாரத்தில் 2 வகுப்புகள் நடைபெறுகின்ற அளவில் பாடம் அமையப்பெற்று பொதுச் சுகாதாரம், போக்குவரத்து விதி, சாதி ஒழிப்பு மற்றும் மனித நேயம் போன்றவற்றை திருக்குறள் வழியில் அமையச் செய்தால் எதிர்காலத்தில் பேதமற்ற சமுதாயம் அமைக்க முடியும் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நல்ல மதிப்பெண்களும், நல்ல தேர்வு முடிவுகளும் இல்லாத பள்ளிகளைக் கண்டறிந்து அதன் பொறுப்பாளர்கள்மீது நடவடிக்கை எடுக்க நான் பணிவோடு வேண்டுகிறேன். எல்லோருக்கும் எல்லாம் இருப்பதற்கான இடம் நோக்கி நகர்கின்ற இந்த வையகத்தில் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடியதுபோல, 'தமிழகம் எல்லோருக்கும் கல்வி தருவதற்கான காலம் நோக்கிச் செல்கிறது' என்பதை, நான் உளமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வளமான கல்விக்கூடங்கள் இருந்து, திறமையான மாணவர்களை உருவாக்கினால்தான் போட்டியிடுவதற்கு, உலக நாடுகளோடு வளர்ச்சியடைவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும். ஜப்பானில் ஒரு பழமொழி உண்டு. If you cannot, Japan cannot. If Japan cannot, the World cannot—என்று சொல்வார்கள். "உன்னால் முடியாது என்றால் ஜப்பானால் முடியாது, ஜப்பானால் முடியாது என்றால் உலகத்தால் முடியாது" என்று சொல்வார்கள். எனவே, தலைவர் கலைஞர் அவர்களால் முடியாது என்றால் யாராலும் முடியாது, இந்தக் கல்வித் துறையில். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் கல்வித் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதால் அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தலைவர் அவர்களே, அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கென்று குறைந்தபட்சம் ஒரு ஆங்கிலப் பயிற்சி ஆசிரியரும், மாணவிகளுக்கென்று ஒரு பெண் உடற் பயிற்சி ஆசிரியரும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பள்ளி வேலை நாட்களில் ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் வேறு அரசுப் பணிகளுக்கு அனுப்பப்படுவதை தவிர்க்க வேண்டுமென்பதையும் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

10 ஆண்டுகள் பணியாற்றினால்தான் ஓய்வூதியம் என்ற நிலையை மாற்றி பணியாற்றிய ஆண்டுகளுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கிட வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டுகிறேன். இதுசம்பந்தமாக பக்கத்து மாநிலமாகிய கேரளத்தின் நிலை என்ன என்பதையும் அரசு தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அரசு ஆசிரியர்களுக்குப் பொருந்தும் அரசு ஆணைகள், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் ஆணையை அமல்படுத்த வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டிலே மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பாடப் பிரிவு மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. மேல்நிலை தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு பணிவரன்முறை, தகுதிகாண் பருவம் மற்றும் தேர்வு நிலைக்குரிய ஆணைகளை இந்த அரசு வெளியிட்டிருப்பது பாராட்டுதற்குரியது. மேல்நிலை தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு நம்முடைய பக்கத்து மாநிலமாகிய புதுச்சேரியில் இருப்பதுபோல் அவர்களுக்கு ரூ.6,500 ஊதிய விகிதம் வழங்க பணிவோடு வேண்டுகிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தித் தர வேண்டுகிறேன். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைந்த சமுதாயக் கல்லூரிகளில் Pre-School Teacher Training படித்த சுமார் 1,000 மாணவிகளினுடைய சான்றிதழ்களை அங்கீகரிக்க ஆவன செய்ய வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் படித்தவர்கள் நிறைந்த மாவட்டம்; தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டம். எனவே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெஜினால்டு, allotted time is over.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஒரேயொரு point. எங்களுடைய மாவட்டத்தில், மாண்புமிகு தலைவராகிய முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து ஒரு தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், எங்களுடைய மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களான வாழை, அன்னாசிப் பழம், நெல் பயிர்களுக்கான ஆராய்ச்சி மையங்கள் இருக்கின்றன. தோட்டக்கலைப் பயிர்கள் எங்களுடைய மாவட்டத்தில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. எனவே, எங்கள் மாவட்ட நலன் கருதி, ஒரு தோட்டக்கலைப் பல்கலைக்கழகத்தை என்னுடைய தொகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய மாவட்டத்தில், SAI Centre என்ற ஒரு நவீன விளையாட்டுப் பயிற்சி மையம் *(மணியடிக்கப்பெற்றது)* அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத். மாண்புமிகு உறுப்பினர் டி. ஜெயக்குமார், எதிர்க்கட்சியிலே என்ன ரொம்ப குறைவாக, skeleton strength இருக்கிறது, Very weak strength ஆக இருக்கிறது?

***THIRU K. GOPINATH:** Hon. Speaker, Sir, first I should say thanks to you for giving me this opportunity.

*(உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத், நீங்கள் தெலுங்கில் பேச வேண்டுமென்றால் முதலில் அனுமதி வாங்கிவிட்டுப் பேச வேண்டும்.

**THIRU K. GOPINATH:** Hon. Speaker Sir, kindly provide me more time then I can speak in Tamil. But I can't speak fluently in Tamil.

**HON. SPEAKER:** Of-course, before speaking in Telegu, you have to get permission.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னபடி தெலுங்கிலே பேசுவது என்றால் உங்களிடம் அனுமதி வாங்கிப் பேச வேண்டும். அவருக்குத் தமிழ் நன்றாகத் தெரியும். தமிழ் தெரியாது என்று வேண்டுமானால் சொல்லட்டும். ஆங்கிலத்தில் பேசட்டும். தமிழ் நன்றாகவே தெரியும். ஆகவே, அவர் தமிழிலேயே பேசுவதுதான் ஏற்புடையதாக இருக்கும்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சின்ன மாமனார் சொன்னமாதிரி, தமிழ் தெரியும். தெரியாமல் ஒன்றும் இல்லை எனக்கு. I don't have fluency. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். If you provide more time, I can speak in Tamil. அதைத்தான் நான் சொன்னேன். எனக்கு தமிழ் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் 7 ஆயிரம் கோடி ரூபாய்



விவசாயக் கடன் தள்ளுபடி செய்ததுபோல, இப்பொழுது மத்திய அரசாங்கம் 60 ஆயிரம் கோடி ரூபாயை தள்ளுபடி செய்ய முன்வந்துள்ளதற்கு நம்முடைய கலைஞர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, கடந்த முறை இந்த அவையிலே நான் கேட்டவுடனே, மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்கள் தமிழ்நாடு history -இலே எப்போதும் இல்லாத அளவிற்கு என்னுடைய தொகுதி ஒசூர் முனிசிபாலிட்டியிலே கிட்டத்தட்ட 10 வருட காலமாக இருந்த அந்த tax பிரச்சினையை 50 per cent -ஆக குறைத்துக் கொடுத்ததற்கு என் சார்பிலேயும் என் தொகுதி மக்கள் சார்பிலேயும் அவருக்கு நன்றி.

அதேபோல, என்னுடைய சின்ன மாமனாரிடம் கடந்த முறை கேட்டேன். *(சிரிப்பு)* அதாவது என்னுடைய தொகுதிக்கு cold storage கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதிக்கு I.T. Park கொடுத்ததற்கு நம்முடைய அரசாங்கத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி. அதேபோல மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த முறை நான் கேட்டதற்கு, இந்த முறை என்னுடைய தொகுதிக்கு புதிதாக R.T.O. Office கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கிட்டத்தட்ட 30 வருட காலமாக Inter-State Agreement முடியாத நிலையில் இருந்தது. போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கடந்த முறை நான் சொன்னவுடனே, நம்முடைய அரசாங்கம் அதை வலியுறுத்தி, இந்த ஆண்டு, கர்நாடகா-தமிழ்நாடு-க்கான Inter-State Agreement-ஐ முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒசூர் border-இல் இருக்கிற பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஒசூர் Inner out road—Ring road புதிதாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பணி இன்னும் தொடங்கப்படவில்லை. உடனே அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி-ரேணுகோடா ஆகிய இரண்டு தாலுகாக்கள் especially ஓசூர், கிருஷ்ணகிரி தாலுகா, பர்கூர், காவேரிப்பட்டினம் மொத்த தாலுகாக்களுக்கும் entire Krishnagiri District-க்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் கொடுத்து, கிட்டத்தட்ட 30 lakhs peoples-க்கு water connection கொடுப்பதற்கு அடிக்கல் நாட்டிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, இப்போது I.T. Park announce செய்தாகிவிட்டது. ஏற்கெனவே Floriculture cut flowers இருக்கின்றன. இப்போது கர்நாடகாவில் இருக்கிற Airport, Bangalore International Airport, அங்கேயிருந்து 80 கிலோ மீட்டர் தூரம் தாண்டிப்போய்விட்டது. அதனால் ஓசூரிலிருந்து Airport—க்குச் செல்ல வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 140 கிலோ மீட்டர் பயணம் போகின்ற நிலை இருக்கிறது. கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைப் பரிசீலித்து, ஏற்கெனவே ஓசூரிலே ஒரு ஏர்போர்ட் Service Centre-TAAL, Tanuja Aeronautics and Airlines Ltd. இருக்கிறது. அதையே கொஞ்சம் விரிவுபடுத்தி ஓசூருக்கு ஒரு Airport கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதைப்போல, ஓசூரிலே Asian Bearings Limited என்று ஒரு பெரிய கம்பெனி இருக்கிறது. அந்தக் கம்பெனி கிட்டத்தட்ட 8 வருடங்களாக மூடிக் கிடக்கிறது. 700 பேர் அங்கே வேலை பார்க்கிறார்கள். அதிலே நம்முடைய டிட்கோவின் சார்பாக, நம்முடைய தமிழ்நாடு அரசுத் தரப்பிலே 21 per cent share இருக்கிறது. அந்த 700 குடும்பங்களும் இன்றைக்கு நடு ரோட்டிலே நிற்கின்றன. அவர்களிலே கிட்டத்தட்ட 9 பேர் இதுவரை செத்திருக்கிறார்கள். சரியாக குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமலும், சரியாக குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியாத மோசமான அவல நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும். ஏன் என்றால், இரண்டாவது முறை சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பிறகு நான் முதன் முதலிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்த முதல் கருணையான கோரிக்கையே அந்த Asian Bearings Limited கம்பெனியினுடைய பிரச்சினையை நீங்கள் தயவு செய்து solve செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் தயவு செய்து நீங்கள் இதைச் செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே



இதைப்பற்றி Hon. Labour Minister அவர்களிடமும் பேசியிருக்கிறேன். Hon. Labour Minister அவர்களும் நான் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து நீங்கள் அதைப் பரிசீலித்து ஆவன செய்து கொடுக்க வேண்டும்.

முதலில் என் தொகுதிப் பிரச்சினையைச் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு டைம் கிடைக்காது. ஓசூரிலே இருக்கிற Hospital-ஐ ஏற்கெனவே எங்கள் மாவட்டத்தை முன்னோடியான ஒரு மாவட்டமாக மாற்ற, கர்நாடகத்திலேயிருக்கிற Sparsh Hospital என்கிற மருத்துவமனையோடு ஒரு tie-up பண்ணி அங்கே நாங்கள் ஒரு Trauma care hospital வைத்திருக்கிறோம். அந்த Trauma care hospital-உடன் ஒப்பிடும்போது இப்போது அங்கே இருக்கிற அரசு Hospital-லில் infrastructure எல்லாம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் நம்மடைய அரசு Hospital-ஐ கொஞ்சம் up-grade செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு ஓசூரை பொறுத்தவரையில் சென்ற வருஷத்தோடு இந்த வருஷத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் 20,000 பேர் கூடுதலாக ஓசூர் Municipality Town-லே வந்திருக்கிறார்கள். ஆனால், infrastructure facilities மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் infrastructure-ஐக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் மற்றும் ரேணுகோடா ஆகிய இரண்டு தாலுகாக்களிலும் கிட்டத்தட்ட தெலுங்கு படிக்கிற குழந்தைகள் 80,000 பேர் இருக்கிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, especially ஓசூர் மற்றும் ரேணுகோடா தாலுகாக்களிலே தெலுங்கு படிக்கிற குழந்தைகள் மட்டும் கிட்டத்தட்ட 80,000 பேர் இருக்கிறார்கள். இந்த 80,000 பேருக்கான teachers எண்ணிக்கையைப் பார்த்தீர்கள் என்றால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் sanctioned posts, அதாவது Telugu Pandits, B.T. Assistants, B.T. (Science), B.T. (Social Science), Secondary Grade Teachers பார்த்தீர்கள் என்றால் sanctioned posts (மணியடிக்கப்பெற்றது) 272. அதேபோல, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், உரையை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** Filled-up posts 183 தான். 89 posts vacant ஆக இருக்கின்றன. இதற்கும் மேலாக ஓர் அன்பான வேண்டுகோள்

என்னவென்றால் திராவிட இயக்கம் என்றாலே திராவிட இயக்கத்திலே நாம் எல்லோரும் சகோதரர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம். உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு நிமிடத்திலே நான் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் என்று நான் ஏற்கெனவே சொன்னேன் இல்லையா?

**திரு. கே. கோபிநாத்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். தலைவர் அவர்களே, திராவிட மக்கள் கட்டாயத் தமிழ் என்று கொண்டுவந்து, இன்றைக்கு எங்கள் பகுதியிலே இருக்கிறவர்களெல்லாம் தமிழ் கற்றுக்கொள்வது என்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தயவுசெய்து கருணை உள்ளத்தோடு இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்புடன் வேண்டுகிறேன். We are ready to learn Tamil. But at the same time kindly keep it after Fourth Standard. ஒன்றாம் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பு வரைக்கும் relaxation கொடுத்து, நான்காம் வகுப்பிலிருந்து படிக்கிற குழந்தைகளுக்கு தமிழைக் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டுமென்ற மனமார்ந்த வேண்டுகோளை விடுக்கிறேன். We are ready to learn Tamil. இந்தப் பிரச்சினை என்னுடைய பிரச்சினை மட்டுமல்ல, எங்களுடைய district-னுடைய பிரச்சினை மட்டுமல்ல, கிட்டத்தட்ட throughout the State-லே இருக்கிற பிரச்சினை. கிட்டத்தட்ட இரண்டு கோடி தெலுங்கு மக்களுடைய ஓர் அன்பான வேண்டுகோள் (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில்... (குறுக்கீடு)

**திரு. கே. கோபிநாத்:** Hon. Speaker Sir, இது ரொம்ப முக்கியமான பிரச்சினை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் ஆரம்பத்திலேயே பேசியிருக்க வேண்டியதுதானே?

**திரு. கே. கோபிநாத்:** ஒரு இலட்சம் குழந்தைகளுடைய கல்விப் பிரச்சினை இது. ஒரு இலட்சம் குழந்தைகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் தெலுங்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தெலுங்குக் குழந்தைகளுக்காகப் பணியமர்த்தப்பட்ட 2,500 teachers—களுடைய வாழ்க்கைப் பிரச்சினை, ஒரு இலட்சம் குழந்தைகளினுடைய பிரச்சினை. தயவுசெய்து Hon. Speaker Sir, நம்முடைய அண்ணன் தளபதியார் அவர்களே, தயவுசெய்து நீங்கள் இதற்கு ஏதாவது பதில் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், இந்தப் பிரச்சினை ஒரு நாள் பிரச்சினை இல்லை. இது தமிழ்நாட்டிலே இருக்கிற தெலுங்குக்காரர்களுடைய பிரச்சினை.

(உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அழுதுகொண்டே பேசினார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

(உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அழுதுகொண்டே உட்கார்ந்தார்.)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை இங்கே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும், ஒரு குடும்பத்தினுடைய முன்னேற்றத்திற்கும், நாட்டினுடைய மேம்பாட்டிற்கும், கல்வி மிக மிக முக்கியம்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, one minute. Gopinath is weeping. திரு. கோபிநாத், என்ன சொல்லுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள், திரு. கோபிநாத், மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) one minute.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்த விஷயத்தைக் குறித்து அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேச முடியாத நிலையிலே இங்கு இருக்கிறார். இந்தச் சூழ்நிலை, குறிப்பாக எடுத்துக்காட்டக்கூடிய சூழ்நிலை, அவர் குறிப்பிட்ட அந்த இடங்கள், உதாரணமாக, ஓசூர், கிருஷ்ணகிரி போன்ற எல்லையோர கிராமப் பகுதிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில ஆந்திர மாநிலத்தை ஒட்டிய பகுதிகளிலே இருக்கின்றன. பெரும்பான்மையான தெலுங்கு படிக்கும் குழந்தைகள் அங்கே படிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அவையிலே அவர்களுடைய உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

அந்தப் பகுதிகளுக்கு நீங்கள் நேரடியாக, ஒரு குழுவாகப் போய் பார்த்து, எந்த அடிப்படையிலே, எந்த நடைமுறையிலே அங்கே அவற்றைச் செயல்படுத்த முடியும் என்பதைப் பற்றியெல்லாம் ஆராயுங்கள் என்று ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் ஒருமுறை எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உங்களது உணர்வுகளை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத்.

**திரு. கே. கோபிநாத்:** Hon. Speaker Sir, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதைப்போல தாங்கள் அளித்த வாய்ப்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அனைவருக்கும் தரமான கல்வி வழங்குதல், பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல். பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் எட்டாம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச்செய்தல், இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல் என்ற பல்வேறு நல்ல அம்சங்கள் இடம்பெற்றிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறோம். இப்படிச் சொல்கிற நேரத்தில், இதிலே பாராட்டிச் சொல்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.



ஆனாலும், நேரம் இல்லாத காரணத்தால், நான் பள்ளிக் கல்வித் துறையைப் பற்றி பாராட்டிச் சொல்ல விரும்புவது, இந்தத் துறைக்குப் பொருத்தமான ஒரு அமைச்சரை அமர்த்தி கல்வியில் மிகப்பெரிய புரட்சியைச் செய்துகொண்டிருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், அவருடைய வழியிலே அயராது பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பாராட்டுகளை இந்த மன்றத்தில் மட்டும் சொல்லவில்லை. எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களும், நானும், முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்த நேரத்தில் கல்வித் துறைக்கு நல்ல அமைச்சரை வழங்கியிருக்கிறீர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல சாதனைகளை எல்லாம் படைத்துக்கொண்டிருக்கிறார் என்று தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே நாங்கள் பாராட்டி சொல்லியிருப்பதையும் இந்த மாமன்றத்திலே நான் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன்.

மருத்துவர் அய்யா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியும், தொடர்ந்து சமச்சீர் கல்வியை இந்த நாட்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படி சமச்சீர் கல்வி என்று சொல்கிற நேரத்தில் நாட்டினுடைய வளர்ச்சிக்கு, காலத்தினுடைய கட்டாயம் என்ற அடிப்படையில் கல்விப் புரட்சி தேவை என்று மருத்துவர் அய்யா அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்விப் புரட்சியினுடைய ஒரு அங்கம்தான் சமச்சீர் கல்வி. ஆகவே, இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டில் முதலாவதாக சமச்சீர் கல்வியைக் கொண்டுவருகிற நேரத்தில் இந்தியாவிற்கு வழிகாட்டி தமிழ்நாட்டின் சமச்சீர் கல்வி முறைதான் என்று இங்கே நான் பாராட்டிச்சொல்ல விரும்புகிறேன். சமச்சீர் கல்வியைப் பாராட்டுகிற அதேவேளையில், அடுத்து வரக்கூடிய கல்வி ஆண்டு நெருங்கவிருக்கிறது, குழுவினுடைய அறிக்கை முழுமையாக வரவில்லை, இன்னும் தனியார் கல்வி நிறுவனங்கள் எல்லாம் அழைத்துப் பேசப்படவில்லை. ஆகவே, இந்தப் பணிகளையெல்லாம் விரைவாக முடிக்கவேண்டியிருக்கிற காரணத்தால், விரைந்து முடித்து வரக்கூடிய கல்வி ஆண்டு முதலே சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவர வேண்டும் என்று நான் இங்கே வற்புறுத்தி

கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்வித் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் கல்வித் துறை செழிப்பாக இருக்கும் என்று சமீபத்திலே நடத்தப்பட்ட ஆய்வின் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

பிற்பகல் 12-35

சென்னையிலே நந்தினி வாய்ஸ் என்ற ஒரு தொண்டு நிறுவனத்தின் ஆய்வறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஓர் ஆண்டிற்கு ஒரு இலட்சம் பேர் பொறியியல் படித்து முடிக்கிறார்கள். அப்படிப் பொறியியல் படித்து முடித்தவர்கள் போக, ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சி பெறாத மாணவர்கள் மாறி, மாறி தேர்வு எழுதி தேர்ச்சிபெறக் கூடியவர்கள் ஏறக்குறைய 35 விழுக்காடு. அடுத்து, தேர்ச்சி பெற்றாலும்கூட, அதிக மதிப்பெண் பெறவில்லை, வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடியவர்கள் 35 விழுக்காடு. ஆக, இந்த 70 விழுக்காட்டிற்குப் பிறகு, தனியார் நிறுவனங்களில் அல்லது வெளியிடங்களில் வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படக்கூடியவர்கள் வெறும் 30 விழுக்காட்டினர். ஆக, 70 விழுக்காட்டினருக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. பொறியியல் படித்தாலும் முன்னேற்றம் இல்லை என்று சொல்வதற்குக் காரணம், இவர்களுக்கு ஆரம்பக் கல்வி சரியாக இல்லாததுதான் காரணம் என்று இந்த ஆய்வு நிறுவனத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் உயர் கல்வி பெற்றாலும்கூட உயர முடியாததற்கு ஆரம்பக் கல்வியே அடித்தளம் என்பதை மனதிலேகொண்டு, ஆரம்பக் கல்விக்கு நம்முடைய அரசு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. இதுவரையிலே இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள், பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். ஆனாலும்கூட, இன்னும் அதிக முக்கியத்துவம் ஆரம்பக் கல்விக்கு வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஆய்வு நிறுவனத்திலே சொல்வது, நகர்ப்புறங்களிலே இருக்கிற குழந்தைகள் உயர் கல்வியைப் பெறுவதால், வேலைவாய்ப்பினைப் பெறுகிறார்கள். ஆனால், கிராமப்புறங்களிலே கேட்பாரற்ற நிலை இருக்கிறது. கிராமப்புறங்களுக்கு அதிக அக்கறை செலுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்பொழுது பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள், வரவேற்கிறோம். ஆனாலும்கூட, கல்வி நிறுவனங்கள் கோயிலாகப் பாதுகாக்கப்படவேண்டும். புனிதத் தன்மை கொண்டதாக, பக்தர்கள் கோயில்களிலே வழிபடுகிறார்கள். அதற்கு புனிதத் தன்மை உண்டு என்று கருதுகிறார்கள். ஆனால், பக்தி இல்லாதவர்களுக்குச் சேர்த்து, எல்லோரும் கல்வியைக் கோயிலாக மதிப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அந்த அடிப்படையிலே தேவையான ஆசிரியர்கள், தேவையான கட்டட வசதி, விளையாட்டு மைதான வசதி, பூங்காக்கள், மரங்கள் வளர்த்தல், பூச்செடிகள் வளர்த்தல் என்று கல்வி நிறுவனத்தை, கல்விக் கோயிலைப்போல உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முன்வைக்க விரும்புகிறோம்.

நீங்கள் சமச்சீர் கல்வியைக் கொண்டுவருகிறீர்கள். சமச்சீர் கல்வியினுடைய தொடர்ச்சியாக அருகமைப் பள்ளி முறை, பொதுப் பள்ளி முறை கொண்டு வரப்படவேண்டும். அருகமைப் பள்ளி முறை என்று சொன்னால், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு எல்லையை வரையறை செய்கிறோம். பணக்காரக் குழந்தையாக இருந்தாலும், ஏழைக் குழந்தையாக இருந்தாலும், இந்த எல்லையை விட்டு வேறு இடங்களிலே, வேறு பள்ளிகளிலே சேரக்கக்கூடாது என்ற சட்டத்தைக் கட்டாயமாக்கவேண்டும். அப்படி கட்டாயமாக்குகிறபொழுதுதான், அந்த அருகமைப் பள்ளி முறை என்ற முறையை நடைமுறைப்படுத்துகிறபொழுது, ஏழையும், பணக்காரனும் ஒரேயிடத்தில் அமர்ந்து படிப்பதற்கும், தரமான கல்வியைக் கொடுப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே, சமச்சீர் கல்வியைத் தொடர்ந்து அருகமைப் பள்ளி முறை, பொதுப் பள்ளி முறையை அரசு கொண்டுவர வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

இங்கேகூட சொல்கிறோம், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நிர்ணயிக்கப்பட்டார். அந்த முறை மாறி, இப்பொழுது 40 மாணவர்களுக்கு மேலாக இருக்கக்கூடிய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், 30 மாணவர்களுக்கு ஓராசிரியர் என்ற நடைமுறை நிலையை அரசு உருவாக்க வேண்டும். இன்றும் ஓராசிரியர் பள்ளிகள்

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 24

இருந்துகொண்டுதான் இருக்கின்றன, ஈராசிரியர் பள்ளிகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர், ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்ற விகிதத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஓராசிரியர் பள்ளிகள் எங்கெங்கே இருக்கின்றன என்ற பட்டியலை வைத்திருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இங்கே தமிழ் வழிக் கல்வியைக் கட்டாயமாக்கி இருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, ஆணடுக்கு ஒரு வகுப்பு என்ற நிலையில்லாமல் 2, 3 ஆண்டுகளில் 12 ஆம் வகுப்பு வரையிலே தமிழ் கட்டாயப் பாடம் என்பதை நடைமுறைப்படுத்தவேண்டும். அதைக் காலம் தாழ்த்தாமல் நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வழியிலே படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வேண்டும். இப்படி தமிழுக்கு முக்கியத்துவம் என்று சொல்கின்ற காரணத்தாலே, ஆங்கிலத்திற்கு நாங்கள் எதிராக இல்லை. நாம் நடைமுறையில் பார்க்கிறோம், 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள் ஆங்கிலத்திலே ஒரு வாக்கியத்தை முழுவதாக எழுதுவதற்கும், பேசுவதற்கும் தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே, தமிழையும் அவர்கள் சரியாகப் படிக்கவில்லை, ஆங்கிலத்தையும் சரியாகப் படிக்காத நிலை இருந்துகொண்டிருக்கிறது. 5 வருடம் படித்து முடித்தாலே ஒரு மொழியை முழுமையாக எழுதுவதற்கும், பேசுவதற்கும் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பாடத் திட்டத்திலே தமிழ் இசையைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவர வேண்டும். தமிழ் இசை தமிழர்களைவிட்டு அகன்றுகொண்டிருக்கிறது. ஆகவே, தமிழ் இசையைப் பாடமாகக் கொண்டுவர வேண்டும். கடந்த காலங்களிலே பள்ளிகளிலே நீதி போதனை வகுப்பு இருந்தது. இப்போது குழந்தைகளுக்கு ஒழுக்க நெறிமுறைகளை, கட்டுப்பாட்டைக் கற்றுக் கொடுக்காத காரணத்தால் அவர்கள் வாழ்க்கையிலே தவறக்கூடிய நிலையை, பண்பாட்டிலிருந்து மாறுபடக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, மாணவர்களை நெறிப்படுத்தக்கூடியவகையில், பள்ளிகளில் நீதி போதனை வகுப்பை மீண்டும் துவக்கவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 24] [திரு. ஜி.கே. மணி]

பிற்பகல் 12-40

அதைப்போல, மனித உரிமைக் கல்வி. பள்ளிகளிலே மனித உரிமைக் கல்வியைக் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டும். ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப் பள்ளிகளிலே மனித உரிமைக் கல்வி இருந்தது. இந்த ஆண்டு அது கேள்விக்குறியாக ஆகிவிட்டது. நான் இப்போது வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்கு பார்த்தாலும் மனித உரிமை மீறல் பரவிக்கொண்டிருக்கிறது, அதிகரித்துக்கொண்டிருக்கிறது; வன்முறை, தீவிரவாதம் மேலோங்கியிருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால் குழந்தைப் பருவத்திலேயே, பிஞ்சுப் பருவத்திலேயே நாம் மனித உரிமையைக் கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆகவே, எல்லா நிலைகளிலும், எல்லாப் பள்ளிகளிலும் மனித உரிமைக் கல்வியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது பார்த்தீர்களென்றால், தமிழ்நாட்டிலே இடைநிலை ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு தேர்வு எழுத முடியாமல் நிறையப் பள்ளிக்கூடங்களில் இருக்கிறார்கள். அந்தியூரிலே உள்ள செயின்ட் மேரீஸ் பள்ளிக்கூடத்தில் படித்த மாணவர்கள் எல்லாம் தேர்வு எழுத முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, இதை நெறிப்படுத்த வேண்டும். அனுமதி பெறாமலேயே கல்வி நிறுவனங்களை ஆரம்பித்துவிடுகிறார்கள். 50 மாணவர்களுக்கு அனுமதிபெற்று 100 மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆக, இப்படிப் பல மாணவ மாணவிகள் பாதிக்கப்பட்ட காரணத்தினாலே அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, அதை நெறிப்படுத்த வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்திலே, இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சிக்குக் கலந்தாய்வுமூலமாக மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அரசு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. ஆனால், வெளியில் சென்றவுடனே, அந்த நிறுவனங்களுக்குச் சென்றவுடனே, அவர்கள் விருப்பத்திற்குக் கட்டணம் வசூலித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதையெல்லாம் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியிலே நம் அரசு நிறைய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது. புரட்சியை உண்டாக்க இருக்கிறீர்கள். அப்படிப் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்று சொன்னால்,

கல்விப் புரட்சிக்குக் காரணமாக இருப்பதற்கு கல்வியை மாநிலப் பட்டியலிலே கொண்டுவர வேண்டும். அதற்கு நமது தமிழக அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முயற்சி எடுத்தால் கட்டாயம் நடக்கும் என்பதை நான் இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பிலே தேர்ச்சி விகிதம், இடைநிற்றல் விகிதம் கொடுப்பார்கள், ஆண்டுக்காண்டு கொடுப்பார்கள். இந்த ஆண்டு இல்லை. ஏனென்று தெரியவில்லை. இருந்தாலும்கூட, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் இடைநிற்றல் அதிகமாகவும், தேர்ச்சி விகிதம் குறைவாகவும் இருக்கிறது. இப்படித் தேர்ச்சி விகிதம் குறைவாகவும், இடைநிற்றல் அதிகமாகவும் இருக்கிற பின்தங்கிய மாவட்டங்களைக் கண்டறிந்து அவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் படிப்பதற்கு அதிக எண்ணிக்கையில் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் துவங்க வாய்ப்பினை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல நம்முடைய பள்ளிகளிலே உடற்கல்வி ஆசிரியர்கள் நீண்டகாலமாக நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். 500 மாணவர்கள் என்று சொன்னால் குறைந்தபட்சம் இரண்டு உடற்கல்வி ஆசிரியர்களாவது இருக்க வேண்டும். இப்போது நாம் யோகா எல்லாம் சொல்லிக் கொடுக்கப் போகிறோம். யோகாவைப்பற்றி மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆசன ஆண்டியப்பனைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே யோகாவைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்களை எல்லாப் பள்ளிகளிலும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்திலே உள்ள நடுநிலைப் பள்ளிகளிலே உடற்கல்வி ஆசிரியர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அவர்களை நியமனம் செய்ய வேண்டும்.

இங்கே ஓவிய ஆசிரியர்கள், வேளாண் ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், கைத்தொழில் பயிற்றுநர்கள் என்று நிறைய பேர் இருக்கிறார்கள். ஏற்கெனவே வெளியிடப்பட்ட அரசாணை 35-லே ஒரு குளறுபடி. 90 பேருக்கான பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதைப்போல 1,100-க்கு மேற்பட்ட கைத்தொழில் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்ததாக, இடைநிலை ஆசிரியர் பணியிடங்களிலே பட்டதாரி ஆசிரியர்கள் நீண்டகாலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நியாயமான கோரிக்கை. பட்டதாரிகள், இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் இருப்பவர்களுக்கு மேலும் வாய்ப்பினை வழங்க வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மட்டுமல்ல, சிறுபான்மையினர் மற்றும் தனியார் பள்ளிகளிலேயும் அந்த நிலைமை இருக்கிறது. அதையும் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலோடு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தீர்வினை உண்டாக்கினார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் இதுவரையில் இல்லாத அளவிற்கு பதிவு மூப்பு அடிப்படையிலே நியமனம் என்ற நல்ல, மகத்தான அறிவிப்பைச் செய்து தொடர்ந்து நியமித்துக் கொண்டிருந்தீர்கள். இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் என்று சொல்கிறீர்கள். ஆகவே, அது கூடாது. மீண்டும் பதிவு மூப்பு அடிப்படையிலேயே நியமனம் செய்ய வேண்டும். 1 : 1, ஒரு வேலைக்கு ஒரு ஆளைத்தான் அனுப்ப வேண்டும். அதற்குமேல் அனுப்பக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, வணிகம், பொருளாதாரம், வரலாறு ஆகிய பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில் தமிழாசிரியர்கள் நியமனமே இல்லை. 3,800 தமிழாசிரியர்களை நியமிப்பதாகச் சொன்னீர்கள். நிலுவையிலே இருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நேற்றுக்கூட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு உரையை முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 12-45

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிடம், முடித்துவிடுகிறேன். உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கெல்லாம் பதவி உயர்வு வேண்டும்; வாகனம் கொடுக்கவேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்திலே பணியாளர்களை நியமனம் செய்யவேண்டியிருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் (உதவி பெறாத) பள்ளிக் கூடங்களுக்கு அரசு உதவியே இல்லை. அவர்கள் மாணவர்களிடம் கட்டணம் எதுவும் வசூலிப்பதும் இல்லை. அவர்கள் சுயமாகக் கல்விச் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமாதிரி தமிழ்நாட்டிலே செயல்படும் பள்ளிக் கூடங்கள், தென் மாவட்டங்களில் மட்டும் மொத்தம் 803 பள்ளிகள் இருக்கின்றன; 6 இலட்சம் குழந்தைகள் படிக்கின்றார்கள்; தேர்ச்சி விகிதம் 90%, 95%. இப்பொழுது பள்ளிகளை மூடவேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துகின்ற இந்த வேளையில், தயவுசெய்து அவர்களுக்கு நீங்கள் மானிய உதவியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இன்னும் ஆறு பேர் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** தலைவரே, இதோ முடித்துவிடுகிறேன். தனியார் பள்ளிகளில் பார்த்தீர்களென்றால், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டடங்கள் நிரம்ப அழகாகக் கட்டியிருக்கிறார்கள். கட்டணம் வசூலிப்பதில் கொள்ளைதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தனியார் பள்ளிகளை, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை அரசு நெறிமுறைப்படுத்தவேண்டும். அங்கே மாணவர்களுக்குக் கட்டணம் என்று சொன்னால், L.K.G., U.K.G., முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, எந்த வகுப்பாக இருந்தாலும், அரசாங்கம்தான் கட்டணத்தை நிர்ணயம் செய்யவேண்டும். அவர்களுடைய விருப்பத்திற்குக் கட்டணத்தை வசூல் செய்யக்கூடாது என்பதை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். கட்டாய நன்கொடை கூடாது. (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். ஆசிரியர்களைக் கல்வித் தகுதி அடிப்படையில் நியமனம் செய்யவேண்டும். அரசுப் பள்ளிகளிலே என்ன சம்பளமோ, அதே சம்பளம் வழங்கவேண்டும். இட ஒதுக்கீட்டு அடிப்படையிலே ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) Sorry, திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகர்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ், only 5 minutes are allotted for you. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** 682 நூலகர்கள், 1,498 ஊரக நூலகர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றே ஒன்று. நூலகர் 682, காது கேளாத உடல் ஊனமுற்றோர் இயலாக் குழந்தைகள் சிறப்பாசிரியர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பதால், தனியார் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையெல்லாம், நிறைவு செய்யவேண்டும். ஆசிரியர் தேர்வுத் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கும், நீங்கள் நல்ல சம்பளத்தை வழங்கவேண்டும் என்று கேட்டு, ஒட்டுமொத்தமாகத் தமிழக அரசு கல்வியிலே புரட்சி செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கல்வியிலே மிகப் பெரிய மாற்றத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்னங்க? எவ்வளவு நேரம்? கட்சித் தலைவர் என்று சொல்லி, இன்றைக்கு அதிகமான time கொடுத்திருப்பதே உங்களுக்குத்தான். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியிலே மிகப் பெரிய மாறுதல்களை, புரட்சியைச் செய்து கொண்டிருக்கிற தமிழக அரசைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டி அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ், உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி இந்தக் கல்வியாண்டு முதலே அமல்படுத்தப்படும் என அறிவித்த அறிவிப்புக்கும், பள்ளிகளில்

அனைத்து மாணவர்களுக்கும் அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்கள் சிறப்புக் கட்டணமாகச் செலுத்தி வந்ததை முற்றாக இரத்துச் செய்து அறிவித்த தமிழக அரசுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அத்துடன், திருவட்டாறு தொகுதியில் 120 ஆண்டு காலமாக இருந்த தோட்டவாரம் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தி உத்தரவிட்ட மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமச்சீர் கல்வியில் பரிந்துரைத்துள்ள ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் 1 : 30 என்ற பரிந்துரையை அமல்படுத்தி, தரமான, சிறந்த கல்வியைத் தமிழக மக்களுக்கு அளித்திடவும், கூடுதலாக 40,000 ஆசிரியர்களை நியமனம் செய்திட வேண்டுமென மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டில் 100 மேல்நிலைப் பள்ளிகள், 100 உயர்நிலைப் பள்ளிகளைத் தரமுயர்த்திட உத்தரவிட்டதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், இப்பள்ளிகளுக்கு முழுமையாக ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமெனவும், கடந்த 7 ஆண்டுகளாகத் தரமுயர்த்தப்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில், தமிழ் ஆசிரியர் பணியிடம் ஒதுக்கப்படாத நிலை உள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-50

தமிழ்நாட்டில் A.B.L. திட்டம் சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், 1:30 என்ற ஆசிரியர்-மாணவர் விகிதம் அமல்படுத்தப்பட்டு, ஆசிரியர் நியமனம் செய்தால்தான் சிறப்பாகக் கல்வி தர முடியும். A.B.L. அட்டை அனைத்து மொழிகளிலும் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, மலையாளம், தெலுங்கு, உருது போன்ற மொழிகளிலும், A.B.L. அட்டை வழங்கப்பட வேண்டும். ஈராசிரியர் பள்ளிகள், மூவாசிரியர் பள்ளிகளாக்கப்பட்டால்தான் A.B.L. திட்டத்தைச் சிறப்பான திட்டமாக்க முடியும்.

ஆசிரியர்கள் இல்லாமையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிகள் மூடப்படும் நிலை தவிர்க்கப்படவேண்டும்.



எடுத்துக்காட்டாக, திருவட்டாறில், பேரை அரசு துவக்கப் பள்ளி 1982 ஆம் ஆண்டு நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டும், இன்றும் துவக்கப் பள்ளியாகவே செயல்படுகிறது. 120-க்கும் மேலான மாணவர்களைக் கொண்ட அந்தப் பள்ளியில் ஒரே ஒரு ஆசிரியரும், ஒரு தலைமையாசிரியரும் மட்டுமே இருப்பது கவலைக்குரிய விஷயமாக இருக்கின்றது என்பதை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகின்றேன். புதிய ஆரம்பப் பள்ளிகள், தேவைப்படும் இடங்களில் திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே துவக்கப்பட்ட மலைப் பகுதி பள்ளிகளுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டுகிறேன். அத்துடன், மனித உரிமைக் கல்வியை அனைத்துப் பள்ளிகளிலும் அரசே நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் மட்டும் தற்போது தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படுகின்றன. இவற்றை அரசே ஏற்று நடத்திட வேண்டும்.

பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது பாராட்டத்தக்கதாகும். அதேநேரத்தில், உயர்நிலை, மேல்நிலை, நடுநிலைப் பள்ளிகளில், மாணவிகளுக்குக் கூடுதலாக கழிப்பறை வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

மரத்தடியில் கல்வி கற்பது மாற்றப்பட வேண்டும். அனைத்துப் பள்ளிகளுக்கும் S.S.A. திட்டம் மற்றும் நபார்டு திட்டம்மூலம் கட்டப்படும் கட்டடங்கள் உட்பட, சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். S.S.A. திட்ட இயக்குநர் கோரியுள்ள ஒரு இலட்சத்து 24 ஆயிரம் மீட்டர் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

புற்றீசல்கள்போல் பெருகி வரும் தனியார் ஆசிரியர் பள்ளிகளை அரசு 5 ஆண்டுகளுக்குத் தடை செய்ய வேண்டும். ஏற்கெனவே தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் தேர்வு எழுதிய மாணவர்களின் சான்றிதழ்களை அரசு அங்கீகரிக்க வேண்டுகிறேன். வேலைவாய்ப்பு அலுவலங்களில் பதிவு செய்துள்ள அனைவருக்கும் வேலை கிடைக்கச் செய்ய வேண்டும்.

சிறுபான்மை மொழிகளான மலையாளம், உருது, தெலுங்கு படித்தவர்களுக்கும் வேலை கிடைக்கச் செய்திடவேண்டும். சென்னையில் செயல்பட்டுவரும் உருது இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு ஆசிரியர் நியமனம் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோட்டில், நிறுத்தப்பட்ட மலையாள இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் துவக்கி நடத்திட வேண்டும். முறைகேடுகள் செய்துள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கன்னியாகுமரி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 35 வயது கடந்த ஆசிரியர் பயிற்சி முடித்த சுமார் 3 ஆயிரம் பேரை சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் வேலை நியமனம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன். தமிழ்நாட்டில், Home Science . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (பொருளாதாரம்) படித்தவர்களுக்கு வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் 1985-ல் தரம் உயர்த்தப் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து நூலகங்களுக்கும், குறிப்பாக அனைத்து தாலுகா அலுவலகங்களிலும் உள்ள நூலகங்களைத் தரம் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்திலுள்ள அனைத்துப் பழுதடைந்த நூலகங்கள் மற்றும் வாடகைக் கட்டட நூலகங்களுக்கு புதிய நவீன கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். குறிப்பாக, அனைத்து தாலுகா அளவிலும் கண்டிப்பாக மகளிர் கிளை நூலகங்கள் திறக்கப்பட வேண்டும். கடந்த 8 ஆண்டுகளாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமப்புற நூலகங்கள் எதுவும் தரம் உயர்த்தப்படவில்லை. ஆகவே, குலசேகரம், அருமனை, குழித்துறை, மேல்பாலை, விளாத்துறை, பைங்குளம் போன்ற இடங்களில் உள்ள நூலகங்களைக் கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்த வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் நடமாடும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். தமிழகத்திலுள்ள அனைத்து, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழிற் கல்வி ஆசிரியர்கள், கலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி. (குறுக்கீடு) திரு. இராமசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திருமதி ரா. லீமா றோஸ்:** இட மாறுதலில் counseling முறையில், ஏஜென்டுகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திரு. இராமசாமியைப் பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் சொன்னால் என்ன செய்யமுடியும், நேரம் வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) உங்களுக்குள்ளே என்ன கூட்டணியா? உங்களைப் பேசச் சொன்னால் பேசவேண்டியதுதானே? திரு. இராமசாமி, 5 நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12-55

*திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துகளைக் கூற அனுமதியளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைக்குச் செல்வதற்கு முன்னால் 1-4-2008 'தினமணி' பத்திரிகையில் வந்துள்ள ஒரு செய்தியைச் சொல்கிறேன். "தமிழக அரசின் துறைகளிலேயே துடிப்பாகவும் முனைப்பாகவும் இயங்கும் துறை என்கிற நல்ல பெயர் பள்ளிக் கல்வித் துறைக்கு உண்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மிகக் குறுகிய காலகட்டத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டிருக்கும் பள்ளிக் கல்வித் துறையின் சாதனைப் பட்டியல் அதிகம். எனவே, சாதனைப் பட்டியல்களைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால் சிலவற்றைச் சொல்கிறேன். இன்றைக்குப் பல்வேறு முறைகளில் சமச்சீர் கல்வி, அதேபோல, ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவது, பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை அதிகப்படுத்துவது, அனைவரையும் கல்வி கற்க வைப்பதற்கான முயற்சியை எடுப்பது போன்றவை குறித்துக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, சமச்சீர் கல்வி என்பது அவசியம். ஆனால், அதேசமயத்தில் வகுப்புக்கு ஓர் ஆசிரியர், 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், தாய் மொழியில் கல்வி, போதுமான வகுப்பறை, குடிநீர், கழிப்பிடம், விளையாட்டு வசதி போன்ற

வசதிகளை மேம்படுத்த வேண்டும். ஆசிரியர்களுக்கு சமச்சீர் கல்விக்குத் தேவையான பயிற்சியைக் கொடுக்க வேண்டும். முறையான பாடத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அந்தக் கல்வி முறை நல்லவிதத்தில் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு குழு ஒன்றை அமைக்க வேண்டும். கிராமப்புறப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு ஏற்ப தனியார் பள்ளிகளுக்கு நிகராக, அரசுப் பள்ளிகளிலேயே ஆண்டு விழாக்கள், விளையாட்டு விழாக்கள் எல்லாம் சிறப்பாக நடத்தப்பட்டு அரசுப் பள்ளிகளும் மாணவர்களை, மக்களை ஈர்க்கக்கூடிய முறையில், சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

அதேபோல, இடைநிலை ஆசிரியர்களை 1:25 என்ற சதவிகிதத்தில் நியமனம் செய்வதற்கு முன்னால் மாநில அளவிலான முன்னுரிமை என்பது இன்றைக்கு வழங்கப்படவில்லை. மாநில அளவு முன்னுரிமை இடைநிலை ஆசிரியர் நியமனத்தில் வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கப்படாத காரணத்தால் தென் மாவட்ட இடைநிலை ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, பத்து ஆண்டுகளுக்கு மேல் தொடங்கி நடத்தப்படுகின்ற சில தனியார் பள்ளிகள் எந்தவிதமான அரசு உதவியும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு அரசின் உதவி வழங்கப்பட வேண்டும்.

இப்போது சில ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மாநில அரசு அனுமதி பெறாமலேயே நடத்தப்பட்டு வருகின்றன. கேட்டால் மத்திய அரசின் அனுமதி என்று சொல்கிறார்கள். எனவே, மாநில அரசின் அனுமதி இல்லாமல் நடத்தப்படுகின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும். அளவுக்கு அதிகமாக, அனுமதிக்கப்பட்டதற்கும் அதிகமாக மாணவர்களைச் சேர்த்து பரீட்சை எழுத முடியாமல் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழகத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, பரீட்சை எழுத முடியாத மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். காலியாகவுள்ள உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். தொழிற்கல்வி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கு அரசாணை எண் 115-ன்படி உத்தரவு போட்டும், இன்னும் பள்ளிகளுக்கு அந்த அனுமதி வழங்கப்படவில்லை. அதேபோல, தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்பது வழங்கப்பட வேண்டும்.



எல்லாவற்றிற்கும் மேலாக, கடந்தகால கலைஞருடைய ஆ சியில் கிராமப்புற மாணவர்கள் மருத்துவம், பொறியியல் படிப்பதற்கு 15 சதவிகித இட ஒதுக்கீடு என்பது இருந்தது. அதற்குப் பின்னால் வந்த ஆட்சி அந்த 15 சதவிகிதத்தை 25 சதவிகிதமாக மாற்றுகிறோம் என்று சொல்லி, அதை மாற்றி கடைசியில் கோர்ட்டுக்குச் சென்று அந்த வழக்கு நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட கிராமப்புற பள்ளிகளை அரசுப் பள்ளிகளாகத் தேர்வு செய்து அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையில், அந்தப் பள்ளிகளில் சேர வேண்டுமென்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** எண்ணத்தை அதிகப்படுத்துகின்ற முறையில், கிராமப்புற மாணவர்கள் மருத்துவம், பொறியியல் படிப்பதற்கான முறையில் அந்த இட ஒதுக்கீட்டைக் கொண்டு வர வேண்டும். தாய்மொழியில் கல்வி கற்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை மட்டுமல்ல, அவர்கள் படிக்கும்போதே அனைத்து வகையான உதவிகளையும் செய்து, அவர்களை முன்னேற்ற வேண்டும். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் ஒரு hostel என்ற அடிப்படையில், மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியே தொடங்கப்பட வேண்டும். கல்வி மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்காக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கும், மக்கள் தலைவர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"Upon the education of the people of this country, the fate of this country depends." இந்நாட்டின் தலைவிதி இந்நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் கல்வியைச் சார்ந்துள்ளது என்றார் முன்னாள் இங்கிலாந்து பிரதமர்

பெஞ்சமின் திஸ்ரேலி. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், மக்களுக்கு நல்ல கல்வி கிடைக்கவேண்டும். நல்ல மக்களாக ஒவ்வொருவரும் ஆவதற்கு கல்விதான் அடித்தளம். எல்லாக் காலத்திலும் கல்விதான் முக்கியப் பங்காற்றியுள்ளது. ஆகையால்தான், "கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல்" என்றார் பிளேட்டோ.

பள்ளிகளில் அடிப்படை வசதிகளை, குறிப்பாக மாணவிகளுக்கு சுத்தமான கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பழுதடைந்துள்ள அரசுப் பள்ளிக் கட்டடங்களை உடனடியாகச் சீர்செய்து விபத்துகளைத் தவிர்க்க வேண்டும். போதிய குடிநீர் வசதியின்றி உள்ள பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி செய்துதர வேண்டும். பள்ளிகளுக்கு மின் கட்டணம் கட்டும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். பள்ளிகளில் career guidance-மேற்படிப்பு தகவல் மற்றும் விழிப்புணர்வு வழங்க நடவடிக்கைகள் தேவை. பள்ளிக் கல்வியில் அறிவியல் துறைக்கு முக்கியத்துவம் தரவேண்டும். கொரியா நாட்டில் அறிவியல் துறையில் நல்ல கவனம் செலுத்துவதால், ஆயிரத்திற்கு 43 பேர் விஞ்ஞானிகளாக உள்ளனர். ஆனால், நம் நாட்டில் ஆயிரத்திற்கு 3 பேர்தான் உள்ளனர். இந்த நிலை மாற பள்ளிக் கல்வியில் அறிவியல் பாடங்களில் சிறப்புக் கவனம் தேவை.

சுற்றுப்புறச்சூழல், போக்குவரத்து விதிகள், தீயணைப்பு, முதலுதவி போன்றவை பள்ளிகளில் கற்றுத் தரவேண்டும். இசை மனதை செம்மைப்படுத்தக்கூடியது என்பதால், ஜெர்மெனி போன்ற ஐரோப்பிய நாடுகளில், இசை கட்டாயப் பாடமாக உள்ளது. நமது பள்ளிகளிலும் இசையைக் கற்பிக்க வேண்டும். கல்விக் கடனுக்கான வங்கி வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டும். கல்விக் கடன் பெற, பள்ளிகளில் கல்விக் கடன் ஆலோசனை மையம் அமைத்து, பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவ வழி செய்ய வேண்டும்.

ஆசிரியர் யாரெனக் கேட்டால், ஆசு+இரியர் எனப் பிரித்து, குற்றத்தைக் களைபவர் என்கின்றனர். ஆசிரியர் பயிற்சியை மேம்படுத்த வேண்டும். ஆசிரியர் மாணவர் விகிதம் 1:30 என்று ஆக்கிடவேண்டும். 1999 ஆம் ஆண்டு முதல், இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்ப உள்ள தடையாணையை நீக்க வேண்டும். தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குப் புதிதாக ஓவிய



ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள்மூலமாக ஆசிரியர்கள் நியமிப்பதைத் தவிர்த்து, வேலைவாய்ப்பு அலுவலகம் அல்லது T.R.B. மூலம் நியமனம் செய்ய வேண்டும். விவசாய ஆசிரியர் பணி நியமனத் தடையை நீக்க வேண்டும். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, English is a musical language. So, reading skill in English should be given paramount importance. மாணவர்களுக்கு சரளமாக ஆங்கிலம் பேச பயிற்சி தர வேண்டும்.

தொகுதி கோரிக்கை. எனது தொகுதியில், வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் பனையடிப்பட்டி என்ற கிராமம் உள்ளது. அது எனது கிராமம். அந்தக் கிராமத்திலே 1956 ஆம் ஆண்டு, நடுநிலைப் பள்ளியொன்று தொடங்கப்பட்டது. அன்று அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்குக்கூட, எங்கள் குடும்பம்தான் போதிய இடத்தைத் தந்துதவியது. இன்று அந்தப் பகுதி மக்கள், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த முறைப்படி கோரிக்கை வைத்துள்ளனர். அரசு அதைப் பரிவுடன் பரிசீலித்து, தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருத்தங்கல் அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியில், மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி வேண்டி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இக்கோரிக்கையையும் பரிசீலிக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசுப் பள்ளிகளின் தரத்தையும், மதிப்பையும் மேம்படுத்த வேண்டும். நகர்ப்புறங்களில், மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்தான் அரசுப் பள்ளிகளுக்குச் செல்கின்றனர். அரசுப் பள்ளிகளின்மீது மக்களுக்கு மதிப்பும், நம்பிக்கையும் ஏற்பட வேண்டும். ஃபிரான்ஸ் நாட்டில் அரசுப் பள்ளிகளில் சேர்வதற்குத்தான் கடும் போட்டி உள்ளது. Lycees என்னும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் படித்து முடித்த மாணவர்கள்தான், அரசு நடத்தும் Grand Ecoles என்னும் உயர்நிலைப் பள்ளிகளில் சேர இயலும். உயர் சமூக அல்லது பொருளாதார அந்தஸ்தை வைத்து, அரசுப் பள்ளிகளில் சேர இயலாது. அரசுப் பள்ளிகளில் படித்து முடித்து வெளிவரும் அனைத்து மாணவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பை வழங்குகிறது.

பிற்பகல் 1-05

தனியார் கல்வி நிறுவனங்களில் பயின்றவர்களைவிட அரசுக் கல்வி நிறுவனங்களில் பயின்றவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமையும் சம்பளமும் அதிகம் தரப்படுகிறது. தமிழக அரசும் அதேபோல பள்ளிகளை உயர்த்த இலக்கு நிர்ணயிக்க வேண்டும்.

பெண்களுக்கு கல்வி அளிப்பது மிக முக்கியமானது. எனவே, பெண் குழந்தைகள் கல்வி பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பள்ளி சேர்க்கையை அதிகமாக்கி, இடைநிற்றல் தவிர்க்கப்பட வேண்டும். மதிய உணவுத் திட்டத்தில் மேலும் சத்துள்ள உணவுப் பொருட்களை வழங்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் 'Global School Feeding Report of the United Nations World Food Programme' எனும் அறிக்கை மதிய உணவு வழங்குவதால் பள்ளிச் சேர்க்கை அதிகமாவது மட்டுமின்றி, கல்வி வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்படுகிறது என்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** உலகில் முதன்முதலில் ஜப்பானில்தான், 19 ஆம் நூற்றாண்டில் பள்ளிகளில் மதிய உணவு கொடுக்கப்பட்டது. பிரேசில் நாட்டில் 1938, அமெரிக்காவில் 1946-ல் கொடுக்கப்பட்டது. இந்நாடுகள் நம்மைவிட எழுத்தறிவில் முந்தியுள்ள நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வியினுடைய பொற்காலம் என்று பாராட்டத்தக்க அளவிலே இந்தப் பள்ளிக் கல்வித் துறையை மிகச் சிறப்பாக நிருவகித்து வருகின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நாங்கள் மனமாரப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

செயல்வழிக் கற்றல், படைப்பாற்றல் கற்றல் முறை என்கின்ற இரண்டு புதிய முறைகளைப் பயன்படுத்தி, ஏழையெளிய மக்கள் எல்லாம் மிகச் சிறப்பான கல்வியைப் பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக



இருந்து இந்த முறைகளை மிகச் சிறப்பாக தமிழ்நாட்டிலே செயல்படுத்தி வருகின்ற அனைவருக்கும் கல்வி திட்டத்தினுடைய இயக்குநர் மரியாதைக்குரிய திரு. விஜயகுமார், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் திட்டங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற காரணத்தினாலே, இந்த இரண்டு அணுகுமுறைகளையும் 5 ஆம் வகுப்புக்கும் 9, 10 ஆம் வகுப்புகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டுகின்றேன். அதுமட்டுமல்லாமல் இந்த செயல்வழிக் கற்றல் முறையிலே முதியோருக்கும் கல்வியைக் கொடுக்கலாமா என்கின்ற ஒரு Pilot Project-ஐ என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற குமராட்சி வட்டத்திலே, 20 வளர் கல்வி மையங்களிலே இப்பொழுது பரிசோதனை முயற்சியாக மேற்கொண்டிருக்கிறார்கள். அது மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற காரணத்தினாலே தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற வளர் கல்வி மையங்களிலே இருக்கின்ற முதியோருக்கும் இந்தச் செயல் வழிக் கற்றல் முறையிலே கல்வி புகட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பள்ளிக் கல்வித் துறையிலே, குறிப்பாக, இந்தச் செயல் வழிக் கற்றல், படைப்பாற்றல் கற்றல் முறையிலே செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி பரிந்துரை செய்வதற்காக டாக்டர் வசந்தி தேவி தலைமையிலே அமைக்கப்பட்ட குழு சில பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றது. அந்தப் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த முறைகளின்மூலமாக பள்ளிக் கல்வியானது மிகச் சிறப்பாக மேம்படுத்தப்படுகின்ற நேரத்திலே, அதற்கு உதவியாக, பாட நூல்களினுடைய தரத்தை நாம் மேம்படுத்தியாக வேண்டும். அதுபோலவே, இவற்றைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களினுடைய தரத்தையும் நாம் மேம்படுத்தியாக வேண்டும். ஆசிரியர்களுடைய தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நாம் வரன்முறை செய்தாக வேண்டும். இந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு பிற மாநிலங்களில் இருப்பதுபோல, State Council of Educational, Research and Training - SCERT என்கிற அமைப்பு மிக, மிக அவசியம். இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட நிலையிலே தமிழகத்திலும் அந்த அமைப்பை ஏற்படுத்தி கல்வியை இன்னும்

சிறப்பான முறையிலே கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, மொழிச் சிறுபான்மையினருக்காக அரபிக் பள்ளிகள், கன்னடப் பள்ளிகள், தெலுங்குப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பள்ளிகளிலே போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலையிருக்கிறது. அந்த மொழிச் சிறுபான்மையினர் பள்ளிகளிலும் போதிய ஆசிரியர்களை நியமித்து, கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு பரிவோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பெண் கல்வியை மேம்படுத்துவதற்குப் பள்ளிகளிலே கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று பல்வேறு குழுக்கள் அறிக்கைகளிலே குறிப்பிட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை ஒரு முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக்கொண்டு, குறிப்பாக பெண்கள் பள்ளிகளிலும், ஆண், பெண், இருபாலாரும் சேர்ந்து படிக்கின்ற பள்ளிகளிலும் இருக்கின்ற கழிப்பறை வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-10

+2 பாடப் பிரிவுகளிலே இடஒதுக்கீட்டை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க சுற்றறிக்கை. அதைச் சிறப்பான முறையிலே செயல்படுத்திட உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட காலமாக தொகுப்பூதியம் பெற்று பணியாற்றி வருகின்ற தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கும், கல்வித் துறையிலே பொறியாளர்களாகப் பணியாற்றி இதுவரை பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்ற ஊழியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கி, பணி நிரந்தரம் செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அனைவருக்கும் கல்வித் திட்டத்தினுடைய முழுமையான பலன்கள் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குச் சென்று சேரமுடியாத ஒரு நிலை இன்றைக்கு இருக்கிறது. இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறையினரும், ஆதி திராவிடர் நலத் துறையினரும் சேர்ந்து



பேசி, அந்த பலன்களை முழுமையாக ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் பெறும் வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டே நாங்கள் கோரிக்கை விடுத்தோம். ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறையினுடைய மேற்பார்வையின்கீழ் (Monitoring) கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம். அந்தக் கோரிக்கை குறித்தும் இரு துறையினரும் சேர்ந்து பேசி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்க்கொள்கிறேன்.

தாய்த் தமிழ் பள்ளிகள் என்று சொல்லி, இன்றைக்குத் தமிழ் ஆர்வலர்கள் பல பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பள்ளிகளுக்கு அரசு உதவி வழங்குவதோடு, அவற்றுக்கும் செயல்வழிக் கற்றல் மற்றும் படைப்பாற்றல் கல்வி முறைக்கான உபகரணங்களை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இருக்கின்ற வல்லத்துறை, குமராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கான விளையாட்டு இடங்களையும், சுற்றுச் சுவர்களையும் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மங்களூர் தொகுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், அதோடு முடித்துக்கொள்ளுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. செல்வராஜ். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், இவ்வளவு நேரம் பேசியாகிவிட்டதல்லவா?

**திரு. து. செல்வராஜ்:** வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்பேரவையின் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாயகனாய் வீற்றிருக்கும் பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கையின்மீது (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசுவதற்குக் காரணமாக விளங்கும் இந்தியத் திருநாட்டை வழி நடத்தும் அன்னை, பதவிமேல் பற்று வைக்காத பண்பின் இலக்கணம், (மேசையைத் தட்டும் ஒலி) சோகத்தையே வாழ்வில் சுமந்த சுடரொளி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மகத்தான தலைவி, ஒப்புயர்வற்ற நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை தந்தையாகவும், வழிகாட்டியாகவும் நேசிக்கும் இந்தியாவின் ஒரே தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளம் தலைவர் திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும்,

(மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைகளின், சாதாரண மக்களின் பட்ஜெட் இது என்று அனைவராலும் பாராட்டப்பெறும் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையை மிக அற்புதமாகத் தயாரித்த முத்தமிழ் அறிஞர், உலக தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவர், வாழும் வள்ளுவர், குறளோவியப் பெருந்தகை, சமத்துவப் பெரியார், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றுக்கும் மேலாக நன்கு சிந்தித்து செயலாற்றக்கூடிய தகுதி வாய்ந்த, தங்க குணம் படைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அதற்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது மக்களின் கல்வி முன்னேற்றம்தான். கல்வித் துறைக்கு விதைக்கப்படும் பணத்தினால், பின்னாளில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் மேன்மையான அறுவடையாகப் பெற முடியும் என்பதை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அறிந்து இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமான தொகையை கல்வித் துறைக்கு ஒதுக்கியுள்ளார்கள்.

எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற உறுதியான அடிப்படையில் இலவச பாட நூல்கள், சீருடைகள், மிதிவண்டி, மதிய உணவுடன் வாரத்திற்கு மூன்று முட்டைகள், அரசு பேருந்துகளில் இலவசமாக மற்றும் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்தல் முதலிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஆதாரங்கள் ஆகியவை இந்த அரசு ஏழைகளையும், பின்தங்கிய மக்களையும் நினைத்துப் பார்க்கிற, அவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென்ற முனைப்புடன் செயல்படுகிற அரசு என்பதைக் காட்டுகிறது. இவ்வாறான சலுகைகளால் மாணவர்களின் இடைநீக்க விகிதாச்சாரம் வெகுவாகக் குறைந்துள்ளது. இனிமேல் மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு ஒன்றும் இல்லையெனும் அளவிற்கு அதிகமான சலுகைகளை இந்த நிதிநிலை அறிக்கை சுமந்து நிற்கிறது.



இந்த நிதியாண்டிலும், 100 நடுநிலைப்
கடந்த ஆண்டைப்போலவே, 100 உயர்நிலைப்
பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்,
பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தும் திட்டம்,
பெருகிவரும் கல்வி வளர்ச்சிக்கேற்ற அருமையான நடவடிக்கையாகும்.

தற்பொழுது பல பள்ளிக்கூட கட்டடங்கள் மிகப் பழமையாக
இருப்பதால், அவற்றை மாற்றி புதிதாகக் கட்டடங்களைக் கட்டுவது
அவசியம் என்பதை உணர்ந்த அரசு, 450 உயர்நிலை மற்றும்
மேல்நிலைப் பள்ளிகளில் புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு ரூ.312
கோடியை நபார்டு வங்கியில் கடனாகப் பெறுவதுடன், அரசு
பங்களிப்பாக 150 கோடி ரூபாய் வழங்கும் அறிவிப்பு, கல்வி
ஆர்வலர்கள் வரவேற்கும் ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

மேலும், பல பள்ளிக்கூடங்கள் சுற்றுச்சுவர் இல்லாமல் சமூக
விரோதிகள் சங்கமிக்கும் இடமாக விளங்குகின்றன. எனவே,
சுற்றுச்சுவர் இல்லாத அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர்
அமைப்பதற்கும் இந்த நிதியாதாரத்தைப் பயன்படுத்த வகைசெய்ய
வேண்டும். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவிகளின்
கணிதத் திறனை மேம்படுத்தும்வண்ணம், வரும் கல்வியாண்டில்,
மாநிலத்தில் உள்ள 100 பள்ளிகளில், கணித ஆய்வகங்கள்
அமைக்கப்படும் என்ற அறிவிப்பு—100 மேல்நிலை-உயர்நிலைப்
பள்ளிகளுக்கு, ஆய்வக சாதனங்கள் மற்றும் அறிவியல் சாதனங்கள்
வழங்குவதுடன், 500 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி
உதவியுடனான மொழி ஆய்வகங்களும், 100 உயர்நிலை மற்றும்
மேல்நிலைப் பள்ளிகளுக்கு, நூலக வசதி ஏற்படுத்துதல் போன்ற
அறிவிப்புகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நிலையில்
தமிழகத்தில் அறிமுகப்படுத்துவது உண்மையிலேயே மெய்சிலிர்க்க
வைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காலத்திற்கேற்ற கல்வி வளர்ச்சி
ஏற்பட இது வழிவகை செய்கிறது.

இதேபோன்று உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும்,
2,200 உள்ளாட்சி நடுநிலைப் பள்ளிகளுக்கும், கணினி வழங்கப்படும்
என்று அரசு அறிவித்திருப்பது தமிழகம் அறிவியலில் உயர்ந்த
சிகரத்தைத் தொடுவதற்கான முயற்சி என்பதை பாமரர்களும் அறிந்து
பாராட்டுகின்றனர்.

பள்ளிகளுக்கு கணினி ஆசிரியர்கள் விரைவில்
நியமிக்கப்படுவார்கள் என்ற அரசின் அறிவிப்பு மகிழ்ச்சியைத்

தருகிறது. அதுமட்டுமல்ல, தமிழ்வழிக் கல்வி பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதன்மையாக வரும் ஆயிரம் மாணவ, மாணவிகளுக்குப் பரிசாக, இந்த ஆண்டுமுதல் கணினி வழங்கப்படும் என்ற அறிவிப்பு, கல்வியில் மாணவர்களுக்கிடையில் போட்டியை வளர்த்து, இளம் வயதில் கணினிப் பயிற்சி பெற அடித்தளமாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்த சான்றோர் பலர் விரும்பினர். சமச்சீர் கல்வியின் அவசியத்தை உணர்ந்த கலைஞர் அரசு, அதை செயல்படுத்திட உறுதிபூண்டுள்ளது. இதற்கான பாடத் திட்டங்கள், கல்வி முறைகள், பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட பணிகள் வரும் கல்வியாண்டிலேயே மேற்கொள்ளப்படும் என்ற அரசின் அறிவிப்பு ஒரு மாபெரும் கல்விப் புரட்சியாகும். வருங்காலங்களில் இந்தியாவில் முதன்முதலாக சமச்சீர்க் கல்வியை அறிமுகப்படுத்தியது யார் என்ற கேள்விக்கு விடை எழுதப்போகும் மாணவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்ற பதிலைத்தான் விடைத்தாட்களில் விதைக்கப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் எவ்வாறு படிக்காத மேதை, கல்விக் கண் திறந்த கறுப்பு வைரம், மதிய உணவுத் திட்டத்தின் பிதா மகன், குலக் கல்வித் திட்டத்தை வேரோடு சாய்த்த விஞ்ஞானி, பாமரர்களின் தேன் ஊற்று, தான் கல்வி கற்கவில்லையென்றாலும், தமிழக மக்கள் கல்வியில் உயர வேண்டுமென்பதற்காக, தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தன் ஆட்சிக் காலத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி இருளை அகற்றுவதற்காக, 40 ஆயிரம் கல்விக்கூடங்களை நிறுவி புரட்சி செய்தார்களோ, அதேபோன்று தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் கல்வி முறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்து புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். கடந்த ஆட்சியாளர்களால் கண்டுகொள்ளப்படாமல் காலியாக இருந்த 21,574 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியதுடன், புதியதாக 7,979 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் ஆசிரியர்கள் மகிழ்ச்சியான, அமைதியான சூழலில் பணியாற்றி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைகள் நிறைந்த எனது திருவைகுண்டம் தொகுதி, விவசாயிகள் நிறைந்த பூமியாகும். நீர் ஆதாரத்தை மட்டுமே நம்பி மக்கள் உள்ளனர். மழைக் காலங்களில் பெருமளவு தண்ணீர் கடலில் சென்று கலந்து வீணாகிறது.



தாமிரபரணியின் விலை மதிக்க முடியாத தண்ணீர் முத்துகள் வீணாவதைக்கண்டு, விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். எனவே, அங்குள்ள குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கராயன்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியை, இந்த ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி உதவ வேண்டுகிறேன். முடிவைத்தானேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் திருவைகுண்டம் அரசு பெண்கள் பள்ளியில் கணித ஆசிரியர்களை நியமிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ், உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த, எங்கள் குலதெய்வம், தமிழக மக்களின் காவல் தெய்வம், தமிழகத்தின் வருங்கால முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் உரையாற்றிட வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நீதிக் காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, அதிக நிதியை ஒதுக்கி, தனிக் கவனம் செலுத்தியதால் கல்வித் துறை பொற்காலமாகத் திகழ்ந்தது. கல்வி வளர்ச்சி மேம்படவும், மாணவர்கள் நலனில் அக்கறை காட்டியும் சிறப்பாக ஆட்சி செய்தவர் எங்களின் அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-20

ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியும், ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகம் வழங்கியும், பள்ளிக் கட்டணச் சலுகை வழங்கியும், பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்றுவர இலவசப் பேருந்து அனுமதி வழங்கியும், நன்றாகப் படிக்கும் மாணவர்கள் மேல் படிப்பைத் தொடர உதவித் தொகை வழங்கியும், கல்வித் துறைக்கென்று முதலிடம் கொடுத்து, பொற்கால ஆட்சி நடத்தி இந்தியாவிற்கே கல்வித் துறையில் வழிகாட்டியாக இருந்து ஆட்சி

புரிந்தவர் எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சென்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை வைத்தேன், ஆனால் ஒன்றுகூட இதுவரை நிறைவேறவில்லை. மீண்டும் இந்த அவையிலே நான் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

சோழபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளுக்கு என்று தனியாக கழிப்பிட வசதி செய்து தர வேண்டும். துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங்களில் செயல்படுமாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக, என் ஊரான ராஜகிரியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி இதுவரை வாடகைக் கட்டடத்தில் நடைபெற்று வருகிறது. காலியாக உள்ள இடங்களில் உடனடியாக ஆசிரியர்களை பணி நியமனம் செய்து மாணவர்களுக்குக் கல்வி கற்றுத் தர வேண்டும்.

ஒரத்தநாடு தொகுதியில் உள்ள பொறந்தராயன் குடிகாடு அரசு மேல்நிலைப் பள்ளியில் இரண்டு வருடமாக கணித ஆசிரியர் இல்லாமல் பணியிடம் காலியாக உள்ளது. அதனால், கணிதப் பாடத்தில் தேர்ச்சி விகிதம் மிகவும் குறைந்துவிட்டது. உடனே கணித ஆசிரியரை நியமனம் செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளுக்கும், 1 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இலவசப் பேருந்து சலுகை, அரசுத் தேர்வுக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால், இலவச சைக்கிள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. என் ஊரான ராஜகிரியில் உள்ள ஹிதாயுத்துரன் நிஸ்வான் மேல்நிலைப் பள்ளியில் ஏழையெளிய முஸ்லிம் மாணவிகள் படிக்கின்றார்கள். அவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கப்படவில்லை. எனவே, அவர்களுக்கும் இலவச சைக்கிள் வழங்கப்பட வேண்டும். எனது தொகுதியில் நூல் நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும்.

விவசாயம் சம்பந்தப்பட்ட வேளாண்மைக் கல்லூரி அல்லது விவசாய ஆராய்ச்சிக் கல்லூரி நிறுவிட வேண்டும். அரசு



தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும். பெண்களின் முன்னேற்றம் கருதி கயிறு தொழிற்சாலை அமைக்க வேண்டும். ஏழையெளிய கூலித் தொழிலாளர்கள், விவசாயிகளின் நலன் கருதி குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் நலன் கருதி, முஸ்லிம் மக்கள், கிறிஸ்துவர்கள், நலிவடைந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் நலன் கருதி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ள, அரசால் கட்டித் தரப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளன. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துத் தர வேண்டும். 30 ஆண்டுகளுக்கு முன்பு அரசால் கட்டித் தரப்பட்ட இலவச தொகுப்பு வீடுகளை முழுவதுமாக அகற்றிவிட்டு, புது வீடுகள் கட்டித் தர வேண்டும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், உள்நாட்டு மீனவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும். பழுதடைந்த பழைய பேருந்துகளை அகற்றிவிட்டு, புதிய பேருந்துகளை இயக்கி உதவிட வேண்டுகிறேன்.

இடைநிலை ஆசிரியர், அதாவது, D.T.E. தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவிகள், ஓராண்டுக் காலம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அப்படித் தேர்ச்சி பெறாதவர்கள் உடனே தேர்வு எழுதுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருவாரூரைச் சேர்ந்த ம. சொக்கலிங்கம் என்பவர், வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வரும்போது, 27-9-1995-ல் இறந்துவிட்டார். அன்றைய காலகட்டத்தில், இவருடைய மகன் நந்தகுமார், வயது 5, தாய் படிக்காதவர். எனவே, கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் செய்யவில்லை. தற்போது இவருடைய மகன் 12 ஆம் வகுப்பு படித்துள்ளார். அரசு அறிவித்த விளம்பரத்தினைப் பார்த்து பணி வேண்டி விண்ணப்பித்துள்ளார். ஆனால், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறிப்பிட்ட காலத்தில் விண்ணப்பிக்காததனால், கருணை அடிப்படையில் பணி வழங்க இயலாது எனக் கூறியுள்ளனர். எனவே, வறுமையில் வாடிவரும் இறந்த சொக்கலிங்கம் மகன் நந்தகுமாருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க வேண்டும். வரும் காலங்களில் இதுபோன்ற நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பாபநாசம் தொகுதியில் முஸ்லிம் மக்கள், வியாபாரிகள் அதிகம் உள்ளதால், அய்யம்பேட்டையிலிருந்து பாபநாசம்-கும்பகோணம்-விக்ரவாண்டி வழியாக சென்னைக்கு Ultra Deluxe விரைவுப் பேருந்து விட வேண்டும். தஞ்சையில் இருந்து கும்பகோணம்-விக்ரவாண்டி வழியாக சென்னைக்கு ஏ.சி. பஸ் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பு V.I.P. Seats 4-ஆக இருந்தது. இப்போது இரண்டாகக் குறைத்துவிட்டார்கள். ஆதலால், பிரச்சினை அதிகமாக உருவாகிறது. மீண்டும் 4 V.I.P. Seats ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசத்திற்கு புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கபிஸ்தலம் காவல் நிலையம், பழுதடைந்த பாபநாசம் காவல் நிலையம் ஆகியவற்றை புதியதாகக் கட்டித் தர வேண்டும்.

இருப்பிட மருத்துவர்களை நியமனம் செய்யாத காரணத்தாலும், இருப்பிடங்கள் இல்லாததாலும், பிரசவம் பார்க்கவரும் பெண்களுக்கும், விபத்து காரணமாக வருகின்றவர்களுக்கும் உடனே மருத்துவர்கள் சிகிச்சை தர முடிவதில்லை. ஆகவே, அரசே வீடு கட்டித் தந்து, பெண் மருத்துவர்களை நியமித்து, அவர்களைத் தங்க வைத்து, மருத்துவம் பார்க்க அரசு மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று அய்யம்பேட்டை, கபிஸ்தலம், சுவாமிமலை, சோழபுரம் பேரூராட்சிகளில் உள்ள மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் குறிப்பாக, பெண் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். மருத்துவமனைக் கட்டடங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

பாபநாசம் ஒன்றியம், கபிஸ்தலத்தில் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு பெய்த பேய் மழையினால் அது இடிந்துவிட்டது. அதைப் புதிதாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 1-25*

பேரூராட்சியில் வணிக வளாகங்கள் கட்டித் தரப்படவேண்டும். தற்பொழுது பழுதடைந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள அணைக்கரை பாலத்தை உடனே சரிசெய்து, போக்குவரத்தை ஏற்படுத்தவேண்டும். தஞ்சாவூர் மாவட்டம், நீலத்தநல்லூருக்கும், பெரம்பலூர் மாவட்டம், மதனத்தூருக்கும் இடையே கொள்ளிடக்கில் பாலம் உடனே கட்டப்படவேண்டும்.



எனது தொகுதியிலுள்ள ஒன்றியப் பகுதிகளில் சுமார் 25 ஊராட்சிகள் பெரிய ஊராட்சிகளாக உள்ளன. அப்பகுதி மக்களின் நலன் கருதி, ஒவ்வோர் ஊராட்சிக்கும் பெரிய அளவிலான சமுதாயக்கூடங்கள், திருமண மண்டபங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேத்தியாத்தோப்பு-விக்ரவாண்டி சாலை மிகவும் மோசமாக உள்ளது. Patch work எனச் சொல்லி, வேலை நடந்தது. ஆனால் வேலை நடந்து முடிந்தபின் மிகவும் மோசமான நிலைதான் உள்ளது. எனவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி உடனே புதிய சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் தாலுகா, சக்கராப்பள்ளி, வழுத்தூர் அருகில் காவிரி ஆறு, குடமுருட்டி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஏற்படுத்தி, பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் உடனே தடுப்பணை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,500 ரூபாய் என்றும், நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்றும் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் கழிப்பிட வசதி கருதி, சுகாதார வளாகம் அமைக்க வேண்டும். என் தொகுதியிலுள்ள காவிரி ஆற்றின் கிளை ஆறுகளான மண்ணியாறு, தூரியாறு, பழவாறு ஆகிய ஆறுகளைத் தூர் வார வேண்டும்.

புதிய குடும்ப அட்டைகள் இதுவரை வழங்கப்படவில்லை. அவற்றை உடனே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். பாபநாசம் தொகுதியிலுள்ள என் சொந்த ஊரான ராஜகிரியில் குடமுருட்டி பாலம், திருமலைராஜன் ஆற்றுப் பாலம் ஆகியவை பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன. அந்தப் பாலங்களில் பஸ், கார், லாரிகள், டிராக்டர்கள் போக முடியாது. ஏன், ஆட்டோகூட போக முடியாது. மக்களின் நலன் கருதி, இரண்டு ஆறுகளின் குறுக்கே வாகன வசதிக்கேற்ப பாலங்கள் கட்டித் தரப்படவேண்டும்.

விவசாயத்திற்குத் தட்டுப்பாடின்றி கடன் வழங்கவேண்டும். தாட்கோமூலம் கடன் வழங்க பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு தேசிய வங்கி, கடன் தர மறுக்கின்றது. எனவே கடன் வழங்கும்படி தேசிய வங்கிகளுக்கு அரசு உத்தரவிடவேண்டும். வீட்டு வசதிச் சங்கம் நிதி வசதி இல்லாத நிலையால் செயல்படாமல் உள்ளது. எனவே சங்கங்களுக்கு நிதி வழங்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேகமாகப் பக்கங்களைத் திருப்புங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இதோ சீக்கிரம் பேசி முடித்துவிடுகின்றேன். ஏழை எளிய கூலித் தொழிலாளர்களின் கூரை வீடுகள் தீப்பிடித்து எரிந்துவிட்டால் அவர்களுக்கு அரசு தொகுப்பு வீடுகளைக் கட்டித் தரவேண்டும். ஊராட்சிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குபவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.600 என்று உள்ளது. தற்போதுள்ள விலைவாசி உயர்வுக்கேற்ப அவர்களுடைய மாதச் சம்பளத்தை உயர்த்தி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தொகுப்பூதிய ஆசிரியர்களாக இருக்கின்ற 1,100 பேர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கவேண்டும். பகுதி நேரம் என்ற பெயரில் முழு நேரமும் அவர்கள் பணியாற்றிய காலத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு ஓய்வூதியம் வழங்கவேண்டும். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், பாண்டிச்சேரி உட்பட, ரூ.6,500 அடிப்படை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தொழிற்கல்வி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்கவேண்டும். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தாயாகி, தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம்
தன்னிகரில்லாத தனித் தலைமை தெய்வம்
காயாகி, கனியாகி கலந்துநிற்கும் தெய்வம்
கருணைநிதி தெய்வம், முற்றும் காத்துநிற்கும் தெய்வம்”

என்று அருட்பா பாடிய வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்கள் சொன்னதைப்போல, இந்த மாமன்றத்திலே மூன்றாவது முறையாக பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையினை நான் இங்கே அளிப்பதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய என்னுடைய தாயாய், தந்தையாய் வீற்றிருந்து, தனக்குவமை இல்லாத தலைவராக இந்தத் தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய ஒப்பற்ற முதுபெரும்



தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இனமானத் தலைவர் மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், வாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய தங்களுக்கும், நம்முடைய இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், நாளெல்லாம், நாடெல்லாம் சுற்றி அயராது உழைத்து, உள்ளாட்சியிலே இன்றைக்கு நல்லாட்சி காணக்கூடிய எங்களின் அன்பிற்கினிய அருமை அண்ணன் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய குடும்பத்திலே ஒருவராக இருந்து, என்னை வழிநடத்தக்கூடிய அன்பிற்கினிய அஞ்சா நெஞ்சன் அண்ணன், அழகிரி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் பெருமதிப்பிற்குரிய அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் முதற்கண் நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த பதிலுரையைத் தொடங்குவதற்கு முன்பு, இந்த மாமன்றத்திலே தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பின்னாலே அவருடைய தம்பியாக வீற்றிருந்து, அமைச்சராக இருந்து பணியாற்றி மறைந்த என்னுடைய அன்புத் தந்தையார் அமரர் தங்கபாண்டியன் அவர்களுடைய நினைவுகளை நான் என்னுடைய நெஞ்சத்திலே நிலைநிறுத்துகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகால ஆட்சிப் பொறுப்புக் காலத்திலும், தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாகவும்...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பள்ளிக் கல்வித் துறையிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, ஆற்றியிருக்கக்கூடிய அரும், பெரும் சாதனைகளை இந்த நாடும், இந்த மன்றமும் நன்றாக அறியும் என்று நம்புகிறேன். அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு, ஏடு இடம்கொள்ளாது என்றாலும்கூட, ஓரிரண்டை மாத்திரம், இந்த மாமன்றத்தினுடைய நினைவுக்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் வரை சென்று, தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமொழியாகக் கொண்டுவந்த அரசு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வித் துறை வளர்ச்சிக்கென்று, இதுவரை வரலாற்றிலே இல்லாத வகையில், 20,348 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துகொடுத்த அரசு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு.

இதுவரை, தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று, புதிதாக 2,563 பள்ளிகளை, இந்த இரண்டாண்டு கால ஆட்சியிலே, இந்த நிதிநிலை அறிக்கையோடு சேர்த்துக்கொண்டு வந்திருக்கக்கூடிய அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. அதுமாத்திரம் அல்ல, காலிப் பணியிடங்களிலே, அதைப்போல, புதிய பணியிடங்களிலே, ஏறத்தாழ 31,350 ஆசிரியர் பணியிடங்களில் நியமனம் செய்திருக்கக்கூடிய அரசு, நம்முடைய அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

கணினிக் கல்விக்காக, 3,505 பள்ளிகளுக்கு, ஏறத்தாழ 193 கோடி ரூபாய் ஒதுக்கி, கணினிக் கல்வியை மாணவர்களுக்குத் தந்திருக்கின்ற அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. நபார்டு திட்டத்தின்மூலமாக 6,669 வகுப்பறைகள், அனைவருக்கும் கல்வி திட்டத்தின்மூலமாக 14,904 வகுப்பறைகள், ஆக மொத்தம் இதுவரை 21,573 வகுப்பறைகளை மாணவர் சமுதாயத்தின் பயன்பாட்டிற்காக உருவாக்கித் தந்த அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்தியத் திருநாட்டிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு முதன்முறையாக, 453 வட்டார வள மையங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகிய அனைத்தையும் செயற்கைக்கோளோடு இணைத்து, இருவழி கலந்துரையாடலுக்கு வழிவகை செய்து, அந்த வசதியை, உருவாக்கியிருக்கக்கூடிய அரசு, நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையிலே, ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று சிறப்பாக முடிவெடுத்த அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. ஒரு தமிழாசிரியர் பணியிடம்கூட இல்லாத 525 உயர்நிலைப் பள்ளிகளிலே, புதிதாக தமிழாசிரியர் பணியிடங்களை உருவாக்கித் தந்த அரசு, நம்முடைய அரசு. (மேசையைத் தட்டும்



ஒலி) கருணை அடிப்படையிலே 260 நியமனங்களை இதுவரை துறை வாயிலாக வழங்கியிருக்கக்கூடிய அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசு.

அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், கணினி வழங்கியதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தொடர்ச்சியாக உயர்நிலைப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும், கணினி வழங்கக்கூடிய மகத்தான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அளித்த அரசு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதைச் சொல்லி, ஏழையெளிய மாணவ, மாணவிகள் பயன்பெறுவதற்காக, கடந்த ஆண்டு, அவர்களுக்கெல்லாம் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களித்த தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு சிறப்புக் கட்டணத்திலிருந்தும் அவர்களுக்கு விலக்களித்திருக்கக்கூடிய அரசாக விளங்குகிறது என்பதை நான் இந்த மன்றத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரமல்லாமல், தமிழ் வழிக் கல்வி பயின்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலே, அதிக மதிப்பெண் பெறக்கூடிய, ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கப் பரிசாக கணினிகள் வழங்கக்கூடிய அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

'ஆசிரியர் பணியே அறப்பணி, அதற்கே உன்னை அர்ப்பணி' என்று பணியாற்றக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கு, ம்த்திய அரசு வழங்கக்கூடிய அகவிலைப் படியையும், நம்முடைய அரசின் சார்பிலே, பொங்கல் போனஸையும் உடனடியாக வழங்கி அவர்களை மகிழ்வித்த அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு என்று நான் குறிப்பிட்டுச் சொல்வதிலே பெருமையடைகிறேன்.

அது மாத்திரமல்லாமல், தொடக்கப் பள்ளி மாணவர் சேர்க்கையைப் பொறுத்தமட்டிலே, இதுவரை ASSOCHAM என்கின்ற அமைப்பு நடத்தியிருக்கக்கூடிய அந்த சர்வேயின் அடிப்படையிலும், தொடர்ச்சியாக கல்வியாளர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கருத்துகளின் அடிப்படையிலும், ஏறத்தாழ 100 சதவீத மாணவர் சேர்க்கையை நெருங்கிவிட்டிருக்கக்கூடிய அரசு, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதை நான் பெருமைப்படச் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இடைநிற்றல் குறித்து இங்கேகூட குறிப்பிட்டார்கள். இடைநிற்றல் என்கிற அந்த நிலைமையைப் பொறுத்தமட்டிலே, தொடக்கக் கல்வி

இடை நிற்றலை 4 சதவீதத்திலிருந்து 1.4 சதவீதமாகவும், நடுநிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய இடைநிற்றலை, 8 சதவீதத்திலிருந்து 2.04 சதவீதமாகவும், இடைநிலைக் கல்வியிலே, இருந்த இடைநிற்றலை 40 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாகவும், மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, 84 சதவீதத்திலிருந்து 46 சதவீதமாகவும் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த இரண்டாண்டு காலத்திலே, குறைத்து சாதனை படைத்திருக்கக்கூடிய அரசு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுக்கிக்கொண்டே போகலாம் என்றாலும்கூட, நேரத்தின் அருமை கருதி, முக்கியமான சில கருத்துகளை மட்டும் இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம், பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள், திரு. த. தியோடர் ரெஜினால்டு அவர்கள், மதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மணி அவர்கள், மதிப்பிற்குரிய திரு. கே. கோபிநாத் அவர்கள், திருமதி வீமா றோஸ் அவர்கள், திரு. தி. இராமசாமி அவர்கள், திரு. ஆர். ஞானதாஸ் அவர்கள், திரு. து. ரவிக்குமார் அவர்கள், திரு. து. செல்வராஜ் அவர்கள், திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், தங்களுடைய மேலான கருத்துகளை இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக வழங்கியிருக்கிறார்கள்.

இதுமாத்திரமல்லாமல், நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில்கூட காங்கிரஸ் இயக்கத்தினுடைய சார்பில் திருமதி டி. யசோதா அவர்கள், திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. கே. மகேந்திரன் அவர்கள், சி.பி.ஐ. சார்பில் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள், அ.தி.மு.க.-வின் சார்பில் திரு. மா. சந்திரகாசி அவர்கள், திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், கழகத்தின் சார்பில் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்கள், பா.ம.க.-வின் சார்பில் திரு. தி. வேல்முருகன் அவர்கள், ம.தி.மு.க.-வின் சார்பில் திரு. வீர. இளவரசன் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் பல்வேறு கருத்துகளை இந்த மாமன்றத்திலே வெளியிட்டு, இந்தத் துறையினுடைய



முன்னேற்றத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளைக் குறித்து ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். மாமன்ற உறுப்பினர்கள் இங்கே வழங்கயிருக்கக்கூடிய கருத்துகளின்மீது பதிலைத் தெரிவிப்பது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-35

குறிப்பாக, இன்றைக்குப் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மிக முக்கியமாக அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது இலவச மதிய உணவுத் திட்டம். அதைப்போல இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கக்கூடிய திட்டம்.

இலவச மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே மாமன்றமும், இந்த நாடும் நன்றாக அறியும். இந்தத் திட்டம் திராவிட இயக்கத்தினுடைய தந்தை என்று போற்றக்கூடிய தியாகராயர் அவர்களால்தான் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டம் அதற்குப் பிறகு கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், கிராமப்புற மாணவர்கள் வயிற்றிலே சாப்பாடு இருந்தால்தான் கல்விச் சாலைகளுக்கு அவர்கள் வரமுடியும், கல்வியைக் கற்கக்கூடிய நிலை உருவாக முடியும் என்று மதிய உணவுத் திட்டம் என்று கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களாலே அது அன்றைக்கு சத்துணவுத் திட்டம் என்ற பெயரிலே விரிவுபடுத்தப்பட்ட திட்டமாகத்தான் அது இருந்தது.

அதைப்போல, இலவசப் பாடப் புத்தகத் திட்டம். நான்கூட இந்த அவையிலே பலமுறை பேசும்போது சொல்லிக்கொண்டே இருக்கிறேன். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்குமே இலவசப் பாடப் புத்தகங்களை அளிக்க வேண்டுமென்று முதன் முதலிலே உத்தரவிட்டது நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இங்கே அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இருக்கிறார்கள். அவர் எழுந்து அன்றைக்குக் கேட்ட அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுதான் தமிழ் வழியிலே கற்கக்கூடிய, அரசு மானியம் பெறாத பள்ளிகளிலே ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை இருக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்களை வழங்க வேண்டுமென்று இந்த அவையிலே அறிவித்தவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மெட்ரிக்குலேஷன் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு தமிழ்ப் புத்தகங்களைக் கொடுங்கள் என்று இந்த அவையிலே சொன்னபோது, இந்த அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, நான் உரையாற்றிக் கொண்டிருக்கின்றபோதே என்னை அழைத்து, இங்கேயே உத்தரவு போட்டு மெட்ரிக்குலேஷன் பள்ளியிலே படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் தமிழ்ப் புத்தகங்களை இலவசமாக வழங்குங்கள் என்று உத்தரவிட்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதைப்போல, ஏறத்தாழ 61 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று சொன்னார்கள். நான் புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோது ஏறத்தாழ 56 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், எப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், புதிதாக நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே காலமுறை ஊதியத்திலே இருந்த 56 ஆயிரம் பணியிடங்களுக்கு கடந்த ஆட்சியிலே தொகுப்பூதியத்திலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். 10 ஆயிரம் பேர் காலமுறை ஊதியத்திலேயும், மீதமிருக்கக்கூடிய 46 ஆயிரம் பேர் தொகுப்பூதியத்திலேயும்தான் நியமிக்கப்பட்டார்களே தவிர, புதிய பணியிடங்களை உருவாக்கவில்லை. ஆனால் நம்முடைய தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் அந்த 45 ஆயிரம் பேரையும் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக 7,979 பணியிடங்களையும் நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம் என்பதை நான் இந்த மன்றத்திற்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கே பேசிய பல உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய அண்ணன் ஜி.கே. மணி போன்றவர்கள், தொடர்ச்சியாகப் பேசிய திருமதி லீமா றோஸ் போன்றவர்கள், எல்லா உறுப்பினர்களுமே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய மிக முக்கியமானது, நிறைய கோரிக்கைகள், நிறைய செய்திகளை நீங்கள் சொல்லியிருந்தாலும்கூட நான் காலத்தின் அருமை கருதி அவற்றிற்கெல்லாம் மிக விரிவாக விடையளிக்க இயலாவிட்டாலும்கூட, வலியுறுத்தி நீங்கள் சொல்லியிருக்கக்கூடியது 1:30 என்கின்ற அந்த சதவிகிதத்திலே ஆசிரியர் நியமனங்களைச் செய்ய வேண்டும் என்பது. இந்த 1:30-ஐப் பொறுத்தமட்டில் கொள்கையளவிலே நான் கடந்த முறைகூட சொன்னேன். மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இது தேவையானது



என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதை ஏற்றுக்கொள்கிறபோது எத்தனைப் பணியிடங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது என்று பார்த்தால், ஏறத்தாழ 39 ஆயிரம் பணியிடங்களை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது. அது உடனடியாகச் செய்யக்கூடிய காரியமா என்பதை ஆராய்ந்து அரசுக்கு இருக்கக்கூடிய நிதிச் சுமை மற்றும் பல்வேறு நிலைமைகளை, நிதியாதாரத்தைக் கருத்தில் கொண்டுதான் அரசு முடிவினை எடுக்க வேண்டும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு வகுப்பறைக்கு ஒரு ஆசிரியர் என்று நியமிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைக்கூட நம்முடைய உயர் நீதிமன்றத்திலே அன்றைக்குத் தெரிவித்தார்கள். இதைப் பொறுத்தமட்டிலே, அரசின் முழுமையான ஆதரவு இருக்கிறது. கொள்கை அடிப்படையிலே நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால், நிதியாதாரங்களைப் பொறுத்து, இதற்காக மட்டும் ஏறத்தாழ 408 கோடி ரூபாய் உடனடியாக நாம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே அரசு இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு வரக்கூடிய காலங்களிலே நிச்சயமாக, படிப்படியாக நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தமட்டிலே எப்போதெல்லாம் காலிப் பணியிடங்கள் வருகிறதோ, நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், சென்ற ஆண்டிலே நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், வரக்கூடிய மே மாதம் எந்தெந்த ஆசிரியர் பணியிடங்கள் எல்லாம் காலியாக இருந்தனவோ, முன்கூட்டியே அவற்றுக்கெல்லாம் ஒப்புதல் கொடுத்து, மானியக் கோரிக்கையிலேயே ஒப்புதல் கொடுக்கக்கூடிய அந்த அறிவிப்பைத் தந்த ஒரே அரசு, நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

அதைப்போல, திரு. மணி அவர்கள் பேசுகிறபோது அருகமை பள்ளியைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அருகமைப் பள்ளி, Neighbourhood School System என்கின்ற அந்தத் திட்டம், நம்மைப் பொறுத்தவரையில், Right to Education Act என்று மத்திய அரசாங்கத்தில் சட்டம் வருகிறபோது நம்மிடத்திலே கேட்டார்கள். அவ்வாறு கேட்டபோது நாம் நம்முடைய கருத்துகளை அவர்களிடம் தெரிவித்து இருக்கிறோம், அந்தப் பள்ளிகள் எப்படி அமைய வேண்டும் என்று. டெல்லி போன்ற மாநிலங்களிலே அந்தச் சட்டம் கொண்டு

வரப்பட்டு, அவ்வளவு வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதுதான்அதிலே இருக்கக்கூடிய விஷயம். காரணம், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள், உடனடியாக Court-களுக்குச் சென்று, Court அதிலே தலையிட்டு, அது அவ்வளவு வெற்றிகரமாக இதுவரை நடைபெறவில்லை என்றுதான் நான் அறிகிறேன். இருந்தாலும்கூட மத்திய அரசாங்கம் Right to Education Act என்று கொண்டு வருகிறபோது, அதிலே நம்முடைய கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறோம். அவற்றை உரிய நேரத்திலே நாம் பரிசீலிக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், அனைத்து உறுப்பினர்களுமே சொல்லி இருக்கிறீர்கள். ஆசிரியர் பயிற்சி குறித்து நானே இந்த மன்றத்திலே பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களிலே, சில சமயங்களிலே கேள்வி நேரங்களில்கூட பதில் கொடுத்து இருக்கிறேன். அரசு முழு முயற்சியினை எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கக்கூடிய அந்த நிலை நம்மிடத்திலே இல்லை. அது மத்திய அரசாங்கத்தில் N.C.T.E. வழங்குகிறார்கள். அவர்களுக்கு staff approval என்கிற, பணியாளர்கள் ஊதியத்தை மாத்திரம் approval செய்யக்கூடிய நிலைமை நம்மிடத்தில் இருக்கிறது. சிலர் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், N.C.T.E. அங்கீகாரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, பல பள்ளிகளை இப்போது ஆரம்பித்தார்கள். அதைப்போல, 50 பேருக்கு அவர்களிடத்திலே அனுமதி பெற்றுக்கொண்டு 100 பேருக்கு வழங்கக்கூடிய ஒரு நிலைமை. இதிலே யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், ஏழை அப்பாவி மாணவ, மாணவியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். பல இடங்களிலே, ஒவ்வொரு D.I.E.T.-லே C.E.O. Office-லே நாம் இவற்றைக் குறித்து முழு விவரங்களை வைத்து இருக்கிறோம், எந்தெந்தப் பள்ளிகள் எல்லாம் அங்கீகாரம் பெற்று இருக்கின்றன என்று. ஆனாலும், பல மாணவர்கள் அறியாமையின் காரணமாக இத்தகைய பள்ளிகளிலே சேர்ந்திருக்கிறார்கள். நீதிமன்ற உத்தரவின்பேரிலே சில பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். சில பேர் நீதிமன்றத்திற்குப் போகாமல் தேர்வு எழுதாமல் இருக்கிறார்கள். இந்த மன்றத்திலே பலரும் தெரிவித்திருக்கக்கூடிய கருத்து அவர்களுக்கு ஏதாவது செய்யுங்கள், நடவடிக்கை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்மீது நீங்கள் எடுக்கலாம், ஆனால், மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்தை பலரும் தெரிவித்து இருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் இதை நிச்சயமாக கலந்து பேசி



மாணவர்கள் பாதிக்காத அளவிற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதேசமயத்தில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இப்படி அங்கீகாரம் இல்லாத நிறுவனங்கள் புற்றீசல்போன்று பெருகி-நம்முடைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், இடைநிலைப் பயிற்சிப் பள்ளிகள் இவற்றிற்கெல்லாம்-இப்போது நாம் வேலைவாய்ப்பை பதிவு மூப்பு அடிப்படையில் வழங்குவதால், இதையே ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் குறுக்கு வழியிலே வரவிடாமல் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையினை இந்த அரசு தொடர்ந்து எடுக்கும் என்கின்ற உத்தரவாதத்தினையும் நான் இந்த மன்றத்திலே வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, உடற்கல்வி ஆசிரியர்கள் நியமனத்தைக் குறித்து அதிகமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். இதுவரை ஏறத்தாழ தொடக்கக் கல்வியிலே மாத்திரம் 103 பேரை நியமித்து இருக்கிறோம். பள்ளிக் கல்வித் துறையிலே 953 பேரை நியமித்து இருக்கிறோம். இந்தத் துறையிலே அரசு ஆர்வமாக இருக்கிறது. யோகா கொண்டுவந்ததற்குக் காரணம், மாணவர்களுக்கு ஒழுக்க நெறிகள், உடலைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய நெறிகள், உள்ளத்தைப் பேணி பாதுகாக்கக்கூடிய நெறிகளைக் கொண்டுவருவதிலே அரசு ஆர்வமாக இருக்கிறது. எனவே, நிச்சயமாக, தொடர்ச்சியாக உடற்கல்வி ஆசிரியர் விஷயத்திலே அரசு ஆர்வம் காட்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கே பேசிய பல உறுப்பினர்கள் குறிப்பாக கட்டமைப்பு வசதிகளைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். நபார்டு உதவியால், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலமாக இந்தக் கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ச்சியாக நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும், தொடர்ச்சியாக அந்தப் பணிகளை நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இடைநிலை ஆசிரியர்களை, மாநிலப் பட்டியலிலே, பதிவு மூப்பு அடிப்படையிலே கொண்டு வரவேண்டும என்று நம்முடைய அண்ணன் திரு. இராமசாமி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். அது இப்போது நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகள் வந்தால் நிச்சயமாக அது குறித்து நாம் ஒரு முடிவினை மேற்கொள்ள முடியும்

என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மெட்ரிக் பள்ளிக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் அண்ணன் திரு. மணி அவர்கள் குறிப்பிடுகின்றபோது ஒன்றைச் சொன்னீர்கள். அதிலே கடந்த ஆட்சியிலேகூட திரு. சிட்டிபாபு அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அதில் பரிந்துரைகளை எல்லாம் கொடுத்தார்கள். ஆனால் T.M.A. Pai Foundation Vs. Karnataka State and Others என்கின்ற ஒரு வழக்கிலே உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை சொல்லிவிட்டது. அது இத்தகைய சுய நிதிப் பள்ளிகளில், மெட்ரிக் பள்ளிகளில் கட்டணம் நிர்ணயிக்கக்கூடிய அந்த முறை அவர்களுக்குத்தான் இருக்கிறது. அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூடிய உரிமையும் அவர்களுக்குத்தான் இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதைப் பொறுத்தமட்டிலே, அரசு அப்போது இருந்த அரசும் சரி, இப்போது இருக்கும் அரசும் சரி, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே நாம் suggestive-ஆகத்தான் மற்ற பள்ளிகளுக்கு ஒரு circular போன்றுதான் அனுப்ப வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இதைப் பயன்படுத்திக்கொண்டு நன்கொடை என்ற பெயராலே இத்தகைய பள்ளிகள் பணம் வசூலிப்பதைத் தடுப்பதற்காகத்தான், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருடைய தலைமையில், மாவட்டக் கல்வி அலுவலர்களை இணைத்து ஒரு குழு அமைத்து இருக்கிறோம். எந்தெந்தப் பள்ளிகளில் இந்தக் கல்வி ஆண்டின் துவக்கத்திலே இத்தகைய முறைகேடுகளில் ஈடுபடுகிறார்களோ, அங்கெல்லாம் இந்தக் குழு surprise visit செய்து அந்தப் பள்ளிகள் அத்தகைய முறைகேடுகள் செய்திருந்தால், அத்தகைய பள்ளிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, இந்தக் குழுக்களுக்கு நாங்கள் அறிவுரைகளை வழங்கியிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொடர்ச்சியாக நான் இவைகளைப் பற்றி பேச விரும்பினாலும்கூட, நேரம் கருதி என்னுடைய பதிலை விரைவாகச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

இது தவிர, பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக பல உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளிலே நிறைவேற்றவேண்டிய பல காரியங்களை, கல்வித் துறை சம்பந்தமான பல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறீர்கள். அதிலே, 'கொள்கை குறித்து' 22 வெட்டுத் தீர்மானங்களும், 'நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத்



தரம் உயர்த்துவது குறித்து' 62 வெட்டுத் தீர்மானங்களும், 'உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து' 81 வெட்டுத் தீர்மானங்களும், 'நபார்டு திட்டத்தின்மூலம் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்து', இதுதான் இருப்பதிலேயே அதிகமான வெட்டுத் தீர்மானங்கள் 103 வெட்டுத் தீர்மானங்களும் 'ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வது குறித்து' 36 வெட்டுத் தீர்மானங்களும், 'புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவது குறித்து, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக்குவது குறித்து' 25 வெட்டுத் தீர்மானங்களும், இதர வெட்டுத் தீர்மானங்கள் 99 என்றும், 428 வெட்டுத் தீர்மானங்கள் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் அவற்றையெல்லாம் படித்துப் பார்த்திருக்கிறேன். அவற்றிலே பல்வேறு இடங்களிலே தொகுதியிலே இருக்கக்கூடிய அந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும், அங்கே செய்யக்கூடிய வசதிகள் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் தந்திருக்கிறீர்கள்.

அதைப்போல, சட்டம். மனித உரிமைக் கல்வி போன்ற அடிப்படைச் சட்டம் குறித்த கல்வி முறை வேண்டுமென்று பல உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறீர்கள். வெட்டுத் தீர்மானங்களைக் கொடுப்பதற்கு வாய்ப்பில்லாமல் பின்னாலே அமர்ந்திருக்கக்கூடிய பல்வேறு ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும், அவற்றையெல்லாம் என்னிடத்திலே நேரடியாக, தங்கள் தொகுதியினுடைய குறைகளையெல்லாம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் என்னிடத்திலே அளித்திருக்கிறார்கள். நான் அவற்றையெல்லாம் நிச்சயமாக வரக்கூடிய கல்வியாண்டுகளிலே பரிசீலித்து அவற்றின்மீது உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, நம்முடைய உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவருடைய பகுதியிலே இருக்கக்கூடிய, தெலுங்கு மொழி பேசக்கூடிய பகுதியிலே இருப்பவர்களுக்கு இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின் வாயிலாக ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவருக்கு அப்போதே சொன்னதைப்போல, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனிக் கவனத்திற்கு எடுத்துச் சென்று எந்த வகையிலே அந்தப் பிரச்சினையை அணுக முடியுமோ அந்த வகையில் நிச்சயமாக அணுகுவேன் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள் வரவில்லை. ஆனால் அன்றைக்கு அவர்கள் பேசுகிறபோது ஒரு தகவலைச் சொன்னார்கள். அவர் இங்கே இல்லாவிட்டாலும்கூட, இந்த மாமன்றத்திலே அவருடைய கருத்தை பதிவு செய்திருக்கின்ற காரணத்தால் அதற்குரிய விளக்கத்தை நான் அளிப்பது என்னுடைய கடமையாக இருப்பதால் இதைச் சொல்கிறேன். பொதுவாக நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இடைநிற்றல் போன்ற புள்ளிவிவரங்களை சொல்கிறபோது அவர் ஒன்றைச் சொன்னார், முத்துக்குமரன் கமிட்டியிலே இருக்கக்கூடிய புள்ளிவிவரங்களைச் சொல்லி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இடைநிற்றல் விகிதாச்சாரங்களைக் குறிப்பிட்டார். நானும் முத்துக்குமரன் கமிட்டியிலே என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்று, ஏற்கெனவே படித்து இருந்தாலும்கூட அவர் சொன்னதற்குப் பிறகு மீண்டும் ஒருமுறை அதை ஆழ்ந்து படித்திட வேண்டுமென்று படித்தேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், தொடக்க நிலையிலே இருக்கக்கூடிய மாணவர்கள் அதாவது, தொடக்க நிலை என்றால் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 64 இலட்சம் பேர் படிக்கிறார்கள். நடுநிலை, 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை 36 இலட்சம் பேர் படிக்கிறார்கள். இடைநிலை 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை 19 இலட்சம் பேர் படிக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளிலே 11 இலட்சம் பேர் படிக்கிறார்கள் என்றுதான் முத்துக்குமரன் சொல்லியிருக்கிறார். ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய திரு. விஜயகாந்த் அவர்கள் அதை எப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால் 5 ஆம் வகுப்பிலே ஏதோ 64 இலட்சம் பேர் படித்துக்கொண்டிருப்பதை போலவும், அவர்கள் அடுத்து நடுநிலைப் பள்ளிக்குப் போகிறபோது அது 28 இலட்சம் குறைந்து 8 ஆம் வகுப்பிலே 36 இலட்சமாக போவதைப் போலவும், 8ஆம் வகுப்பிலே இருக்கக்கூடிய 36 இலட்சம் பேர், இதிலே 17 இலட்சம் பேர் குறைந்து 19 இலட்சமாக அவர்கள் 10 ஆம் வகுப்பிற்கு போவதைப் போலவும், 10 ஆம் வகுப்பிலே இருக்கக்கூடிய 19 இலட்சத்திலே 8 இலட்சம் குறைந்து 11 இலட்சமாகப் போவதாகவும், அவர் ஒரு அதீதமான ஒரு கற்பனையை, முற்றிலும் பொருந்தாத ஒரு கற்பனையை அன்றைக்கு எடுத்துக்கொண்டு இந்த மாமன்றத்திலே சொன்னார். அதற்கு நான் பதில் சொன்னேன். தொடக்க நிலையில்தான் அவ்வாறு இருக்கிறது. ஒரு வகுப்பு தொடக்க நிலை என்றால் 1 முதல் 5 வகுப்பு வரை 64 இலட்சம்பேர் படிக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் சராசரியாக ஒரு வகுப்பிலே படிக்கக்கூடியவர்கள் என்று பார்த்தால்,



10 இலட்சம்பேர் படித்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை. எனவே, இதில் இடைநிற்றல் என்ற பேச்சே வராது. அதை அவர் புரிந்து கொண்டிருக்கக்கூடிய விதத்திலே, சற்று தவறாக இந்தப் புள்ளிவிவரங்களைப் பற்றி புரிந்து கொண்டிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். இன்னும்கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், குருட்டுக் கணக்கு என்று நம் ஊரிலே சொல்வார்கள். அப்படிகூட பார்த்தீர்கள் என்றால் 1992-1993 ஆம் ஆண்டிலே நம்முடைய Birth Rate கணக்கை, பொதுச் சுகாதாரத் துறையின்மூலமாக எடுத்திருக்கிறார்கள். அப்போது நாட்டிலே பிறந்திருக்கக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை 10.23 இலட்சம். அப்போது 1992 ஆம் ஆண்டில் யார் பிறந்தார்களோ அவர்கள்தான் இப்போது 10 ஆம் வகுப்பிற்கு வந்திருக்க வேண்டும்; அன்றைக்கு பிறந்த குழந்தைகள். அப்படி கணக்குப் பார்த்தால் 9 இலட்சத்து 10 ஆயிரம் பேர் இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பிலே தேர்வு எழுதியிருக்கிறார்கள். 89 சதவீதமான மாணவர்கள்—அப்படியானால் பிறந்த குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரையிலே பாதிப்பேர்—வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இடைநிற்றல் என்பது மிகமிகச் சொற்பமான கருத்தாக விளங்குகிறது என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு என்று பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்த ஆண்டு 7,852 கோடி ரூபாயை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைவிட 796 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்காக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்கக் கல்விக்காக மட்டும் 4,153.84 கோடி ரூபாய், இடைநிலைக் கல்விக்காக 3,568.17 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டிலே இங்கே உறுப்பினர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார்கள். தொடக்கக் கல்வி என்பது முக்கியமானது, அதற்கு அதிகமாக நீங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நம்முடைய உறுப்பினர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு தொடக்கக் கல்விக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய தொகை 4,153.84 கோடி ரூபாய். கடந்த ஆண்டு வழங்கப்பட்டது 3,597.80 கோடி ரூபாய். கடந்த

11-137—11

ஆண்டைவிட இந்த ஆண்டு 556 கோடி ரூபாய் தொடக்கக் கல்விக்காக மாத்திரம் வழங்கியிருக்கிறோம். அது பொதுவாக தொடக்கக் கல்வியிலே, பள்ளிக் கல்வித் துறைக்கான ஒதுக்கீட்டிலே 50 சதவீதம் இருக்கவேண்டும் என்பதுதான் ஒரு கல்வியாளருடைய எதிர்பார்ப்பாக இருக்க முடியும். இந்த ஆண்டு அது 52 சதவீதத்திற்கு மேற்பட்டு அமைந்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தையும் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தத் துறையினுடைய செயல்பாடுகளைப் பொறுத்தமட்டிலே, இந்த ஆண்டிலே சில 4, 5 கட்டங்களை மாத்திரம் நாங்கள் முக்கியமாகக் கருத்திலேகொண்டிருக்கிறோம். ஒன்று தொடக்கக் கல்வி, தரமான தொடக்கக் கல்வி. அடுத்து, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி, மூன்றாவது அனைவருக்கும் தரமான சமச்சீர்க் கல்வி. அடுத்து, கணினி வழிக் கல்வி, அதோடிணைந்த ஆங்கில மொழி ஆய்வகங்கள் ஆகியவற்றை மையமாக வைத்துத்தான் இந்தப் பள்ளிக் கல்வித் துறை தொடர்ச்சியாக வரக்கூடிய ஆண்டுகளிலே செயல்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டிலே அதுதான் அடிப்படைக் கல்வி. எல்லோரும் சொன்னதைப்போல, அதுதான் ஒரு குழந்தையை உருவாக்குகின்றது. தொடக்கக் கல்வி பெற வருகிற குழந்தை அந்தப் பள்ளிக்கு வருவதற்கு முன்பாகவே கற்றுக்கொண்டுதான் வருகிறது. ஒரு குழந்தை பிறக்கிறது என்று சொன்னால் பள்ளிக்கு வருவதற்கு முன்பாகவே, இதுதான் அம்மா, இதுதான் அப்பா, இதுதான் மாமா என்று அடிப்படைகளைக் கற்றுக்கொண்டுதான் அந்தக் குழந்தை வருகிறது. எனவே அப்படிக் கற்றுக்கொண்டு வரக்கூடிய குழந்தையை பள்ளியில் உட்கார வைத்து எல்லோரும் சொன்னதைப்போல, அதற்கு இலவசமாகச் சாப்பாடும் கொடுத்து, இலவசமாகப் புத்தகமும் கொடுத்து, இலவசமாகப் பஸ் பாஸூம் கொடுத்து, இலவசமாக நோட்டுப் புத்தகங்களும் கொடுத்து, எல்லாவிதமான இலவசங்களையும் கொடுத்து, அந்தக் குழந்தைக்கு இலவசமாகச் சீருடைகளையும் வழங்கி, இவ்வளவையும் கொடுத்து, ஒரு வாத்தியாரையும் போட்டு நீங்கள் படி, படி என்று சொன்னதற்குப் பிறகும் அந்தக் குழந்தை படிக்கவில்லை என்று சொல்வது எங்கேயோ, அந்த சிஸ்டத்திலே வரக்கூடிய குறைபாடாகத்தான் இருக்கும். எனவே, தொடக்கக் கல்வியிலே மிக முக்கியமாக சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று நாங்கள்



விரும்பினோம். அதற்காகத்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு இன்றைக்குப் பல்வேறு மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிறது.

முதலிலே தொடக்கக் கல்வியிலே Access Centre என்று சொல்லக்கூடிய அந்தப் பள்ளிகளுக்கு வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்கின்ற வகையிலே மகாகவி பாரதியார்,

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்..."

என்று சற்றுக் கோபமாகவே பாடியுள்ளார். இத்தகைய பள்ளிகளெல்லாம் அமைய வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் தமிழகத்திலே இப்போது அனைத்து கிராமங்களிலும் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் தொடக்கப் பள்ளிகளை அமைத்துத் தந்திருக்கக்கூடிய அரசு, நம்முடைய முதல்வர் அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மாத்திரமல்ல, தொடக்கக் கல்வியிலே மிக முக்கியமான இன்னொரு செய்தி, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, quantitative என்று சொல்லக்கூடிய இத்தகைய பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியிருக்கலாம். ஆனால், அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு qualitative-ஆக, அவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது. 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் நாள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாப் பேருரையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கல்வி முறையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னதை நான் இந்த மன்றத்திலே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்குப் பேசுகிறபோது சிதம்பரத்திலே சொன்னார்கள்,

"ஏட்டுக் கல்வி வளரும் தருவுக்கு வாகான உரம் என்பதால்,
அதற்காக உரம் மட்டுமே மரமென இயம்பிடல் தவறன்றோ!
கொடிபற்றும் கிளையும் கொழுந்தும் பழுப்புமாக
இலையும் காய்கனிக் குலையும் கொண்டு
களைத்தோருக்கு நிழலும் அளிப்பதன்றோ நன்மரமாகும்.
கல்வியின் பயனும் அவ்வாறே இருந்திடல் வேண்டும்.
பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயின்றாலும்
பிறருக்கு நம்மைப் பயன்படுத்தும் கல்வி
பெறாவிட்டால் நாட்டுக்கு ஏது நன்மை,
ஏட்டுக் கல்வி போதாது,
இயற்கை அறிவும் வளப்படுத்திடல் வேண்டும்"

என்று சொல்லிவிட்டு, தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், மொத்தத்தில் கூழாங்கற்களை வைரமாக்கும் கல்வி முறை வேண்டுமேயொழிய, வைரத்தில் எண்ணெய் இறங்கிட வைக்கும் கல்வி முறை கூடாது என்று அன்றைக்கு மிக ஆணித்தரமாக, திட்டவட்டமாகத் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இன்றைக்கு அந்தக் கல்வி முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லித்தான் செயல் வழிக் கற்றல் என்கின்ற ஒரு மகத்தான முறையை தமிழகத்திலே ஏறத்தாழ 37,000-க்கும் மேற்பட்ட பள்ளிகளிலே நாம் கொண்டுவந்திருக்கிறோம். Macaulay காலத்திலே உருவாக்கப்பட்ட இந்தக் கல்வி முறையிலே மிகப்பெரிய மாற்றத்தை நாம் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால், நம்முடைய மாநில அரசு கொண்டுவந்திருக்கிற இந்தத் திட்டத்தை, இந்தியாவிலே வேறு எந்த மாநில அரசும் கொண்டுவராத இவ்வளவு பெரிய திட்டத்தை நாம் கொண்டுவந்து மிகச் சிறப்பாக பள்ளிகளிலே நிறைவேற்றக்கூடிய காரணத்தினால்தான் மற்ற மாநில அரசுகளிலேயிருந்து இங்கே வந்து பாராட்டுகிறார்கள். மத்திய அரசு, N.C.R.T. நிறுவனம் நம்மைப் பாராட்டியிருக்கிறது. (குறுக்கீடு) அறிவிப்புகள் குறித்து சொல்கிறார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன். உலக வங்கி Joint Review Mission சார்பில் இங்கே வந்திருந்தார்கள். என்னிடத்திலே பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார்கள், அவர்கள் அறிக்கையிலேயும் சொன்னார்கள். This is unprecedented என்று சொன்னார்கள். இந்தக் காலத்திலே, கல்வித் துறையினுடைய சாதனையிலே என்றைக்கும் ஏற்படாதது இன்றைக்குத்தான் முதன்முதலாக வந்திருக்கிறது. கண்டும், கேட்டிராத ஒரு கல்வித் திட்டம் என்று அவர்கள் பாராட்டியதை நான் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



அதுமாத்திரமல்ல, 6, 7, 8 ஆம் வகுப்புகளில் வரும்போது படைப்பாற்றல் கல்வி முறையைக் கொண்டு வந்தோம். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், படித்தவுடன் மாணவர்கள் படித்துக்கொள்ளவேண்டும் என்று ஒருமுறை பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஜெயக்குமார் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் கல்வி முறையைப் பற்றி சொல்கிறீர்களே, ஏதாவது practical-ஆக pragmatic-ஆகக் கொண்டுவாருங்கள் என்று அவர்கள் பேசியதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் இந்தத் திட்டத்திலே கொண்டுவந்திருப்பது படைப்பாற்றல் கல்வி முறை. படிக்கக்கூடிய மாணவன் எதைப் படிக்கிறோம் என்பதைப் புரிந்து படிக்கக்கூடிய முறையை உருவாக்கிட வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம்.

நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வேடிக்கையாகக்கூடச் சொல்வார்கள், ஒரு பள்ளியிலே ஒரு ஆசிரியர் இருந்தாராம். அந்த மாணவனை அழைத்து கேள்வி கேட்கக்கூடிய நேரத்தில் ஒன்றைக் கேட்டாராம். என்னப்பா, இரண்டாம் பானிப்பட் போர் எதற்காக நடந்தது என்று. மாணவர் சுற்றும்முற்றும் பார்த்தானாம். பார்த்துவிட்டு மெதுவாகச் சொன்னானாம், சார் முதலாவது பானிப்பட் போர் அவ்வளவு சரியாக நடக்கவில்லை, ஒழுங்காக நடக்கவில்லை. எனவேதான், இரண்டாவது முறை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னானாம். இதை நான் வேடிக்கைக்காகச் சொல்கிறேன். எதை படித்துக்கொண்டிருக்கிறோம், எதை புரிந்து படித்துக்கொண்டிருக்கிறோம் என்பது முக்கியம் என்ற காரணத்தால்தான் படைப்பாற்றல் கல்வி முறையிலே நாங்கள் இந்த முறையைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்த முறையின் மூலமாக மன வரைவுப் படம், mind maping என்று சொல்வார்கள் ஒரு concept-ஐ எடுத்துக்கொண்டால், அதை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு, மாணவர்கள் அதை படம்மூலமாக வெளிப்படுத்தக்கூடிய அந்தத் திட்டம் மிகச்சிறப்பாகக் கொண்டுவரப்பட்டு அனைவருடைய பாராட்டையும் பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்கக்கூடிய திட்டம். இடைநிலைக் கல்வி, உயர்நிலைப் பள்ளியிலே படிக்கக்கூடிய அந்தக் கல்விக்கு மிக, மிக முக்கியமான கட்டம். வளர்இளம் பருவத்திலே வரக்கூடிய மாணவர்களுக்கு அந்தச் சூழ்நிலையிலே

எப்படி திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை அது தெரிவிக்கவிருக்கிறது. நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். 2-9-1995 ஆம் ஆண்டு குங்குமம் வார இதழிலே தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு பேட்டியினை அளித்திருந்தார்கள். அவரிடத்திலே செய்தியாளர் கேட்டிருக்கிறார், திருவாரூர் என்று சொன்னவுடன் உங்களுக்கு எது நினைவுக்கு வருகிறது என்று. திருவாரூர் என்று சொன்னவுடன் அண்ணன் சிவபுண்ணியம் அவர்கள் எழுந்து உடனே உட்கார்ந்துகொண்டார்கள். திருவாரூர் என்றவுடன் என்ன உங்கள் நினைவுக்கு வருகிறது என்று கலைஞர் அவர்களிடம் கேட்டபோது, நமக்கெல்லாம் தெரியும், திருவாரூர் என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடிய உயர்ந்த தியாகேசர் கோயிலோ அல்லது அங்கு இருக்கக்கூடிய ஆழித் தேரோ அல்லது அகன்று விரிந்திருக்கக்கூடிய குளமோதான் சிலருக்கு நினைவுக்கு வரும். தலைவர் கலைஞர் அவர்கள் சுத்த பகுத்தறிவாதி, சுயமரியாதைக்காரர். அதனால், அவை அவரது நினைவுக்கு வராது. ஆனால் திருவாரூர், தலைவர் கலைஞருடைய சொந்த ஊர். அவர் ஓடி விளையாடிய தெருக்கள் உண்டு. அவரைத் தூக்கி வளர்த்த பெற்றோர்கள் உண்டு. இங்கே அமர்ந்திருக்கக்கூடிய உள்ளாட்சித் துறை அமைச்சர் போன்றவர்கள் எல்லாம் அங்கே சிறுவர்களாக ஓடிப்பிடித்து விளையாடிய காலங்கள் உண்டு. தலைவர் கலைஞர் அவர்கள் அந்த நகரத்திலே வாழ்ந்தவர்கள். இவையெல்லாம் நினைவுக்கு வருகிறதா என்று சொன்னால், அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுக்கு அவை நினைவுக்கு வரவில்லை. திருவாரூர் என்றவுடன் நினைவுக்கு வருவது நான் படித்த உயர்நிலைப் பள்ளி என்று அன்றைக்கு அந்தப் பள்ளியினைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேங்கடசாமி நாட்டாரும், முத்துகிருட்டிண நாட்டாரும் அன்றைக்கு அவருக்கு தமிழ் சொல்லிக்கொடுத்து அவரை ஆற்றுப்படுத்தி, அந்த இளம் வயதிலேயே தமிழ்க் கொடியை ஏந்திக்கொண்டு, எல்லோரும் ஒன்றுகூடிடுவோம், வந்திருக்கக்கூடிய இந்திப் பேயை விரட்டிடுவோம் என்று போர்ப் பரணி பாடினாரே அந்தப் பள்ளிதான் அன்றைக்கு அவர்களுடைய நினைவுக்கு வந்தது.

எனவேதான், அந்த உயர்நிலைப் பள்ளிகளெல்லாம், இன்றைக்கு வரக்கூடிய மாணவ சமுதாயத்திற்கும், கல்விக் கூடங்கள் எல்லாம், அறிவுக் கூடங்களாகத் திகழ்ந்திடவேண்டும் என்ற முறையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற திட்டத்திலே, SUCCESS, Scheme for Universal Access and Quality at the Secondary Stage என்கின்ற



ஒரு தொலைநோக்குப் பார்வையோடு அந்தத் திட்டத்தை இங்கே
நடைமுறைப்படுத்துகிறபோது, 2015-க்குள் 16 வயதுள்ள ஆண், பெண்
அத்தனை பேருக்கும் தரமான இடைநிலைக் கல்வி, 2020-க்குள் 18
வயது நிரம்பியவர்களுக்கு மேல்நிலைக் கல்வி. ஐந்து கிலோ மீட்டருக்கு
ஒரு உயர்நிலைப் பள்ளி, அதைப்போல, ஆய்வகங்கள், குறிப்பாக,
இப்போது உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப்
பயிற்சி கொடுக்கக்கூடிய மையம் மற்றும் மண்டலப் பயிற்சி
மையங்கள், இணைய வகுப்பறைகள், ஒலி, ஒளி அரங்கங்கள்,
மென்திறன் வளர்ச்சி, குறிப்பாக பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள்
கல்வியிலே அக்கறை கொள்ளக்கூடிய வகையிலே இந்தத் திட்டம்
உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே
உருவாக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கான வரைவுத் திட்டத்தை மத்திய
அரசிடத்திலே அளித்திருக்கிறோம். மாநில அரசினுடைய
பங்களிப்பாக நம்முடைய முதல்வர் 200 கோடி ரூபாய் இதற்குக்
கொடுத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் : 2-00

சமச்சீர் கல்வி. சமச்சீர் கல்வியைப் பொறுத்தமட்டிலே, நீங்கள்
அறிவீர்கள், நம்முடைய மாநிலத்திலே, மாநிலக் கல்வி வாரியம்,
மெட்ரிக்குலேஷன் வாரியம், ஆங்கிலோ இந்தியன் வாரியம்,
ஓரியண்டல் பாடத் திட்டம் என்று நான்கு பாடத்திட்ட வாரியங்கள்
இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒன்றாக இணைத்து, தமிழ்நாடு
மாநிலக் கல்வி வாரியம் என்கின்ற ஒரு அமைப்பின்கீழ், Tamil Nadu
State Education Board என்கின்ற அந்த அமைப்பின்கீழே கொண்டு
வரவேண்டும் என்கின்ற திட்டத்தின் அடிப்படையிலேதான் இது
உருவாக்கப்பட்டிருக்கிறது. முத்துக்குமாரன் அவர்களுடைய கமிட்டி
அறிக்கையின் அடிப்படையிலே அனைவருக்கும் கல்வித்
திட்டத்தினுடைய இயக்குநர் மதிப்பிற்குரிய திரு. விஜயகுமார், I.A.S.
அவர்களுடைய ஒரு நபர்க் குழுவும் இந்தத் திட்டத்தை எப்படி
செயல்படுத்தலாம் என்கின்ற விரிவான பரிந்துரைகளை அரசுக்குக்
கொடுத்திருக்கிறது. அதையொட்டி நம்முடைய மாண்புமிகு முதல்வர்
அவர்கள் கொள்கை விளக்கமாக நம்முடைய நிதிநிலை
அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தோடு
சேர்த்துத் தேர்வு வாரியம் தனியாக இருக்கிறது, அதையும் அதிலே
இணைத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பாகத் தேர்வு முறைகளிலே இன்றைக்கு நீங்கள் பார்த்தீர்கள்
என்று சொன்னால், மெ ரிக்குலேசன் 12 தேர்வுகள், மாநில வாரியம்

7 தேர்வுகள், ஆங்கிலோ இந்தியன் 11 தேர்வுகள், ஓரியண்டல் 8 தேர்வுகள் என்று பல்வேறு தேர்வுகளை எழுதுகிறார்கள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஐந்தே தேர்வுகளை அவர்கள் எழுத வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. எனவே, தேர்வு எணணிக்கையிலே சமச்சீர் நிலைமையை வரக்கூடிய ஆண்டுகளிலே எப்போது இதைச் செயல்படுத்துவீர்கள் என்று கேட்டார்கள், இந்த ஆண்டே தொடங்குகிறோம். சமச்சீர் கல்வியைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், அதற்கான கலைத் திட்டம், அதற்கான பாடத் திட்டம், பாடப் புத்தகங்களை எழுத வேண்டும், அதை அச்சடிக்க வேண்டும். இந்தக் கல்வியாண்டிலிருந்து அந்தப் பணிகளை நாங்கள் தொடங்க ஆரம்பிக்கிறோம். வரக்கூடிய கல்வி ஆண்டிலே முடிந்த அளவிற்கு ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளிலே கொண்டு வருவதற்கான முழு முயற்சிகளையும் இந்த அரசு நிச்சயமாக மேற்கொள்ளும். சமச்சீர் கல்வி முறையைக் கொண்டு வருவதிலே அரசு உறுதிபட இருக்கிறது என்பதை மீண்டும் ஒருமுறை நான் இங்கே தெளிவுபட உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, மிக முக்கியமாக இருக்கக்கூடிய கணினிக் கல்வியிலே இதுவரை ஏறத்தாழ 6,311 பள்ளிகளை 268 கோடி ரூபாய் செலவிலே, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கி இருக்கிறோம். திருக்குவளைக்கு நான் சென்று முதன் முதலாக ஆங்கில மொழி ஆய்வகத்தைத் தொடங்கி வைத்தேன். 56 பள்ளிகளிலே 2.80 கோடி ரூபாயிலே ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள், நான் கடந்த முறை அறிவித்தபோது 5 இடங்களிலே நடைபெறும் என்று சொன்னேன். அவ்வாறே கோவை, மதுரை, திருவாரூர், திருவள்ளூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. பொது மக்களிடத்திலிருந்து பல நன்கொடைகள் நம்முடைய துறைக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே, தொடர்ச்சியாக அது நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நூலகச் சீரமைப்பு மாநாடுகளை கோவை, தேனி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நடந்து, அவையும் நல்ல வரவேற்பினைப் பெற்றிருக்கின்றன. சென்னையிலே இருக்கக்கூடிய மாநில நூலகத்தை 100 கோடி ரூபாய் செலவிலே சர்வதேச தரத்திலே அமைப்பதற்காக கோட்டூர்புரத்திலே எட்டு ஏக்கர் நிலம் பெற்றிருக்கிறோம். அதற்கான



கட்டடங்களை எல்லாம் எப்படி வடிவமைப்பது என்று 9 கட்டடக் கலை வல்லுநர்கள் சர்வதேச அளவிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிலிருந்து Narayanarao Architects and Engineers-கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மே மாதம் இறுதியிலே அந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரக்கூடிய நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, உரையினுடைய நிறைவாக நான் வருவதற்கு முன்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் குறிப்பாக சிலருக்குத் தெரிவித்திட வேண்டும். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த உள்ளாட்சித் துறை, கல்வித் துறையோடு இணைந்து, கடந்த ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி, கல்விப் பணியிலே அவர்கள் உள்ளாட்சித் துறையின் மூலமாக அளப்பரிய பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன், கடந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைச் சீரமைப்பதற்காக முதன்முறையாக 135 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, பல்வேறு ஊராட்சிப் பள்ளிகளைச் சீரமைத்துத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் மீதமிருக்கக்கூடிய பல்வேறு ஊராட்சிப் பள்ளிகளை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எடுத்துக்கொள்கின்றபோது, அவற்றைச் சீரமைப்பதற்காக 60 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அஃதன்னியில், 850 பள்ளிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 9 கோடி ரூபாய் செலவிலே குடிநீர் வசதிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு, தடைபட்டுக் கொண்டிருக்கக்கூடிய 2,000 பள்ளிகளுக்கு 20 கோடி ரூபாய் செலவிலே இணைப்பினைப் புதுப்பித்துத் தருவதற்கும் நம்முடைய மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் ஆவன செய்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, அன்றைக்கு நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் பேசுகிறபொழுது, ஊரகப் பகுதிகளிலே உள்ள பள்ளிகளுக்குக் குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை, நகரப் பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்குக் குடிநீர்க் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று தெரிவித்து, அதை நீக்கிட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு

உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். நம்முடைய மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் அந்தக் குடிநீர்க் கட்டணமும் இரத்து செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற மகத்தான, ஒரு நல்ல செய்தியையும் இன்றைக்குத் தெரிவிப்பதற்குப் பணித்திருக்கிறார்கள். ஆக, கல்வித் துறையிலே இவ்வளவு செய்திருந்தாலும், ஊராட்சிப் பகுதிகளிலிருந்து நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய சார்பில் இவ்வளவு மகத்தான திட்டங்களை வழங்கியிருக்கக்கூடிய அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், இந்தத் துறையினுடைய சார்பிலும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-05*

அதைப்போல நபார்டு 8-வது திட்டத்தின்கீழே ஏறத்தாழ 451 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இங்கே நான் பேசுகிறபோதெல்லாம் ஒவ்வொரு கேள்வி நேரத்திலும் சொல்வேன், காம்பவுண்ட் சுவர் வேண்டுமென்று கேட்டால், உடனே எழுந்து, 8-வது திட்டம், நபார்டு திட்டத்திலே இருக்கிறது என்று சொல்வதை ஒரு வழக்கமாகக்கூட நான் வைத்திருந்தேன். ஆனால், நாங்கள் செல்கிறபோது, இந்த ஆண்டு Financial Year முடிந்துவிட்டது; தமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களைக் கொடுத்துவிட்டோம்; அடுத்த ஆண்டு பார்க்கலாம் என்று நபார்டிலே சொன்னார்கள். உடனடியாக விரைந்து நம்முடைய மத்திய நிதி அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. சிதம்பரம் அவர்களிடத்திலே நான் நேரடியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அனுமதியைப் பெற்று அவரைச் சந்தித்து, நிலைமையை விளக்கியவுடன் உடனடியாக நபார்டு வங்கியினுடைய அதிகாரிகளை அவர் அழைத்து, இந்த ஆண்டே தமிழகத்திற்கு அந்தத் தொகையை நீங்கள் உடனடியாக வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நான் டெல்லியிலிருந்து இங்கு திரும்பி வருவதற்குள்ளாக அந்த உத்தரவினை வழங்கினார்கள் நம்முடைய மத்திய நிதி அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த மன்றத்திலே அதற்காக நம்முடைய மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே நம்முடைய பாராளுமன்ற மாநிலங்களவையின் உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்கள், அங்கே



பாராளுமன்றத்தினுடைய ஆலோசனைக் குழுவிலே, அவர்கள் கல்வித் துறை ஆலோசனைக் குழுவினுடைய உறுப்பினராக இருக்கக்கூடிய காரணத்தாலே, அனைவருக்கும் கல்வி இயக்ககத்திலே, கட்டுமானப் பணிகளுக்கு புதிய கட்டடங்களை எழுப்புவதற்கு, கூடுதலாக நிதி ஒதுக்கீடு வேண்டும் என்று நாங்கள் கேட்டபோது, அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு, ஏறத்தாழ 78 கோடி ரூபாய் கூடுதலாக இந்த ஆண்டு இந்தப் பணிகளுக்காக மத்திய அரசின் நிதி ஒதுக்கத்தைப் பெற்றுத் (மேசையைத் தட்டும் ஒலி) தந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வித் துறையிலே நாங்கள் மேற்கொண்டிருக்கக்கூடிய செயல்பாடுகளுக்கு உற்ற தொடர்ந்து உறுதுணையாக விளங்கி, என்னோடு இணைந்து சிறப்பாகச் செயலாற்றக்கூடிய துறையினுடைய செயலாளர் திரு. குற்றாலிங்கம், இ.ஆ.ப., அவர்கள், அதைப்போல, அனைவருக்கும் கல்வி இயக்ககத்தினுடைய மாநிலத் திட்ட இயக்குநர் திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் செயலாளர் திரு. ராமசாமி அவர்கள், இயக்குனர்கள் மற்றும் இணை இயக்குனர்கள், பள்ளிக் கல்வித் துறையினுடைய அதிகாரிகள், ஏனைய அலுவலர்கள், குறிப்பாக, சிறப்பாக ஆசிரியப் பெருமக்கள் ஆகிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்புகளைப் பொறுத்தமட்டிலே நீங்கள் படித்துக்கொள்ளலாம். ஆனால், மிக முக்கியமான அறிவிப்புகளை மாத்திரம், நான் ஒன்றிரண்டை மாத்திரம் சொல்லி என்னுடைய உரையை நிறைவுசெய்ய விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவை நினைவு கூறும்வண்ணம், பள்ளிக் கல்வித் துறையில் நடப்பாண்டில் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவுக் கட்டடம் என்று பெயர் சூட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இன்னொரு மிக முக்கியமான அறிவிப்பு. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மின் கட்டணத்தை இனி அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பல உறுப்பினர்களும் இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். பல்வேறுபட்ட கோரிக்கைகளெல்லாம் நம்முடைய அண்ணன் தளபதி அவர்களுடைய கவனத்திற்கு வந்தது. அவ்வாறு வருகிறபோது, அவர்கள் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பல ஊராட்சிப் பிரதிநிதிகளாக

இருந்தாலும் சரி, பொது மக்களாக இருந்தாலும், கல்வி அமைப்புகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் அவரிடத்திலே சொல்கிறபோது, உடனடியாக அவர்கள் எங்களை அழைத்து, நம்முடைய மின் வாரியத் துறை அதிகாரிகளை அழைத்து, கல்வித் துறையினுடைய அதிகாரிகளை, அவருடைய துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்து, உடனடியாக ஒரு கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே இதை விவாதித்து, எந்தக் காலத்திலும், எந்தக் கட்டத்திலும், பள்ளிகளுக்கு உள்ள மின் இணைப்பைத் துண்டித்துவிடக் கூடாது என்று ஆர்வத்தோடு அவர்கள் செயலாற்றி, மிக அற்புதமாக அந்த அறிவிப்பினை இன்றைக்கு நாம் மகிழ்ச்சியடையக்கூடிய அளவில் அண்ணன் தளபதி அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

2008-2009 ஆம் ஆண்டு முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் போலவே தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான மின் கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்கின்ற அறிவிப்பினை நான் இங்கே வெளியிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான நிதி ஒதுக்கீடு பள்ளிக் கல்வித் துறையின் வரவு செலவுத் திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

அதைப்போலவே, இன்னொரு மிக முக்கியமான அறிவிப்பு. பேரூராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், இதுவரை ஊரகப் பகுதிகளிலே ஊராட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பள்ளிகளையெல்லாம் மராமத்து, பழுதுபார்க்கக்கூடிய பணிகளுக்கு, சீரமைக்கக்கூடிய பணிகளைச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கியிருந்தார்கள். தொடர்ச்சியாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு அந்தக் கோரிக்கைகள் வந்தன. இந்தப் பகுதிகளுக்கெல்லாம் செய்கிறீர்கள், பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய இத்தகையப் பள்ளிகளிலும் அந்தச் சீரமைப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். எனவே, அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களைப் புனரமைப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும்



இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என கோரிக்கைகள் வந்துள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் இசைவோடு 2008-2009 ஆம் ஆண்டு முதல், பேரூராட்சிகளிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளும் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புதிதாக நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று தரம் உயர்த்தினோம். நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தினால்தான் அடுத்து வரக்கூடிய SUCCESS திட்டத்திற்கு அது ஏதுவாக இருக்கும் என்ற வகையில், இந்த ஆண்டு, 2008-2009 ஆம் ஆண்டு, 1,005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

அதைப்போல, இந்த 1,005 பள்ளிகளுக்கு 1,005 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், கடந்த இரண்டாண்டுகளில் தரமுயர்த்தப்பட்ட 522 பள்ளிகளுக்கு 522 பணியிடங்களும், ஆக மொத்தம் 1,527 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் உருவாக்கப்படும். 2008-2009 ஆம் ஆண்டிற்கான காலிப் பணியிடங்களைப் பொறுத்தமட்டிலே பள்ளிக் கல்வியிலே 2,241, தொடக்கக் கல்வியிலே 4,061 ஆக மொத்தம் 6,302 பணியிடங்கள் நிரப்பப்படும்.

பள்ளி வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு சிறப்பான திட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்கள், கல்விப் புரவலர்கள் அரசுப் பணிகளை ஐந்தாண்டு காலத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திட்டம் துவக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, ஏனைய அறிவிப்புகளை நீங்கள் அன்புகூர்ந்து, காலத்தின் அருமைகருதி படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை நிறைவு செய்வதற்கு முன்பு, ஏற்கெனவே இங்கே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளை இந்தச் சபையிலே நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு அவைக்குறிப்பிலே @ ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பு (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். சங்ககாலப்

@ 825 முதல் 833 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

புலவர் கள்ளில் ஆத்திரையனார் புறநானூற்றுப் பாடலிலே ஒன்றைக் குறிப்பிடுவதைப்போல,

"எந்தை! வாழி; ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நிற் காண்குவரே;
நின் யான் மறப்பின், மறக்கும் காலை,
என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்,
என் யான் மறப்பின், மறக்குவென்"

என்று குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, எங்கள் இதயத்தை நீங்கள் திறந்து பார்ப்பீர்கள் என்று சொன்னால், அங்கே நீங்கள் எங்கும் காண்பது எங்கள் இதய வேந்தர் தலைவர் கலைஞர்தான் என்பதையும், எங்கள் உணர்வுகள் மங்கி ஊமையாகிவிடாது, எங்கள் வாழ்வின் ஒளியாக விளங்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மறவாத நன்றியுடையவராக என்றைக்கும் இருப்போம் என்று சொல்லி, நான் இவ்வுரையை நிறைவு செய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு அரசு கோரியிருக்கக்கூடிய தொகையினை நீங்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு நன்றியோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. கோபிநாத். (குறுக்கீடு) One minute. திரு. கோபிநாத்.

**திரு. கே. கோபிநாத்:** Hon. Speaker Sir, மாண்புமிகு அமைச்சர் கொடுத்த பதிலுக்கு நிரம்ப நன்றி. அதேபோல நான் நிறைய தடவை கேட்டிருக்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும். அதை நான் பார்த்தது கிடையாது. கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். அதை இந்த ஆட்சியிலேதான் பார்த்திருக்கிறேன். அதற்கு என் சார்பிலேயும், என் தொகுதி மக்கள் சார்பிலேயும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தெலுங்கு மக்கள் சார்பிலேயும் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டாருக்கும் மாண்புமிகு அண்ணன் தளபதியாருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ்.



***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், அவர்களுடைய தலைமையின்கீழ் நம்முடைய பள்ளிக் கல்வித் துறை ஒரு சிறப்பான செயல் திட்டத்தை நிறைவேற்றி, இன்று அகில இந்திய அளவிலே School Education-ஐப் பொறுத்தவரையிலே top performing State என்கிற அந்தஸ்தையும் பெற்றிருக்கிறது. அதற்காக எங்களது பாராட்டுகள். தற்பொழுது நான் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, C.B.S.E. Schools -Central Board of Secondary Education-அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நம்முடைய அரசு, நம்முடைய துறை no objection certificate தருவதில்லை. மத்திய அரசு ஊழியர்கள், அதிலும் பொதுவாக multi-national companies-ல் வேலை பார்க்கக்கூடிய அந்தப் பெற்றோர்கள் எல்லோரும் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு ஏன் தடையில்லாச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை என்று தொடர்ந்து கேட்டு வருகிறார்கள். இந்த ஆண்டிலாவது அதை வழங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வது ஒரு முக்கியமான கருத்து. அரசைப் பொறுத்தமட்டிலே C.B.S.E. பள்ளிகள் துவங்கவே கூடாது என்ற நிலைப்பாட்டிலே அரசு நிச்சயமாக இல்லை. நான் தெளிவுபடச் சொல்கிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய பாடத் திட்டத்தின் அடிப்படையிலே C.B.S.E. பள்ளிகளை இங்கே துவங்குவதிலே அரசுக்கு நிச்சயமாக எந்தவிதமான தடையும் கிடையாது. எதிலே எங்களுக்கு ஒரு சிறு தயக்கம் இருந்தது என்று சொன்னால், exodus என்று சொல்லக்கூடிய வகையிலே matriculation பள்ளிகள், ஏற்கெனவே இருக்கக்கூடிய matriculation பள்ளிகள் முற்றிலுமாக total departure from the existing system என்று அவர்கள் அப்படிப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடுமோ என்ற ஒரு ஐயப்பாடுதான் எங்களுக்கு இருந்தது. இருந்தாலும்கூட, அவற்றைக் கொடுக்கக் கூடாது, அறவே தடுத்து நிறுத்த வேண்டுமென்று நாங்கள் நிச்சயமாக நினைக்கவில்லை. அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துக்காட்டியிருப்பதைப்போல வரக்கூடிய இந்தக் கல்வியாண்டிலே நிச்சயமாக அத்தகைய விண்ணப்பங்களை தகுதியினுடைய அடிப்படையிலே பரிசீலித்து, இந்த விஷயத்தை மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சென்று, ஒரு நல்ல தீர்வினைக் கொடுக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்களையும் சீரமைப்புகளையும் கொண்டுவந்து ஒரு மகத்தான சாதனையை முன்னோக்கிச் செல்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, இந்த உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள் என்பது—அதாவது கிராமப்புறங்களிலே நலிந்த நிலையில் வாழ்கின்ற, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர், ஏழை எளிய மக்கள் அந்தக் கல்வியைப் படித்து முடித்துவிட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமா, கிடைக்காதா, தங்கள் வாழ்வு ஒளிபெறுமா, பெறாதா என்ற ஏக்கத்தோடு, கனவோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 35,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்த மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்களும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் நலிந்த நிலையில் இருந்து படித்து வந்த அந்த உடற்கல்வி ஆசிரியர்களை வருமாண்டுகளில்—தமிழகம் முழுவதும் தற்போது இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. நான் ஏற்கெனவே கேட்டதுபோல, 250 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில், (மணியடிக்கப்பெற்றது) அந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, உடற் கல்வியைப் பொறுத்தமட்டிலே, அரசு நிச்சயமாக அதிலே ஆர்வமாக இருக்கிறது. பல்வேறு இடங்களிலே சிறப்பாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு இருப்பதோடு இந்த ஆண்டு இசை ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள் என்று பலருக்கும் நாங்கள் பணி வழங்கியிருக்கிறோம். உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் பணி வழங்குவதிலே அரசுக்கு ஆட்சேபணை இல்லை. வரக்கூடிய



ஆண்டுகளில், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, எந்த அளவிலே அந்த ஆசிரியர்களை நியமிக்கலாம் என்பதுகுறித்து அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றபோது, சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பொறுத்தவரையில், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்குத் தற்போது இருக்கின்ற அரசாணையைத் தளர்த்தி infrastructure-அதாவது, உள் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக, நிதியைச் செலவிடமுடியுமா என்று கேட்டபோது, நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள், 'இதுகுறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும்; நல்ல யோசனைதான்' என்று சொல்லி, 'இது பரிசீலிக்கப்படும்' என்றும் சொன்னார்கள்.

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது. இப்போது சென்னையிலே 14 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. எல்லாச் சட்டமன்றத் தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒரு கோடி ரூபாய்க்கு மேலே தேங்கிவிட்ட நிலையில், அதைச் செலவு செய்யமுடியாமல் இருக்கின்ற நிலைமையில், 'தினமலர்' போன்ற பத்திரிகைகளில் எல்லாம் அதை criticize செய்து எழுதியிருப்பது, ஏதோ, சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே கவனம் செலுத்துவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கும்போது, அதை உருப்படியாகச் செலவு செய்வதற்கு வேண்டிய வழிவகையை நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நல்ல யோசனைதான் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. இன்னும்கூடச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீங்கள் வெட்டுத் தீர்மானத்திலேகூட இந்த முறை அதை வலியுறுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்; நான் படித்துப் பார்த்தேன்.

சென்னையைப் பொறுத்தமட்டிலே, இங்கேயிருக்கக்கூடிய சூழ்நிலை வேறு. ஆனால், மற்ற ஊராட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய சூழ்நிலை வேறு. சென்னையைப் பொறுத்தமட்டிலே, நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்து அரசினுடைய தீவிர பரிசிலனையிலே இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் இப்போது கலந்துபேசியபோதுகூட, அவர்கள் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், ஊரகப் பகுதிகளிலே அரசாங்கப் பள்ளிகளுக்கே இன்னும் பல இடங்களிலே அந்தக் கட்டமைப்பு வசதிகளை நாம் உருவாக்கித் தரவேண்டியிருக்கிறது. "Rome was not built in a day" என்று சொல்வார்கள். அதைப்போல, ஒரே கட்டத்திலே உடனே செய்துவிடமுடியாது. பல சூழ்நிலைகளிலே, பல்வேறு காலக்கட்டங்களிலே அதை நிறைவேற்றுகிறபோது, முதற்கட்டமாக அரசாங்கப் பள்ளிகளிலே நாம் செய்யவேண்டும். எனவேதான், இப்போது இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் நிதியைக் கொண்டு அரசாங்கப் பள்ளிகளுக்குச் செய்துவிட்டு, அதிலே ஒரு தன்னிறைவு வந்தால், அடுத்து நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளுக்கு நாம் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்கமுடியும். சென்னையைப் பொறுத்தமட்டிலே, நீங்கள் சொல்லியிருக்கக்கூடியது ஒரு peculiar situation. எனவே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அது அரசினுடைய தீவிரப் பரிசிலனையில் இருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,690,35,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.161,65,02,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

49. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (தமிழ்நாடு) 2006-2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 42/2005) 12 (3) (எப்) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

50. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

121. மானியக் கோரிக்கை எண் 43 - பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-20[illegible]

122. பள்ளிக் கல்வித் துறை பற்றிய "[illegible]க்கள் சாசனம்", 2008-20[illegible] (தமிழ், ஆங்கிலம்)

228381.

## இணைப்பு-I

[635 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

### மாண்புமிகு கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் அனைத்து பள்ளிகளிலும் இளம்சிறார் இருதய பரிசோதனைத் திட்டம் தொடங்குதல்.

1. பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் இருதய குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையளிக்க ஒரு புதிய திட்டம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான 3-6-2008 முதல் தொடங்கப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதல்வர் இளம்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஜூன் மாதம் முழுவதும் சிறப்பு முகாம்கள் அனைத்து பள்ளிகளிலும் நடைபெறும். அனைத்து பள்ளிகளுக்கும் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட மருத்துவக் குழுக்கள் சென்று பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதித்து இருதய நோய் உள்ள குழந்தைகள் கண்டறியப்படுவார்கள். இவர்களுக்குத் தேவையான அறுவை சிகிச்சை அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் அளிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தொடர் திட்டமாக நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பிறவிக் குறைபாடுகளினாலும், ரூமாட்டிக் காய்ச்சலினாலும் இருதய பாதிப்பு குறிப்பிடத்தக்க அளவில் குழந்தைகளிடையே காணப்படுகிறது. இதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அறுவை சிகிச்சை செய்திட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் ஒத்துழைப்புடன் தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்ட நிதி உதவியுடன் ரூபாய் 5 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட இளம்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால் மேலும் அதிக எண்ணிக்கையில் இருதய பாதிப்புள்ள இளம்சிறார்கள் பயனடைவார்கள்.

### புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்

3. தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கேற்ப கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவை என்பதை கடந்த 2 ஆண்டுகளாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இதன் விளைவாக, தற்போது தேசிய ஊரக நல்வாழ்வு இயக்கத்தின் நிதி உதவியுடன் தமிழகத்தில் தேவையின் அடிப்படையில் 116 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூபாய் 42 கோடியே 59 இலட்சம் செலவில் நடப்பாண்டிலேயே தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### புதிய மருத்துவக் கல்லூரிகள்

4. பின்தங்கிய மாவட்டங்களான பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2 புதிய மருத்துவக் கல்லூரிகள் நடப்பாண்டில் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணிநேர பிரசவ சேவை விரிவாக்கம்

5. தமிழ்நாட்டில் 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணிநேர பிரசவ சேவை 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது செயல்படுகின்றது. இத்திட்டம் இந்த ஆண்டு எஞ்சிய 421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். கூடுதலாக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,263 செவிலியர்களும், 842 துப்புரவுப் பணியாளர்களும் ரூபாய் 6 கோடி 6 இலட்சம் செலவில் நியமனம் செய்யப்படுவர்.

### ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணிகள் மற்றும் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு இலவச உணவு

6. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவத்திற்காக சேரும் கர்ப்பிணிகள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை



செய்துகொள்வோருக்கு சுய உதவிக் குழுக்கள்மூலம் 3 வேளை உணவு 3 தினங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ.2.34 கோடி செலவாகும். மேலும், போக்குவரத்து வசதி குறைவான மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய கிராமப்புற கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ காலத்தில் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வந்து செல்ல பல மணிநேர கால அவகாசம் தேவைப்படுவதால் அவர்களது உத்தேச பிரசவ தேதிக்கு முன்னர் ஒரு வார காலம் பெண் உறவினருடன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கி பிரசவம் பார்த்துச் செல்ல அவர்களுக்கு 3 வேளை உணவு தங்கி செல்லும் நாட்களில் வழங்கப்படும். இதற்கென ரூ.50 இலட்சம் செலவிடப்படும். மேற்கூறிய இரு திட்டங்களும் ரூ.2 கோடியே 84 இலட்சம் செலவில் தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

### ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனைக்கு வரும் கர்ப்பிணிகளுக்கு இலவச சத்துணவு வழங்குதல்

7. ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பகால பரிசோதனையின்போது ஸ்கேன், இரத்தப் பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இந்த பரிசோதனை முடிவதற்கு சுமார் 3 மணி நேரம் ஆகிறது. இதனால் கர்ப்பிணிகள் பசியுடன் வீடு திரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனை செய்துகொள்ள வரும் கர்ப்பிணிகள் அனைவருக்கும் பரிசோதனை முடிந்தபின் இலவச சத்துணவு வாரம் ஒருமுறை வழங்கப்படும். இதற்கான செலவு, தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள மருத்துவ பயனாளிகள் நலச் சங்க நிதியிலிருந்து செலவிடப்படும்.

### நடமாடும் மருத்துவக் குழு

8. தொலைதூர கிராமங்களில் வாழும் மக்களுக்கு தங்கள் இருப்பிடத்திலேயே தேவையான மருத்துவ வசதி அளிக்கும் நோக்கத்தில் 146 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஆரம்பித்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மேலும்

239 நடமாடும் மருத்துவக் குழுக்கள் ரூபாய் 22 கோடியே 44 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் மேம்பாடு**

9. தேசிய ஊரக நல்வாழ்வு இயக்க நிதி உதவியுடன் 50 வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கருவிகள் வழங்குவதற்கும், அவசர பேறுகாலம் மற்றும் இளஞ்சிசு கவனிப்பு பணிகளுக்கும், விபத்துகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், மருத்துவ வல்லுநர்களின் சேவைகளுக்குக்காகவும் ரூபாய் 55 கோடியே 70 இலட்சம் செலவிடப்படும்.

**எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள்**

10. தற்போது மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் நோய் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்தச் சேவை கிராமப்புற மக்களுக்கும் கிடைத்திடும் வகையில் 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் இக்கருவி ரூ.20 கோடி செலவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இரத்த சுத்திகரிப்புக் கருவிகள்**

11. தற்போது சர்க்கரை நோய் மற்றும் அதிக இரத்த அழுத்தம் காரணமாக சிறுநீரகம் செயலிழப்பு சிலருக்கு ஏற்படுகிறது. இவர்களுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைமூலம் மட்டுமே நிரந்தர தீர்வு கிடைக்கும். பல்வேறு காரணங்களினால் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை குறைந்த அளவிலேயே நடைபெறுவதால் வாரம் குறைந்தது இரு முறையேனும் இரத்தம் சுத்திகரிப்பு செய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கு தனியார் மருத்துவமனைகளில் ஒவ்வொரு முறையும் ரூ.1,500 செலவிட வேண்டியுள்ளது. இதனால் குறிப்பாக ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, முன்னோடி திட்டமாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் தலா 10 இரத்த சுத்திகரிப்புக் கருவிகள் ரூ.1.50 கோடி செலவில் நிறுவப்படும். ஏழை மற்றும் நடுத்தர மக்கள் குறைந்த செலவில் இவ்வசதியைப் பெறும்வகையில் ஒருமுறை இரத்த சுத்திகரிப்பு செய்வதற்கு குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும். 10 சதவீத ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக இரத்த சுத்திகரிப்புச் சேவை அளிக்கப்படும். தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் இச்சேவை அளிக்கப்படும்.





**இரத்த சேமிப்பு வங்கி மேம்படுத்துதல்**

12. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தில் உள்ள இரத்த வங்கி சிறப்பு வசதிகளுடன் ரூபாய் 4 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**160 மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் தொடங்குதல்**

13. பிரசவ காரணங்களினால் சில நேரங்களில் அதிக இரத்தப் போக்கினால் இறப்பு ஏற்படுகிறது. இந்த இறப்புகளை தவிர்ப்பதற்காக அவசர சிகிச்சை அளிக்க இரத்தம் தேவைப்படுகிறது. எனவே, 160 அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு மையங்கள் ரூ. 6 கோடியே 40 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**புதிய ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு சிகிச்சை மையங்கள்**

**Comprehensive Emergency Obstetric & New Born Care Centres**

14. தமிழகத்தில் 98 மருத்துவமனைகளில் தற்சமயம் 24 மணிநேர ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் இறப்பு மற்றும் சிசு இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. மூன்றாம் கட்டமாக இச்சேவை நடப்பாண்டில் மேலும் 27 மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்படும். இந்த மருத்துவமனைகளுக்கு கூடுதலாக 108 மகப்பேறு மருத்துவர்கள், மயக்க மருத்துவர் மற்றும் குழந்தை நல மருத்துவர்களும் 162 செவிலியர்களும் நியமிக்கப்படுவார்கள். இம்மருத்துவமனைகளுக்கு ரூபாய் 2 கோடி 70 இலட்சம் செலவில் கூடுதலாக மருத்துவ கருவிகள் வழங்கப்படும்.

[2008 ஏப்ரல் 24

**அரசு ஸ்டான்லி மருத்துவமனையை தரம் உயர்த்துதல்**

15. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை ரூபாய் 100 கோடி செலவில் மேம்படுத்தப்படுமென கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான கட்டடப் பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இம்மருத்துவமனையின் விரிவாக்கத்திற்காக 10 ஏக்கர் நிலம் ஒதுக்கி இம்மாமன்றத்தில் அறிவித்தார்கள். நடப்பாண்டில் சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு இணையாக அரசு ஸ்டான்லி மருத்துவமனை ரூபாய் 75 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

**நவீன வசதிகளுடன் கூடிய அவசரகால மருத்துவ ஊர்தி சேவை**

16. அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தருணங்களில், பொது மக்கள் உடனடியாக செல்லும் வகையில் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளில் உள்ளோரும் ஒரே தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை இலவசமாக பெறுவதற்கு ஒரு புதிய திட்டம் நடப்பாண்டில் தொடங்கப்படும். கணினிமயமாக்கப்பட்ட மத்திய கட்டுப்பாட்டு அறை மற்றும் இடம் அறியும் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்ட மருத்துவ ஊர்திகளோடு அவசர கால முதலுதவி பயிற்சி பெற்ற தொழில்நுட்புனர்களுடன் இச்சேவை முதற்கட்டமாக ரூபாய் 20 கோடி செலவில் தொடங்கப்படும். இதனோடு காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை சேவையும் ஒருங்கிணைக்கப்படும்.

**புற்றுநோய் சிகிச்சைக் கருவிகள்**

17. சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள புற்று நோய் சிகிச்சைப் பிரிவுகளுக்கு கதிரியக்கக் கருவிகள் ரூபாய் 17 கோடியே 50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 24]

**புதிய இந்தியமுறை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் தொடங்குதல்**

18. ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதன்முதலாக வர்மம், தொக்கணம், பஞ்சகர்மா ஆகிய இந்திய மருத்துவமுறையிலான சிகிச்சைப் பிரிவுகள் நடப்பாண்டில் தொடங்கப்பட உள்ளன. முதற்கட்டமாக, 134 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 13 கோடியே 40 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு புதிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படும்.

**புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்குதல்**

19. வேலூர் மற்றும் தேனி அரசு மருத்துவப் பள்ளிகளில் தலா ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் ரூபாய் 4 கோடி செலவில் 2 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் நடப்பாண்டில் நிறுவப்படும். இதனால் ஆண்டுதோறும் 100 செவிலியர் பயிற்சி மாணவியர்கள் கூடுதலாக பயிற்சி பெற ஏதுவாகும்.

**தனியார் துறையில் செவிலியர் கல்லூரிகள் தொடங்குதல்**

20. நம்நாட்டில் 21 இலட்சம் செவிலியர்களும், 3 இலட்சம் பல் மருத்துவர்களும் தேவை, ஆனால் தற்போது 11 இலட்சம் செவிலியர்களும் 73,000 பல் மருத்துவர்களும் உள்ளனர் என்றும், எனவே 10 இலட்சம் செவிலியர்கள் மற்றும் 2 இலட்சம் பல் மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பதாக திட்டக் கமிஷன் அண்மையில் தெரிவித்துள்ளது. மத்திய அரசு அதிக அளவில் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளை தொடங்கிட மாநில அரசுகள் முன்வரவேண்டும் என வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் இந்த பற்றாக்குறையை குறைப்பதற்காக கிராமப் பகுதிகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளி, செவிலியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றை தனியார்களும் தொடங்கிட விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசு அனுமதி அளித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 63 தனியார் சுயநிதி நிறுவனங்கள் பி.எஸ்.ஸி. செவிலியர் படிப்பை நடத்தவும், 51 தனியார் சுயநிதி நிறுவனங்கள் செவிலியர் பட்டயப் படிப்பை நடத்தவும், 10 தனியார் சுயநிதி நிறுவனங்கள் பல் மருத்துவக் கல்லூரியை தொடங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அரசு பரிசீலித்து அனுமதி வழங்கும்.

**நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள்**

21. கடந்த நிதியாண்டில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி வழங்கப்பட்டது. இந்த டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி நடப்பாண்டில் 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 10 கோடி செலவில் (தலா ரூபாய் 1 கோடி வீதம்) வழங்கப்படும். இக்கருவிகளுக்கு எக்ஸ்ரே பிலிம் தேவையில்லை. எந்தவொரு சிகிச்சை பிரிவிலிருந்தும் இவற்றின்மூலம் நோய்களைக் கண்டறிந்து விரைவாகச் சிகிச்சை அளிக்கலாம்.

**பேறுகாலம் மற்றும் இளம் சிசு கவனிப்பு பணிகளை மேம்படுத்துதல்**

22. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் பேறுகாலம் மற்றும் இளம் சிசு கவனிப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் வசதிகள் தேசிய ஊரக நல வாழ்வு இயக்கத்தின்கீழ் ரூபாய் 9 கோடியே 30 இலட்சம் செலவில் செய்து தரப்படும்.

**மருத்துவ பயனாளிகள் நலச் சங்கங்கள்**

23. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் 1,685 பயனாளிகள் நலச் சங்கங்களுக்கு மருத்துவமனைகள் மேம்பாட்டிற்காக ரூபாய் 19 கோடியே 41 இலட்சம் நிதி நடப்பாண்டு வழங்கப்படும்.

**நிபந்தனையற்ற நிதி**

24. அவசர செலவுகளுக்காக நிபந்தனையற்ற நிதியாக 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தலா ரூ.50,000 வீதமும், 8,706 துணை சுகாதார நிலையங்களுக்கு நிபந்தனையற்ற நிதியாக தலா ரூபாய் 10,000 வீதம் ரூ.12 கோடி 25 இலட்சம் நிதி வழங்கப்படும்.

**ஆண்டு பராமரிப்பு நிதி**

25. வருடாந்திர பராமரிப்பு நிதியாக அரசு கட்டடங்களில் இயங்கும் 1,376 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 6,358 துணை சுகாதார நிலையங்களுக்கும் சிறு சிறு பழுதுபார்ப்புகள் மற்றும் புதுப்பித்தலுக்காக ரூ. 15 கோடியே 70 இலட்சம் நிதி வழங்கப்படும்.



**பேரிடர் மேலாண்மை மையம்**

26. சென்னை அரசு பொது மருத்துவமனையில் ரூபாய் 12 கோடியே 47 இலட்சம் செலவில் பேரிடர் மேலாண்மை மையம் மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடங்கப்படும். இதனால் எதிர்பாராமல் நிகழும் சுனாமி, பூமியதிர்ச்சி, பெரும் தீவிபத்து மற்றும் இரயில் விபத்து காலங்களில் விரைவாகவும், முழுமையாகவும் அனைவருக்கும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள இந்த மேலாண்மை மையம் உதவிகரமாக இருக்கும்.

**கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா**

27. கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. அதற்கு சிறப்பு சேர்க்கும் முகமாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புதிய வசதிகளை உருவாக்க மாண்புமிகு சிறு தொழில்கள் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்து, அதன் பரிந்துரையின்பேரில் இந்த மருத்துவமனையின் தரம் மேம்படுத்தப்படும்.

**சித்த மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் மேம்பாடு**

28. சென்னை மற்றும் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள், நவீன ஆய்வகக் கூடங்கள், தேவையான கருவிகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 7 கோடியே 87 இலட்சம் நிதி வழங்கி மாதிரி கல்லூரிகளாக மேம்படுத்தப்படும்.

29. பாளையக்கோட்டை அரசினர் சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை அரசினர் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனைகளில் மருந்துசெய் நிலையங்களை ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும். மருந்தின் தரமும் உற்பத்தித் திறனும் இதனால் அதிகரிக்கும்.

**வீடு தேடிவரும் பிறப்புச் சான்றிதழ்**

30. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. இம்மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் அந்தந்த மருத்துவமனையிலேயே

[2008 ஏப்ரல் 24

வழங்கப்படும். துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களில் அல்லது அவர்களது வீடு தேடிச் சென்று சுகாதார ஆய்வாளர்கள் மூலமாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இதனால் பிறப்பு சான்றிதழ் பெறுவது மிகவும் எளிதாக்கப்படுகிறது.

**கர்ப்பப்பை மற்றும் மார்பகப் புற்று நோய் கண்டறிதல்**

31. மார்பகப் புற்று நோய் மற்றும் கர்ப்பப்பை புற்று நோய் பெண்களை அதிகமாகப் பாதிக்கிறது. தகுந்த, காலமுறை பரிசோதனைகளை மேற்கொள்வதன்மூலம் சரியான நேரத்தில் புற்று நோய் தோன்றும்போதே கண்டுபிடிக்க இயலும். ஆரம்பக்கட்டத்திலேயே கண்டறியப்படும் புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்த இயலும். எனவே, தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் நிதியாதாரத்தைக் கொண்டு தமிழகத்தில் ஒருங்கிணைந்த புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

**புகையில்லா சென்னை மாநகரம்**

32. புகையிலை மற்றும் புகைப் பிடிப்பவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி அதன் பயன்பாட்டை கணிசமாகக் குறைக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. புளூம்பர்க் என்கிற அமெரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவன உதவியுடன் அடுத்த 2 ஆண்டுகளில் சென்னை மாநகரத்தை புகையில்லா மாநகரமாக பிரகடனப்படுத்த ரூபாய் 2 கோடியே 80 இலட்சம் செலவில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**சித்த மருத்துவர்கள் நியமனம்**

33. இந்திய மருத்துவத் துறையில் வெகுநாட்களாக நிரப்பப்படாமல் இருந்த 104 சித்த மருத்துவர்கள் 25 ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் 17 யுனானி மருத்துவர்கள் ஆக மொத்தம் 146 இந்திய மருத்துவமுறை மருத்துவர்கள் வெகுவிரைவில் நியமிக்கப்படுவார்கள்.



2008 ஏப்ரல் 24]

**செவிலியர் மாணவியர் விடுதி**

34. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் மாணவியர் தங்குவதற்காக ரூபாய் 50 இலட்சம் செலவில் தங்கும் விடுதி கட்டித்தரப்பட உள்ளது.

**புதிய பேருந்துகள்**

35. சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி ஆகிய 4 மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் உபயோகத்திற்காக ரூபாய் 61 இலட்சத்து 88 ஆயிரம் செலவில் பேருந்துகள் நடப்பாண்டில் வழங்கப்படும்.

36. சென்னை மற்றும் மதுரை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் உபயோகத்திற்காக ரூபாய் 33 இலட்சத்து 35 ஆயிரம் செலவில் பேருந்துகள் வழங்கப்படும்.

**புதிய அவசர விபத்து சிகிச்சை மையங்கள்**

37. விபத்தினால் பாதிக்கப்படுவோரின் உயிரிழப்பினை தடுக்கும் நோக்கில் மத்திய அரசின் நிதி உதவியுடன் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.8 கோடி செலவிலும், வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 7 கோடி செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.9 கோடி செலவிலும் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும்.

**கிராம சுகாதாரம், நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள்**

38. கடந்த ஆண்டு முதல் தமிழகத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் செயல்படும் 12,618 கிராம சுகாதாரம், நீர் மற்றும் துப்புரவுக் குழுக்களின் நலவாழ்வு செயல்பாட்டிற்காக ரூ.12.61 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 561 பேரூராட்சிகளில் 2,540 கிராம சுகாதாரம், நீர் மற்றும் துப்புரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 15,158 கிராம சுகாதாரம், நீர் மற்றும் துப்புரவுக் குழுக்களின் செயல்பாட்டிற்கு இந்த ஆண்டு ரூ.15.15 கோடி நிதி வழங்கப்படும். இந்த நிதி, கிராம ஊராட்சிகள்

மற்றும் பேரூராட்சிகளில் நலவாழ்வு திட்டங்களை செயல்படுத்துவதற்கும் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும், சுற்றுப்புறச் சூழலை பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

**அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி**

39. சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிக்கு புதியதாக 50 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ரூ.90 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**இந்திய மருத்துவமுறை மருந்துகளின் தரக்கட்டுப்பாடு**

40. இந்தியமுறை மருந்துகளுக்கு இதுநாள்வரை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரால் உரிமம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது ரூ.76.75 இலட்சம் செலவில் இந்திய மருத்துவமுறை மருந்துகளுக்கென தனியாக மருந்து உரிமம் வழங்கும் மையம் சென்னையில் அமைக்கப்படும். சித்த மருத்துவர்களாலேயே ஆய்வு செய்யப்படுவதால் மருந்தின் தரம் கண்காணிக்கப்படும்.

**இந்திய மருத்துவமுறைப் பிரிவுகள்**

41. தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் இந்திய மருத்துவமுறைப் பிரிவுகளை படிப்படியாக மாநில அரசு அமைத்து வருகிறது. இதுவரை 417 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவமுறைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் மேலும் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.61.10 இலட்சம் செலவில் இந்திய மருத்துவ முறை பிரிவுகள் தொடங்கப்படும்.

**மின்னாக்கி மற்றும் மின்தூக்கி வழங்குதல்**

42. கிருஷ்ணகிரி மற்றும் பத்மநாபபுரம் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளுக்கு கட்டட வசதியுடன் கூடிய 75 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்னாக்கி ரூ.42 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

43. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மின்தூக்கி நடப்பாண்டில் அமைக்கப்படும்.





**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்**

44. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் 1997 ஆம் ஆண்டு முதல் 2001 வரையில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டன. தற்போது, 1,383 ஆரம்ப சுகாதார நிலையங்கள், சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அதிக அளவில் மக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். மீதமுள்ள 38 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட ரூ.6.84 கோடி நிதி தேவைப்படுகிறது. இந்த 38 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டால் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் 100 விழுக்காடு ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் நிலை உருவாகும். இதுதொடர்பாக நிதி உதவி வழங்க நபார்டு வங்கி பரிசீலனை செய்து வருகிறது. எனவே, 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.6.84 கோடி நிதி செலவில் விரைவில் கட்டி முடிக்கப்படும். நடப்பாண்டில் சிவகங்கை மாவட்டம் முனிகார்மாங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.18 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்.

**உணவு பகுப்பாய்வகக் கட்டடம்**

45. பாளையங்கோட்டை மற்றும் தஞ்சாவூர் உணவு பகுப்பாய்வகங்களுக்கு நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.27.65 இலட்சம் செலவில் கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள் நடப்பாண்டில் கட்டித்தரப்படும்.

**நவீன ஆய்வகக் கருவிகள்**

46. நோய்க்கான மூலகாரணங்களை கண்டறிந்திட உதவும் அதிநவீன பி.சி.ஆர். கருவி ரூ.22.5 இலட்சம் செலவில் கிண்டி கிங் நிலையத்தில் நிறுவப்படும். மாநிலத்தில் தொற்று நோய் பரவுதலை முன்கூட்டியே துல்லியமாக அறிந்து தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள இக்கருவி பெரிதும் உதவும்.

47. எச்.ஐ.வி. கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்களில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளின் நோய் எதிர்ப்பு சக்தியினை கண்டறியும் சிடி4 பரிசோதனை கருவிகள் தற்போது தாம்பரம், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை, மதுரை, சேலம், நாமக்கல், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 இடங்களில் உள்ளன. பரிசோதனை காலதாமத்தை தவிர்க்கும்பொருட்டு

சிடி 4 கருவிகள் கூடுதலாக தேனி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், தருமபுரி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மையங்களுக்கு நடப்பாண்டில் ரூ. 2 கோடியே 40 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

48. மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகத்தில் செயல்படும் மருந்தாய்வுக் கூடத்தில் உள்ள பழைய தளவாடங்கள் மற்றும் கருவிகளுக்கு பதிலாக புதிய தளவாடங்கள் மற்றும் கருவிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**மாமோகிராம் கருவி**

49. மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய மாமோகிராம் (Mammogram) என்ற நவீன கருவி ரூ.90 இலட்சம் செலவில் சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

**அதிநவீன சலவையகங்கள்**

50. வேலூர் மாவட்டம், முசிறி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் அதிநவீன சலவையகங்கள் ரூ. 40 இலட்சம் செலவில் தொடங்கப்படும். இதனால் இந்த 2 மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திற்கும் நவீன முறையில் சலவை செய்யப்பட்ட தூய்மையான படுக்கை விரிப்புகள், துணிகள் வழங்கப்படும்.

**ஆரம்ப சுகாதார நிலைய மேம்பாடு**

51. காஞ்சிபுரம் மாவட்டம் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கேட்டலிஸ்ட் அறக்கட்டளை என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 1.25 கோடி செலவில் 30 படுக்கை வசதிகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு நவீன கருவிகளும் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதத்திலிருந்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

**செல்போன்கள்**

52. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், 5 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர்களுக்கு செல்போன்கள் வழங்கப்படும்.



**செமி ஆட்டோ அனலைசர்கள் மற்றும் ஸ்கேன் கருவிகள்**

53. கிராம மக்களும் நவீன பரிசோதனை வசதி பெறும்வகையில், செமி ஆட்டோ அனலைசர் எனப்படும் நவீன ஆய்வகக் கருவி கடந்த நிதியாண்டில் முதல்கட்டமாக 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டது. இவை வருமுன் காப்போம் திட்ட முகாம்களில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் கட்டமாக மேலும் 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செமி ஆட்டோ அனலைசர்கள் ரூ.2.00 கோடி செலவில் இவ்வாண்டு வழங்கப்படும்.

54. தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின்கீழ் அடிப்படை அவசர பேறுகாலம் மற்றும் இளஞ்சிசு கவனிப்பு வசதிகள் உள்ள 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான 225 ஸ்கேன் கருவிகளும் மற்றும் அறுவையரங்குகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களும் ரூ.5 கோடி செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும்.

**புதிய முதுநிலை பட்ட மேற்படிப்புகள்**

55. அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம்சாராத் துறை ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. மருத்துவம்சாரா துறைகளான உடற்கூறியல் (Anatomy), உடல் இயங்கியல் (Physiology), நோய்க்குறியியல் (Pathology), மருந்தாக்கவியல் (Pharmacology), நுண்ணுயிரியியல் (Microbiology) உயிரிவேதியியல் (Bio-chemistry) போன்ற துறைகளில் முதுநிலை பட்ட மேற்படிப்புகளை டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தொடங்கிட இவ்வரசு திட்டமிட்டுள்ளது. எனவே, வரும் கல்வியாண்டிலிருந்து மருத்துவம்சாராத் துறைகளில் முதுநிலை பட்ட மேற்படிப்புகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

56. காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனையில் 2 வருட மேற்பட்டப்படிப்பான எம்.எஸ்ஸி. மருத்துவ இயற்பியல் படிப்பு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் தொடங்கப்படும். இந்த பயிற்சி பெற்றவர்களை புற்றுநோய் மருத்துவப் பிரிவுகளில் பணிநியமனம் செய்வதால் சிகிச்சையின் தரம் மேம்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 24

**மேலாண்மை பயிற்சி**

57. அரசு மருத்துவமனைகளை மேலாண்மை செய்யும் மருத்துவ அலுவலர்களின் சேவைத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில் 10 நாட்கள் 270 முதுநிலை குடிமை மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி எதிர்வரும் ஜூன் 2008 முதல் தொடங்கப்படும். இதற்கென தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.80 இலட்சம் செலவிடப்படும்.

**சிறப்புப் பயிற்சிகள்**

58. கிராமங்களில் பாம்பு, தேள், போன்றவற்றால் ஏற்படும் விஷக்கடி, பூச்சிக்கொல்லி மருந்து உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உரிய சிகிச்சை உடனடியாக கிடைக்காததனால் இறப்பு மற்றும் பல்வேறு பாதிப்புகளுக்கு மக்கள் ஆளாகும் நிலை உள்ளது. இதற்கான முதலுதவி மற்றும் சிகிச்சை அளிப்பதற்கு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவமனை மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி ரூ.35 இலட்சம் செலவில் சென்னை பொது மருத்துவமனையில் உள்ள நச்சு இயல் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடங்கப்படும்.

59. பல்வேறு விபத்துகளில் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை மற்றும் நுண் அறுவை சிகிச்சை மற்றும் புனரமைப்புப் பிரிவு சிறப்பான சிகிச்சை அளித்து வருகிறது. இந்த மருத்துவமனையில் மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் கை மற்றும் நுண் அறுவை சிகிச்சை சிறப்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பதன்மூலம் விபத்துகளில் கை பாதிக்கப்பட்டவர்களுக்கு தரமான சிகிச்சை அளித்திட உதவும், இதுமட்டுமல்லாது அனைத்து மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் இந்தப் பயிற்சியின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, முதலுதவி சிகிச்சை அளித்து சரியான நேரத்தில் சிகிச்சை செய்ய வசதியுள்ள மருத்துவமனைக்கு அனுப்ப ஏதுவாகும்.



2008 ஏப்ரல் 24]

**மருத்துவ மாணவர்களுக்கு சலுகை**

60. மருத்துவக் கல்வி மாணவ, மாணவியர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் மருத்துவ பாடங்களில் ஏதாவது ஒன்றில் தோல்வி அடைந்தாலும் மேல் வகுப்புக்குச் செல்ல தற்போது தடை உள்ளது. இந்தத் தடை மருத்துவத் துறை மட்டுமின்றி, பல் மருத்துவம், செவிலியர் படிப்பு, இந்திய மருத்துவத் துறைகள், மருந்தியல் மற்றும் இயன்முறை சிகிச்சைத் துறைகளிலும் நடைமுறையில் உள்ளது. இதனால், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த மாணவ, மாணவியர்கள் மன வருத்தமும், சோர்வும் அடைகிறார்கள். இதனைத் தவிர்க்கும் முகமாக இவ்விதத் தடைகளை தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் ஒழுங்கு முறை அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு தளர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**வளரிளம் பெண்களுக்கான நலவாழ்வு**

61. வளரிளம் பருவத்தினரின் சுகாதார பிரச்சினைகளை போக்குவதற்காகவும், ஆரோக்கிய வாழ்வினை உருவாக்குவதற்காகவும் மாநில ஊரக நல வாழ்வு, இயக்கம் மருத்துவக் கல்லூரிகள்மூலம் வளரிளம் பருவத்தினருக்கு நலவாழ்வு சேவைகளை துவக்கி உள்ளது. மேலும், நகர்ப்புறங்களில் உள்ள குடிசைவாழ் மக்களின் நல வாழ்வு நிலையை வலுப்படுத்துவதற்காக ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் தங்கள் எல்லைக்குட்பட்ட குடிசைவாழ் பகுதிகளை தத்தெடுத்து நலவாழ்வு அளிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் ரூ.6.5 கோடி செலவில் நடப்பாண்டு செயல்படுத்தப்படும்.

**யானைக்கால் நோயாளிகளுக்கு உதவி**

62. யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கால் சுத்தம் மற்றும் பராமரிப்பதற்காக மேலாண்மை உதவிப் பெட்டியும் மற்றும் யானைக்கால் நோய் விரைவீக்க அறுவை சிகிச்சை செய்து கொள்ளவும் நடப்பாண்டில் ரூ. 3.90 கோடி அளிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 24

### எச்.ஐ.வி./எய்ட்ஸ் மையங்கள் தரம் உயர்வு

63. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தால் 26 எச்.ஐ.வி. கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் நிறுவப்பட்டு மிகவும் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையங்களில் பதிவு செய்துள்ள 70,000 எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளில் அதிக பாதிப்புக்குள்ளான 26,468 எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உரிய மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இம்மையங்கள் ரூ.36 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

64. சிவகங்கை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் ஈரோடு ஆகிய 7 மாவட்டங்களில் ரூ. 98 இலட்சம் செலவில் எச்.ஐ.வி. கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்கள் புதியதாக தொடங்கப்படும்.

### உலகத்தரம் வாய்ந்த ஒப்பெரும் மையம்

65. சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள பால்வினைநோய் சிகிச்சை மையம் உலகத்தரத்திற்கு இணையாக ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பெரும் மையமாக மேம்படுத்தப்பட்டு, இங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது தெற்காசியாவிலேயே தனித்தன்மையுள்ள மையமாக விளங்கிடும்.

66. அனைத்து மாவட்டங்களிலும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களுக்கு நலவாழ்வு மையங்கள் ரூ.90 இலட்சத்தில் ஆரம்பிக்கப்படும்.

67. எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயுடன் வாழ்பவர்களுக்கு உண்டாகும் சந்தர்ப்பவாத தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் ரூ.3 கோடி செலவில் உரிய மருந்துகள் வழங்கப்படும்.

### அறக்கட்டளை

68. எய்ட்ஸ் நோயினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் எவ்வித ஆதரவும் இன்றி அல்லலுறும் நிலையைப் போக்கிட அவர்களுக்காக அரசு சார்ந்த அறக்கட்டளை ஒன்றை ரூ. 5 கோடி செலவில் நிறுவ இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த குழந்தைகளுக்கு பராமரிப்பு, படிப்பு மற்றும் மருத்துவ உதவித் தொகையாக மாதாந்திர உதவித் தொகை இக்குழந்தைகளை வளர்க்கும் தொண்டு நிறுவனங்கள் அல்லது உறவினர்களுக்கு வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 24]

### ஸ்டெம் செல் குறித்த ஆய்வு

69. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரைப்பை, குடல் சார்ந்த அறுவை சிகிச்சை பிரிவில் ஸ்டெம் செல் குறித்த ஆய்வுக்காக மத்திய அரசின் நிதியாதாரத்துடன் ஆராய்ச்சிப் பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளால் சில தீராத நோய்களுக்கு புதிய சிகிச்சை முறை கிடைக்க வாய்ப்புள்ளது.

### சிறுநீரக சிகிச்சை

70. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்று வருகிறது. தற்போது அறுவை சிகிச்சைக்குத் தேவையான சிறுநீரகங்கள் தானமாக பெறுவதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. 2006 ஆம் ஆண்டில் 740 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளும், 2007 ஆம் ஆண்டில் 282 மாற்று அறுவை சிகிச்சைகளும் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளன. மாற்று சிறுநீரகங்களின் தேவை அதிகரித்துவருவதால் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள்மூலம் சிறுநீரகங்கள் பெறுவதற்காக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

71. சிறுநீரகம் மற்றும் அவயவ மாற்று சட்டம் 1994-ல் பிறப்பிக்கப்பட்டாலும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருந்து வந்தது. மூளைச்சாவினால் இறந்தவர்களை இதயம் நிற்கும் வரை சிறப்புச் சேவைகள் அளிக்க அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 5 படுக்கைகள்கொண்ட சிறப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்கென நவீன கருவிகள், நவீன ஆம்புலன்ஸ் வசதி மற்றும் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட குழுவும் ஏற்படுத்தப்படும். இதனால் மூளைச்சாவினால் இறந்தவர்களுக்கு இறுதிவரை மிகச்சிறந்த மருத்துவ சேவை அளிப்பது உறுதி செய்யப்படும். இதன்பிறகு உறவினர்களின் நன்மதிப்பை பெற்று அவர்களின் ஒப்புதலுடன் உடலுறுப்புகள் தானமாக பெறப்படும். இந்தச் சிறப்பு பிரிவை இரைப்பை, குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையில் ஏற்படுத்த ரூபாய் 4 கோடியே 18 இலட்சம் செலவிடப்படும்.

**மருத்துவமனைகளுக்கு தரச்சான்று**

72. இந்திய தரக்கட்டுப்பாட்டுக் குழுவின்மூலம் தேசிய மருத்துவமனைச் சான்று நிறுவனத்தின் உயர்ரக தரச்சான்றிதழ் 12 மருத்துவமனைக்களுக்கு பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ. 3.00 கோடி ஆகும். படிப்படியாக மற்ற மருத்துவமனைகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**மூளைக்காய்ச்சல் தடுப்பூசி**

73. சென்ற ஆண்டு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 1-15 வயதுக்குட்பட்ட 17 இலட்சம் குழந்தைகளுக்கு போடப்பட்டது. இவ்வாண்டு மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 29 இலட்சம் குழந்தைகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான தடுப்பூசி மற்றும் நிதி ரூ. 4.12 கோடி மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

**மருத்துவக் கழிவு மேலாண்மை**

மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் சிகிச்சையின்போது உருவாகும் மருத்துவக் கழிவுகளை உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 1998-ன்படி தரம் பிரித்து அகற்றி விஞ்ஞான முறைப்படி அழித்தலே மருத்துவக் கழிவு மேலாண்மை ஆகும்.

74. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின்கீழ் உள்ள 270 அரசு மருத்துவமனைகளுக்கு உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மைக்கு தேவையான சாதனங்களுக்கு ரூ. 3.59 கோடியும், அம்மருத்துவமனை ஊழியர்களுக்கு உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை குறித்த பயிற்சிக்கு ரூ. 65 இலட்சமும் மற்றும் மருத்துவக் கழிவுகளை விஞ்ஞான முறையில் அகற்றி அழித்திட ஆண்டுக்கு ரூ. 2.39 கோடியும் ஒதுக்கப்பட்டு வரும் ஜூலை மாதம் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

75. மேலும், 41 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 130 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8 தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளுக்கு,



உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மைக்குத் தேவையான சாதனங்களுக்கு ரூ. 3.07 கோடியும், அம்மருத்துவமனை ஊழியர்களுக்கு உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை குறித்த பயிற்சிக்கு ரூ. 94.8 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு மருத்துவக் கழிவுகளை விஞ்ஞான முறையில் அகற்றி அழித்திட செலவிடப்பட உள்ளது. நடப்பாண்டில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளில் ரூ. 3.18 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, வரும் ஜூலை மாதம் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ரூ. 13.86 கோடி மொத்த செலவில் விஞ்ஞான முறையில் மருத்துவக் கழிவுகளை அகற்றி அழிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

**எய்ட்ஸ் மற்றும் புற்று நோய்க்கு சித்த மருத்துவம்**

76. தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின் நிதியாதாரத்தைக் கொண்டு புற்று நோய் மற்றும் எய்ட்ஸ் நோய்களுக்கு சித்த மருத்துவ முறையில் ஆராய்ச்சி செய்து மருந்துகள் கண்டுபிடிக்க ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

**பத்திரிகையாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை**

77. உழைக்கும் பத்திரிகையாளர்கள் சட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

## இணைப்பு-II

[673 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

# மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2008-2009

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

- அய்யன் திருவள்ளுவர்

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்க படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்

- திருக்குறள் கலைஞர் உரை

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழகம் பள்ளிக் கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

- அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குதல்
- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
- பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் 8 ஆம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
- இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்
- குறைந்தபட்சக் கல்வித் திறன்களை அனைத்து மாணவர்களும் பெறுவதை உறுதி செய்தல்
- ஈடுபாட்டுடனான சமூகப் பங்கேற்பு வாயிலாகக் கல்வி மேலாண்மையைப் பரவலாக்குதல்

[2008 ஏப்ரல் 24

- அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கை அடையும் வகையில் ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் கல்வியை நிறைவு செய்ய உதவுதல்.
- பயிற்சிகளின்மூலம் ஆசிரியர்களிடம் படைப்பாற்றல், பங்கேற்றல், தொழில்நுட்பம் போன்ற திறன்களை வளர்த்து, தரமான தொடக்கக் கல்வி அளித்தல்.
- முழு எழுத்தறிவுத் திட்டத்தை அடைதல்.
- எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயற்படுத்துதல்.
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.
- பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்.
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்.
- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்தல்.
- அனைவருக்கும் சமச்சீர் கல்வி வழங்குவது.

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவருக்கும் கல்விக்கான மாநிலத் திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திடப் பாடுபடுகின்றன.



2008 ஏப்ரல் 24]

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2008-2009 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 7852.06 கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ. 911.03 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2008-2009-ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணிகள் - அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும், செப்பனிடுதலும் | 0.00 | 3115.10 | 3115.10 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| | 01 தொடக்கக் கல்வி | 40426.33 | 352074.28 | 392500.61 |
| | 02 இடைநிலைக் கல்வி | 30990.05 | 334193.86 | 365183.91 |
| | 04 முதியோர் கல்வி | 53.04 | 115.38 | 168.42 |
| | 05 மொழி வளர்ச்சி | 2.53 | 499.02 | 501.55 |
| | மொத்தம் - பொதுக் கல்வி | 71471.95 | 686882.54 | 758354.49 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 269.40 | 179.25 | 448.65 |
| 2205 | கலையும், பண்பாடும் - பொது நூலகங்கள் | 50.00 | 2996.99 | 3046.99 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 3147.04 | 22.83 | 3169.87 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | 0.00 | 486.56 | 486.56 |
| 2251 | தலைமைச் செயலகம்-சமூகப் பணிகள் | 0.00 | 414.05 | 414.05 |
| 4202 | கல்வி, போட்டி, விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 16165.02 | 0.00 | 16165.02 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 0.00 | 5.00 | 5.00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | 0.00 | 0.50 | 0.50 |
| | கூட்டுக-திருப்பி வசூலிப்பவை | | | 0.03 |
| | பெரு மொத்தம் | 91103.41 | 694102.82 | 785206.27 |

[2008 ஏப்ரல் 24

## 2008-2009-ல் பகுதி 2 புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்ட விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. இலட்சத்தில் | |
|---|---|---|---|
| | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
| **தலைமைச் செயலகம், பள்ளிக் கல்வித் துறை** | | | |
| 1. | தலைமைச் செயலக பள்ளிக் கல்வித் துறையை கணினிமயமாக்குதல் | - | 4.50 |
| 2. | தலைமைச் செயலக பள்ளிக் கல்வித் துறையின் கணினிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் | - | 1.50 |
| **தொடக்கக் கல்வி இயக்ககம்** | | | |
| 1. | 115 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கணினி மற்றும் தேவையான துணைக் கருவிகள் வழங்குதல் | - | 51.75 |
| 2. | 5 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல் | 60.00 | - |
| 3. | பழைய ஊர்திகளை களைந்து கழிவு செய்து புதிய ஊர்திகள் வாங்குதல் | - | 12.90 |
| **பள்ளிக் கல்வி இயக்ககம்** | | | |
| 1. | அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் நிறுவுதல் | 100.00 | - |
| 2. | 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்குதல் | 50.00 | - |
| 3. | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் உபகரணங்கள் வழங்குதல் | 90.00 | - |
| 4. | 100 ஊரகப் பகுதி பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் ஏற்படுத்துதல் | 100.00 | - |
| 5. | தருமபுரி மாவட்டத்தில் புதிய முதன்மை கல்வி அலுவலக வளாகம் கட்டுதல் | 54.00 | - |
| 6. | 100 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்துதல் | 40.00 | - |
| 7. | 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வகங்கள் அமைத்தல் | 52.00 | - |
| **அரசுத் தேர்வுகள் இயக்ககம்** | | | |
| 1. | அரசுத் தேர்வு இயக்ககத்தின் உபயோகத்திற்காகக் கூடுதலாக கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல் (பயிற்சி உட்பட) | 20.00 | - |
| 2. | அரசுத் தேர்வுகள் துறையைச் சார்ந்த ஏழு மண்டல அலுவலகங்களுக்கு நிதி வழங்குதல் | 1.00 | - |
| 3. | திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடத்தை விரிவுபடுத்துதல் | 12.00 | - |
| **பொது நூலக இயக்ககம்** | | | |
| 1. | கன்னிமாரா பொது நூலகத்திற்கு மையப் படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி செய்தல் | - | 20.00 |
| | மொத்தம் | | 20.00 |
| **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்** | | | |
| 1. | புதிதாக பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கான நுழைநிலை பயிற்சி | - | 50.00 |
| 2. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் மொழி பயிற்றுவிக்கும் கூடம் அமைத்தல் | - | 49.50 |
| **மெட்ரிகுலேசன் பள்ளி இயக்ககம்** | | | |
| 1. | புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள 5 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்குக் கணினிகள் மற்றும் துணைப் பாகங்கள் வழங்குதல் | - | 3.00 |
| | மொத்தம் | 579.00 | 193.15 |
| | பெருமொத்தம் | ரூ.772.15 இலட்சம் | |



2008 ஏப்ரல் 24]

[2008 ஏப்ரல் 24

## அரசின் சாதனைகள்

### 2006-2007

**ஆளுநர் உரை அறிவிப்புகள்**

- 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன.
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு தொகுப்பூதியம் அளிக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் அனைவரும் 1-6-2006 முதல் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டனர்.
- அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாகத் தமிழை ஒரு பாடமாகப் பயில வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை அறிவிப்புகள்**

- அரசு அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.
- 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.
- பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் படிகள் எண்ணிக்கை 1,000 ஆக உயர்வு.
- ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கலந்தாய்வு.

**நிதி நிலை அறிக்கை அறிவிப்புகள்**

- 7,635 ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர்.
- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகப் பள்ளிகளில் கொண்டாடச் சட்டம்.



2008 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அறிவிப்புகள்**

- உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளுக்குக் கூடுதலாக 7,979 பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம்.
- 525 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரி தமிழாசிரியர்கள் பணியிடம் வழங்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.
- 500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பணி மூப்பு அடிப்படையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம்.
- 2006-2007-ல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 1,075 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்குக் கட்டடம் கட்டப்பட்டது.
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 14,354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- பொது நூலகத் துறையில் பகுதி நேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 207 பேர் மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

**பகுதி II திட்டங்கள்**

- 100 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்குக் கணினி வழங்கப்பட்டது.
- 4 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டன.
- 5 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டன.
- 8 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டன.
- 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் சாதனங்கள் வழங்கப்பட்டன.
- 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 75 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கற்பிப்பு துணைக் கருவிகள் அளிக்கப்பட்டன.

[2008 ஏப்ரல் 24

- ➢ 120 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதி அளிக்கப்பட்டது.
- ➢ கல்வியில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- ➢ கன்னிமரா பொது நூலகக் கட்டடம் சீரமைக்கப்பட்டது.

## 2007-2008

### நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள்

- ➢ 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.
- ➢ நவீன மாநில நூலகத்திற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.
- ➢ தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.
- ➢ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 4 ஆம் வகுப்புகளில் செயல்வழிக் கற்றல் முறை தொடங்கி வைக்கப்பட்டது.
- ➢ கல்வியில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அறிவிப்புகள்

- ➢ உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பதவிக்கு நேரடி மற்றும் பதவி உயர்வு விகிதம் 30 : 70 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ➢ தொடக்கக் கல்வித் துறையிலும், பள்ளிக் கல்வித் துறையிலும் காலி ஏற்பட்ட 13,683 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.
- ➢ பொருளாதாரம் / வணிகவியல் பாடங்களில் பட்டம் பெற்று பி.எட். பயின்றவர்களுக்கு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகவும், பட்டதாரி ஆசிரியராகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.



2008 ஏப்ரல் 24]

- ➢ பள்ளிக் கல்வித் துறையில் அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி அளிக்க மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- ➢ 443 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாடச் சாமான்கள் பணிகளுக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டு முதல் தவணையாக ரூ.50 கோடி பெறப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.
- ➢ 1,583 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர இருக்கைகள், மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேசை நாற்காலிகள் டான்சி நிறுவனம்மூலம் வழங்கப்பட்டுள்ளன.
- ➢ 1,000 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ➢ நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்மூலம் ரூ.2000/- வழங்கப்பட்டுள்ளது.
- ➢ மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது.
- ➢ மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.
- ➢ நல்லாசிரியர் விருதுத் தொகை ரூ.2,000-த்திலிருந்து ரூ.5,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ➢ 8 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- ➢ கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளி ஆய்வர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ➢ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குக் கட்டடம், பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி, கணினி மற்றும் நூல் வாங்கிட ரூ.20.21 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ➢ தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 24

- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான பணி அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 76 புதிய நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.
- கோவை, மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புத்தக கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பகம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருட பணி முடித்த 27 பகுதிநேர நூலகர்கள், ஊர்ப்புற நூலகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- கோவை, தேனி மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் நூலக சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.
- 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன் பாட்டிற்கென கணினிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, இணைய வலைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட கோடைக்கால பயிற்சி முகாம்மூலம் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**பகுதி II திட்டங்கள்**

- தலைமைச் செயலக பள்ளிக் கல்வித் துறை கணினி மயமாக்கப்பட்டது.
- மதுரை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டது.
- 5 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டது.
- 100 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு துணை பாகங்களுடன் கணினிகள் வழங்கப்பட்டது.
- 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 100 மேனிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 100 மேனிலைப் பள்ளிகளுக்கும் பயிற்றுவிப்பு துணைக் கருவிகள் வழங்கப்பட்டன.



2008 ஏப்ரல் 24]

- 130 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மொழி ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டது.
- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனங்களில் மொழிப் பயிற்று ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டது.
- மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்குப் புதிதாக 7 வண்டிகள் (ஜீப்புகள்) வழங்கப்பட்டன.

## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

மனித வளர்ச்சிக்கான உருவாக்கத்தில் கல்வி ஒரு இன்றியமையாத அங்கம் ஆகும். கல்வியைச் செம்மைப் படுத்துவதற்கான திட்டமிட்ட முயற்சிகள், காலந்தோறும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு, அனைவருக்கும் கல்வி கிடைக்குமாறு செய்வதற்கும், கல்வியறிவு பெற மட்டுமன்றி, திறமையும் தொழில்நுட்ப ஆற்றலும் உடைய உழைக்கும் சக்தியை உருவாக்குவதற்குமான, ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளைச் செய்துள்ளது.

நமது அரசு, 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்மூலம் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதை ஒரு கொள்கைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவுக்கு இணங்க 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளித்திட மாநில அரசு வழிவகை செய்கிறது. இந்த அரசியலமைப்புச் சட்டக் கடப்பாட்டினைச் சேவை ஆர்வத்துடன் எய்திட ஏதுவாக ஏற்கெனவே கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அனைவருக்கும் தரமான கல்வி அளிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும் தொடர் முயற்சிகளையும் மாநில அரசு எடுத்துள்ளது.

#### 1.1. குறிக்கோளும் செயல்பாடுகளும்

1. அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்.

[2008 ஏப்ரல் 24

2. விரும்பத்தக்க தரமான கல்வியை உறுதி செய்தல்.

3. குழந்தைகளின் ஒட்டுமொத்த உணர்வு வளம், சமுதாய மற்றும் உடல்வளம் இவற்றோடு அறிவாற்றல் திறமைகளையும் மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துதல்.

4. கல்வி பெறாதவர்களுக்குக் கல்வி சென்றடையும்படி செய்தலும், சமுதாய உணர்வை உறுதி செய்தலும்.

5. அனைத்துப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

6. தொடக்கக் கல்வி நிலையில் அனைத்து பாலின மற்றும் சமுதாய இடைவெளிகளைக் குறைத்தல்.

**1.2 புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்தல்**

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் |
|---|---|---|
| 2006-2007 | 126 | 234 |
| 2007-2008 | 210 | 338 |

**1.3. ஆசிரியர் பணி நியமனம்**

ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன்னுரிமை அளித்து 2007-2008 ஆம் ஆண்டுக்கான இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட ஆணையிட்டது. ஏற்கெனவே ஆணையிட்டபடி, அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் பட்டம் பெற்ற பி.எட் தகுதிபெற்ற அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

**நலத் திட்டங்கள்**

குழந்தையின் வளர்ச்சி என்பது சமுதாய வளர்ச்சியோடு இணைந்தது என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் பள்ளிக் குழந்தைகளின் நலனுக்காகப் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



2008 ஏப்ரல் 24]

**1.4. இலவச மதிய உணவுத் திட்டம்**

தமிழ்நாடு அரசு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15, 2007-லிருந்து மதிய உணவோடு வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கப்படுகின்றன.

**1.5. இலவசப் பாடநூல்கள் வழங்குதல்**

அரசு, உள்ளாட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், அரசின் அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத் திட்டத்தைப் பின்பற்றும் சுயநிதிப் பள்ளிகளிலும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**1.6. இலவசச் சீருடை வழங்குதல்**

தொடக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியரின் நலனுக்காக மதிய உணவுத் திட்டத்தில் பதிவு பெற்ற மாணவ மாணவியருக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

**1.7. இலவசப் பேருந்து பயணச் சலுகை**

மாநிலப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் பள்ளிகளுக்கு எளிதாகச் சென்று வர வகை செய்யும் இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**1.8. துயர் துடைப்பு உதவி**

துயரடைந்த மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் வருமானம் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டாலோ, அந்த மாணவர் அல்லது மாணவிக்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது. இந்தத் தொகை மாணவர் அல்லது மாணவியின் பெயரில் முதலீடு செய்யப்பட்டு அதன் வட்டித் தொகை மாணவ மாணவியரின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

[2008 ஏப்ரல் 24

## 1.9. நடமாடும் நூலகம்

மாணவர்களின் படிக்கும் பழக்கத்தின்மூலம் பள்ளிக் கல்வியின் பயனை அதிகரித்திடும் வகையில், பொது நூலகத் துறையுடன் இணைந்து நடமாடும் நூலகங்கள் வாயிலாக நூல்கள் வழங்கப்படுகின்றன.

## 1.10. சிறந்த பள்ளிகளுக்கான விருது

பள்ளிகளின் சிறப்பை உயர்த்தும் நோக்கோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று சிறந்த பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கப்படுகிறது. சிறந்த பள்ளிகள் கீழ்க்காணும் அளவுகோலின்படி தேர்வு செய்யப்படுகின்றன.

- ❖ கூடுதல் சேர்க்கை விகிதம் - குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பெண் குழந்தைகள் சேர்க்கை
- ❖ கூடுதல் தக்க வைத்தோர் விகிதம்
- ❖ கூடுதல் கற்றல் நிறைவு செய்தோர் விகிதம்
- ❖ குறைந்த இடைநிற்றல் விகிதம்
- ❖ பெற்றோர்-ஆசிரியர் கழகச் செயல்பாடுகள்
- ❖ சமுதாயப் பங்கேற்பு நிகழ்வுகள்
- ❖ எல்லா வழிகளிலும் குழந்தை வளர்ச்சிக்குத் தேவையான கல்விச் செயல்கள் மற்றும் கல்வி இணைச் செயல்களில் புதுமையான கற்றல் முறைகளை மேற்கொள்ளுதல்.

## 1.11. தொடக்கக் கல்வியின் தரம்

பதினோராவது திட்டத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளில் ஒன்று, தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதாகும். தொடக்கக் கல்வித் துறையில் அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தலையும், தக்க வைத்தலையும் நிறைவேற்றி விட்ட நிலையில், கற்பிக்கும் / கற்கும் முறையை அதிகப் பயனுள்ளதாகவும், குழந்தைகள் விரும்பும் வகையிலும் உருவாக்குவதில்தான் அறைகூவல் அடங்கியுள்ளது. பள்ளி செல்லாத குழந்தைகள், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், பெண் குழந்தைகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினக் குழந்தைகள்



2008 ஏப்ரல் 24]

போன்று கல்வி பெறாதவர்களையும் கல்வி சென்றடையச் செய்வதே அதிகக் கவனம் செலுத்த வேண்டிய இரண்டாவது பகுதியாகும்.

அண்மையில் வெளியிடப்பட்ட இந்திய வணிக மற்றும் தொழில் கூட்டமைப்பின் அறிக்கையின்படி, தமிழ்நாடுதான் தொடக்கக் கல்வியிலும் (5ஆம் வகுப்பு வரை) உயர் தொடக்கக் கல்வியிலும் (8 ஆம் வகுப்பு வரை) நாட்டிலேயே அதிகமான மாணவர் சேர்க்கை விகிதத்தைப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் நாட்டின் மிகக் குறைந்த இடைநிற்றல் விகிதங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ஆய்வின்படி, தமிழ்நாடு தொடக்க மற்றும் உயர் தொடக்க நிலைகளில் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதம் 100 விழுக்காட்டை நெருங்கியுள்ளது.

மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு நலத் திட்டங்களின் விளைவாகவே தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கைப் புள்ளி விவரம் அதிகரித்துள்ளது. குழந்தைகளுக்குப் பாடநூல்கள் மற்றும் சீருடையிலிருந்து உணவு வரை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். இந்தத் திட்டங்கள் மாணவர் சேர்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தொடக்கப் பள்ளிகள் கடந்த இரு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு அடைந்து இருக்கின்றன. இந்த அரசு, ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் ஒரு ஆரம்பப் பள்ளியாவது இருக்கும் விதத்தில் புதிய பள்ளிகளைத் திறந்ததன்மூலம் அனைத்து மாணவர்களும் பள்ளியில் சேருவதற்கான வாய்ப்பை நல்கியுள்ளது. செயல்வழிக் கற்றல் (ஏபிஎல்) முறையும் வகுப்பறைச் சூழலை, ஆசிரியர் மையச் சூழலிலிருந்து மாணவர் மையச் சூழலுக்கு மாற்றியமைக்க உதவியுள்ளது. பெண் குழந்தைகளுக்குத் தங்கும் வசதியோடு கூடிய உறைவிடப் பள்ளியை நல்கிடும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (கேஜி.பி.வி) போன்ற திட்டங்களின் விளைவாகப் பள்ளிகளில் பெண் குழந்தைகள் சேர்க்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. இந்தத் திட்டம் பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்களால் தங்கள் படிப்பை இடையிலேயே நிறுத்திவிட்ட பெண் குழந்தைகளுக்கு அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

### அனைவருக்கும் கல்வித் திட்டம்

6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளையும் 1 முதல் 8 வரையிலான வகுப்புகளில் 100 விழுக்காடு சேர்த்தல்

[2008 ஏப்ரல் 24

மற்றும் தக்க வைத்தலை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடக்க கல்வியைப் பரவலாக்கும் வகையில் அனைவருக்கும் கல்வித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டது. அனைவருக்கும் கல்வித் திட்ட செயல்பாடுகள் இடைநிற்றல் பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றி பெற்றுள்ளது. இந்தத் திட்டச் செயல்பாட்டினால், கல்விக் கோட்பாட்டுச் செயல்பாடுகள், ஆசிரியர் பயிற்சி-குறிப்பாகப் பணியிடைப் பயிற்சி-நிறுவனத்தின் திறன் கட்டமைப்பு, பெண்கள் மற்றும் சிறப்புப் பிரிவைச் சார்ந்தோரின் கல்வியில் போதிய கவனம் செலுத்துதல், இவற்றில் குறிப்பிடத்தக்க தெளிவான நிலையைப் பெற்றதோடு, பாடத்திட்டம், குழந்தையை மையமாகக் கொண்டு செயல்பாடுகள், திறமையான கற்பித்தல்-கற்றல் வியூகங்கள் ஆகிய அனைத்துக் கல்விச் செயல்பாடுகளிலும் தரத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இத்திட்டத்தின் இலக்கு, ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பயனுள்ள, ஏற்புடைய தொடக்கக் கல்வியினை 2010-க்குள் வழங்குவது ஆகும்.

**1.12. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் நோக்கங்கள்**

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்கச் செய்தல்
2. அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்
3. அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் தக்க வைத்தல்
4. சாதனை
5. சம நீதி

**1.13. பள்ளி வசதி**

அனைத்துக் குடியிருப்புகளிலும் 100 விழுக்காடு அளவில் பள்ளி வசதியினை உறுதி செய்யும் வகையில் திட்டம் தொடங்கியதிலிருந்து இதுவரை 1,610 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டும், 3,362 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டும் உள்ளன.

**1.14. மாணவர் சேர்க்கை மற்றும் தக்க வைத்தல்**

அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் என்பது சவாலான பணியாக இருப்பினும், நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளினால் இது ஒரு



2008 ஏப்ரல் 24]

சாதனையாக்கப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை வீதம் தொடக்கப் பள்ளி நிலையில் 99.39 விழுக்காடாகவும், நடுநிலைப் பள்ளி அளவில் 98.62 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

அனைவருக்கும் கல்வி இயக்க செயல்பாடுகளின் மூலம் தொடக்கப் பள்ளி நிலையில் இடைநிற்றல் வீதம் 2006-07-ல் 1.91 விழுக்காட்டிலிருந்து 1.40 விழுக்காடாகவும், நடுநிலைப் பள்ளி நிலையில் 4.08 விழுக்காட்டிலிருந்து 2.04 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. நடுநிலைப் பள்ளி அளவில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளுக்கான இடைநிற்றல் வீதம் ஓரளவே குறைந்து காணப்படுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2001 ஆய்வின்படி, இம்மாநிலத்தில் 5.74 இலட்சம் பள்ளி செல்லாக் குழந்தைகள் இருந்தனர். கடந்த ஆறு ஆண்டுகளில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது. வரும் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி செல்லாக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கான இலக்கு 86414 ஆகும்.

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், தேவைக்கேற்ப வகுப்பறைக் கட்டடங்கள், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி போன்ற உள் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**1.15. சாதனைகள்**

"செயல்வழிக் கற்றல் முறை" 37,486 தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. "படைப்பாற்றல் கற்றல் முறை" அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விரு முறைகளிலும் ஆசிரியர் துணை நிற்க, குழந்தைகள் தாங்களாகவே கற்கும் முறையில் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர். புதிதாகப் புகுத்தப்பட்ட இந்த கற்பிக்கும், கற்கும் வியூகங்கள் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தியுள்ளன.

**1.16. 2007-2008 ஆம் ஆண்டுச் சாதனைகள்**

**புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்**

- 420 ஆசிரியர் பணியிடங்களுடன் 210 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- 1,256 ஆசிரியர் பணியிடங்களுடன் 338 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**மழலையர் முன் பருவ நலக் கல்வி**

- ரூ.1,000 மதிப்புள்ள மழலையர்க்குகந்த கற்றல் பொருள்கள் 6,870 மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 40,380 அங்கன்வாடி பணியாளர்கள், ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பள்ளிக் கல்விக் குழு உறுப்பினர்களுக்கு இணைப்புப் பயிற்சி.

**பள்ளி செல்லாக் குழந்தைகள்**

- புதிய அணுகுமுறைகளின் வாயிலாக 4.875 இலட்சம் பள்ளி செல்லாக் குழந்தைகள், முறையான பள்ளிகள், பள்ளி உறுதியளிப்பு மையங்கள், உண்டு உறைவிட முகாம்கள் மற்றும் மாற்றுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- 1,18,019 இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது; 35 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 16,224 இயலாக் குழந்தைகளுக்கு அவர்தம் இல்லங்களிலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது.
- 433 மருத்துவ முகாம்கள்; 19,491 இயலாக் குழந்தைகளுக்கு உதவிச் சாதனங்கள்; ஆண்டுதோறும் குழந்தைகளுக்குத் தேவையான அறுவை சிகிச்சை; 2007-2008 ஆம் ஆண்டில் மட்டும் 1,373 அறுவை சிகிச்சை.
- 404 வட்டார வள மையங்களில் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான வள மையங்கள்.
- 3,882 இயலாக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 356 பகல் நேரப் பராமரிப்பு மையங்கள்.

**பயிற்சி**

- ஆண்டு தோறும் சுமார் 2 இலட்சம் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி.



- 13,925 ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி.
- 1.9 இலட்சம் கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி

**தேசிய பெண் கல்வித் திட்டம் மற்றும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்**

- 11 மாவட்டங்களில் 37 வட்டாரங்களில் தேசியப் பெண் கல்வித் திட்டம்; 937 மாதிரி தொகுப்புப் பள்ளிகள்.
- 53 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உறைவிட விடுதிகள்; 10 முதல் 14 வயதுள்ள 2,761 பள்ளி செல்லாக் குழந்தைகள் பயனடைகின்றனர்.

## 2008-2009 ஆம் ஆண்டு செயல்பாட்டுத் திட்டம்

**மானியங்கள்**

- 92,545 தொடக்கப் பள்ளி மற்றும் 1,17,109 நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.500/- வீதம் கற்றல் கற்பித்தல் பொருட்களுக்கான மானியத் தொகை.
- 37,714 தொடக்க மற்றும் 14,353 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.5,000/- மற்றும் ரூ.7,000/- வீதம் பள்ளி மானியத் தொகை.
- 24,349 தொடக்க மற்றும் 10,874 நடுநிலைப் பள்ளிகளில், மூன்று வகுப்பறை உள்ள பள்ளிகளுக்கு ரூ.5,000/- வீதமும் மூன்று வகுப்பறைகளுக்கு மேல் உள்ள பள்ளிகளுக்கு ரூ.10,000/- வீதமும் பராமரிப்பு மானியத் தொகை.
- புதிதாக நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.50,000/- வீதம் கற்றல் கற்பித்தல் கருவிகளுக்கான மானியத் தொகை.

**மழலையர் முன்பருவ நலக் கல்வி மற்றும் கணினி வழிக் கல்வி**

- 45,289 அங்கன்வாடி பணியாளர்களுக்குப் பயிற்சி
- 9,545 அங்கன்வாடி மையங்களுக்கு கற்றல் உபகரணங்கள்

**ள்ளி செல்லாக் குழந்தைகள்**

- 86,414 பள்ளி செல்லாக் குழந்தைகளை இணைப்பு மையங்கள் மற்றும் உறைவிட முகாம்களில் சேர்த்தல்.

[2008 ஏப்ரல் 24

**இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- ❖ *1,14,752* இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்.
- ❖ சிறப்புக் கவனம் தேவைப்படும் *5,000* இயலாக் குழந்தைகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி மற்றும் தொழில் திறன் பயிற்சி.
- ❖ ஒவ்வொரு ஒன்றியத்திலும் மருத்துவ முகாம்; தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவி சாதனங்கள் மற்றும் அறுவை சிகிச்சை.
- ❖ *57,454* ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்குப் பயிற்சி
- ❖ *352* பகல் நேரப் பராமரிப்பு மையங்கள்

**பயிற்சி**

- ❖ கல்வித் தர மேம்பாட்டிற்காக *2,09,654* தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி.
- ❖ திட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக *16,232* கிராமக் கல்விக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி.
- ❖ *5,102* திட்டப் பணியாளர்களுக்கு திறன் 'மேம்பாட்டு பயிற்சி'.
- ❖ *6, 7* மற்றும் *8*-ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஆங்கிலத்தில் பேசும் திறன் வளர் பயிற்சி வழங்கப்படும். இதற்காகப் பெங்களூரு மண்டல ஆங்கில மொழி பயிற்சி நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட குறுந்தகடுகள் பயன்படுத்தப்படும்.
- ❖ *3,600* ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி.

**தேசிய பெண் கல்வித் திட்டம் மற்றும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்**

- ❖ தொழில் திறன் பயிற்சி
- ❖ பெண் கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களிலுள்ள பெண் குழந்தைகளுக்கு கணிதம் கற்றலில் குறைதீர் கற்பித்தல் வகுப்புகள்.



2008 ஏப்ரல் 24]

- ❖ *53* கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகளில் *2,850* பள்ளி செல்லா (*10* முதல் *14* வயதுள்ள) பெண் குழந்தைகள் பயனடைவர்.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

### 2.1. நோக்கங்கள்

இடைநிலைக் கல்வியின் முக்கிய நோக்கம் பள்ளி வசதியைப் பரவலாக்குவதும், இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதுமாகும். வளர் இளம் பருவத்து ஆண், பெண் இருபாலருக்கும் உயர்தரக் கல்வியளிப்பதே இன்றைய அவசரத் தேவையாகும்.

*2008-2009*-ல் இடைநிலைக் கல்வியின் வரையறுக்கப்பட்டுள்ள நோக்கங்கள்

- ❖ தேவையான பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் அமைப்பதை அதிகரித்தல்
- ❖ இடைநிலைக் கல்வி அளவில் மாணவர் சேர்க்கையை உயர்த்துதல்
- ❖ உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- ❖ ஆசிரியர்களின் திறனை அதிகரிப்பதன்மூலம் வகுப்பறைக் கற்பித்தலின் தரத்தினை மேம்படுத்துதல்
- ❖ மொழித்திறன் மற்றும் கருத்துப் பரிமாற்றத்திறனை மேம்படுத்துதல்
- ❖ கணினிக் கல்வியை பயிற்றுவித்தல்

### 2.2. வழிமுறைகள்

பின்தங்கிய பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்குதல், சிறப்பு மாணவர் சேர்க்கைத் திட்டங்களை மேற்கொள்ளுதல், நபார்டு வங்கியின் உதவியுடன் நிதி ஆதாரங்கள் பெற்று, தேவை அடிப்படையிலான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கற்பிப்பு மற்றும் கற்கும் திறனை அதிகரிப்பதற்காக மின் கற்றல் (e-learning) கருவிகள் மற்றும் கணினி வழி தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்,

[2008 ஏப்ரல் 24

ஆசிரியர்களுக்கு பணி முன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சி வசதிகளை அதிகரித்தல், சமூகத்தின் நலிவுற்ற பிரிவுகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிப்பது மற்றும் நலத் திட்டங்களை விரிவுபடுத்துதல் ஆகிய வழிமுறைகள்மூலம் மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் எட்டப்படும்.

## 2.3. மாணவர் நலத் திட்டங்கள்

1. தரமான பாடப் புத்தகங்கள் தமிழக அரசால் தயாரிக்கப்பட்டு, அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை சேர்க்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் சுயநிதிப் பள்ளிகளில் மாநில வாரிய பாடத்திட்டத்தின்கீழ் தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கும் தமிழ் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. 2008-2009 ஆம் நிதி ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. பதினோராம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்களது படிப்பினைத் தொடர்வதற்கு ஊக்கமளிப்பதற்காக இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.

3. மாணவர்களுக்கு இலவச அல்லது சலுகை பேருந்து கட்டணத் திட்டம் ரூ.300 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.4. கணினி உதவியுடன் மொழி ஆய்வகங்கள்

வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில், ஆங்கிலத்தைத் திறனுடன் கற்பது கட்டாயத் தேவையாகிறது. மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சுத் திறனை மேம்படுத்துவதற்கு 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடி செலவில் 500 மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் கணினி ஆய்வகங்களில் சில கூடுதல் கருவிகளை இணைத்து கணினி உதவியுடன் கூடிய மொழி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

## 2.5. கணிதவியல் ஆய்வகங்கள்

மாணவர்களின் கணிதவியல் திறனை மேம்படுத்துதல் மற்றும் எண் கணிதத் திறனை மேம்படுத்தும் நோக்கில், 2008-2009 ஆம்



2008 ஏப்ரல் 24]

கல்வியாண்டில் 100 பள்ளிகளில் கணிதவியல் ஆய்வகங்கள் நிறுவப்படும்.

## 2.6. அறிவியல் பயிற்றுவிப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதல்

அறிவியல் பாடத்தைச் செவ்வனே பயிற்றுவிப்பதற்கான வசதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கும் அறிவியல் ஆய்வகமும், அறிவியல் உபகரணங்களும் தேவைப்படுகின்றன. 2008-2009 ஆம் ஆண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளில் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குவதற்கு ரூ. 90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.7. நூலக வசதிகள்

2008-2009 ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சம் செலவில் 100 உயர்நிலை மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதி மேம்படுத்தப்படும்.

## 2.8. மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி வசதியளித்தல்

அறிவியல் முன்னேற்றத்திற்கு ஏற்ப மாணவர்களைத் தயார் செய்வதிலும் அவர்கள் நவீன தொழில் நுட்பத்தினைக் கையாளுவதற்கு உதவுவதிலும் கணினிக் கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. கணினிக் கல்வி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 1999-2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், எஞ்சிய 100 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 606 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட உள்ளன. மேலும், நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த மொத்தம் உள்ள 6,650 நடுநிலைப் பள்ளிகளில் முதல் கட்டமாக 2,200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கென 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் வழிக் கல்வியில் பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1,000 மாணவ/மாணவியருக்கு மாவட்ட வாரியாக ஊக்கப் பரிசாகக் கணினிகள் அளிப்பதற்கான திட்டமும் செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 24

**2.9. உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்குதல்**

2006-2007 ஆம் ஆண்டில் 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் 110 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 2008-2009 ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

**2.10. மேல்நிலைப் பள்ளிகளைத் துவங்குதல்**

2006-2007 ஆம் ஆண்டில் 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டன. 2007-2008 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டன. 2008-2009 ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்படும்.

**2.11. பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை**

பள்ளிக் கல்வித் துறையில் மின்-ஆளுகையைச் செயல்படுத்த அரசு முன்னோடி நடவடிக்கை எடுத்துள்ளது. மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்துக்கும் மிகுந்த பலனளிக்க ஒரு தனித்துவம் வாய்ந்த ஒருங்கிணைக்கும் வலைத்தளம் வடிவமைக்கப்படும் இந்த வலைத்தளம் பள்ளிக் கல்வி இயக்ககத்தால் தொடங்கப்பட்டு பராமரிக்கப்படும். ஒருங்கிணைக்கும் தகவல்கள் உருவாக்கப்பட்டு வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

இந்த வலைத்தளம் பள்ளிக் கல்வித் துறையில் திறன்மிக்க வெளிப்படையான நிர்வாகத்துக்குத் துணைபுரியும். ஆர்வமுள்ள நன்கொடையாளர்கள், பல்வேறு கல்வி நிறுவனங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள இந்த வலைத்தளம் தகவல் அளித்து உதவும். பொதுத் துறையோடு தனியார் துறை கூட்டு சேர்ந்து பணியாற்ற இவ்வலைத்தளம் உதவி செய்யும்.

**2.12. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 24]

**2.13. சிறப்புக் கட்டணத்தை நீக்குதல்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் முற்றிலும் இலவசக் கல்வி அளிக்கும் நோக்குடன் ரூ. 33-லிருந்து ரூ. 103 வரை வசூலிக்கப்பட்ட சிறப்புக் கட்டணம் 2008-2009 கல்வியாண்டு முதல் நீக்கப்படும். இதனால் இப்பள்ளிகளில் பயிலும் சுமார் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயனடைவர்.

**2.14. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி**

நமது மாநிலத்தில் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டபின் ஒவ்வொரு குழந்தையும் 10 வருடப் பள்ளிக் கல்வியினை முடிப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கினை எட்டுவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவியுடன் இடைநிலைக் கல்வியில் பள்ளி வசதி மற்றும் தரமான கல்விக்கான "SUCCESS" எனும் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிற்குள் 16 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தரம்மிக்க இடைநிலைக் கல்வி வழங்குவதும், 2020 ஆம் ஆண்டிற்குள் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் தொலைநோக்காகும். இத்திட்டத்துக்கென மாநில அரசின் பங்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.15. சமச்சீர் கல்வி**

அரசு மற்றும் அனைத்து வகை நிர்வாகங்களின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஒரே மாதிரியாக வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டம், பாடப் புத்தகங்கள் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட தேர்வு முறை மற்றும் மாணவர்களை மையப்படுத்தும் கற்பிப்பு/கற்கும் முறைகள் வாயிலாக தரமான கல்வியினை வழங்கும் முயற்சியாக சமச்சீர் கல்வியினை செயல்படுத்தி சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் இக்கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளது. சமச்சீர் கல்வியால் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தரமான மற்றும் சமமான கல்வியை அளிப்பதில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழும்.

[2008 ஏப்ரல் 24

**2.16. இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி**

மைய அரசின் உதவிபெறும் திட்டமான இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் பொதுப் பள்ளிகளில் உள்ள இயலாக் குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மைய அரசு 100% நிதியுதவி வழங்கி வருகிறது.

**2.17. நாட்டு நலப் பணித் திட்டம்**

தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல், தன்னம்பிக்கை, தேசப்பற்று, சமூக சேவை மனப்பான்மை போன்ற பண்புகளை மாணவர்கள் அடையத் துணை செய்வதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாகும்.

நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு மைய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. மாநிலத்தில் தற்சமயம் 1,780 குழுக்களாக 89,000 மாணவ, மாணவியர் தொண்டர்களாக உள்ளனர். 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 269.50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படவும், இத்திட்டம் செயல்படாத இதர மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் சென்றடைவதற்கும் இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**2.18. சாரண சாரணியர் இயக்கம்**

தமிழ் நாட்டில் 5,845 பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 1,18,425 மாணவர்களும், 59,287 மாணவிகளும் உள்ளனர். கோவில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி செய்தல் போன்ற சமூகநலச் செயல்பாடுகளை இவ்வமைப்பு செய்து வருகிறது. ஒவ்வோராண்டும் சிறந்த சாரணர்களுக்கு 'ராஜ்ய புரஷ்கார்' என்ற விருது வழங்குவது 1998-1999 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2007-2008 ஆம் ஆண்டிற்கு, ரூபாய் 5 இலட்சம் தொகை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



2008 ஏப்ரல் 24]

**2.19. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இந்திய இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

தமிழ்நாட்டில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் 5,462 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2,30,900 மாணவர்கள் மற்றும் 2,82,200 மாணவிகளுடன் செயல்பட்டு வருகிறது.

**2.20. விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள்**

அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7, 8 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின் சிறப்புத் திறமைகளை அறியும் பொருட்டு ஐந்து தொடர் தேர்வுகள் நடத்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இளைஞர் நல மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இத்திட்டத்தின்மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்கும் திறமை வாய்ந்த மாணாக்கர்களைக் கண்டறிகிறது.

உடற்கல்வி ஆசிரியர்களுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் இப்பயிற்சியினை மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பர். யோகா பயிற்சிக்கென தனி பாடவேளைகள் இக்கல்வியாண்டு முதல் ஒதுக்கப்படும்.

**2.21. ஆசிரியர்களுக்கான மாநில விருது**

தமிழக அரசு 1960 ஆம் ஆண்டிலிருந்து நல்லாசிரியர் விருது வழங்கி வருகின்றது. 1997 ஆம் ஆண்டிலிருந்து இவ்விருது "டாக்டர் இராதாகிருட்டிணன் விருது" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று வழங்கப்பட்டு வருகிறது.

பல்வேறு நிர்வாகத்தின்கீழ் இயங்கும் அனைத்து வகைப் பள்ளிகளிலிருந்தும் ஆசிரியர்கள் தேர்வு செய்யப் படுகிறார்கள். ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியப் பள்ளி, சமூகப் பாதுகாப்புத் துறைப் பள்ளிகள் போன்ற அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் 344 ஆசிரியர்கள் 2007-2008 ஆம் ஆண்டில் இவ்விருதுக்காக தேர்வு செய்யப்பட்டனர். 2007-2008 ஆம் ஆண்டு முதல் விருது பெறும் ஆசிரியர்களுக்குப் பணமாக வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகை

[2008 ஏப்ரல் 24

ரூ.2000/-த்திலிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும் வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், பயணப்படியும் வழங்கப்படுகிறது.

## 2.22. ஆசிரியர்களுக்கான தேசிய விருது

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள துவக்க, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை ஆசிரியர்களில் 22 பேருக்கும் சிறப்பு வகைப் பள்ளி ஆசிரியர்களில் மூவருக்கும் ஆக மொத்தம் 25 விருதுகள் வழங்கப்படுகிறது.

தேசிய விருதுக்காக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு குடியரசுத் தலைவரால் ஆசிரியர் தினத்தன்று புதுடில்லியில் இவ்விருது வழங்கப்படுகிறது. தேசிய விருது பெறும் ஆசிரியர்கட்கு ரூ. 25,000/- ரொக்கத் தொகையும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும், பயணப் படியும் வழங்கப்படுகிறது.

## 2.23. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962-ல் நிறுவப்பட்டது. மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் இதன் தலைவர். பள்ளிக் கல்வி இயக்குநர், இதன் செயலாளர். இந்நிறுவனம் பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. ஆசிரியர்தின கொடி விற்பனை நிதியைப் பயன்படுத்தி பல்வேறு ஆசிரியர் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

## 2.24. மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தைக் கொணர்ந்தது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அரசு, மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியன் பள்ளி மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:—



2008 ஏப்ரல் 24]

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ.15,000/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ.12,000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ.10,000/- |

அதேபோன்று, மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாக படித்து முதன் மூன்று இடங்களைப் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ.7,500/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ.6,000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ.5,000/- |

மேலும் மேல்நிலைத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப் பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து-1) பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்கல்விக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கிறது.

இது தவிர மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப் பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து-1) பள்ளியில் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவினமாக ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் 3 இடங்களை பெறும் மாணாக்கர்களின் மேற்கல்விக்கான முழு செலவையும் மாநில அரசே ஏற்கிறது.

இது தவிர பாடவாரியாக மாநிலத்தில் முதலிடம் பெறும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

## 2.25. ஊரக திறனாய்வுத் தேர்வுத் திட்டம்

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் திறன் மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒவ்வோராண்டும், ஆகஸ்ட் மாதம் அரசு தேர்வுத் துறை இயக்குநரால் இத்தேர்வு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 50 மாணவர்கள், 50 மாணவிகள் என மொத்தம் 100 மாணாக்கர்கள் இத்தேர்வின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

[2008 ஏப்ரல் 24

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.1000/-ம் 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரைத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதற்காக அரசு ரூ.1 கோடி செலவிடுகிறது.

**2.26. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்**

இத்திட்டத்தின்மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக் கொணரப்படுகின்றன. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியம் வரைதல், வினாடிவினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் போன்ற பல போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும், போட்டிகள் நடத்தப்பட்டு, பின் இறுதியாக மாநில அளவிலும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**2.27. மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதி உதவி**

இத்திட்டத்திற்காக அரசு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.175 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் (தாய் அல்லது தந்தை) விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடமாக்கப்பட்டாலோ அம்மாணவர்களுக்கு ரூ.50,000 வீதம் நிதியுதவி கிடைக்கும்.

**2.28. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2006**

இத்திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற (விவசாயத் தொழிலாளர்களின்) குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு கல்வி உதவி தொகை வழங்கப்படுகிறது :

| | மாணவன் | மாணவி |
|---|---|---|
| 10-ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,250 | ரூ.1,500 |
| 12-ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,750 | ரூ.2,000 |



2008 ஏப்ரல் 24]

மேற்கண்ட உதவித் தொகை 2007-2008 ஆம் நிதி ஆண்டில் ரூ. 2 கோடி அனுமதிக்கப்பட்டு, தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

**2.29. வாழ்வியல் திறன் கல்வி அறிமுகம்**

2007-2008 ஆம் ஆண்டில் அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வாழ்வியல் திறன்களான உடல்நலக் கல்வி, மக்கள் தொகை கல்வி, எச்ஐவி/எய்ட்ஸ்/குழந்தைகள் உரிமையும் பாதுகாப்பும் மற்றும் வளரினம் பருவ நலக்கல்வி இவற்றை அறிமுகப்படுத்த ரூ. 50.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆசிரியர்கட்கு பயிற்சி அளிக்கப்பட்டு இத்திட்டம் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது.

**2.30. நபார்டு வங்கி-நிதியுதவித் திட்டம்**

நபார்டு வங்கி நிதி உதவிமூலம் அடிப்படைத் தேவைகளாகிய வகுப்பறை, ஆய்வகங்கள், கழிப்பறை, குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகள் தேவையான அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 7 கட்டங்களாக 1,583 பள்ளிகளுக்கு ரூ. 707.87 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**2.31. நபார்டு வங்கி நிதி உதவியுடன் அரசு பள்ளிகளில் இருக்கை வசதிகள் ஏற்படுத்துதல்**

நபார்டு வங்கி நிதி உதவியுடன் பகுதி I முதல் 7 முடிய உள்ள கட்டங்களில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளுக்கு RIDF-XII திட்டத்தின்கீழ் இருக்கை வசதிகளை ஏற்படுத்திட அரசு ரூ. 69,10,92,000/- தொகை ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி 29 மாவட்டங்களில் 1,530 அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணாக்கர்களுக்காக 1,90,140 பெஞ்சு மற்றும் 1,90,140 டெஸ்குகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்காக 15,845 மேஜைகளும் 15,845 நாற்காலிகளும் டான்சி நிறுவனத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 24

**2.32. தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்**

பெற்றோர் ஆசிரியர் கழகம் சங்கச் சட்டம் 1975-ன்படி, பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பைக் கைவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற பொதுமக்களிடமிருந்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் நன்கொடையாக பெறப்படுகின்றன. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்காக மாணவர்கள் பயன்படும் வகையில் வினாவங்கி ஏடுகள் (Question Bank) வெளியிடப்பட்டது.

**2.33. கல்வி வளர்ச்சி நாள்**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாள் என அரசு அறிவித்துள்ளது. இந்நாளில் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இலவச மதிய உணவு திட்டத்தில் பயன் பெறும் குழந்தைகளுக்கு வாரம் 3 முட்டைகள் வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 3. மெட்ரிக்குலேசன் பள்ளிகள்

மெட்ரிக்குலேசன் பள்ளிகள், சுயநிதி அடிப்படையில் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கலைத்திட்டம் மற்றும் பாடத் திட்டத்தின்படி, ஆங்கில வழியில் கல்வி கற்பித்து வருகின்றன. இப்பள்ளிகள் 1976-ல், பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. தற்போது மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ், 3,603 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட "மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பு" (Code) இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாடு அரசு மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி நலனைக் கருத்திற்



2008 ஏப்ரல் 24]

கொண்டு, பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான பள்ளி உட்கட்டமைப்பிற்கான விதிகளை உள்ளடக்கிய விதிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006-ன் சட்டப் பிரிவு எண் 3 (1)-ன்படி தமிழ் ஒரு கட்டாய மொழிப் பாடமாக அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை 2006-2007 கல்வியாண்டிலிருந்து முதல் வகுப்பு தொடங்கி படிப்படியாக பயிற்றுவிக்கப்படும். 2008-2009 கல்வியாண்டில் தமிழ் பகுதி I-ல் கட்டாய மொழிப்பாடமாக முதல் வகுப்பு முதல் 3 ஆம் வகுப்பு வரை பயிற்றுவிக்கப்படும்.

**3.1. இலவச தமிழ்ப் பாட நூல்கள்**

மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு 2007-2008 ஆண்டு முதல் இலவச தமிழ்பாட நூல்கள் தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் 21,00,000 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்கென செலவு ரூ.2.03 கோடி ஆகும்.

மெட்ரிகுலேசன்/மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளை திறம்பட நிர்வகிக்கவும் முறையாக கண்காணிக்கவும் ஏதுவாக 2007-2008-ல் திருவள்ளூர், கடலூர், தஞ்சாவூர், விருதுநகர், ஈரோடு ஆகிய இடங்களில் புதிதாக 5 மெட்ரிக் பள்ளிகள் ஆய்வு அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 4. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**4.1. தொலைநோக்கு**

- ❖ ஆசிரியர்கள், வட்டார வளமைய ஆசிரியர்கள் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் மற்றும் கல்வி தொண்டாற்ற முன்வருபவர்கள் ஆகியவர்களின் பன்முகப் பயிற்சிக்குத் தேவையான வள மையங்களாக மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களை மாற்றியமைத்தல்
- ❖ கல்வியில் புதிய அணுகுமுறைகள் மற்றும் செயல்முறை ஆய்வுகளை பகிர்ந்து கொள்ளும் தளங்களாக மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களை உருவாக்குதல்

[2008 ஏப்ரல் 24

- ❖ கல்வி சம்பந்தப்பட்ட முக்கியமான ஆராய்ச்சி கண்டு பிடிப்புகளை அவ்வப்போது சேகரித்து அனைவரும் பயன்பெறும் வகையில் வைத்தல்
- ❖ தரமான கல்வியை உருவாக்கத் தேவைப்படும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஊக்குவித்தல் மற்றும் உதவி செய்தல்
- ❖ கல்வித் தரத்தைத் தக்கவைத்துக் கொள்ள தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம், தேசிய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், மண்டல கல்வி மையம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் போன்ற தேசிய நிறுவனங்களுடன் தொடர்பினை வளர்த்துக் கொள்ளுதல்
- ❖ அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி கிடைக்க அரசுக்கு உறுதுணையாக இருத்தல்
- ❖ கலைத் திட்டம், பாடத் திட்டம் மற்றும் பாடப் புத்தகங்களை அவ்வப்போது ஏற்படும் வளர்ச்சிக்கேற்ப உருவாக்குதல்
- ❖ தொலைத்தொடர்புக் கல்வியை மேம்படுத்த ஏதுவாக பயிற்சிக் கையேடு, ஒலி-ஒளி கல்வி மென்பொருள் ஆகியவற்றை உருவாக்குதல்
- ❖ தமிழ்நாட்டில் கல்வித் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை அறிந்து கொள்ள மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ளுதல்

**4.2. தரமான கல்வியை நோக்கி**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால், கல்வியாளர்களுக்கென களப்பயண அனுபவம், மாவட்ட அளவிலான கருத்தரங்குகள், பல்வேறு பணியிடைப் பயிற்சிகள், செயலாராய்ச்சிகள் மற்றும் கல்வியியல் ஆய்வுகள் போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் ஆசிரியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன ஆசிரியர்களின் அறிவும் திறமையும் இத்தகைய செயல்பாடுகளால் மேம்படுத்தப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 24]

**4.3. 2007-2008-ல் சாதனைகள்**

**தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்குதல்**

தருமபுரி மாவட்டத்தில் 3-9-2007-ல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டது. அம்மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் தரமான பயிற்சியை அளிக்க இந்நிறுவனம் மிகவும் உதவிகரமாக உள்ளது.

**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான தற்காலிகப் பணி விதிகள்**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்/மாவட்ட ஆசிரியர் மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆசிரியர் பணியாளர்களுக்கான தற்காலிகப் பணிவிதிகள், முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 2007-2008 ஆம் ஆண்டில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 6,531 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நுழை நிலை (Induction Training) பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. இப்பயிற்சியின் வாயிலாக இவ்வாசிரியர்கள் பாடக் கருத்துக்கள் குறித்த தெளிவும், புதிய கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் கற்பித்தல், புதிய தகவல் தொழில்நுட்ப அறிவினை வகுப்பறையில் சிறந்த முறையில் பயன்படுத்துதல் போன்ற செய்திகளை அறிந்து பயனடைந்தனர். 2008-2009 ஆம் ஆண்டில் 2,533 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் 6,000 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 500 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோருக்கு நுழைநிலைப் பயிற்சி (Induction Training) அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4.4. பள்ளிகளில் வளரிளம் பருவ கல்வித் திட்டம்**

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் யுனிசெப் உதவியுடன், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் எய்ட்ஸ் கல்வித் திட்டத்தைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகையான பள்ளிகளில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. தமிழகத்தில் 9,423 பள்ளிகளிலுள்ள ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்பு

[2008 ஏப்ரல் 24

மாணவர்கள் இத்திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர். பயிற்சி பெற்ற தலைமையாசிரியர்கள், ஒருங்கிணைப்பு ஆசிரியர்கள், துறை சார்ந்த திறன் வாய்ந்த கல்வியாளர்கள்மூலம் "வாழ்க்கை திறன் கல்வி" கையேட்டினை பயன்படுத்தி இம்மாணவர்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு முறை, பரவும் விதங்கள் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இப்பயிற்சிக்குப்பின், ஆசிரியர்கள்/துறை சார்ந்த கல்வியாளர்கள்மூலம் ஒவ்வொரு பள்ளியிலும் 16 மணி நேர பாட அட்டவணைத் திட்டமிடப்பட்டு வாழ்க்கைத் திறன் குறித்த பயிற்சி நடத்தப்பட்டது.

**4.5. மக்கள் தொகைக் கல்வித் திட்டம்**

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் மக்கள் தொகைக் கல்வியானது, மாநிலத்தில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் வாயிலாக, 1980-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இத்திட்டமானது, கல்வியில் பின் தங்கியும், மக்கள் தொகையில் முதன்மையாகவும் உள்ள, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

இக்கல்வியாண்டுக்குக் கீழ்கண்ட முக்கியச் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

1. பாடநூல்களில் வளரிளம் பருவக் கருத்துகளைக் கண்டறிதல்.
2. தொடக்க மற்றும் உயர்தொடக்க வகுப்பு ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகளில் வாழ்க்கைத் திறன் குறித்த பாடங்களை இணைத்தல்.
3. மக்கள் தொகைக் கல்வியை அனைவரிடத்திலும் கொண்டு செலுத்தும் வண்ணம் செயல்பாடுகள் ஏற்படுத்துதல்.

**4.6. கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம்**

கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் மற்றும் அதன் செயல்பாடுகள், சென்னை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது. இது தொழில்நுட்பம் சார்ந்த ஒலி-ஒளிக்காட்சி மற்றும் கல்விச் செயற்கைக் கோள் நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. கல்வித் தொழில்நுட்பவியலின் ஒரு மையமாக கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் தமிழ்நாடு



2008 ஏப்ரல் 24]

மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. 36 கல்வித் தொலைக்காட்சி நிகழ்பட வரைவுகள் கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு மூலமாக ஜூலை 2007 முதல் டிசம்பர் 2007 வரை தயாரிக்கப்பட்டு சென்னை தொலைக்காட்சியின் "காண்போம் கற்போம்" மூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன.

**4.7. கல்வி செயற்கைக்கோள்**

கல்வி செயற்கைக்கோளினை முழுமையாகச் செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு செவ்வாய் கிழமைகளிலும் மாணவர்-ஆசிரியர் பயன்பாட்டிற்காகக் கல்வி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. வருடம் முழுமையும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் பாட வல்லுநர்கள் கண்டறியப்பட்டு நிகழ்வுகள் தயாரிக்கப்படுகின்றன. பாடக் கருத்தையும், பாடக் கற்பிப்பு முறையையுமே இந்நிகழ்ச்சிகள் மையமிட்டுள்ளன. காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் உதவியுடன் காந்தியச் சிந்தனை நிகழ்ச்சியும் கல்வி செயற்கைக்கோள் மூலமாக ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

**4.8. வலைதளப் பயன்பாடு**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி, மற்றும் பயிற்சி இயக்ககச் செயல்பாடுகள் அனைத்தையும் www.dtert.tn.nic.in என்னும் இணைய தளத்தில் காணலாம். அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி நிறுவனங்களும் தங்களுக்கென இணைய தளங்களை உருவாக்கி உள்ளதோடு அவற்றில் தங்களது செயல்பாடுகளைத் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றன.

## 5. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின்மூலம், தமிழகத்திலுள்ள 15 முதல் 35 வயதுடைய அனைத்து எழுத்தறிவு அற்றவர்களுக்கும் எழுத்தறிவினை அளித்தலை நோக்கமாகக் கொண்டு அனைத்துக் கிராமங்களிலும் வளர் கல்வி மையங்கள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இதனால் கற்கும் சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் எழுத்தறிவு சதவிகிதத்தில் நிலவும் ஆண்/பெண் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டிலுள்ள மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய அனைத்து மாவட்டம்/வட்டாரங்களிலும் மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

[2008 ஏப்ரல் 24

**5.1. வளர் கல்வித் திட்டம்**

தமிழ்நாட்டில், எழுத்தறிவுத் திட்டத்தின் முதற்கட்டமாகிய 'முழு எழுத்தறிவு இயக்கம்' மற்றும் இரண்டாம் கட்டமாகிய 'தொடர் கல்வித் திட்டம்' ஆகியவை நிறைவு பெற்றவுடன், மூன்றாம் கட்டமாகிய 'வளர் கல்வித் திட்டம்', சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறிவொளி இயக்கத்தின் முதல் இரண்டு கட்டங்களில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தங்கள் எழுத்தறிவினை நிலை நிறுத்திக் கொள்ளும் வகையில் வளர் கல்வி மையங்கள் அமைக்கப்படுகின்றன. வளர் கல்வித் திட்டத்தின் வாயிலாக, பொதுவாக, அனைத்து கிராம மக்களுக்கும், குறிப்பாகப் புதிதாக எழுத்தறிவு பெற்றோருக்கும் சமநிலைக்கல்வி, தனி நபர் விருப்ப முன்னேற்றம், வருவாய் பெருக்கத்திற்கான வாய்ப்பு, வாழ்க்கைத்தர மேம்பாடு போன்றவற்றிற்கான பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

இதுவரை வளர் கல்வித் திட்ட செயல்பாட்டிற்காக தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் 12,632 வளர் கல்வி மையங்கள் மற்றும் 1,475 தலைமை வளர் கல்வி மையங்கள் அமைத்திட மைய அரசு மொத்தம் ரூ.74.65 கோடி நிதியை அளித்துள்ளது.

வளர் கல்வித் திட்டத்தினால் இதுவரை அனைத்து வகையிலும் பயன்பெறுவோர் சுமார் 54,28,000 பேர் ஆவர். இதில் ஆண்கள் 23,44,000 பேர் மற்றும் பெண்கள் 30,84,000 பேர் பயனடைந்துள்ளனர்.

**5.2. மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 5,33,333 எழுத்தறிவற்ற மகளிர், எழுத்தறிவு பெறுவதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.4 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**5.3. விடுபட்டோருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள 31 மாவட்டங்களில், மாநில சராசரி எழுத்தறிவு விகிதத்தைவிடக் குறைவான, மகளிர் எழுத்தறிவில் பின்தங்கியுள்ள 17 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு விடுபட்ட மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம் மைய மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



2008 ஏப்ரல் 24]

**5.4. தேசிய திறந்த வெளிப் பள்ளி**

புதிதாக எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டவர்களில் தாம் கற்ற கல்வியைத் தொடர்வதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு வசதியாக தேசிய திறந்த நிலைக் கல்வியுடன் இணைந்து பள்ளிக் கல்விக்கு இணையாக நிலை-A (3 ஆம் வகுப்பு), நிலை-B (5 ஆம் வகுப்பு), மற்றும் நிலை-C (8 ஆம் வகுப்பு) ஆகிய வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 5,875 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 6. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுகள் துறை 1975 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வி இயக்குநரகத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

**6.1. பொறுப்புகள்**

❖ இடைநிலை/மேல்நிலை அளவிலான தேர்வுகள் (10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகள்) நடத்துதல். இப்பிரதான தேர்வுகளுடன் 29 வேறு பல தேர்வுகளையும் இத்துறை நடத்துகிறது.

❖ ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகள் மூன்று பருவங்களில் (மார்ச்/ஏப்ரல், ஜூன்/ஜூலை, மற்றும் செப்டம்பர்/அக்டோபர்) நடத்தப்படுகின்றன. ஏனைய தேர்வுகள் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

❖ துறையால் வழங்கப்பட்ட பொதுத் தேர்வுகளுக்கான சான்றிதழ்கள் தவறவிட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, உரிய கட்டணம் செலுத்துவதினால் அவர்களுக்கு சான்றிதழ்களின் இரண்டாம் படி/ சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

❖ மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படும் மாணவர்கள் மற்றும் இத்துறையால் அளிக்கப்பெறும் சான்றிதழ்களின் அடிப்படையில் வேலை வாய்ப்பைப் பெறுபவர்கள் சமர்ப்பிக்கும் சான்றிதழ்களின் மெய்த் தன்மையை இத்துறை சரிபார்த்து வழங்குகிறது. போலிச் சான்றிதழ் அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

❖ இம்மாநிலத்தில் 10/12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சியுற்று பிற மாநிலத்தில் மேல்படிப்பைத் தொடர விழையும் நபர்களுக்கு புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 6.2. தேர்வு முடிவுகளுக்கான நடவடிக்கை

தேர்வு முடிவுகளுக்கான நடவடிக்கை அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இடைநிலை மற்றும் மேல்நிலைக்கான தேர்வுகளுக்கான முடிவுகளை கணினிமயமாக்குதலும் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும் கீழ்க்கண்ட பணிகளும் இம்மையத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மதிப்பெண் சான்றிதழ்களின் மெய்த் தன்மையை சரிபார்த்தல்.

2. மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மறு மதிப்பீடு/மறுகூட்டல் செய்யப்பட்டபின் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குதல்.

### 6.3. மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / பணியாளர் தேர்வாணையக் குழுமத்திற்கு ஒத்துழைப்பு

அனைத்து மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம்/பணியாளர் தேர்வாணைய குழுமத்திற்கான தேர்வுகளை இந்திய அரசின் சார்பாக, ஒவ்வொரு ஆண்டும் இத்துறை சென்னை மையத்தில் நடத்துகிறது. அதில் ஒன்று குடிமைப் பணித் தேர்வுகள். மைய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 14 தேர்வுகள் மற்றும் பணியாளர் தேர்வாணையத்தின் 12 தேர்வுகளும் இத்துறையால் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளுக்கு இத்துறை ஒத்துழைப்பு நல்குகிறது.

### 6.4. மதிப்பெண் சான்றிதழ்கள்

மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் அச்சிடப்பட்டு தேர்வாளர்களுக்கு வழங்கப்படுகிறது.



### 6.5. தேர்வு முடிவுகள்

மேல்நிலை/இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான முடிவுகள் மதிப்பெண்களுடன் வெளியிடப்பட்ட நாளன்றே தனியார் வலைதளத்திலும் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

### 6.6. விடைத்தாள்களில் மதிப்பெண் மறுகூட்டல்

இவ்வசதி, அனைத்துத் தேர்வாளர்களுக்கும் மேல்நிலை, இடைநிலை/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத்திற்கான அனைத்துப் பாடங்களுக்கும் அளிக்கப்படுகிறது.

### 6.7. சிறப்புப் பொதுத் துணைத் தேர்வுகள்

மார்ச் மாதத்தில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி மற்றும் மேல்நிலைத் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஒரு முழுக் கல்வி ஆண்டை வீணாக்காமல் உயர் கல்விப் படிப்புகளில் உடனடியாகச் சேருவதற்கு வழி செய்யும் வகையில் ஜூன் மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.

### 6.8. தேசியத் திறனறி தேர்வுகள்

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் சார்பில் இத்துறை தேசியத் திறனறி தேர்வு 2005 ஆம் ஆண்டு வரை பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடத்தி வந்தது. 2006 ஆம் ஆண்டிலிருந்து இத்தேர்வு எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் நடத்தப்பட்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற இத்தேர்வில் தமிழ்நாட்டில் எட்டாம் வகுப்புப் பயிலும் 24,294 மாணவர்களும் பத்தாம் வகுப்புப் பயிலும் 19,248 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

### 6.9. வினாத்தாள் படிப்பதற்கு கூடுதலாக 10 மணித்துளிகள் அவகாசம்

பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மார்ச், 2008 ஆம் ஆண்டிலிருந்து 10 மணித்துளிகள் கூடுதல் கால அவகாசம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் தேர்வு எழுதுவதற்கு முன்பாக தேர்வு எழுதுபவர்கள் மன ஒருமைப்படுத்தி உளவியலாக தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு பாடத்தின் தேர்வு தொடக்க நிலையின்போது வினாத்தாளைப்

படிப்பதற்கு *10* நிமிடங்கள் கூடுதலாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலிருந்து நெடுந்தொலைவு பயணித்துத் தேர்வறையை அடையும் மாணவர்களுக்கு இது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

### 6.10. வலைதளம்

கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம், இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் தொடர்பான சான்றிதழ் நகல் மற்றும் மதிப்பெண் பட்டியலின் சான்றொப்பமிடப்பட்ட நகலுக்கான (CCM) கட்டணம் போன்ற விவரங்களை வெளியிடுவதற்காக இத்துறைக்கெனத் தனிப்பட்ட வலைதளம் உள்ளது. வலைதள முகவரி: www.tn.gov.in/dge. மாணவச் சமுதாயத்தின் நலனுக்காக முந்தைய ஆண்டுகளின் மேல்நிலைக் கல்வி, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் இத்துறையின் வலைதளத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை அரசுப் பள்ளிகளுக்குத் தெரிவு செய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது. ஆசிரியர் தேர்வு வாரியம் கீழ்க்காணும் பல்வேறு முறைகளின் வாயிலாக திறமை மிக்க ஆசிரியர்களைத் தெரிவு செய்கிறது.

(i) பள்ளிகளுக்கான பட்டதாரி/முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை வேலைவாய்ப்பு பதிவுமூப்பு அடிப்படையிலும்,

(ii) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை நேர்காணல் நடத்தியும்,

(iii) பொறியியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை போட்டி எழுத்துத் தேர்வு நடத்துவதன்மூலமாகவும் தெரிவு செய்கிறது.

காலிப் பணியிட மதிப்பீடு பெறப்பட்ட கீழ்க்கண்ட பணியிடங்களைத் தெரிவு செய்யும் பணியினை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொள்ள உள்ளது.





### 7.1. தெரிவு செய்தல்

**வேலைவாய்ப்புப் பதிவு மூப்பு அடிப்படையின் மூலம் தெரிவு செய்தல்**

1. பள்ளிக் கல்வித் துறை, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் மதுரை மாநகராட்சிப் பள்ளிகளுக்கான பட்டதாரி உதவி ஆசிரியர்கள்
2. பள்ளிக் கல்வித் துறை, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பள்ளிகளுக்கான முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்
3. பள்ளிக் கல்வித் துறைக்கான தொழிற்கல்வி ஆசிரியர் (வேளாண்மை)

**நேர்காணல் மூலம் தெரிவு செய்தல்**

4. அரசு கலை/அறிவியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் போட்டித் தேர்வுகள் மூலம் தெரிவு செய்தல்
5. அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கான வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
6. அரசு பொறியியல் கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு முதல்வர் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்கள்
7. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கான விரிவுரையாளர்கள்

*2006-2008* ஆம் ஆண்டுகளில், பல்வேறு இனங்களில் *12,307* ஆசிரியர்கள், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### 7.2. வலைதளம்

ஆசிரியர் தேர்வு வாரியம் அதற்கென http://trb.tn.nic.in என்ற வலைதளத்தினை உருவாக்கி அதன் மூலம் காலிப்பணியிட விவரங்கள், தேர்வுக்கான அட்டவணைகள், அனைத்துத் தேர்வர்களின் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இறுதித் தேர்ச்சிப் பட்டியல் ஆகியவற்றை பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிடுகிறது.

[2008 ஏப்ரல் 24

## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

தரமான பாடநூல்களை அச்சிட்டு, வாங்கத்தக்க விலையில், குறித்த காலத்தில் மாணவ மாணவியருக்கு வழங்குவதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் நோக்கமாகும். மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடநூல்கள் கிடைப்பதை உறுதிசெய்வதும், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் பிரிவினருக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குவதும் செயல் நோக்கமாகும்.

### 8.1. பாடப் புத்தகங்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 502 தலைப்புகளில் 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு 529 நூல்கள் (தொகுதி I தொகுதி II உட்பட) அச்சிடுவதுடன் தொழிற்பயிற்சிக்கான சில நூல்கள் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்புக்கான நூல்களையும் கீழ்க்குறிப்பிட்டவாறு அச்சிட்டு வருகிறது.

(1) மாநிலப் பாடத் திட்டத்தில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள்.

(2) மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாடநூல்கள்.

(3) மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள்.

(4) 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விப் பாடநூல்கள்.

(5) அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுப் பருவங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கான பாடநூல்கள்.

(6) சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாடநூல்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.

(7) ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள்.



2008 ஏப்ரல் 24]

(8) ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்.

(9) பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான மாதிரி வினா வங்கி மற்றும் தீர்வு நூல்கள்.

### 8.2. இலவசப் பாடநூல்கள்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், சுயநிதிப் பள்ளிகளில் மாநில பாடத் திட்டத்தின்கீழ், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. மேலும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு, தமிழ்ப் பாடநூல்கள் மட்டும் 2007-08 ஆம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்கப்படுகின்றன.

### 8.3. வலைதளம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது ஆகிய 6 மொழிகளில் 529 பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. இவற்றில் 348 பாடநூல்கள் www.textbooksonline.tn.nic.in என்ற வலைதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளன.

### 8.4. பிற மாநிலங்களில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, கொச்சி தமிழ் ஐக்கியச் சங்கம் மற்றும் அந்தமான் நிக்கோபார் நிர்வாகம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக பாடநூல்களை இலவசமாக வழங்கி வருகிறது.

### 8.5. குறிப்பேடுகள்

தமிழ்நாடு பாடநூல் கழகம் குறிப்பேடுகளைத் தயாரித்து வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகிறது.

[2008 ஏப்ரல் 24

## 9. பொது நூலகம்

பொது நூலகத் துறையின் குறிக்கோள் நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே வாழ்நாள் முழுவதும் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பது ஆகும்.

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி மாநிலத்தில் பொது நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. தற்போது பல்வேறு வகைகளில் தமிழகமெங்கும் 3,755 நூலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம்) | .. | 1 |
| 2. | மாவட்ட மைய நூலகங்கள் | .. | 30 |
| 3. | கிளை நூலகங்கள் | .. | 1567 |
| 4. | ஊர்ப்புற நூலகங்கள் | .. | 1492 |
| 5. | பகுதி நேர நூலகங்கள் | .. | 653 |
| 6. | நடமாடும் நூலகங்கள் | .. | 12 |
| | மொத்தம் | .. | 3755 |

### 9.1. நூலகச் சீரமைப்பு மாநாடு

நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நூலகத் தேவைகளை நன்கொடைகள்மூலம் பெற நடத்தப்படுகின்றன. பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. இவ்வாறு பொது மக்களிடமிருந்து காலிமனை, கட்டடங்கள், தளவாடங்கள், கணிப்பொறி முதலியன நன்கொடையாக ஏற்கப்படுகின்றன. மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை இணைத்து இத்தகைய வளர்ச்சி மாநாடுகள் நடத்தப்படுகின்றன. முதல் வளர்ச்சி மாநாடு கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களை இணைத்து கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. அடுத்து தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களை இணைத்து இரண்டாவது மாநாடு தேனியிலும் திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களையும் இணைத்து திருச்சியிலும் நடத்தப்பெற்றது.



2008 ஏப்ரல் 24]

❖ பொது நூலகத் துறையின் சார்பாக, "பொது நூலகச் செய்தி மடல்" என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

### 9.2. வாசகர் வட்டம்

பொது நூலக /இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கொண்ட "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, விடுதலை நாள் விழா, குடியரசு நாள் விழா, தேசிய நூலக வார விழா, தேசியத் தலைவர்கள் பிறந்த நாள் விழாக்கள் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### 9.3. இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி

கொல்கத்தாவில் உள்ள இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மாநில பங்கேற்பு உள்ள/இல்லாத திட்டங்களின்கீழ் அனைத்து மாநிலங்களுக்கும் நூலக வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு இந்த அறக்கட்டளையில் இருந்து ஆண்டுதோறும் மிக அதிக நிதியுதவியாக ரூ.300 இலட்சம் பெற்று வருகிறது. இவ்வாறு பெறப்படும் நிதியுதவி, நூல்கள், கணிப்பொறி, நூல் அடுக்குகள் வாங்குதல், பயிற்சி மற்றும் நூலகக் கட்டடங்கள் கட்டுதல் முதலானவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

### 9.4. குடிமைப்பணி கல்வி மையங்கள்

"குடிமைப்பணி கல்வி மையங்கள்" மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாவட்ட மைய நூலகங்களிலும்/கிளை நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 150 குடிமைப்பணிக் கல்வி மையங்கள் இயங்கி வருகின்றன.

### 9.5. நவீன மாநில நூலகம்

புதிய அறிவியல் நூல்கள், புதிய வெளியீடுகள், வரலாற்றுப் படைப்புகள் மற்றும் மேற்கோள் நூல்கள் உட்பட்டவை இன்னமும் ஏழை எளிய மாணவர்களுக்கும், சாதாரண பொது மக்களுக்கும் கிடைத்தற்கரியனவாக உள்ளன. ஆகவே, இவற்றை எளிதில் பெறுவதை உறுதி செய்ய வேண்டி, சர்வதேசத் தரத்திலான நவீன மாநில நூலகம்

[2008 ஏப்ரல் 24

ஒன்றைச் சென்னையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இந்நூலகம், நவீன உட்கட்டமைப்பு வசதியுடன் அனைத்து நூல்கள் மற்றும் இணைய அடிப்படையிலான வெளியீடுகளுடன் கூடிய ஒரு மிகப் பெரிய மாதிரி நூலகமாக அமையவுள்ளது. இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவினம் ரூ.100 கோடி ஆகும். இந்த நூலகத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, வடிவமைப்பும் முடிவு செய்யப்பட்டு, இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையொப்பமிடப்பட்டுள்ள நிலையில், கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**கன்னிமாரா பொது நூலகம்**

கன்னிமாரா பொது நூலகம் தற்போது தனிப்பட்ட நபர்களிடம் உள்ள அரிய பழமையான நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை குறுந்தகடுகளில் பதிவு செய்து நூலகத்தில் பாதுகாத்தும் மற்றும் சரியான தகவலைச் சரியான நேரத்தில் வாசகர்களுக்கு வழங்கியும் வருகிறது; நூலகப் பணியாளர்களின் நூலகப் பணித் திறனை மேம்படுத்த தகவல் தொழில் நுட்பவியலில் உரிய பயிற்சி வழங்கியும் வருகிறது.

கன்னிமாரா பொது நூலகம் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி மாநில மைய நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோகச் (பொது நூலகங்கள்) சட்டம், 1954-ன்படி தேசிய வைப்பு நூலகமாகவும் (National Repository) செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களை அவற்றின் பதிப்பாளர்களிடமிருந்து இலவசமாக பெறக்கூடிய தகுதியை இந்நூலகம் பெற்றுள்ளது. மேலும், இந்நூலகம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய நிறுவனங்களின் வெளியீடுகளைக் கொண்ட தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகத்தில் 6.36 இலட்சம் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்நூலகப் பணிகள் முழுமையும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சுமார் 1000 வாசகர்கள் இந்நூலகத்திற்கு வருகை புரிகின்றனர். மற்றும் இந்நூலகத்தில் 93,685 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டணம் செலுத்தும் உறுப்பினர்களுக்கு நாள் ஒன்றுக்கு 475 நூல்களும், ஆண்டொன்றுக்கு 1.75 இலட்சம் நூல்களும் வழங்கப்படுகின்றன.



2008 ஏப்ரல் 24]

- நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்களை குறுந்தகட்டில் பதிவு செய்து பாதுகாக்கத் தேவையான Book Scanner மற்றும் Paper Scanner வசதிகளை இந்நூலகம் கொண்டுள்ளது. மேலும் திருமலை திருப்பதி தேவஸ்தான மின்னணு நூலகத் திட்ட உதவியுடன் குறுந்தகட்டில் பழைய நூல்களைப் பதிவு செய்யும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

- இணைய தளத்தின் வழியாக பழைய மற்றும் அரிய நூல்களைப் படிக்கவும், படி எடுக்கவும் 10 கணிப்பொறியுடன் கூடிய மின்னணு நூலகப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

- இணைய தளத்தின் மூலம் பள்ளி மாணவ மாணவியர்கள் தங்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகளைப் பெறவும், பாடம் தொடர்பான குறுந்தகடுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வசதியாக 10 கணிப்பொறிகளுடன் கூடிய பன்முக ஊடகப் பிரிவு (Multimedia Section) செயல்பட்டு வருகிறது.

- கல்லூரி மாணவ மாணவியர் பயனுக்காக தேவையான நூல்களைக் கொண்ட பாடநூல் பிரிவும், குடிமைப்பணி மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுவோர் பயனுக்காக போதிய அளவு புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் கொண்ட குடிமைப்பணி கல்வி மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

- அனைத்துப் பதிப்பாளர்களின் தமிழ் நூல்களை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யும் வகையில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்க ஆதரவில் கன்னிமாரா நூலக வளாகத்தில் நிரந்தரப் புத்தகப் பூங்கா செயல்பட்டு வருகிறது.

**9.5. மறைமலை அடிகள் நூல் நிலையம் :**

மறைமலை அடிகள் நூல் நிலையம் என்ற அரசு நிதியுதவியுடனான ஒரு நூல் நிலையம் சென்னை லிங்கிச் செட்டித்

[2008 ஏப்ரல் 24

தெருவில் இடவசதியின்றியும் மிகவும் பழுதடைந்த கட்டடத்திலும் செயல்பட்டு வந்தது. தமிழன்பர்களின் வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி, இந்நூலகம் கன்னிமாரா பொது நூலக வளாகத்திற்கே இடமாற்றம் செய்யப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**9.7. எதிர்காலத் திட்டங்கள் (2008-2009)**

- பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை அவற்றின் வெளியீட்டாளர்களிடமிருந்து பெற்று குறுந்தகட்டில் பதிவு செய்து கன்னிமாரா பொது நூலகத்தில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஏப்ரல் 24]

**இணைப்பு III**

*(745 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 43—**

**பள்ளிக் கல்வித் துறை**

**அறிவிப்புகள், 2008-2009**

1. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை நினைவு கூரும் வண்ணம், பள்ளிக் கல்வித் துறையில் நடப்பாண்டில் கட்டப்படும் அனைத்துக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவுக் கட்டடம் என்று பெயர் சூட்டப்படும்.

2. **ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மின் கட்டணத்தை இனி வரும் காலத்தில் அரசே ஏற்றுக் கொள்ளுதல்**

   2008-2009ஆம் ஆண்டு முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் போலவே துவக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான மின் கட்டணத்தையும் அரசே ஏற்கும். இதற்கான நிதி ஒதுக்கீடு பள்ளிக் கல்வித் துறையின் வரவு செலவுத் திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

3. **பேரூராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் சீரமைப்புப் பணி மேற்கொள்ளுதல்**

   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களின் புனரமைப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என கோரிக்கைகள் வந்துள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் இசைவோடு 2008-2009 ஆம் ஆண்டு முதல், பேரூராட்சிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளும் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 24

**4. புதிய நடுநிலைப் பள்ளிகள்**

*2008-2009 ஆம் கல்வியாண்டில் 1005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். மக்கள்தொகை 500 அல்லது 3 கி.மீ. சுற்றளவில் பள்ளிகள் இல்லை என்பதைக் கணக்கில் கொண்டு பள்ளிகள் தரம் உயர்த்தப்படும். இந்த 1005 பள்ளிகளுக்கு 1005 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், கடந்த 2 ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட 572 பள்ளிகளுக்கு 572 பணியிடங்களும், ஆக மொத்தம் 1577 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்படும்.*

**5. 2008-2009 ஆம் ஆண்டிற்கான காலிப் பணியிடங்களில் புதிய ஆசிரியர் நியமனங்கள்**

*2008-2009 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலை/தொடக்கப் பள்ளிகளில் கீழ்க்கண்டவாறு புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.*

| வ. எண் | பணியிடங்கள் | பள்ளிக் கல்வி | தொடக்கக் கல்வி |
|---|---|---|---|
| 1 | முதுகலை ஆசிரியர்கள் | 724 | — |
| 2 | பட்டதாரி ஆசிரியர்கள் | 942 | 1577 |
| 3 | இடைநிலை ஆசிரியர்கள் | - | 2444 |
| 4 | உடற்கல்வி ஆசிரியர்கள் | 326 | 40 |
| 5 | ஓவிய ஆசிரியர்கள் | 131 | — |
| 6 | இசை ஆசிரியர்கள் | 44 | — |
| 7 | தையல் ஆசிரியர்கள் | 74 | — |
| | **மொத்தம்** | **2241** | **4061** |



2008 ஏப்ரல் 24]

**6. பள்ளி வளர்ச்சித் திட்டம் (School Improvement Scheme)**

*அரசுப் பள்ளிகளின் வளர்ச்சியில் தனியார் பங்கீட்டினை அதிகரிக்க பள்ளி வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன்படி தொழில் நிறுவனங்கள், கல்வி புரவலர்கள் அரசுப் பள்ளிகளை 5 ஆண்டு காலத்திற்கு ஏற்றுக்கொண்டு (Adoption) தேவையான வசதிகளைச் செய்து தரலாம்.*

**7. கல்லூரிகளில் தமிழ் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு பள்ளிகளில் பணி வாய்ப்பு**

*தற்போது பள்ளிகளில் அனைத்து தமிழ் ஆசிரியர் பணியிடங்களும் இடைநிலை ஆசிரியர்கள் பதவி உயர்வுமூலம் நிரப்பப்படுகிறது. இதனால் கல்லூரிகளில் தமிழை முழு நேர மாணவர்களாக பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் இடம் கிடைக்க வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது என்று அரசிடம் முறையிடப்பட்டுள்ளது. இம்முறையீடு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிற கல்வி ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு தமிழ் ஆசிரியர்ள் காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்.*

**8. அரசு மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அதிக நிதி அதிகாரம் அளித்தல், நிதி நிர்வாகத்தை எளிமைப்படுத்துதல்**

*2008-2009 அரசின் நிதிநிலை அறிக்கையில் 6 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியரிடம் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு அரசு ஈடுசெய்து தரும் கட்டணத் தொகையை நிர்வகிக்கும் முறை எளிமைப்படுத்தப்படுகிறது. 14 வகை கணக்குகள் ஒழிக்கப்பட்டு ஒரே கணக்கு நடைமுறைப்படுத்தப்படும். பள்ளித் தலைமை ஆசிரியருக்கு நிதி அதிகாரம் கூடுதலாக அளிக்கப்படுகிறது. தலைமை ஆசிரியரும் அவரது குழுவும் ஒரு நிகழ்வில் ரூபாய் 50,000/- வரை செலவு செய்யலாம். மாவட்டக் கல்வி அலுவலர் ரூபாய் 75,000/- வரை அனுமதி வழங்கலாம். முதன்மைக் கல்வி அலுவலர் ரூபாய் ஒரு இலட்சம் வரை அனுமதி வழங்கலாம். ரூபாய் ஒரு இலட்சத்திற்கு*

[2008 ஏப்ரல் 24

மேற்பட்ட தொகைக்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

**9. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பிரிவில் வணிகவியல் போதிக்கும் ஆசிரியர்களுக்கு மேல்நிலை முதுகலை ஆசிரியர்களாக பதவி உயர்வு வழங்குதல்**

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பிரிவில் வணிகவியல் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களை முதுகலை வணிகவியல் ஆசிரியர் பதவிக்கான தகுதி வாய்ந்தோர் பட்டியலில் சேர்ப்பது என அரசு முடிவு செய்துள்ளது.

**10. பள்ளிகளில் உடற்கல்வி மேம்படுத்துதல்**

அனைத்துப் பள்ளிகளையும் ஆய்வு செய்யவும், உடற்கல்வியை மேம்படுத்தவும் உடற்கல்வி ஆய்வினை சீர் செய்ய அரசு முடிவு எடுத்துள்ளது. அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட உடற்கல்வி ஆய்வர் நியமிக்கப்படுவார். மண்டல உடற்கல்வி ஆய்வர் (ஆண்கள்), மண்டல உடற்கல்வி ஆய்வர் (பெண்கள்) என்ற முறை மாற்றப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண் அல்லது பெண் உடற்கல்வி ஆய்வர் நியமிக்கப்படுவார். மாவட்ட உடற்கல்வி ஆய்வர், உடற்கல்வி இயக்குநர் நிலை-1 என்ற தரத்தில் நியமிக்கப்படுவார்.

பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் முதன்மை உடற்கல்வி ஆய்வர் (ஆண்கள்) மற்றும் முதன்மை உடற்கல்வி ஆய்வர் (பெண்கள்) என்ற இரண்டு பணியிடங்களுக்குப் பதிலாக ஒரு முதன்மை உடற்கல்வி ஆய்வர் (ஆண் அல்லது பெண்) பணிபுரிவார். மற்றொரு பணியிடம் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் பயன்படுத்தப்படும்.

உடற்கல்வி இயக்குநர்களின் வேண்டுகோளின்படி உடற்கல்வி இயக்குநர் நிலை-1 பணியிடம் முதுகலை ஆசிரியர் (உடற்கல்வி) எனவும் உடற்கல்வி இயக்குநர் நிலை-2 பணியிடம் பட்டதாரி ஆசிரியர் (உடற்கல்வி) எனவும் பெயர் மாற்றப்படும்.

பள்ளிகளில் யோகா கட்டாயமாக்கப்பட்டு யோகா கற்றுக் கொள்ள ஒரு பாடவேளை ஒதுக்கப்படும்.



2008 ஏப்ரல் 24]

**11. மெட்ரிக் பள்ளிகள் இயக்ககத்திற்கு ஓர் இணை இயக்குநர் பணியிடம் உருவாக்குதல்**

மெட்ரிக் பள்ளிகளுக்கு விரைவாக தொடக்க அனுமதி, தொடர் அங்கீகாரம் போன்றவற்றை வழங்கிட ஓர் இணை இயக்குநர் பணியிடத்தை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது.

**12. பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை (E-Governance)**

பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை விரைந்து நடைமுறைப்படுத்தப்படும். இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு பள்ளிகள் சார்ந்த அனைத்துத் தகவல்களும் தொகுக்கப்படும். பள்ளி நிர்வாகத்தை சீர் அமைக்கவும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தனியார் பங்கீட்டினை அதிகரிக்கவும் இந்த இணையதளம் பயன்படும்.

**13. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பள்ளி உதவி ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் என பெயர் மாற்றம் செய்தல்**

ஆசிரியர்களின் கோரிக்கையினை ஏற்று அரசு உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், வரலாறு மற்றும் பிறமொழி ஆசிரியர்கள் பள்ளி உதவி ஆசிரியர்கள் (School Assistants) என அழைக்கப்படுவதற்குப் பதிலாக இனி வரும் காலங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் (Graduate Teachers) என அழைக்கப்படுவர். அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் இது பொருந்தும்.

**14. படைப்பாற்றல் கல்வி**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு படைப்பாற்றல் கல்வி பெற அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் வரவேற்கப்படுவதாலும் மாணவர்கள் கற்றலில் நல்ல முன்னேற்றம் தெரிவதாலும் 9 மற்றும 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கும் படைப்பாற்றல் கல்வி முறை விரிவுபடுத்தப்படுகிறது.

**15. ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்திற்கு ஊர்திகள் வாங்குதல்**

தமிழகத்தில் உள்ள 30 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் உள்ள முதல்வர்கள் தத்தம் மாவட்டங்களில்

உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பார்வையிடவும், பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவும், பயிற்சி அளித்தபின் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணியினைப் பார்வையிடவும், மாவட்ட அளவில் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்கவும் சென்று வர வசதியாக புதிதாக 30 ஜீப்புகள் (Jeep) மற்றும் அது தொடர்பான செலவுகளுக்கு ரூபாய் 160 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஆசிரியர் கல்வி இயக்ககத்தின் செயல்பாட்டிற்காக இரண்டு மகிழ்வுந்துகளுக்கும் (Car), மூன்று ஜீப்புகளுக்கும் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**16. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி**

11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடங்கப்பட உள்ள இத்திட்டம் 2015 ஆம் ஆண்டிற்குள் 16 வயது நிரம்பிய அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்குவதையும் 2020 ஆம் ஆண்டிற்குள் 18 வயது நிரம்பியவர்களுக்கு மேல்நிலைக் கல்வி வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான வரைவுத் திட்டம் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் முதல் கட்ட பங்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**17. தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டமைப்பு வசதி**

ரூ.192 கோடி செலவில் ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசுப் பள்ளிகளில் 5949 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்படும். இக்கட்டடப் பணிகள் கிராமக் கல்விக் குழுவால் மேற்கொள்ளப்படும்.

**18. வட்டார வளமைய மேம்பாடு**

தமிழகம் முழுவதிலுள்ள 412 வட்டார வளமையங்களில் இணையதள வசதி செய்து தரப்பட உள்ளது. மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள 17 புத்தகங்கள் கொண்ட அறிவியல் களஞ்சியத் தொகுப்பு ஒவ்வொரு மையத்திற்கும் வழங்கப்பட உள்ளது. இதற்கான மொத்தச் செலவினம் ரூ. 53 இலட்சம் ஆகும்.



**19. கணித கற்றல் பொருட்கள்**

ரூ. 5 கோடி செலவில் தொடக்கப் பள்ளிகளில் கணிதப் பாடத்தை எளிதில் கற்றுக்கொள்ள வசதியாக கணித முப்பரிமாண கற்றல் பொருட்கள் தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இந்தக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்.

**20. சிறுபான்மை மாணவர் நலன்**

சிறுபான்மை இன மாணவர்களின் வாழ்வியல் திறன்களை வளர்ப்பதற்காக (Life Skill) பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. 412 வட்டார வளமையங்களில் 6-லிருந்து 8 வரை பயிலும் 50,000 சிறுபான்மை இன மாணவர்கள் 3 நாட்கள் பயிற்சி பெறுவார்கள். இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 75 இலட்சம் ஆகும்.

**21. ஆங்கில மொழித்திறன் வளர்த்தல்**

கிராமப்புற மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடும் திறனை வளர்த்துக்கொள்வதற்கான பயிற்சி வானொலி வழியாக வழங்கப்பட உள்ளது. தமிழகத்தில் உள்ள 11 வானொலி நிலையங்களிலும் இந்நிகழ்ச்சி ஒரே நேரத்தில் ஒலிபரப்பப்படும். இதனால் ஏறத்தாழ 30 இலட்சம் மாணவர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் ரூ. 8 கோடியாகும்.

**22. புதிய நூலகங்கள்/அலுவலகங்கள்**

அனைத்து சமத்துவபுரங்களிலும் நூலகங்கள் திறக்கப்படும். 100 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்தப்படும். வட்ட அளவில் கிளை நூலகங்கள் முழுநேர நூலகங்களாக காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட நூலகர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகம் அமைக்கப்படும்.

**23. கட்டடங்கள்**

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுமார் ரூ. 3.00 கோடி மதிப்பிலான மாவட்ட நூலக அலுவலர் அலுவலகம் மற்றும் மாவட்ட மைய நூலகக் கட்டடம் கட்டப்படும்.

[2008 ஏப்ரல் 24

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலக அலுவலர் அலுவலகம் ரூ. 1.00 கோடி மதிப்பிலும் ஈரோடு மாவட்டத்தில் நூலகம் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

(இ) இந்த ஆண்டு 47 நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படும். இதற்காக ரூ. 5.31 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**24. குடிமைப்பணி மையங்கள்**

புதியதாக 50 குடிமைப்பணி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**25. பராமரிப்பு**

மாவட்டங்களில் செயல்படும் நூலகங்களில் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**26. புதிய பாடத் திட்டம்**

2001-2002 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறையில் உள்ள இரண்டாமாண்டு ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பிற்கு (Diploma in Teacher Education) புதிய கலைத் திட்டம் (Curriculum) மற்றும் பாடத் திட்டம் (Syllabus) மாற்றியமைக்கப்பட்டு தேசிய கலைத் திட்டத்தில் (NCF 2005) கூறப்பட்டுள்ள அம்சங்களை உள்ளடக்கி தற்போது புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய பாடத் திட்டம் வரும் 2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இப்பாடத் திட்டத்தின்படி வருடத்திற்கு எட்டு பாடங்கள் வீதம் வடிவமைக்கப்பட்டுள்ள பதினாறு வளநூல்கள் வரும் கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். இப்புதிய பாடத் திட்டத்தின்மூலம் செயல் வழிக் கற்றல் முறையில் திறன் பெற்ற புதிய ஆசிரியர்கள் வருடத்திற்கு சுமார் 50,000 பேர் உருவாக்கப்படுவார்கள்.

27. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக ஆசிரியர்களுக்கும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்களுக்கும் ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கும் பணியிடைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ள ரூ. 522 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.



2008 ஏப்ரல் 24]

28. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், பள்ளிகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், பணியிடைப் பயிற்சிகளைத் திட்டமிடவும், பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களின் தரத்தினை உயர்த்தவும் மற்றும் அவை குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளவும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் ரூ.44 இலட்சம் செலவில் ஆராய்ச்சிப் பிரிவு (Research Cell) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

29. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தைச் சார்ந்த கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தின் மூலம் 2008-2009 ஆம் கல்வியாண்டில் "நமது மாவட்டத்தை நாமறிவோம்" எனும் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படும். முதல் கட்டமாக தமிழகத்திலுள்ள 10 மாவட்டங்களைத் தெரிவு செய்து பள்ளி மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் இந்நிகழ்ச்சிகள் அமைக்கப்படும். தமிழக மாவட்டங்களில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், முக்கிய கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அனைத்து மத வழிபாட்டு இடங்கள், நீர் நிலைகள் மற்றும் குடிசைத் தொழில்கள் ஆகிய அம்சங்களை நாமெல்லோரும் அறிந்துகொள்ளும் வகையில் இந்நிகழ்ச்சிகள் அமைந்திருக்கும். இந்நிகழ்ச்சிகள் குறுந்தகடுகள் வாயிலாக அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**30. பணியிடைப் பயிற்சி**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு பணியிடைப் பயிற்சி அளிக்க ரூ. 20.18 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228381.
சென்னை-600 008